உ

# விநாயகர் முதன்மைத்துவம்



நூலாசிரியர்

கலாபூஷணம், கலாநிதி

குமாரசாமி சோமசுந்தரம்

ரஜி வெளியீடு, தெகிவளை.

2019

# இறைவணக்கம்

எல்லாம் வல்ல தெய்வமது
 எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே
 சுயமாய் சிந்தித்தே தெளிவாய்
வல்லாய் உடலில் இயக்கமவன்
 வாழ்வின் உயிரில் அறிவுமவன்
கல்லார் கற்றார் செயல்விளைவாய்
 காணும் இன்ப துன்பமவன்.

அவனின் இயக்கம் அணுவாற்றல்
 அணுவின் கூட்டு பக்குவம் நீ
அவனில் தான் நீ உன்னிலவன்
 அவன் யார்? நீ யார்? பிரிவேது
அவனை மறந்தால் நீ சிறியோன்
 அவனை அறிந்தால் நீ பெரியோன்
அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம்
 அறிவு முழுமை அது முக்தி.

- தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி

புதியதொரு பண்பாடு உலகுக்கு வேண்டும்.
 போதை போர் பொய் புகை ஒழித்து அமுல்செய்வோம்.
அதிகச் சுமை ஏதுமில்லை அவரவர் தம் அறிவின்
 ஆற்றலினால் உடலுழைப்பால் வாழ்வுதென்றமுடிவும்
மதிபிறழ்ந்து மற்றவர்கள் மனம் உடல் வருத்தா
 மாநெறியும் உணவுக்குயிர் கொல்லாத நோன்பும்
பொது விதியாய்ப் பிறர்பொருளை வாழ்க்கைச் சுதந்திரத்தைப்
 போற்றிக்காத்தும் பிறர்துன்பம் போக்கும் அன்பும் வேண்டும்.

- வேதாத்திரி மகரிஷி

உ

சிவமயம்

# விநாயகர் முதன்மைத்துவம்



நூலாசிரியர்

**கலாபூஷணம், கலாநிதி**

## குமாரசாமி சோமசுந்தரம்

**ரஜி வெளியீடு, தெகிவளை.**

**2019**

## நூல்தரவு


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | விநாயகர் முதன்மைத்துவம் |
| நூலாசிரியர் | : | கலாபூஷணம், கலாநிதி.<br>குமாரசாமி சோமசுந்தரம் J.P. |
| பதிப்புரிமை | : | திருமதி. தையல்நாயகி சோமசுந்தரம் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| அளவு | : | 1×8 (5.75" × 8.75") |
| பக்கம் | : | viii + 196 |
| காலம் | : | 2019, மே |
| பதிப்பகம் | : | அனுஷ் பிரின்டர்ஸ், கொழும்பு-13. |
| வெளியீடு | : | "ரஜி வெளியீடு"<br>16, 6/2, வன்டர்வேர்ட் இடம், தெகிவளை. |
| விலை | : | **ரூபா. 350.00** |


## BOOK DATA


| | | |
|---|---|---|
| Title | : | Vinayagar Muthanmaithuvam |
| Author | : | Kalabhooshanam,<br>Dr. Kumarasamy Somasundaram J.P. |
| Copy Right | : | Mrs. Thyalnayaki Somasundaram |
| Edition | : | First Edition |
| Size | : | 1x8 (5.75" x 8.75") |
| Page | : | viii + 196 |
| Date | : | 2019, May |
| Printers | : | Anush Printers, Colombo-13. |
| Publishers | : | Raji Publications<br>16, 6/2, Vandervert Place, Dehiwala. |
| Price | : | **Rs. 350.00** |

# முகவுரை

சைவம் ஒரு சமயம்; ஒரு தத்துவம்; ஒரு வாழ்க்கைநெறி ஆக விளங்குகிறது. முழுமைத்துவம்பெற்ற சமயமாக விளங்குவதற்கு; இம்மூன்று அம்சங்களும், சைவத்தில் ஒருங்கிணைக்கப்பட்டிருத்தலே காரணமாகும்.

சைவம் உலகியலைப் புறந்தள்ளவில்லை. மாறாகச் சீராக்கம் செய்து மேன்மைப்படுத்துகிறது. மனிதர்கள் மண்ணில் பிறந்துவிட்டால், கடமைகளைப் புரியவேண்டியது; பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டியது கட்டாயமாகும். அவற்றை முறையாகவும், நிறைவாகவும் செய்வதற்கு, மனிதரை வழிப்படுத்துவது; நெறிப்படுத்துவது, சமயம். சைவசமயம் இதனை; இப்பணியைச் செவ்வையாகச் செய்கிறது.

மனிதர்கள் வாழுங்காலத்தில்; உலகபந்தங்கள், ஆசாபாசங்கள் ஆகியவற்றுடன் இணைந்துகொள்ள நேரிடுகிறது. அதனால், வினைகள் செய்யப்படுகின்றன. வினைகள்; சைவசமய தத்துவங்களின்படி; நல் வினை, தீவினை, என இருவகைப்படும். செய்யப்படும் செயலுக்கேற்ற விளைவு நிச்சயம் உண்டு. "தினைவிதைத்தவன், தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினையறுப்பான்", என்பது ஆன்றோர்வாக்கு.

மனிதர்கள், "புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் நன்னெறியதனிற் செல்ல", அவர்களை நெறிப்படுத்துவது, சைவசமயம். உலகியலைச் சீர்செய்வது, சைவசமயம்.

சைவநெறியில் விதிக்கப்பட்டிருத்தலைச் செய்தலும்; விலக்கப் பட்டிருப்பவற்றைச் செய்யாது தவிர்த்தலும் சைவசமயியின் கடமை யாகும்.

சைவமக்கள்; சைவத்தின் முழுமுதற்கடவுள் ஆகிய சிவபெரு மானையும்; மற்றும் சிவகுடும்பத்தைச் சார்ந்த விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திரர், அம்பாள் ஆகிய மூர்த்தங்களையும்; மனம், மொழி, மெய் ஆகியவற்றால் வழிபட்டு, இறைஅருள்பெற்று, உய்வுபெற வேண்டும். அத்தகையவர்கள்; பாவச் செயல்களைச் செய்ய அஞ்சுவர். அவை தீவினைகள் ஆகும். அவர்கள் புண்ணியச் செயல்களையே செய்வர். அவை நல்வினைகள் எனப்படும்.

நல்வினைகள், வாழ்வில் இன்பங்களையும், நலங்களையும் வழங் குவன. தீவினைகள், துன்பங்களையும், துயர்களையும் தருவன.

மனிதர்கள், தங்கள் வாழ்வில் நாடுவதும், தேடுவதும் "இன்பத்தைத் தானே! வெறுப்பதும், வேண்டாததும் துன்பத்தையேயாகும். எல்லோரு டைய வாழ்க்கை நோக்கமும் அதுவேயென்றால்; மறுக்க முடியாத உண்மையாகும்.

நாம் நாடுகின்ற இன்பத்தை, விநாயகப்பெருமான் தப்பாமல் தருவதாக மறைநூல்கள் கூறுகின்றன. அதேவேளை, எமது துன்பங்கள், துயர்களையும், எல்லா விக்கினங்களையும் நீக்கி அருள்புரியும் பெருங் கடவுளாகவும் விநாயகர் விளங்குகின்றார். அதன்காரணமாக, விக்கி னேஸ்வரன், விக்கினராஜா என்னும் திருநாமங்களாலும், இவர் அழைக்கப்படுகிறார்.

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்**
**கண்ணிற் பணிமின் கனிந்து.**

கொடிய வினைகளை வேரறுக்கவல்ல பெருங்கடவுளாக விளங்கு பவர், விநாயகப்பெருமான். ஒருமுள்மரத்தை, அதன் மூலவேரோடு பிடுங்கியெடுக்கும்போதுதான் அது மீண்டும் தோன்றி வளரமுடியாமல் போய்விடுகிறது. அவ்வாறு, நாம் பிறவிகள்தோறும் செய்த தீவினைப் பதிவுகள், எஞ்சிநிற்கவிடாது, முழுமையாகத் தமது திருவருளினால் அவற்றை அகற்றவும், அழிக்கவும் வல்லவர், விநாயகப்பெருமான்.

**கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை**
**கணபதி என்றிடக் காலனும் கைதொழும்**
**கணபதி என்றிடக் கருமம் ஆதலால்**
**கணபதி என்றிடக் கவலை தீருமே.**

"அல்லல்போம் வல்வினைபோம், அன்னை வயிற்றில் பிறந்த தொல்லைபோம் போகாத்துயரம்போம்" கணபதியை வணங்கி வழிபாடு செய்து வந்தால் என்கிறது, மற்றொரு பாடல்.

இப்பாடல்வரிகள்; விநாயகர், இடர்களையும் கடவுள் ஆக விளங்கு கின்ற தன்மையை, எடுத்துக்காட்டுகின்றன.

விநாயகப்பெருமான்; ஆனைமுகத்துடன், ஐந்துகரங்களுடன்; ஞானத்தின் திருவுருவாக, அம்மை, அப்பரின் மூத்தபிள்ளையாக; முதல் வணக்கத்திற்குரியவராக; தமது முதன்மையை ஏற்று, தம்மை வழிபடுபவர்களுக்கு விக்கினங்களைப் போக்குபவராக; வீரம், செல்வம், கல்வி என்பவற்றை வழங்குபவராகவும்; பழவினைகளை வேரோடு பாறும் வண்ணம் அருள்புரிபவராகவும்; இகபர சுகங்களையும், ஈற்றில் முத்தியையும் நல்குபராகவும், விளங்குகிறார்.

**யார்க்கும் எதற்கும் அவனே முதற்பொருள்**
**அன்பெனும் பிடியுள் அகப்படும் கருப்பொருள்**
**ஊட்டும் உலகிற்கும் ஒளிதரும் உறுபொருள்**
**உள்ளத்தில் அமர்ந்திருக்கும் ஓங்காரத் தனிப்பொருள்.**

உலகின் முதற்பொருள், கருப்பொருள், உறுபொருள், ஓங்காரத் தனிப்பொருள் ஆக விளங்குபவர், விநாயகர்.

"ஓம்" எனும் பிரணவமந்திரத்தின் உட்பொருள் விநாயகன். தனக்கு மேலே வேறொரு தலைவன் இல்லாதவன் என்பதை உணர்த்துவதாக; விநாயகன் என்னும் திருநாமம் விளங்குகின்றது. அப்பெரிய கடவுளை முதலில் வணங்கி வழிபாடு செய்து, ஒப்புதல்பெற்ற பின்னரே, எந்த ஒரு கருமத்தையோ, தொழிலையோ, சைவர்கள் தொடங்குகின்றனர். அதனால், கருமங்கள் தங்கு தடைகளின்றி நிறைவேறுகின்றன.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்; செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்; - ஆம். ஆனைமுகத்து விநாயகனைத் தொழ, இவையனைத்தும் நமக்குக் கிட்டும். எல்லாத் தடைகளும், இடர்களும் நீங்கும். ஆனால், அறநெறி ஒழுக்கங்கள், விழுமியங்கள் ஆகியவற்றைப் புறக்கணித்து; கருமங்கள், தீய செயல்களைப்புரிந்தால்; அதற்குரிய தண்டனைகளையும்; விநாயகர் வழங்குவார். அது உறுதி என்பதையும், நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

விநாயகர் அறக்கருணை, மறக்கருணை; இரண்டையும் செய்பவர். விக்கினங்களை நீக்கியருளுதல், அறக்கருணை. விக்கினங்களை வருவித்து; அதன்மூலம், தாம் செய்த பிழைகளை, உணரவைத்து, அடியார்களுக்கு அருள்புரிதல், மறக்கருணை. இரண்டுமே, அடியார்களுக்கு நன்மை தருவன, என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சாவகச்சேரி, கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்; மிகவும் தொன்மையானதும், திருவருட்கடாட்சம், அருள்வீச்சு நிறைந்ததாகவும் அமையப்பெற்ற திருத்தலம் ஆகும். மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக்களைக் கொண்ட மகிமை பொருந்திய ஆலயம். கல்வயல் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள், மற்றும் வாழிடமாகக் கொண்டவர்கள்; பெருங்குளம் பிள்ளையாரை முதலில் வணங்கி வழிபட்டுத்தான், தத்தம் கருமங்களைச் செய்யத் தொடங்கும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது.

இந்த ஆண்டு, வைகாசி மாதம் இருபத்து மூன்றாம் நாள் (06-06-2019) அன்று நடைபெறுகின்ற; பெருங்குளம் விநாயகர் ஆலய புனராவர்த்தன மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு; "விநாயகர் முதன்மைத்துவம்; எனும் இந்நூல் வெளியிடப்படுகிறது. இந்நூலில், விநாயகப்பெருமான் தொடர்பான அருட்தகவல்கள், மற்றும் ஆன்மீகத் தகவல்கள் என்பவற்றுடன் சைவசமய வாழ்வியல் மற்றும் விழுமியங்கள் தொடர்பான விடயங்களும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

விநாயகப்பெருமான், உலகின் முதல்எழுத்தாளன் என்பதை நாம் அறிவோம். எழுதும்போது, பிள்ளையார் சுழிபோட்டு எழுதத் தொடங்குவது, அம்முதல்எழுத்தாளனுக்கு மதிப்பு, மரியாதை செய்யும்

முகமாகவேயாகும். அவ்வாறே, நூல்களை எழுதத்தொடங்கும்போது, பிள்ளையாருக்கு முதலில் காப்புச்செய்யுள் எழுதிப், பிள்ளையார் வணக்கம் செய்வது பெருவழக்கில் உள்ளது. அதுவும் முதல்எழுத் தாளனுக்கு வழங்கப்படுகின்ற முதல்மரியாதையாகும்.

"விநாயகர் முதன்மைத்துவம்" என்னும் தலைப்பில் அமைந்த இந் நூலினைக்; கல்வயல், பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் திருப்பாதங்களில் சமர்ப்பணம் செய்கிறோம்.

இந்நூல் சிறப்பாகவும் அழகுபொலியவும் அச்சிட்டு உதவிய, கொழும்பு-13, அனுஷ் பிரின்டர்ஸ் முதல்வர், திரு. கு. அருளானந்தம் மற்றும் அவர்களின் பதிப்பக உதவியாளர்களுக்கும் எனது மனங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

இந்நூலில் இடம் பெறுகின்ற ஆக்கங்களைத் தெளிந்த மனத்துடன் சிந்தித்து எழுதுவதற்கு; நேரஅவகாசம், வாய்ப்பு வசதிகள்; ஊக்கம், ஒத்துழைப்பு, மனஅமைதி என்பவற்றை எனக்கு வழங்கி; ஆதரவு நல்கி வருகின்ற எனது மனைவிக்கும்; இந்நூல் வெளியீட்டிற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்த; மக்கள் மற்றும் மருமக்களுக்கும் எனது பேரன்பை யும், நல்வாழ்த்துக்களையும் வழங்கி மகிழ்கின்றோம்.

எனது ஆன்மீகம் மற்றும் மனிதவிழுமியங்கள் சார்ந்த நூல்களைப் பெற்று வாசித்து, ஆதரவு நல்கி; ஊக்குவித்து வருகின்ற வாசக அன்பர் களுக்கு நன்றிகள் பலப்பல.

எல்லாவற்றிற்கும் மேலாக, எம்மை ஆன்மீக எழுத்துப்பணியில் ஈடுபடுத்தித், திருவருள்பாலித்து; உள்நின்றுணர்த்தி; நெறிப்படுத்தி, "எனதுரை தனதுரை" யாக அமைய அருள்புரிகின்ற, எல்லாம்வல்ல இறைபரம்பொருளாம், பெருங்குளம் அம்பலவாணர் வீரகத்தி விநாயகப் பெருமானை, ஏற்றிப்போற்றிச், சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

***வாழ்க வையகம்; வாழ்க வளமுடன்***
***"வையகமும் துயர் தீர்கவே."***

இல. 16, 6/2,
வண்டவேர்ட் பிளேஸ்,
தெஹிவளை, இலங்கை.
16-05-2019

**குமாரசாமி சோமசுந்தரம்**
நூலாசிரியர்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ❖ | முகவுரை | iii - vi |
| 01 | விநாயகர் துதிப்பாடல்கள் | 01-08 |
| 02 | சிவபரத்துவம் | 09-20 |
| 03 | விநாயகப்பெருமான் - முதன்மைத்துவம் | 21-31 |
| 04 | விநாயகர் திருவவதாரம் | 32-41 |
| 05 | விநாயகர் திருவடிவம் | 42-64 |
| 06 | விநாயகர் வழிபாடு | 65-91 |
| 07 | விநாயகர் விரதங்கள் | 92-108 |
| 08 | காணாபத்திய நெறி | 109-118 |
| 09 | விநாயகர் மகிமை | 119-144 |
| 10 | ஆலய வழிபாடு | 145-167 |
| 11 | சைவசமயம்; தொன்மை, மெய்ம்மை, முதன்மை | 168-171 |
| 12 | விநாயகர் பற்றிய ஆன்மீகத் தகவல்கள்: | 172-177 |
| 13 | ஆன்மீகத் தகவல் களஞ்சியம் | 178-183 |
| 14 | விநாயகப்பெருமான் பற்றிய; அருட்தகவல்கள்: | 184-190 |
| 15 | விநாயகரின் ஆறுபடை வீடுகள்: | 191-192 |
| 16 | சாவகச்சேரி, கல்வயல், பெருங்குளம் அருள்மிகு அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம் - வரலாற்றுப் பின்னணி - | 193-196 |

வாழ்க வையகம்  வாழ்க வளமுடன்

ஓங்காரத்தி லுதித்த துலகெலாம்
ஓங்காரத்தில் நிலைத்த துலகெலாம்
ஓங்காரத்தி லொடுங்கு முலகெலாம்
ஓங்காரத்தி லுறுதி சிவாயவே.

*- நற்சிந்தனை*

ஒரு பொல்லாப்புமில்லை
எப்பவோ முடிந்தகாரியம்
முழுவதும் உண்மை
நாம் அறியோம்.

*- மகாவாக்கியம், சிவயோக சுவாமிகள்*

அன்பிரக்கம், தொண்டு, தவம், ஈகை, இன்சொல்
ஆன்மீக நெறியாகும், போற்றிக் காக்க,
துன்பங்கள் குறைந்து வரும்மேலும் தெய்வத்
துணைகிட்டும் வாழ்வில் புகழ்நிறைவு ஓங்கும்
நன்முறையில் தனிமனிதன் வாழக் கற்றால்
நாட்டினிலும் வீட்டினிலும் அமைதி ஓங்கும்
இன்பமயமே எங்கும் இந்த உண்மை
எளிதன்றோ கற்பதற்கும் வாழ்வதற்கும்.

*- வேதாத்திரி மகரிஷி*

*மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.*

# 01 விநாயகர் துதிப்பாடல்கள்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. - திருஞானசம்பந்தர் தேவாரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே. - திருமூலர் திருமந்திரம்

வானுலகு மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகரமூன்று விழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி யஞ்சலிசெய்கிற்பாம். - சேக்கிழார் (பெரியபுராணம்)

மண்ணுலகத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதில் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம். - கந்தபுராணம்

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணியாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம். - கந்தபுராணம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து. - பதினொராந் திருமுறை

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்; செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால்; வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை. - பதினொராந் திருமுறை (கபிலதேவர்)

உச்சியின் மகுடமின்ன வொளிர்தர நுதலினோடை
வச்சிரமருப்பினொற்றை மணிகொள் கிம்புரிவயங்க
மெய்ச்செவிக் கவரிதூங்க வேழமா முகங்கொண்டுற்ற
கச்சியின் விகடசக்ரக் கணபதிக் கன்பு செய்வாம். - கந்தபுராணம்

ஓரானைக் கன்றை உமையாள் திருமகனைப்
பேரானைக் கற்பகத்தைப் பேணினால் - வாராத
புத்திவரும் வித்தைவரும் புத்திரர் சம்பத்துவரும்
சத்தி தரும் சித்தி தரும் தான்.

எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கு அருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம். - பெரியபுராணம்

தனதன் நல்தோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநல் தூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்று உடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத்து அமரர் சேகரனே
உனகழல் இணை என் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே. - திருவிசைப்பா

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு. - ஔவையார் நல்வழி; காப்பு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா. - ஔவையார் நன்னெறி; காப்பு

ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன் ஆறு
தரு கோட்டு அம்பிறை இதழித் தாழ் சடையன்
தரும் ஒரு வாரணத்தின் தாள்கள்
உரு கோட்டு அன்பொடும் வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருக்கோட்டு அயன் திருமால் செல்வமும்
ஒன்றோ என்னச் செய்யும் தேவே.
- சிவஞானசித்தியார்

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்தறி நிறுவி யுறுதியாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ள வினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணை யென்னும்
வெள்ள மதம் பொழி சித்தி வேழத்தை நினைந்து வரு வினைகடீர்ப்பாம்.
- திருவிளையாடற்புராணம்

பவளமால் வரையி னிலவெறிப் பதுபோற்
பரந்த நீற்றழகுபச் சுடம்பிற்
றிவளமா துடனின் றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்

தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்

- திருவாதவூரடிகள் புராணம்

அகரமென அறிவாகி உலக மெங்கும்
அமர்ந்து அகர உகர மகரங்கள் தம்மால்
பகரும் ஒரு முதலாகி வேறுமாகிப்
பல்வேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருள் நான்கினையும் இடர் தீர்ந்து எய்தப்
போற்றுநருக்கு அறக்கருணை புரிந்தல்லார்க்கு
நிகரில் மறக்கருணை புரிந்து ஆண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

- விநாயக புராணம்

வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா
உண்மை விளக்கம் உரை செய்யத் - திண்மதம் சேர்
அந்தி நிறத் தந்திமுகத் தொந்திவயிற்று ஐங்கரனைப்
பந்த மறப் புந்தியுள் வைப்பாம்.

- திருவதிகை மனவாசகங்கடந்தார்
(உண்மை விளக்கம்)

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண் - திருவருட்பயன

கல்லா னிழன் மலை
வில்லாரருளிய
பொல்லாரிணை மலர்
நல்லார் புனைவரே. - மெய்கண்டதேவர்

அல்லல்போம் வல்வினைபோம்
அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லை போம் போகாத்
துயரம்போம் நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்தில்
வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக்கால்.

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல் பலவும்மேன்மேல் - அருந்திக்
குணமுடையனாய் வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே, இக்கதைக்குக் காப்பு.

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணிவோமே.

- வெற்றிவேற்கை

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கவலை தீருமே.

யார்க்கும் எதற்கும் அவனே முதற் பொருள்
அன்பெனும் பிடியுள் அகப்படும் கருப்பொருள்
ஊட்டும் உலகிற்கும் ஒளிதரும் உறுபொருள்
உள்ளத்தில் அமர்ந்திருக்கும் ஓங்காரத் தனிப்பொருள்.

நாதமும் போதமும் ஞானமும் ஆனவன்
நம்பிக்கை வைப்பவர்கள் நாவிலே தேனவன்
ஓம் எனும் ஒலி அது உருவமாய் வளர்பவன்
உமையவள் மடியிலே குழந்தையாய்த் திகழ்பவன்.

கும்ப மாமுனியின் கரகநீர் கவிழ்த்துக் குளிர்மலர் நந்தனங்காத்துச்
செம்பொனாட்டிறைவர்க்கு அருளிய நினதுதிருவருட்பெருமை - மறவேன்
நம்பினார்க்கினிய அருண்மகப்பேறோ நற்குணத்தோர் பெருவாழ்வே
வம்பறா மலர்த்தார் மழை முகிற்கூந்தல் வல்லபைக் கணேச மாமணியே.

குஞ்சரனே, கொஞ்சுமுன் கோலமுகம் பார்த்திங்கு
தஞ்சமென நம்பியே தாழ்ந்திட்டேன் - விஞ்சை
அபிராமிப் பட்டன் அணி சிறக்கத் தந்த
அபிநவத்தின் மான்மியத்தை யாள். - அபிராமியந்தாதி காப்பு

தாரமர்கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
யூரர்தம் பாகத்து உமைமைந்தனே! உலகேழும் பெற்ற
சீரபிராமியந்தாதி எப்போதும் என்சிந்தையுள்ளே
காரமர்மேனிக் கணபதியே, நிற்கக் கட்டுரையே. - அபிராமியந்தாதி காப்பு

கரியின் மாமுகமுடைய கணபதி தாதைபல் பூதந்
திரியவில் பலிக்கேகுஞ் செழுஞ்சுடர் சேர்தருமூதூர்
சரியின்முன்கை நன்மாதர் சதிபடமாநடமாடி
உரிய நாமங்களேத்து மொலிபுனற் காழி நன்னகரே.
- சம்பந்தர் தேவாரம்

அங்கமும் வேதமுமோது நாவ
ரந்தணர் நாளுமடி பரவ
மங்குன்மதி தவழ் மாட வீதி
மருகனிலாவிய மைந்த சொல்லாய்
செங்கயலார் புனற் செல்வமல்கு
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரியேந்தி யாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.
- சம்பந்தர் தேவாரம்

# விநாயகர் துதி

"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே."

(வெண்ணிற ஆடையை அணிந்தவரும், எங்கும் நிறைந்தவரும், சந்திரன் நிறமுடையவரும்; நான்கு புயங்களும்; சாந்தம் நிறைந்த வதனம் உடையவருமான விநாயகப்பெருமானை; எல்லாத் தடைகளையும் நீக்குவதற்காகத் தியானிக்கிறோம்.)

"வக்ர துண்ட மஹாகாய ஸுர்ய கோடி ஸமப்ரப
நிர்விக்னம் குருமே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா"

(வளைந்த தும்பிக்கையையும், பருத்த உடலையும், கோடி சூரியர்களுக்கு இணையான ஒளிப் பிரகாசத்தையும்; உடைய தேவனே! எனக்கு; நான் எடுத்த எல்லாக் காரியங்களிலும்; எப்போதும், தடைகள், இடையூறுகள் ஏற்படாமல் அருள்புரிவீராக.)

"கஜானனம் பூத கணாதிஸேவிதம்
கபித்த ஜம்பூபல ஸாரா பக்ஷிதம்
உமாஸுதம் சோக வினாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்."

(யானை முகத்தையுடையவரும்; பூதகணங்களால் வணங்கப்படுப வரும்; விளா மற்றும் நாவல் பழச்சாற்றினைச் சாப்பிடும் பொருளாக வைத் திருப்பவரும்; உமையின் மைந்தரும்; துக்கம்துயர்களை அழிப்பதற்குக் காரணமான திருவடிகளை உடையவரும்; ஆகிய விக்னேஸ்வரப் பெருமானின் திருவடித் தாமரைகளை வணங்குகின்றேன்.)

"ஓம்காரம் பிந்து ஸம்யுக்தம்
நித்யம் த்யாயந்தி யோகின
காமதம் மோ ஷிதம் சைவ
ஓம்காராய நமோ நம."

(பிந்துவுடன் கூடிய ஓம்காரத்தை, யோகிகள், எப்போதும் தியானிக் கிறார்கள். ஆசைகள், விருப்பங்கள் ஆகியவற்றை நல்குவதும்; வீடுபேற்றை உறுதியாக அளிப்பதும் ஆகிய ஓம்காரத்திற்கு வணக்கம்)

"அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜ்யோதிர் கமய
ம்ருத்யோர் மா அம்ருதம் கமய
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!"

(பொய்மையிலிருந்து மெய்ம்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், மரணத்திலிருந்து அழியாமைக்கும் என்னை வழிநடத்திச் செல்வாயாக.)

"ஓம் ஸர்வே வை ஸீகினா ஸந்து
ஸர்வே ஸந்து நிராமயா
ஸர்வே பத்ராணி பஸ்யந்து
மா கஸ்சித் து:.க மாப்னுயாத்"

(எல்லோரும் இன்பம் அனுபவிப்பவர்களாகவும், நோயற்றவர்களாக வும் இருக்கட்டும். எல்லோரும் மங்களகரமானவற்றைப் பார்க்கட்டும். ஒருவரும் துன்பமடையாமல் இருக்கட்டும்.)

## ஸ்ரீ கணபதி காயத்ரி மந்திரம்

ஓம் தத் புருஷாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி ப்ரசோதயாத்.

## ஸ்ரீ காயத்ரி மந்திரம்

ஓம் பூர்புவ ஸ்வஹா
தத் ஸவிதுர் வரேண்யம்
ப்ரகோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந:. ப்ரசோத யாத்.

(ஓ, மாதா, முக்காலம், மூவுலகம், முக்குணம் ஆகியவற்றில் உறை பவளே; எனது புத்தியைக் கூர்மையடையச் செய்து, சூர்ய பிரகாசம் எல்லா இருளையும் அகற்றுவதுபோல், எனது சகல அறியாமையையும் அகற்றி, எனது புத்தியைச் சாந்த சித்த நிர்மலமானதாகப் பிரகாசிக்கச் செய்யும்படி, யான் உன்னைத் துதிக்கின்றேன்.)

## ஸ்ரீ கணபதி மூலமந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம்
கம் கணபதியே வரவரத ஸர்வஜனம்மே
வசமாயை ஸ்வாஹா.

## விநாயகர் வணக்கம்

சீர்பூத்த மறைமுதற்கட் பிரணவத்தி
னரும்பொருளைச் சிவனார் தந்த
பேர் பூத்த நிருமலசின் மயவடிவை
யானந்தப் பெருக்கை யென்றுங்
கார்பூத்த திருநெடுமா லயன்முதற்புங்
கவர்வணங்கும் கருணை வாழ்வைப்
பார்பூத்த வடியர்வினை கெடுத்தருளுங்.
கற்பகத்தைப் பணிந்து வாழ்வாம்.

- திருத்தொண்டர் பெரியபுராண வசனமுகவுரை
- நாவலர்

கைத்தல நிறைகனி அப்பமொடு அவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் என வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொருள் திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவோனே

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயர் அது கொடு சுப்பிரமணி படும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

- திருப்புகழ்

உம்பர் தருந் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக்காக வனத் தனையோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானைமுகப் பெருமாளே.

- திருப்புகழ்

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமனரூபம ஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

வக்ர துண்டாய ஹீம்
ஓம் நமோ ஹேரம்ப மதமோதித
மம சர்வ சங்கடம் நிவாரயே ஸ்வாஹா
ஓம் கம் க்ஷிப்ரப் ரசாதனாய நமஹ.

**குறிப்பு:-**

விநாயகக் கடவுளை வணங்கி, வழிபாடு செய்யும்போது; தோத்திரங்கள் பாடியும்; மந்திரங்களை உச்சாடனம் செய்தும்; பக்தி பூர்வமாக, மனத்தில் சிந்திப்பதும்; வந்திப்பதும்; சைவமக்களிடம் நெடுங்காலமாக நடைமுறையிலிருந்து வரும் வழக்கமாகும்.

அந்தவகையில்; விநாயகரை வணங்கி, வழிபாடு செய்யும்போது; கூறக்கூடிய மந்திரங்களும்; துதிப்பாடல்கள் சிலவும்; இங்கு தரப் பட்டுள்ளன.

## பிள்ளையார்பற்றிய நாட்டார் பாடல்

குள்ளக் குள்ளனைக் குண்டு வயிறனை
வெள்ளைக் கொம்பனை விநாயகனைத் தொழ
துள்ளியோடும் தொடரும் வினைகளே
கருணை வள்ளல் கணபதியைத் தொழ
அருமைப்பொருள்கள் அனைத்தும் வருமே
முப்பழம் வெல்லம் மோதகம் தின்னும்
தொப்பையப்பனைத் தொழ வினை இல்லை
வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வுமிகுந்து வரும்.

(குழந்தைகளுக்குத் தெய்வபக்தியை உணர்த்துவதற்கு இத்தகைய எளிமையான பாடல்கள் பெரிதும் பயன்படுகின்றன.)

## ஔவையார், விநாயகர் மீது பாடிய "விநாயகர் அகவல்" பற்றிய காஞ்சிப் பெரியவர் கருத்து:

- விநாயகரை வணங்கி வழிபாடு செய்யும்போது; முக்கியமாக வெள்ளிக்கிழமைகளிலும் மற்றும் சதுர்த்தித் திதிகளிலும் மறக்காமல், "விநாயகர்அகவல்" என்னும் பாமாலையைப் பாராயணம் செய்து வந்தால், நாம் வேண்டும் வரங்களை விநாயகப்பெருமான் வழங்குவார்.
- விநாயகர்அகவல்; வீட்டுக்கும், நாட்டுக்கும் மட்டுமல்ல; உலகத் திற்குமே நன்மை பயக்கும்; என்கிறார் காஞ்சிப் பெரியவர்.
- விநாயகர்அகவல்; விநாயகர்கவசம்; காரியசித்திமாலை பாடல் களைப் பாடி விநாயகரை வழிபாடு செய்து வந்தால் எடுத்த காரியங்கள் யாவும் தங்கு தடைகளின்றி இனிது நிறைவுபெறும்.
- காரியசித்திமாலைப் பாடல்களை, விநாயகப்பெருமான் முன்பு அமர்ந்து, பக்தியோடு பாராயணம் செய்பவர்களின் மன விருப்பங் கள் தவறாது சித்திக்கும். இத்துதிப்பாடல்களைத் தினமும் காலை, மதியம், மாலை; ஆசாரசீலராய்ப் படிப்பவர்கள் நினைத்த காரியம் கைகூடும்.
- இப்படித் தொடர்ந்து; எட்டு நாட்கள் ஓதிவரத் துன்பங்கள் நீங்கிவிடும்; மனத்தில் மகிழ்ச்சியுண்டாகும்.
- சங்கடஹர சதுர்த்தி திதிகளில், எட்டுமுறை ஓதினால் அஷ்டமா சித்திகளும் கைகூடும்.

## பிள்ளையார்போற்றி

வெண்ணிற உடையாய் போற்றி
விசும் பெல்லாம் விரிந்தாய் போற்றி
திங்களின் நிறத்தாய் போற்றி
திரண்ட நால் தோளாய் போற்றி
ஆனைமா முகத்தாய் போற்றி
அனைத்திடர் கடிவாய் போற்றி
திருவெலாம் தருவாய் போற்றி
திருவடி இணைகள் போற்றி.

# 02 சிவபரத்துவம்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயம்; உலகில் மிகவும் தொன்மையானது. சைவம் எங்கள் சமயம்; சைவசித்தாந்தம் எமது சமயதத்துவம்; சைவநெறி, எங்கள் வாழ்க்கை நெறி. இம்மூன்று அங்கங்களையும் ஒருங்கே கொண்டு, முழு மைத்துவம் பெற்ற, உலகின் மூத்த சமயமாகச், சைவம் விளங்கு கின்றது.

சைவம் சிவனுடன் சம்பந்த மாவது
சைவம் தனையறிந்தே சிவம் சாருதல்
சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீங்குதல்
சைவம் சிவானந்தம் சாயுச்சியமே — *திருமந்திரம் 1512*

சைவம், சிவம் சம்பந்தப்பட்டது. சிவம் அன்பு சம்பந்தமுடையது. "அன்பே சிவம்", எனத் திருமூலர் அறிவிக்கிறார். தமிழ் மக்கள் காலங் காலமாகப் பின்பற்றி வருகின்ற சமயம், சைவம். தமிழர், தென்னாட்ட வர்; அதனால், "தென்னாடுடைய சிவன்" எனச் சிவபரம் பொருளை விழித்துப் போற்றி; அச்சிவனார் உலகின் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்னும் பேருண்மையைத் தெளிந்து, உலகத்தவர்க்குச், சிவபரத் துவத்தை உணர்த்தி, உலகளாவிய நிலையில்; சைவத்தை நிலைநாட்டியவர், மாணிக்கவாசகர்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி;"

சிவபரத்துவத்தை விளங்கிக் கொள்ள, இவ்விரண்டு மணிவாசகங் களும் போதுமானவை.

சிவம்; அதுவே பரம்பொருள்; மெய்ப்பொருள்; பெரும் பொருள்; என்றும் உள்ளபொருள்; எங்கும் நிறைந்தபொருள்; உலகிலுள்ள எல்லா உயிருள்ள, உயிரற்ற பொருள்களுடன், ஒன்றாய், உடனாய், வேறாய் உள்ள இறைபொருள்.

சத்தியம் (உண்மை); சிவம் (நன்மை); சுந்தரம் (அழகு) எனும் மூன்றும் நிறைந்த முழுப்பொருள், சிவம்.

சத்து, சித்து, ஆனந்தம் ஆக உள்ள நிறைபொருள், சிவபரம் பொருள். சச்சிதானந்தம் என; ஒரு சொல்லால், சிவம் அழைக்கப் படுகிறது.

மனம், மொழி, மெய் என்பவற்றிற்கு எட்டாத பெரும்பொருள் சிவம். விஞ்ஞானத்தினால் ஆய்வு செய்து, சுட்டி அறியமுடியாத மெய்ப்பொருள், சிவம்.

சிவபரத்துவம்; சிற்றறிவும், சிறுதொழிலும் கொண்ட மனிதர் களால் அளந்தறிவதற்கு அரியது. ஆயினும், அன்பர்களின் பக்தி வலையில் அகப்படும் பெருநிதி, சிவநிதி ஆகும்.

## அன்பே சிவம்

பக்தி என்ற பதம், வடமொழிச்சொல். அதற்கு இணையான தமிழ்ச்சொல், அன்பு. "பக்தி வ்லையில் படுவோன் காண்க", என்கிறது, திருவாசகம்.

சிவபரத்துவம் என்பது அன்பின் பரத்துவம். "அன்பினில் விளைந்த ஆரமுதே", என்கிறார், மணிவாசகப் பெருமான்.

அன்பெனும் பிடியுள் அகப்படு மலையே
அன்பெனுங் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்பெனுங் கரத்தமர் அமுதே
அன்பெனுங் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புரு வாம் பர சிவமே

சிவபெருமான்; கருணைக்கடல்; அருள் நிறைந்தவர். சகல உயிர்களிலும், எவ்வித வேறுபாடுகளுமின்றி; அன்பு, அருள், கருணை கொண்டிருத்தலினால்; வேதம், ஆகமங்கள் மற்றும் திருமுறைகள் யாவும், சிவபெருமானைச் சகலசீவதயாபரன் என்றும் "அன்பினில் விளைந்த ஆரமுது" என்றும்; "ஒன்று அவன் தானே இரண்டு அவன் இன்னருள்" என்றும் ஏற்றிப் போற்றுகின்றன. "பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்" பரிவு, கருணையுள்ளம் கொண்டவர் என்றும்; "தாயிற் சிறந்த தயாவான தத்துவன்" என்றும்; "பேராது நின்ற பெருங் கருணைப் பேராறு" எனவும்; மாணிக்கவாசகர், சிவபெருமானின் அன்பு, அருள், கருணை, தயை என்பவற்றைப் போற்றித் துதிக் கின்றமை; நோக்கற்பாலது.

வான் ஆகி, மண் ஆகி, வளி ஆகி, ஒளி ஆகி
ஊன் ஆகி, உயிர் ஆகி, உண்மையும் ஆய், இன்மையும் ஆய்,
கோன் ஆகி, 'யான்', 'எனது' என்று அவர் அவரைக் கூத்தாட்டு
வான் ஆகி நின்றாயை, என்சொல்லி வாழ்த்துவனே.

\- மாணிக்கவாசகர்

இணங்கி நின்றான் எங்கும் ஆகி நின்றானும்
பிணங்கி நின்றான் பின்முன் ஆகி நின்றானும்
உணங்கி நின்றான் அமராபதி நாதன்
வணங்கி நின்றார்க்கே வழித்துணை ஆமே. - திருமூலர்

அனைத்து அண்டசராசரங்களுடனும் சிவம், இணங்கியும் இசைந்தும் நிற்கின்றது. சர்வ பிரபஞ்சங்களிலும் காட்சி கொடுக்கின்றது. சர்வ உயிரினங்களுடனும் பின்னிப் பிணைந்து நிற்கின்றது. காலம், எல்லாம் கடந்த சிவபரம்பொருள், எமக்கு எதிர்காலத்திலும் காட்சி தரவல்லது. கடந்த காலத்திலும் காட்சி கொடுத்தது. சிவம், எம்மைப்போலக் காலப்பிரமாணத்திற்குள் செயற்படுவதில்லை. அது; கால; தேச; வர்த்தமானங்களைக் கடந்தது. சிவபரத்துவம், திருமூலரால் இவ்வாறு, விவரிக்கப்படுகிறது.

எவ்வுயிரும் நீங்காது உறையும் இறைவன் என்று
எவ்வுயிர்க்கும் அன்பாயிரு. - திருவருட்பா

எவ்வுயிர்க்கும் அன்பாயிருப்பவர்கள்; உலகின் அனைத்துப் படைப்புக் களுடனும் அன்பும் கருணையும் பேணுபவர்களே; உண்மைச் சிவ பக்தர்கள்; சைவசமயிகள் ஆவர்.

ஈசனுக்கு அன்பிலார் அடியவர்க்கன்பிலார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்.
- சிவஞான சித்தியார்

அன்பு, சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவம் ஆய் அமர்ந்து இருந்தாரே.
- திருமூலர் திருமந்திரம்

பரத்துவமாக உள்ள சிவம் என்னும் பரம்பொருளை அறிவதற்கும்; அருளைப் பெறுவதற்கும்; அடைவதற்கும்; உரியமிகச் சிறந்த வழி; அன்புவழி; அன்புநெறி என்பது; திருமூலர் விதப்புரை. அன்பே சிவம்; சிவம், சைவத்தின் முழுமுதலாகிய பொருள். சைவ வாழ்வு என்பது, அன்பு நலம் வாழ்வில் பேணி; வாழும், வாழ்க்கையாகும். "அன்பே சிவம்" என்பதில் உறுதியாக இருப்பது, சைவமக்களின் கடப்பாடு; என்பதை உணர்வோமாக.

"**நீதியே சிவம்**":- நீதியும், சிவமும் ஒன்றேயெனக் கொள்வது சைவம். அதனாலேயே, "மேன்மைகொள் சைவநீதி, விளங்குக உலகமெலாம்", என்ற மகாவாக்கியத்தை சைவமக்கள் உச்சாடனம் செய்கிறார்கள். "பங்கயத்தயன் மால் அறியா நீதியே", என்று சிவபிரானை விளிக்கிறார், மாணிக்கவாசகர். சைவநீதி, சிவநீதியாகும். சிவபரத்துவம் என்பது, நீதியின் பரத்துவம் என்பதை நாம் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

"**உண்மையே சிவம்**":- உண்மையும் சிவமும் ஒன்று. எனவே, சிவபரத்துவம் என்பது, உண்மையின் பரத்துவம் ஆகும்.

சுத்த சாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி, சிவபெருமான் ஆவார். அவரே, இவ்வுலகின் கர்த்தா ஆவார். சைவத்தின் முழுமுதற் கடவுள் ஆகவும் உள்ளார்.

சைவநெறியானது; அன்புநெறியாகவும்; நீதிவழுவாத நெறிமுறையாகவும்; விழுமியஞ்சார் அற, ஒழுக்க நெறியாகவும்; தூய அறிவு நெறியாகவும்; ஆன்மீக வாழ்க்கை நெறியாகவும்; பக்தி நெறியாகவும்; ஞானநெறியாகவும்; மனிதப்பிறவியின் நோக்கங்களான அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் என்பவற்றிற்கு வழிகாட்டும் நெறியாகவும்; அமைந்துள்ளமை; சைவத்தின் பரத்துவத்திற்கும், தனித்துவத்திற்கும்; ஏற்றம் தருவதாக உள்ளது.

வேறொரு தலைவனைப் பணிந்து, வணங்க வேண்டிய நிலையில் இல்லாமல்; ஏனையோர் தம்மை வந்து வணங்கும் அதிஉயர்நிலையில் தாம் இருத்தல், என்னும் நிலைப்பாடு பரத்துவம் எனப்படுகிறது.

> சிவன் ஒடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
> அவன் ஒடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
> புவனம் கடந்து அன்று பொன் ஒளி மின்னும்
> தவளம் சடைமுடித் தாமரையானே. - திருமூலர் திருமந்திரம்

**கடவுள்:-** கடவுள் என்ற சொல்லைப் பிரித்து நோக்கினால் கட+உள் என இருபதங்களாகத் தோன்றுவதைக் காணலாம். 'கட' என்பது மனம் மற்றும் புலன்பொறிகளைக் கடந்த நிலையைக் குறிக்கின்றது. 'உள்' என்பது எமக்குள்ளே உயிருக்குயிராய் நிற்கும் நிலையைக் குறிக்கின்றது. சிவம் உயிர்களுடன் ஒன்றாய், உடனாய், வேறாய் உள்ள ஒரே பரம்பொருள், என்கிறது, சைவ சித்தாந்தம். சிவமே கடவுள்; முழுமுதலாகிய மெய்ப்பொருள்.

கடவுள் ஒருவரே பரத்துவமானவர். தம்முடைய அடியார்களுக்கு, திருவருள் செய்வதற்கு, எடுத்த மூர்த்தங்கள் பல. அம்மூர்த்தங்கள் சிவமூர்த்தங்கள் எனப்படும்.

## சிவகுமாரர் மூர்த்தங்கள்:-

சிவபெருமானின் திருக்குமாரர்களாக; விநாயகர், முருகன், வயிரவர், வீரபத்திரர் ஆகிய நால்வர், குறிப்பிடப்படுகின்றனர். இம் மூர்த்தங்கள், சிவமூர்த்தங்களேயாம். சிவபெருமானுக்கும் இம் மூர்த்தங்களுக்கும் பேதமில்லை, என நூல்கள் கூறும்.

## அட்டமூர்த்தங்கள்:-

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்; சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டும்; சிவபெருமானுடைய அட்டமூர்த்தங்கள் ஆகும். இவை ஒவ்வொன்றையும் வணங்கி வழிபாடுசெய்தல்; சிவவழிபாடு ஆகும். அட்டமூர்த்தங்களும் சிவமூர்த்தங்களே எனக்கொள்ளப்படுகின்றன. இவையனைத்தும் சேர்ந்ததே நாம் வாழுகின்ற உலகம்.

உலகம் முழுவதுமே சிவரூபம்; சிவமயம்; அதனால் சிவபரத்துவம் எங்கும் பரந்தும் விரிந்தும், செறிந்தும் உள்ளமை புலப்படுகின்றது.

"எந்தத் தேகமுடைய ஆன்மாவேனும், நிக்கிரகத்திற்கு ஆளாயின், அது முழுமையும் அஷ்டமூர்த்தம் உடையாருக்கு வெறுப்பாகும்," என்கிறது, வாயு சங்கிதை. எனவே, அகிம்சை எனும் இன்னா செய்யாமை, மிக உயர்ந்த ஆன்மீக விழுமியம் ஆகும். இதுபற்றியே, தமிழ் வேதம் ஆகிய திருக்குறள்;

> "எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
> மாணா செய்யாமை தலை" என்றும்

"சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசற்றார் கோள்" என்றும்,

இன்னா செய்யாமை பற்றிக்கூறுகிறது. சிறப்புக்கள் மற்றும் செல்வங்கள் பெறுவதாக இருப்பினும்; பிறருக்குத் துன்பம், தீமை என்பவற்றை செய்யாதிருத்தல், மிகஉயர்ந்த அறம் ஆகும். எனவே, இன்னா செய்யாமை என்னும் அகிம்சை, மற்றும் சத்தியம் ஆகியவற்றை, வாழ்வில் கடைப்பிடித்து வருதல்; சிவவிரதம், சிவ வழிபாடு ஆகும். இவையாவும் சிவபரத்துவம் என்னும் தத்துவத்தை விளக்குவதாக உள்ளன.

பரத்துவமான, முழுமைத்துவமான சிவபரம்பொருளுக்கு ஈடானவர், ஒப்பானவர்; மேலானவர் எவரும் இல்லை.

பொருள் ஒன்று; வடிவம் பல. சிவபரம்பொருள் ஒன்று; சிவமூர்த்தங்கள் பல. வடிவத்திற்கேற்ப, நாமங்களும் பல.

சங்கிலி, காப்பு, தாலிக்கொடி, தோடு, மோதிரம், அட்டியல், மூக்குத்தி, அரைஞாண் இவையாவும் பொன் ஆபரணங்கள். இவை அனைத்தும் வடிவங்களில் வேறுபட்டாலும்; வண்ணங்களில் மாறு பட்டிருந்தாலும்; மூலப்பொருளில் ஒன்றுபட்டுள்ளன. பொன் என்ற மதிப்பு வாய்ந்த ஒரே உலோகம்தான், அத்தனை வடிவங்களையும் பெற்றிருக்கின்றது; பல பெயர்களையும் கொண்டுள்ளது. இவ்வாறு தான், ஒரே சிவபரம்பொருள்; பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் விநாயகப்பெருமான் ஆக; அழகுத்தெய்வம், முருகன் ஆக; அர்த்தநாரீஸ்வரன் ஆக; வடிவங்கள் பெற்று, அடியார்களுக்கு அருள்புரிகின்றது. இந்த வகையில், சைவசமயிகள் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும்.

சிவபரத்துவம், விநாயகபரத்துவம் இரண்டும் ஒன்றுதான்; வேறு வேறானதல்ல; என்னும் உண்மை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## சிவம் பரப்பிரம்மம்:-

சிவபெருமான்; ஆதியானவர்; சோதியானவர், அந்தமற்றவர், காலத்தை வென்று நிற்பவர்; பரபூரணர்; மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் அறியவொண்ணாதவர்; அண்டாதி அண்டங்களுக்கெல்லாம் மூலமாக, முதலாக, வித்தாக விளங்கு பவர்; ஒப்பு உவமையற்றவர், தூயவர், பதியானவர், மும்மலங் களினாலும் பிணிக்கப் பெறாதவர் என்பதால் நிர்மலர்; ஞானத்தின் திருவுருவானவர்; கருணாமூர்த்தி, அடியார்க்கெளியவர், அன்பு வடிவினர், நீதியேயானவர், மறைகளின் பொருள் ஆனவர்; சச்சிதானந்த வடிவினர்; ஏகன், அநேகன், இறைவன்; சகல அண்டங்கள் அனைத்தையும் கடந்து நிற்கும் அதேவேளை மனிதர்களாகிய எமது உள்ளங்களிலும் உறைந்து நிற்பதனால், கடவுள் ஆனவர்.

பரம்பொருள் ஒன்றுதான்; அது சிவம் எனப்படுகிறது. அது உரையற்றது; கரையற்றது; திரையற்றது, புரையற்றது.

சிவன், விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர், விஷ்ணு, அம்பாள், சூரியன் எனப் பல பெயர்களால் தெய்வங்கள் அழைக்கப்படினும்; அவற்றால் குறிப்பிடப்படும் பரம்பொருள் ஒன்றே என்பதும், அது சிவம் என்பதும் சைவசமயத்தின் நிலைப்பாடு ஆகும்.

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனார்தாம் வருவர்", என்னும் உண்மையைச் சைவ சித்தாந்தம் உறுதிப்படுத்துகிறது.

சைவத்திற்குக் குலம் ஒன்று; அதுவே மனிதகுலம்; தேவன், ஒன்று, அவனே மகாதேவன். மகாதேவனே சிவபெருமான், உலகத்தின் முழுமுதற்கடவுள்.

**உலகத்துக்குக் கருத்தா யாவர்?**

பிரம்மா, விட்டுணுக்கள் தொடக்கம், மனிதர்கள்வரை; இந்த முக்கியமான வினாவுக்கு, உரிய விடையைத்தேடி, ஆராய்ந் துள்ளனர். இதற்குரிய விடையை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், தாம் இயற்றிய, முதலாம் சைவ வினா விடையில்; முதல் வினாவாக; எழுப்பி; உலகத்துக்குக் கருத்தா, சிவபெருமான் என்ற விடையை, ஐயந்திரிபறத் தந்துள்ளார்.

உலகத்துக்குக் கருத்தா யாவர்? என்ற வினாவும், அதற்குரிய மிகச்சரியான விடையும்; ஆழமான கருத்தைக் கொண்டவை. அக்கருத்து, வேதாகமங்களின் சாரமாக அமைந்திருக்கின்றது.

ஒருகாலகட்டத்திலே, தேவர்களுட் சிறந்தோராகிய பிரம்மா, விட்டுணு ஆகியோரால்; இம்முக்கிய வினாவுக்கு விடை ஆராயப்பட்டது. படைத்தல் கடவுள், பிரம்மா; விட்டுணு, காத்தல் கடவுள். ஒருமுறை, இவ்விடயம்பற்றி, அவ்விருவர்களுக்குமிடையில் ஒரு சொற்போர் நடந்தது.

பிரம்மா, இவ்வுலகத்தைப் படைத்தவர் தான்; என்றும் அதனால் இவ்வுலகத்துக் கருத்தா, தானே என்றும், கூறி அகங்கரித்தார். அதற்கு விட்டுணு; பதிலுக்குப், பிரம்மா படைத்த உலகம், அழிந்து விடாமல்; காப்பவன் தானே; அதனால் காத்தல் கடவுளாகிய தானே உலகத்துக்குக் கருத்தா, என்று கூறி, அகங்கரித்தார்.

இப்பொழுது, இரண்டு கர்த்தாக்கள்; நான்; நான் என்று தோன்றிவிட்டார்கள். இருவர் முரண்பாடு, போர் ஆக உருவெடுத்தது. பெரும் யுத்தமாக மாறியது. நீண்டகாலம் தொடர்ந்தது. உலகம் நடுங்கியது; உயிர்கள் கலங்கின. அந்நேரத்திலே நாரதமகாமுனிவர்; யுத்த களத்திற்கு வந்து; பிரம விட்டுணுக்களை நோக்கி; "உங்களுக்குப் படைத்தல், காத்தல் தொழில்களை வழங்கி; அவ் உயர் பதவிகளில் அமர்த்தியவர்; நியமனம் உபகரித்தவர் யாவர்?

அப்பெருமான் உங்களிலும் பெரியவர், மேலானவர் தானே! அவரை மறந்து விட்டீர்களா? அவரே, உலகத்துக்குக் கருத்தா" என்றார்.

நாரதரின் விடையை; பிரம்மாவும் விட்டுணுவும், ஏற்றுக் கொள்ள வில்லை. காரணம், இருவரிடமும் குடிகொண்டிருந்த அகந்தையும், மமதையும்தான். இருவரும், ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்காமல், போரை மீண்டும் தொடங்கி, முன்னரிலும் மூர்க்கமாக நடத்தினர்.

அப்பொழுது, இருவருக்கும் மத்தியில், ஒரு பெரும் சோதி தோன்றியது. அது, ஆதியும் அந்தமும் இல்லா, அரும் பெருஞ் சோதியாக அமைந்திருந்தது. அதன் அடியுந் தெரியவில்லை; முடியும் காணமுடியவில்லை. யுத்தம் புரிந்த பிரமாவும், விட்டுணுவும் திகைத்தார்கள். அவ்வேளை, நாரதர் மீண்டும் அங்கே தோன்றி; இச்சோதியின் அடியையும், முடியையும் தேடிக் கண்டுபிடியுங்கள். உலகத்துக்கு கருத்தா யாவர், என்பது தெரியும் என்றார்.

விட்டுணு பன்றி வடிவெடுத்து, சோதியின் அடியைத் தேடத் தொடங்கினார். பிரமா அன்னத்தின் வடிவெடுத்து, மேலே பறந்து சென்று முடியைத் தேடிக்காண முயன்றார். இருவரின் முயற்சியும் பயனளிக்கவில்லை; வேதங்கள் முதலிய வடமொழிச் சாத்திர நூல்கள் அவர்களைப் பார்த்து எள்ளி நகையாடின. பிரம விட்டுணுக்கள், நாணித்தலை குனிந்தனர். ஈற்றில், உலகத்துக்குக் கருத்தா, சிவபெருமான் ஒருவரே, என்பதை இருவரும் ஒப்புக் கொண்டார்கள். தமது அறியாமையை மன்னித்தருளும்படி, இருவரும், முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானைப் பிரார்த்தித்தார் கள். அப்படி, அவர்கள், உலகத்துக்குக் கருத்தா, சிவபெருமானே என்பதை ஒப்புக்கொண்டு, சிவனைப் பிரார்த்தித்த புனித தினமே, சிவராத்திரி புண்ணிய தினம்.

பிரமா, விட்டுணு ஆகியோர், செருக்கு அடங்கிச், செய்த பிரார்த்தனையை ஏற்று, ஆதியும் அந்தமும் இல்லாத, சோதி வடிவம், சுருங்கி, அருணாசல மலையாயிற்று. அத்தினம், அவர்கள் கேட்டுக்கொண்டபடி; மகாசிவராத்திரி, புண்ணிய தினமாக; விரதம் அநுட்டித்து; பக்தியோடு; சிவபெருமானுக்கு விழா எடுத்து, கொண்டாடப்பட்டு வருகின்றது.

சிவபரத்துவம்; ஆழ்ந்து, அகன்று, பரந்து, ஓங்கி உயர்ந்து உள்ள, மிகப்பெரிய தத்துவம்.

**சிவம் - பரப்பிரமம் நிரூபணம்:-**

பிரம்மா, விட்டுணு இருவரும், சோதியின் அடி, முடி தேடிய நிகழ்வின் மூலம்; சிவம் ஒன்றே பரப்பிரமம், பரம்பொருள், என்பதுடன்; சிவத்தின் பரத்துவமும் நிறுவப்பட்டுள்ளது. சிவம் நிலையானது; "ஆக்கம், அளவு, இறுதி" இல்லாதது சிவம்; மெய்ஞ்ஞானமாகி மிளர்கின்ற மெய்ச்சுடர்; "அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவு" - அது சித்துப் பொருள். அத்துடன் அது, நிலையான சத்துப்பொருள்.

"விண்ணிறைந்து, மண்ணிறைந்து, மிக்காய், விளங்கு ஒளியாய்; எண்நிறைந்து, எல்லை இலாதானே", - இவ்வாறு மாணிக்கவாசகர் சிவபரத்துவத்தை விவரிக்கிறார்.

## சிவபரத்துவம் பற்றிச் சைவசமய குரவர்கள்:

"எல்லாவுலகமு மானாய் நீயே" - திருநாவுக்கரசர்

விண்ணாகி நிலனாகி விசும்புமாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற
எண்ணாகி எழுத்தாகி இயல்புமாகி
ஏழுலகுந் தொழுதேத்திக் காண நின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சியாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவநின்ற
பண்ணாகி இன்னமுதாம் பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்தவாறே.
- திருநாவுக்கரசர்

பிரமன் அரி என்று இருவரும் தம் பேதமையால்
'பரமம், யாம் பரம்' என்றவர்கள் பதைப்பு ஒடுங்க
அரனார் அழல் உருவாய், அங்கே அளவு இறந்து
பரம் ஆகி நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ.
- மாணிக்கவாசகர்

அத்தனே! அண்டர் அண்டம் ஆய் நின்ற;
ஆதியே! யாதும் ஈறு இல்லாச்
சித்தனே! பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே! சிவபெருமானே. - மாணிக்கவாசகர்

மாலாகி நான்முகனாய் மாபூ தமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வுமாகிப்
பாலாகி யெண்டிசைக்கும் எல்லையாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானேயாகிப்
பூலோக புவலோக சுவலோ கமாய்ப்
பூதங்களாய்ப் புராணன் தானே யாகி
ஏலா தனவெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே.
- திருநாவுக்கரசர்

நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும்
நெருப்பினொடு காற்றாகி நெடுவானாகி
அற்பமொடு பெருமையுமாய் அருமையாகி
அன்புடையார்க் கெளிமையதாய் அளக்கலாகாத்
தற்பரமாய் சதாசிவமாய்த் தானும் யானும்
ஆகின்ற தன்மையனை நன்மை யோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற்றோமே.
- திருநாவுக்கரசர்

இவ்வாறு, சைவசமயகுரவர்கள் அனைவரும், சிவபரத்துவம் பற்றி, ஒத்தகருத்துடையவர்களாக உள்ளமை நோக்கற்பாலது. சர்வமும் சிவமயம், ஆகக் கண்டு, உணர்ந்து; வெளிப்படுத்தியவர்கள், சைவ சமய குரவர்கள். "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே; பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே", என்பது மணிவாசகம். பழமைக்குப் பழமையாய்; புதுமைக்குப் புதுமையாய், விளங்குபவர், சிவபெருமான். "பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரன்", என்னும் மணிவாசகப்பெருமானின், மணிமொழி, சிவபரத்தின் மகிமையைக் கோடிட்டுக் காட்டுகிறது.

**சர்வம் சிவமயம்:-**

சிவம் என்னும் செம்பொருள்; ஒப்பற்ற பரம்பொருள், முதல் பொருள், மூலப்பொருள், மெய்ப்பொருள்; சிவம் என்றும் உள்ளது, எங்கும் நிறைந்தது, எல்லாம் அறிவது, எல்லாம் வல்லது எனச் சிவபரத்துவம் மகிமைப்படுத்துகிறது.

அங்கிங்கெனாதபடி எங்கும் சிவப்பிரகாசமாய்; நோக்குமிட மெல்லாம் நீக்கமற நிறைந்து; அருளொடு இணைந்து; ஆனந்தமய மாகி; தன்னருள் வெளிக்குள்ளே அண்டங்கள் அனைத்தையும் அடக்கிக்கொண்டு; உயிருக்கு உயிராய் விளங்கி; மனம், வாக்கு, காயம் ஆகியவற்றிற்கு எட்டாது; யாதினும் வல்லதொரு சித்தாகி; என்றும் ஆனந்தமாய்; யாதொன்றையும் பற்றி நிற்காமல்; சர்வ சுதந்திரராய்; பழமும் சுவையும் போல, நெருப்பும் சூடும் போல; விளங்கும் பரம்பொருள்தான், சிவம் ஆகும்.

கடவுள் என்ற சொல்லில்; கட+உள் என்னும் இரண்டு சொற்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 'கட' என்பது மனம் மற்றும் புலன்களைக் கடந்த நிலையைக் குறிக்கின்றது. 'உள்' என்பது எமக்குள்ளே, உயிருக்குயிராய் நிற்கின்ற நிலையைக் குறிக்கின்றது. சிவபெருமான் எம்முடன்; ஒன்றாய், உடனாய்; அதேவேளை, வேறாய் உள்ள, ஒரே பரம்பொருள்; என்கிறது, சைவசித்தாந்தம். சிவபெருமான், சைவசமயத்தின் முழுமுதற்கடவுள்.

**கடவுள் வழிபாடு:-**

கடவுளைப்பற்றி நினைக்காத நாளும்; பேசாத நாளும்; கடவுளைப் பிரார்த்தனை செய்யாத நாளும், பிறவாத நாளாகக் கொள்பவர்கள், சைவமக்கள்.

"பேசாத நாளெல்லாம் பிறவாநாளே", என்றும்; அதற்காகவே, "மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்றும், திருநாவுக்கரசு நாயனார், தில்லைக்கூத்தனை வேண்டுதல் செய்தவர். எனவேதான், "நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும், என்றும் அவன் தாள் நினை" என்று அருளாளர்கள் எமக்கு அறிவுரை கூறியுள்ளார்கள். கேட்டு நடந்தால், உண்டு அனைவருக்கும் உயர்வு; மறுத்தால் உண்டு அனைவருக்கும் தாழ்வு.

கிடைத்தற்கரிய மனிதப்பிறவியை எமக்கு உவந்தளித்த கடவுளை நாம் மறக்கலாமா? எந்நன்றி கொன்றார்க்கும், பிராயச்சித்தம் உண்டு.

ஆனால் ஒருவர் தமக்குச் செய்த நன்றியை; அந்நன்றி செய்தவரை; மறப்பின், அவருக்கு உய்வில்லை; பரிகாரமும் கிடையாது என்கிறார், வள்ளுவர் பெருமான். செய்ந் நன்றி மறவாமை என்பது மிகப்பெரிய அறம் ஆகும். ஆகவே, எமக்கு மனிதப்பிறவியையும்; வாழ்க்கை வசதிகளான தனு, கரண, புவன, போகங்களையும் அளித்த இறைவனை; ஒரு கணப் பொழுது நேரம் தன்னிலும் மறக்கக்கூடாது.

மனிதப்பிறவி கிடைக்கப்பெற்ற நாம், கடவுள் நினைப்புடன் என்றும் வாழவேண்டியவர்கள். ஆலய வழிபாடு, தியானம், யோகம், பிரார்த்தனை, சத்சங்கம், கூட்டுவழிபாடு, யாத்திரை செய்தல், விரதங்கள் அநுட்டித்தல், சமயவிழாக்கள் கொண்டாடுதல், சமய, சமூகத்தொண்டுகளில் ஈடுபடல்; என்றும் நல்லனவற்றையே சிந்தித்தல், ஆன்மீக வாதிகளுடன் நட்புறவு கொள்ளல் என்பன கடவுள் நினைப்புடன் வாழ்வதற்கு ஏற்ற சந்தர்ப்பங்களை வழங்குகின்றன. இவையும் கடவுள் வழிபாட்டின் பல்வேறு அங்கங்களேயாகும்.

மனிதப்பிறவி எடுத்ததன் நோக்கம்பற்றி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான், "இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது, கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்", என்கிறார்.

கடவுள் நினைப்புடன், எந்தக் கருமத்தைச் செய்தாலும், அது கடவுள் வழிபாடேயாகும், என்பர் பெரியோர்கள். அதிகாலையில் நாம் நித்திரை விட்டெழும்போது, "பிள்ளையாரே; சிவசிவா; முருகா; அம்மாதாயே;" என்று அவரவர் இஷ்ட தெய்வங்களை நினைத்துக் கொண்டோ, வாயினால் நாமங்களைச் சொல்லிக் கொண்டே தான் எழுகின்றோம், "இன்றைய நாள் எமக்கு இனிய நாளாக இருக்க வேண்டும். எடுத்த காரியங்கள் தடையின்றி நிறைவேற வேண்டும். உடல் நலம் நன்றாக இருக்கவேண்டும்." என்று கடவுளை வேண்டிக் கொள்ளுகிறோம். அதுவே, அதிகாலைப் பிரார்த்தனையாக அமை கின்றது. இரவு முழுவதும் நன்றாகத் தூங்கிக், காலையில் சுகமாக எழுந்தமைக்கு எமக்கு அருட்துணையாக விளங்கிய இறைவனுக்கு நாம் நன்றி சொல்கின்றோம். அதுவும் கடவுள் வழிபாடுதான். அந்த நேரத்திலேயே எங்களை அறியாமல் வழிபாடு தொடங்கிவிடுகிறது. அதன்பின் நெற்றியில் விபூதி தரிக்க வேண்டும் என்று நாவலர், சைவவினாவிடையில் கூறியுள்ளார்.

சைவ வினாவிடையில், வீபூதி தரிக்க வேண்டிய நேரங்கள், முறைகள் பற்றி, நாவலர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"நித்திரை செய்யப்போகும்போதும், நித்திரைவிட்டு எழுந்த உடனும்; தந்த சுத்தி செய்து முகம் கழுவினவுடனும், சூரியன் உதிக்கும்போதும், சூரியன் அஸ்தமிக்கும்போதும், சந்தியாகாலம் மூன்றினும்; ஸ்நானஞ் செய்தவுடனும்; பூசைக்கு முன்னும் பின்னும்; போசனத்திற்கு முன்னும் பின்னும்; விபூதி அவசியம் தரித்துக் கொள்ளவேண்டும்." வடக்குமுகமாயினும், கிழக்குமுகமாயினும் நோக்கியநிலையில் விபூதிதரிக்க வேண்டும். தீட்சை பெற்ற வராயின் விபூதியைத் திரிபுண்டரமாகவேனும்; தீட்சை பெறாதவர் உத்தூளனமாகவும் தரிக்க வேண்டும்.

மேற்படி நிகழ்வுகள் நடைபெறுகின்ற போதெல்லாம், கடவுள் வழிபாடு இடம் பெறுகின்றது.

ஒரு கருமத்தை ஆரம்பிக்கும்போதும், கடவுளை மனத்தில் நினைத்து, அக்கருமம் தங்கு தடைகளின்றிக் குறித்த நேரத்திற்குள், நிறைவு பெறவேண்டும் என்று கடவுளை வேண்டுகிறோம். எதிர்பாராத கஷ்டங்கள், துன்பங்கள், இடையூறுகள் வரும் போதும், கடவுளைக் கூவி அழைக்கின்றோம். இவையாவும், நாம் அறிந்தும், அறியாமலும் கடவுளை நினைப்பதாகவும், வழிபடுவதாகவும் அமைந்து விடுகின்றன. நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் என்றும் இறைவன் தாள்களை நினைக்க வேண்டும் என்ற பெரியோர் வாக்கு, கைகூடுகின்றமை நோக்கற்பாலது.

காலையில், கடவுள் வழிபாட்டுடனேயே பாடசாலைகள் மற்றும் கல்விநிலையங்களில்; கல்வி கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. மாணவர்களும் மற்றையோர்களும்; எதையும் எழுதத் தொடங்கும்போது தாளில் பிள்ளையார் சுழி போட்டுத்தான், மேலும் தொடருகின்றனர். இது நாளாந்தக் கடவுள் வழிபாடு ஆக அமைகின்றது. கடை வைத்திருப்பவர்கள், தினமும் சுவாமிப் படங்களுக்குத் தீபாராதனை செய்து, மலர்கள் வைத்தும், ஊதுபத்தி கொளுத்தி வைத்தும், தங்கள் கருமங்களைத் தொடங்குகிறார்கள்.

மந்திர உச்சாடனம், தேவார தோத்திரங்களைப் பாராயணம் செய்தல் யாவும் கடவுள் வழிபாடுகளாகும். வாகனங்களைச் செலுத்துபவர்கள் தமது இருக்கையில் இருந்து கொண்டு, கடவுளை நினைத்து ஆராதித்து விட்டுத்தான் வாகனத்தை ஓட்டத் தொடங்குகிறார்கள்.

தொழிற்கூடங்கள், வியாபார நிலையங்களிலும்; தினமும் தொழில் தொடங்கு முன்னர்; சுவாமிப் படங்களுக்கு மலர்வைத்தும், மலர்மாலைகள் சூட்டியும், தீபாரானை செய்தும்; கடவுள் வழிபாடு செய்த பின்னரே வேலைகளையும், வியாபாரத்தையும் தொடங்குகிறார்கள்.

## சிவபரத்துவம் பற்றி; நாவலர் பெருமான்:

உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களையும் செய்வதற்குக் கர்த்தா ஒருவர் இருக்கிறார்.

அந்தக் கர்த்தா, சிவபெருமான். சிவபெருமான் என்றுமுள்ளவர், எங்கும் நிறைந்தவர், என்றும் கர்த்தர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், பெருங்கருணையுடையவர்.

சிவபெருமானுக்குத் தேவி அவருடைய சக்தியாகிய திருவருள். சிவபெருமான் ஒருவரே. விநாயகர், சுப்பிரமணியர் முதலிய பலமூர்த்தங்களாகி நின்று அருள் செய்பவர்.

ஆன்மாக்கள் சிவபெருமானுக்கு அடிமைகள். சிவபெருமானை மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் வழிபடுதல், ஆன்மாக் களுக்குக் கடன்.

- மனத்தினாலே செய்யும் வழிபாடுகளாவன:- சிவபெருமானுடைய திருநாமங்களை உச்சரித்தல், அவருடைய பெருமைகளைப் பேசுதல், அவருடைய சரித்திரங்களைப் படித்தல் முதலானவைகள்.
- காயத்தினால் செய்யும் வழிபாடுகளாவன:- சிவபெருமானுடைய திருமேனியைத் தலையினால் வணங்குதல், கண்களினாலே தரிசித்தல், கைகளினாலே கும்பிடுதல், பூசித்தல், கால்களினாலே வலம்வருதல் முதலானவைகளாகும். சிவபெருமானை நோக்கிச் செய்யும் வழிபாடே அசுத்தர்களாகிய ஆன்மாக்களைப் பந்தித்த (பிணைத்திருக்கும்) பாசமாகிய நோய்க்கு மருந்து.
- வழிபாடாகிய மருந்துக்குத், துணையாக இருப்பது மெய்யன்பு. வழிபாடாகிய மருந்துக்கு பத்தியங்களாவன:- உயிர்களுக்கு இரங்குவது, உண்மை பேசுவது, செய்ந்நன்றி அறிதல்; தாய், தகப்பன், உபாத்தியாயர், குரு முதலிய பெரியோர்களை வணங்குதல், வறியவர்களுக்குக் கொடுத்தல் முதலிய புண்ணியங்கள்.

சிவபெருமான் தமக்கு ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று நிற்கும் இடங்களாவன, சிவலிங்கம் முதலிய திருமேனியும், மெய்யடியார்களுடைய திருவுருவமுமாகும்.

சிவபெருமான், தம்மை ஆன்மாக்கள் அறிந்து வழிபட்டு உய்வதற்கு அருளிச் செய்த முதல் நூல்கள்; வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாகும்.

சைவசமயிகள் அவசியமாக ஓதத்தக்க சிவமூலமந்திரம் பஞ்சாட்சரம்.
சைவசமயிகள் அவசியமாக ஓதத்தக்க சிவதோத்திரங்களாவன:-
தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம், என்கின்ற அருட்பாக்கள் ஐந்தும்.

சிவபெருமானை விதிப்படி மெய்யன்போடு வழிபட்டவர்கள் அவருடைய திருவடிக்கீழ் நித்தியமாகிய பேரின்பத்தை அனுபவிப்பார்கள்.

- நன்றி -
**சைவசமயசாரம்**

## 03 விநாயகப் பெருமான் – முதன்மைத்துவம்

**பொது:**

உலகத்திற்குக் கருத்தா சிவபெருமான். அவர் என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர். சிவ பெருமானுக்குச் சக்தி, உமாதேவியார்.

சிவபெருமானுடைய திருக்குமாரர்கள்; விநாயகக்கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக் கடவுள், சுப்பிரமணியக்கடவுள். சிவபெருமானை முழுமுதல் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம், சைவ சமயம். இவ் அருட் தகவல்கள்; ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் எழுதிய, முதலாம் சைவவினாவிடை நூலில், குறிப்பிடப்பட்டுள்ளன.

சிவகுடும்பத்தில்; சிவபெருமான், உமாதேவியார் ஆகியோரின் மூத்த திருக்குமாரனாக விளங்குபவர், விநாயகர். சிவபெருமானின், சிவகுமாரர் மூர்த்தங்களுள் முதன்மை மூர்த்தமாக விளங்குவது, விநாயக மூர்த்தம். சிவபெருமானுக்கும், இம்மூர்த்தங்களுக்கும் பேதமில்லை. எனவே, சிவன் வேறு, விநாயகர் முதலிய மூர்த்திகள் வேறு, என்று எண்ணுதல் தவறு ஆகும். சைவசமயநூல் இதனை வலியுறுத்துகின்றன. ஒரே பரம்பொருள், தந்தை - புதல்வர் இயைபிற் பேசப்படுவதன் சிறப்பினை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

விநாயகப்பெருமான்; முதல்வணக்கத்திற்கும், முதல் மரியாதைக் கும் உரியவர். விநாயகன் என்ற பதத்தின் பொருள்; தனக்கு மேல், வேறொரு தலைவன் இல்லாதவன் என்பதாகும்.

சைவ ஆகமங்கள் விதித்துள்ளபடி; ஆலயங்களில் நடைபெறு கின்ற நித்திய நைமித்தியக் கிரியைகள்; பூசை ஆராதனைகள், விழாக்கள்; மற்றும் ஆலய வழிபாடுகள் யாவற்றிலும் முதன்மை பெறுபவரும் முதல் வணக்கத்திற்குரியவரும் விநாயகப் பெருமானேயாவார். வீட்டு வழிபாடுகளிலும்; பொது இடங்களில் நடைபெறும் நாட்கருமங்கள்; சுபகாரியங்கள்; ஆகியவற்றிலும்; தொடக்க விழாக்கள் மற்றும் பூர்வ, அபரக்கிரியைகளிலும்; முதன்மை, முதல் வணக்கம் ஆகியவற்றிற்கு உரித்துடையவர், விநாயகப் பெருமானேயாவார்.

சைவமக்கள்; தாம் அன்றாடம் வாழ்க்கையில் மேற்கொள்ளுகின்ற கருமங்கள், முயற்சிகள், செயல்கள் அனைத்தும் இடர்கள், இடையூறுகள்; தடைகள்; விக்கினங்களின்றி; உரிய வேளையில் நிறைவு பெறவேண்டும் என்றும்; அவை வெற்றிபெறவேண்டும், என்றும் வேண்டுதல் செய்து; முதலில் விநாயகப்பெருமானை வணங்கி, வழிபாடு செய்கின்றனர். சைவநெறியிலே, விநாயகரை எவ்விடத்திலும், எக்காலத்திலும், எக்கருமத்தைத் தொடங்கும் போதும்; முதலில் வழிபடவேண்டும் என்னும் நியமம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்**
**ஞானகுரு வாணிபதம் நாடு."**

இப்பாடலில், ஆனைமுகங்கொண்ட விநாயகருக்கே, முதன்மை தரப்பட்டுள்ளமை நோக்கற்பாலது.

**பிடியத னுருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்**
**கடிகண பதிவர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.**

தம்மை; மனம், மொழி, மெய்யினால் வழிபடும் அடியார்களின் இடர்கள், துன்பங்கள், விக்கினங்களைக், களையவே; விநாயகர் தோன்றினார்; என்பதைத் திருஞானசம்பந்தர், இத்தேவாரப்பாடல் மூலம், நமக்கு அறிவிக்கிறார்.

**திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்**
**காதலாற் கூப்புவர் தங்கை.** - கபிலதேவ நாயனார்

**நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கனலஞானங்**
**கற்குஞ் சரக்கன்று காண்** - திருவருட்பயன் காப்பு

**வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்**
**நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு**
**துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமற் சார்வார் தமக்கு.** - நல்வழி, ஔவையார்

விநாயகக் கடவுளின் முதன்மைத்துவம், மேற்படி பாடல்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## முதல் வணக்கம்

இப்பிரபஞ்சம் தோன்றுவதற்கு மூலப்பொருள்; மாயை எனச் சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன. அது மகாமாயை எனப்படுகிறது. உலகங்கள் படைக்கப்படுவதற்கு முதற்காரணம் ஆகிய மகாமாயைக்குத் தலைவராகச் சிவபெருமான் விளங்கும்போது, விநாயகர் என்னும் திருநாமத்தைப் பெறுகிறார். மகாமாயை; பிரணவம் என்றும் அழைக்கப்படுகிறது. "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்", என்னும் பாடலடி; ஐந்து கரங்களையுடைய விநாயகப்பெருமான், பிரணவப் பொருளாக விளங்கும் தன்மையை, உணர்த்துகிறது. அந்தவகையில், விநாயகப் பெருமான்; முதல் வணக்கத்திற்கும்; எங்கும் எதிலும் முதன்மைக்கும்; முதல் மரியாதைக்கும் உரியவர் ஆகின்றார்.

விநாயகர் தம்மை மெய்யன்போடு; முதலில் வழிபடுகின்ற அடியார்களுக்குக் காரியசித்தியும், நுண்புத்தியும்; எதிர்நோக்கும் தடைகள், இடர்களை நீக்குவதற்குரிய வல்லபங்களையும்; வெற்றியையும் வழங்கி அருள்புரிகின்றார். "கணபதிபூசை கைமேற் பலன்." அது அநுபவபூர்வமாகக் கண்டறிந்த உண்மை வாசகம் ஆகும்.

சைவமக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் எடுத்த முயற்சிகள், கருமங்கள் யாவும் தடைகள், இடர்கள், இடையூறுகள் இன்றி நிறைவு

பெறவேண்டும், வெற்றியடைய வேண்டும் என்னும் வேண்டுதலை முன்வைத்து, விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்துவது மரபு ஆகும்.

**வேதத்தின் வித்தாய் விண்ணவர்க்குத் தெய்வமாய்**
**தீதற்ற நெஞ்சிற் திருவிளக்காய்**
**மாதவத்தின் அருளாய் ஒளிர்கின்ற**
**விநாயகனைப் புருவநடு நிறுத்திப் போற்று.**

வேதங்கள் தோன்றுவதற்கு வித்து ஆகவும், மூலமாகவும் விளங்குபவர் விநாயகர். தேவர்களின் தெய்வமாகவும் இருக்கிறார். தகைய பெருமைக்குரிய விநாயகக் கடவுள், தூயமனங் கொண்ட மனிதர்களின் உள்ளங்களிலே வீற்றிருந்து, ஒளிவிளக் காகப் பிரகாசித்துக் கொண்டிருப்பார். அருள் ஒளியைப் பெறுவதற்குப் பெருந்தவம் செய்திருக்கவேண்டும். அத்தகைய அருமையும் பெருமை யும் வாய்ந்த விநாயகப் பெருமானை; நாம் நமது புருவமத்தியில் அமர்த்தி, அவரின் திருவடிகளை எந்நாளும் ஏற்றிப்போற்றித் துதிக்க வேண்டும். எல்லாக் காரியங்களும் சித்தியாகும்.

தினந்தோறும், அதிகாலையில் நாம் நித்திரை விட்டெழுந்ததும், விநாயகப் பெருமானைப், புருவமத்தியில், நினைத்து, முதல் வணக்கம் செலுத்தி, அன்றைய தினம் எடுத்த கருமங்கள் யாவும், இனிதே நிறைவேற வேண்டும் எனப் பிரார்த்தித்து, அவரின் ஒப்புதல் பெற்றுச் செய்தால்; வெற்றி நிச்சயம். அத்துடன் அவை நற்கருமங்களாகவும்; தமக்கோ, பிறருக்கோ தீமை பயக்காதனவாக வும் அமையும்.

தம்மை மெய்யன்போடு வணங்கி, வழிபடும் அடியார்களின் இடர் களையும்; துன்பந்துயர்களையும், நீக்கித் திருவருள் பாலிப்பதற் காகவே, விநாயகர் தோற்றம் நிகழ்ந்தது, என்பதை, அனைத்துத் திருநூல்களும்; தோத்திர, சாத்திர நூல்களும் கூறுகின்றன.

மூலாதாரத்திற்குரியவரான விநாயகரை முதலில் அணுகி, தேங்காய் உடைத்து; வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு என்பன வற்றை அவருக்கு நிவேதித்து; வணங்கிப், "பிள்ளையாரே; யான் தொடங்கும் கருமம்; எவ்வித தடைகள், இடர்கள், விக்கினங்கள் இன்றி; இனிதே நிறைவேற்றி; வெற்றி பெறத் திருவருள் பாலிக்க, வேண்டுகிறேன்," எனப் பிரார்த்தனை செய்துவிட்டே, கருமங்களை ஆற்றத் தொடங்குவது, சைவமக் களின் மரபு ஆக இருந்து வருகிறது.

பிரயாணத்தை மேற்கொள்வதற்கு முன்னர், ஆலயம் சென்று பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்து, வணங்கி; பிரயாணத்தில் இடர்கள், தடைகள், விபத்துக்கள், தாமதங்கள் போன்றன ஏற்படாமல்; பிரயாணம் சுமுகமாக இருக்க வேண்டும் என்றும்; செல்லும் நோக்கம், நிறைவாக அடையப்படவேண்டும் என்றும், பிரார்த்தனை செய்து; பிரயாணத்தை மேற்கொள்ளுதல், சைவ மக்களிடையே, நீண்டகால வழக்கமாக இருந்துவருகிறது. தற்காலத்தில், பலர் இவ்வழக்கத்தைத் தளர்த்தி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இன்று,

மக்கள் பிரயாணத்தில் எதிர்கொள்கின்ற, விபத்துக்கள், தாமதங்கள், இழப்புக்கள், சிரமங்கள் யாவற்றிற்கும்; ஆன்மீக ரீதியாகக், காரணங்களை ஆராய்ந்து பார்த்தால்; தெய்வத்தை அலட்சியம் செய்தமை, தெரியவரும்.

## விநாயகருக்கு முதல் வணக்கம் - காரணம்:

விநாயகப் பெருமான், மூலாதாரத்திற்குரியவர்; முழுமுதல், ஆக விளங்குபவர். மனிதர்கள் எதிர்நோக்கும் விக்கினங்களை நீக்குபவர். அதனால் விக்கினேஸ்வரமூர்த்தியாகவும்; அறக்கருணை, மறக்கருணை இரண்டையுமே, மனிதர்களின் நன்மையின் பொருட்டுச் செய்வதால்; தந்திரமூர்த்தியாகவும், மந்திரமூர்த்தி யாகவும் விளங்குகிறார்.

தமக்கு மேலேயோ, ஒப்பாகவோ, வேறொரு தலைவன், இல்லாத வர் என்னும் கருத்துடையதாக, "விநாயகன்" என்னும் திவ்விய நாமம் அமைந்துள்ளமை; விநாயக பரத்துவம், முதன்மைத்துவம் ஆகிய வற்றை உணர்த்துவதாக உள்ளது.

சைவசமயமரபில்; தோத்திர, சாத்திர ரீதியாக; முதல் வணக்கத் திற்கும் முதல்மரியாதை பெறுவதற்கும், உரித்துடைய கடவுள், விநாயகப் பெருமான் என்னும் நியதி உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நியதிப் பிரமாணத்தை மீறிச் செயற்படுவோர்; தண்டனைக் குள்ளானமை, பற்றிய செய்திகளை, புராண வரலாறுகளிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது. இந்த விதிக்கு, விநாயகரின் தந்தையாரும் உட்பட்டவரே, என்பது நோக்கற்பாலது. விநாயகப் பெருமானை அலட்சியம் செய்பவர்கள்; தந்தையாக இருப்பினும், குடும்ப உறுப்பினராக இருப்பினும், வேறு எவராகவிருப்பினும்; உரியதண்டனையை அனுபவித்துத்தான் தீரவேண்டும். இது விநாயகரின் மறக்கருணையாகும்.

## திரிபுரசங்காரம் - கற்றுத்தந்த பாடம்

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், முன்னர் ஒருமுறை; திரிபுரசங்காரம் நிகழ்த்தும் பொருட்டு; பூமியாகிய தேரின்மீது அமர்ந்து; நான்முகன் எனப்படுகின்ற பிரமாவை விழித்துத் தேரை ஓட்டும்படி பணித்தார். பிரமாவும்; சிவனின் கட்டளைக்கிணங்கத், தேரைச் செலுத்தத் தொடங்கினார். எனினும், தேர் நின்ற இடத்திலிருந்து சிறிதும் நகரவில்லை. இதைக் கண்ட பிரமா, மத்திகையினால், ஆனமட்டும், குதிரைகளின்மீது ஓங்கி அடித்தார். குதிரைகள் எவ்வளவோ பாய்ந்து செல்ல முயன்ற போதிலும் தேர் அதன் இருப்பிடத்திலேயே, அசையாமல் நின்றது. இது தேவர்கள் அனைவர்க்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அப்பொழுது, குதிரைகள் இழுத்த வேகத்தில் தேரின் அச்சு முரிந்தது. எல்லோரும் திகைத்தனர். தேவர்கள் தேரின் அச்சு முரிந்தமைக்கான காரணத்தை ஆராய்ந்தனர். அப்பொழுது, விநாயகப்பெருமானின் திருவிளையாட லின் விளைவே, அச்சு முரிந்தமை எனத் தெரிந்து, மனம் வருந்தினர். முதல் வணக்கத்திற்கும், முதல் மரியாதைக்கும் உரிய விநாயகப் பெருமானுக்கு; உரியமுறையில் முதல் வணக்கம் செலுத்தாமல், திரிபுரசங்காரத்திற்குப் புறப்பட்டமையே, தடைக்குக் காரணம், என்று

நினைந்து, வருந்திய தேவர்கள், பிரமா சகிதம், விநாயகரைப் பூசித்தார்கள். விநாயகப்பெருமான் மூஷிக வாகனத்தில் அவர்கள் முன் தோன்றியருளினார். அப்பொழுது, அச்சுமுரிந்து, அசையாது நின்ற தேர்; பிரளய காலத்து வெள்ளம், கரைபுரண்டு செல்லும் வேகத்தை விஞ்சியதாக, பெரும் ஒலியுடன் விரைந்து சென்றது. திரிபுரங்களும் சிவபெருமானால் சம்ஹாரம் செய்யப்பட்டன.

தேரானது, அச்சுமுரிந்து நிலைபிரியாது, நின்ற திருஅச்சிறு பாக்கம் என்ற திருத்தலம், இத்தெய்வீக நிகழ்வின் நினைவாகத் தமிழ் நாட்டில், இன்றும் உள்ளது. இப்புராண வரலாறு, கந்த புராணம் உபதேச காண்டத்தில் உள்ளது.

**"முப்புர மெரிசெய்த வச் சிவனுறைரதம்**
**அச்சது பொடி செய்த – அதிதீரா"**

என்று, விநாயகப்பெருமானுக்கு வணக்கம் செலுத்துமுகமாகத், தாம் முருகப்பெருமான் மீது பாடிய, திருப்புகழ்ப் பாடலில்; ஏற்றிப் போற்றுகிறார். முப்புரங்களையும் தகனம் செய்யப்புறப்பட்ட சிவனாரின் தேரச்சு, முரிந்த சம்பவத்தைச் சுட்டி, விநாயகப் பெருமானுக்கு அருணகிரிநாதர் வணக்கம் செலுத்துவதாக இப்பாடலடிகள் அமைந்துள்ளன. விநாயகரின் மறக்கருணைத் திறன், இதன்மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை நோக்கற்பாலது.

விநாயகருக்கு, முதல்வணக்கத்திற்குரிய உரிமையை வழங்கிய வரே, தந்தையாகிய சிவபெருமான் ஆவார். அந்த வரம் தம்மையும் தொடரும்; அதில் தாமும் உள்ளடங்குகிறார்; அத்துணை வலிமை, அவ்வரத்திற்கு உண்டு என்பதை இச்சம்பவத்தின் மூலம், சிவ பெருமான் வெளிப்படுத்தி, உலகத்தவர்க்கு உணர்த்தியுள்ளார்.

சிவபெருமானுக்கும், விநாயகப் பெருமானுக்கு மிடையேயுள்ள உறவு; தந்தை, மகன் உறவு என்பதை, திருநூல்கள் கூறும்.

**"கரியின் மாமுகமுடைய கணபதிதாதை"** - திருஞானசம்பந்தர்

**"தண்டகமா முகத்தி னாற்குத் தாதை காண்"**

**"கைவேழமுகத்தானைப் படைத்தார் போலும்"** - திருநாவுக்கரசர்

என வருந் தேவாரத் திருவாக்குகள் இவ்வுண்மையைத் தெளிவு படுத்துகின்றன. "எனதுரை தனதுரையாக" என்ற ஞானசம்பந்தர் திருவாக்கிலிருந்து; தேவாரப் பாடல்கள் அனைத்தும்; சமயகுரவர் திருவாயிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட, சிவனாரின் அருள்மொழி களேயாகும்.

சிவபெருமான் தந்தையும்; விநாயகர் அவரின் மூத்த திருக்குமாரனுமாக உள்ளமையைத் தெரிந்துகொண்ட எமக்குத்; தந்தைக்கு மகன் இடர் விளைத்தல்; தகுமோ, என்னும் வினா எமக்குள் தோன்றுவது இயல்பானதேயாகும். இதற்குரிய விடையை; "விநாயகபரத்துவம்", என்னும் தமது நூலில், அச்சுவேலி, சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள், தெளிவுபடுத்தியுள்ளார். அதுபின்வருமாறு:

"பிதாபிள்ளை என்றது, அருள் நாடகமாம் என்றறிக. பூவும், பூவினது நிறமும், பூவினது மணமும் போலச்; சிவனும் சத்தியாரும், சிவகுமாரரும் எண்ணப்படுதல் சைவாகம நூற்றுணிபாம். ஆதலால் அவர் தம்மாட்டு உயர்வு, தாழ்வு கற்பித்தல் குற்றமாம். ஒரு பொருளே மூன்றுமாகப் புகழப்படுதல் ஆன்மாக்களது பிரயோசனங் குறித்தே யாம். இதனால் பிதாவாயிருந்து அநுக்கிரகித்தலும், பிள்ளையா யிருந்து இடர்வித்தலும், பிறர் பிரயோசனங்கருதியென்பது பெறப் பட்டது. அவனே மகேசன்; அவனே உமை; அவனே விநாயகன்; அவனே கந்தன் என அதர்வசிரோபநிடதமும்; "நீயே பெண்; நீயே ஆண்; நீயே குமரன்", என சுவேதா சுவதர உபநிடதமும், "என்னானைக் கன்றினை;" என அப்பர் சுவாமிகள் தேவாரத் திருவருட்பாவும்;

**தனதனற்றோழா சங்கரா சூலபாணியே**
**தாணுவே சிவனே**
**கனக நற்றூணே கற்பகக் கொழுந்தே**
**கண்கண்மூன் றுடையதோர் கரும்பே**
**யனகனே குமர விநாயக சனக**
**வம்பலத்தமர சேகரனே**
**யுனகழ லிணையென் னெஞ்சினு ளினதாத்**
**தொண்டனே னுகருமா நுகரே.**

- திருமாளிகைத்தேவர் : திருவிசைப்பா

எனவும், சிவனே விநாயகரென்று தெற்றென உணர்த்தி நிற்பது காண்க.

## விநாயகருக்கு முதல் வணக்கம்
## ஏற்படும் அநுகூலங்கள்:

**"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்**
**ப்ரஸன்ன வதனம் த்யோயேத் சர்வ விக்நோப சாந்தயே."**

இது, விநாயகருக்கு முதல்வணக்கம் செய்யும்போது சொல்லப்படு கின்ற சுலோகம் ஆகும்.

தாம் ஆரம்பித்த கருமங்கள், அவை நல்ல நோக்கத்துடனான வையாகவிருப்பின்; நிறைவுபெறும்வரை; தடைகள், இடர்கள், இடையூறுகள், நெருக்கிடைகள், ஏமாற்றங்கள், குழப்பங்கள், இழுத்தடிப்புகள், தாமதங்கள், சிக்கல்கள், எதிரிகளின் எதிர்ப்புக் கள், மற்றும் குறுக்கீடுகள், அவலங்கள், வஞ்சகச்சூழ்ச்சிகள், சதிகள், இயற்கை அனர்த்தங்கள், கெட்டதேவதைகளின் பாதிப்புக்கள், மனஅழுத்தங்கள், நோய்கள் என்பன ஏற்படாதவாறு; எண்ணிய கருமங்கள், முயற்சிகள் யாவும் எண்ணியபடி, திட்டமிட்ட படி, வகுக்கப்பட்ட நோக்கங்கள் யாவும் முழுமையாக அடையப்படு வதற்கு; விநாயகப்பெருமானை முதலில் நினைந்து, நேர்த்தி வைத்து; கருமங்களைத் தொடங்கவேண்டும் என்ற நியதி, பண்டு தொட்டு நம்மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. "நம்பினார் கெடுவதில்லை" என்பது அனுபவமூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அருள்வாக்கு. முழுதும் உண்மை.

விக்கினம் என்னும் சொல்லுக்கு; இடர், துன்பம், தடை, இடையூறு எனப்பொருள் கொள்ளப்படுகிறது. விக்கினங்களை நீக்குபவர், இடர்களைபவர் என்பதால்; விநாயகருக்கு; விக்னேஸ் வரன், விக்னராஜா என்னும் திருநாமங்கள் தரப்பட்டுள்ளன.

தம்மையணுகியவருக்கு அருமருந்தாய்; அணுகாதவர்க்குப் பிணியாய் விளங்குபவர், விக்ன விநாயகர். இரண்டிலும் விநாயகக் கடவுளின் அளப்பருங் கருணையே ஊடுருவி நிற்கிறது.

விநாயகருக்கு முதல் வணக்கம்செய்து, அன்றாடம் கருமங் களைத் தொடங்கும்போது, வெற்றி உறுதியாகி விடுகின்றது; சித்தி உரித்தாகிவிடுகின்றது.

**பிள்ளையார் சுழி:**

எழுத்து வேலைகளைத் தொடங்கும்போது; முதலில் எழுதும் ஏட்டிலோ; எழுதும் தாளிலோ; எழுதுகருவியினால் பிள்ளையார் சுழிபோட்டு; அதன்பின்னர், எழுதத்தொடங்குவது, பண்டுதொட்டு, இந்துக்களின் பாரம்பரியமாக இருந்து வருகிறது. இன்றும் அந்தப் பாரம்பரியம் தொடர்வதைக் காண முடிகின்றது. பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கும் எழுத்துப்பணிகள், வெற்றிகரமாக நிறை வேறும் என்பது வெறுமனே நம்பிக்கைமட்டுமல்ல; யதார்த்தமும் ஆகும். பிள்ளையார் சுழிபோட்டு, எழுதத் தொடங்குவதால்; எழுத்துமூலம்; சொல்வாக்கும், செல்வாக்கும்; எழுத்தை ஆளும் திறனும் அதிகரிக்கும்.

பிள்ளையார் சுழிபோடுதல் என்பது; பிள்ளையாருக்கு முதல் வணக்கம் செலுத்துதலுக்கு இணையானதாகும். இந்துக்களின் எழுத்துப்பணிவழக்கில்; வித்தியாரம்பம் எனப்படும் ஏடுதுவங்குதல் தொடக்கம்; புராண, இதிகாசநூல்கள், மற்றும் இலக்கிய, இலக்கண நூற்படைப்புக்கள் வரை; நாளாந்த எழுத்துவேலைகள்; கடிதங்கள், கணக்கு வைப்புக்கள்; பரீட்சை விடைத்தாள்கள் உட்பட; எழுதத் தொடங்குவதற்குமுன், முதல் வேலையாக; பிள்ளையார் சுழிபோட்டு; விநாயகருக்கு முதல்வணக்கம் செலுத்திய பின்னரே; அப்பணிகளைத் தொடங்கி, நிறை வேற்றுகின்றனர். இந்து மக்களிடையே, இவ்வழக்கம் பண்டு தொட்டு இருந்துவருகிறது.

எல்லாவகையான அறிவு, ஞானம், எழுத்து, வன்மை, ஆக்கத் திறன், படைப்பாற்றல், யாவையும் அருள்பவர், விநாயகப் பெருமான் ஆவார்.

பிள்ளையாரை முதலில் மனதால் நினைத்து, எழுத்து மூலமான கருமங்களைத் தொடங்கினால்; எவ்வித தடைகள், தடங்கல்கள்; இடர்கள் என்பன அக்கருமம் நினைத்தபடி நிறைவுபெறும்வரை, குறுக்கீடு செய்யாமல்; அக்கருமம் வெற்றிதரும். முதல் வணக்கத்தின், குறியீடு ஆகவே, பிள்ளையார்சுழி அமைகின்றது. பண்டுதொட்டு, இற்றைவரை, இம்மரபு வளர்ச்சி பெற்றுவருகிறது. திருமணம்; கிருகப்பிரவேசம் எனும் வீடுகுடிபுகுதல்; மற்றும் விழாக்கள், பொது

வைபவங்கள் போன்ற மங்களகரமான நிகழ்வுகளுக்கான அழைப் பிதழ்கள், விஞ்ஞாபனங்கள் ஆகிய வற்றில்; முதலில், தலைப்பில் "உ" என்னும் வடிவில் பிள்ளையார்சுழி இடப்பட்டிருத்தலைக் காணலாம். அச்சின்னம், காப்புத் தேவையை நிறைவேற்றுவதாகக் கொள்ளப்படுகிறது.

நாம் கடிதங்கள், அறிவித்தல்கள், விளம்பரங்கள், கட்டுரைகள், கவிதைகள், இலக்கியப் படைப்புக்கள், நூல் ஆக்கங்கள் என்பன வற்றை எழுத ஆரம்பிக்கும்போது; முதல் வேலையாகப் பிள்ளையார் சுழி; தாளின் முதற்பக்கத் தலைப்பில்; இட்டு, அதன்கீழ் பிள்ளையார் துணை; அல்லது சிவமயம் எழுதும் மரபினைக் கடைப்பிடித்து வருகிறோம். விநாயகப்பெருமான் முதல் வணக்கத்திற்குரியவர், என்பதை இம்மரபுக்குறியீடு, சின்னம், சுட்டி நிற்பதை உணர்வோமாக.

பிள்ளையாரை மனத்தினாலும், சொல்லினாலும், மெய்யினாலும் முதலில் வணங்கி, வழிபட்டு; நீதி வழுவா நெறிமுறையில், எடுத்த கருமங்களை ஆரம்பித்து, ஆற்றியவர்கள்; எவ்வித இடையூறுகளு மின்றி அவற்றை நிறைவேற்றிப் பயன் பெற்றதாகக் கூறப்படும் நல்வார்த்தைகள்; யாவர்க்கும் தும்பிக்கையான்மீது நம்பிக்கையூட்டு வனவாக அமைகின்றன. "நம்பினார் கெடுவதில்லை" நான்மறை வாக்கு. இம்மரபை மீறுபவர்களின் காரியங்கள் வெற்றியடையாமல் போய்விடும்.

### விநாயகர் வடிவம் உணர்த்தும் முதன்மை:

விநாயகரின் திருவுருவம் பலதத்துவங்களைக் கொண்டுள்ள தாக அமைந்துள்ளமை சிந்திக்கற்பாலது. பிரணவம் எனப்படுகின்ற ஓங்காரம் அவருடைய திருவடிவமாயிற்று. அதனால், பிரணவ சொரூபி, பிரணவன், ஓங்காரமூர்த்தி என்னும் திருப்பெயர்களால், விநாயகர் அழைக்கப்படுகிறார். ஓங்காரமே, உலகில் தோன்றிய முதல்ஒலி. அந்தப் பேரொலியிலிருந்தே, பஞ்சபூதங்களும்; அவற்றை மூலப் பொருள்களாகக் கொண்ட சேர்க்கையால்; சகல அண்டங்களும் மற்றும் சராசரங்களும் படைக்கப்பட்டன. தனு, கரண, புவன, போகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. உலகத் தோற்றத்திற்கு மூலமாகவிருந்த பிரணவத்தின் வடிவமாகவும், பிரணவப் பொருளாகவும், விளங்குவதன் காரணமாகப் பிள்ளையார், முதல் வணக்கத்திற்குரிய கடவுளாக விளங்குகிறார்.

எடுத்த கருமங்கள் யாவும், திட்டமிட்டபடி நிறைவு எய்தப்படும் வரை; எவ்விதத் தடைகள், இடர்கள், இடையூறுகள், இன்னல்கள், இழப்புக்கள்; எதிரிகளின் எதிர்ப்புக்கள்; இயற்கை அனர்த்தங்கள்; கெட்ட தேவதைகளின் பாதிப்புக்கள் என்பன குறுக்கிடாமல்; பாதுகாப்பு வழங்கும்படி, விநாயகப்பெருமானைப் பிரார்த்தித்து; அவரிடம் உத்தரவு பெற்று; கருமங்களைத் தொடங்குதல், முதல் வணக்கத்தின் பிரதான நோக்கமாகும்.

## பிள்ளையார் என அழைப்பதன் காரணம்:

விநாயகர்; பிள்ளையார் என்று; மரியாதைப் பண்பைக் குறிக்கும் "யார்" என்பதையும், சேர்த்து அழைக்கப்படுகின்றார். சிவகுடும்பத்தில், மூத்தபிள்ளையாக விளங்குகின்ற விநாயகர், முதல் மரியாதைக்கு உரியவருமாவார். தந்தையைத், தந்தையார் என்றும்; தாயைத், தாயார் என்றும்; தமையனைத், தமையனார் என்றும், மரியாதையாக அழைப்பது வழக்கம் ஆகும். எனினும், நம் குடும்பங்களில், எந்தப் பிள்ளையையும் பிள்ளையார் என்று "யார்" சேர்த்து அழைக்கின்ற வழக்கம் நம்மிடையே இல்லை. அந்த மரியாதையும், கௌரவமும் விநாயகருக்கு மட்டுமே, உரித்தாக்கப் பட்டுள்ளமை, நோக்கற்பாலது. காரணம்; உலகத்திற்குக் கர்த்தாவாகவும்; சிவகுடும்பத்தின் தலை வராகவும் விளங்குகின்ற சிவபெருமான், உமாதேவி ஆகியோரின் மூத்தபிள்ளை என்கின்ற பெருமைக்குரியவர் என்பதால் மட்டுமல்ல; தமக்குமேலே வேறொரு தலைவர் இல்லாதவர் என்பதுடன்; தமக்கு ஈடு, இணையாகவோ; தம்மிலும் மேலாகவோ; தலைமைத்துவம், ஞானம், புத்திக்கூர்மை, வல்லபம், கருணை, காரியசித்தி வழங்கும் அருட்திறன்; எளிமை, கொண்டவர் வேறு எவருமில்லை என்று, தமது அளப்பரிய திருவருட் செயல்கள் மூலம்; உலகத்தவர் களுக்கும், தேவர்களுக்கும் உணர்த்தியுள்ளமையினால்; "பிள்ளையார்" என அனைவராலும் போற்றித் தமது மரியாதைப் பண்பாட்டினை வெளிப் படுத்துமுகமாக, அவ்வாறு அழைக்கப்படுகிறார்.

## விநாயகர் காப்பு:

காப்பு என்றசொல்; காத்தல் என்னும் கருத்தில், விநாயகரை வேண்டுதல் செய்யும் துதி அல்லது வணக்கம் எனப்பொருள் கொண்டுள்ளது. நூலை எழுதத் தொடங்கும்போது, முதலில் காப்புச் செய்யுள் இடம் பெறுவது சைவமரபு.

சைவசித்தாந்த நெறியிலே; விநாயகரை முதலில் வணங்கி வழிபாடு செய்யவேண்டும் என்னும் நியமம் உள்ளது. மெய்கண்ட தேவர், ஆன்றோர் ஆசாரம் பேணப்படுதற் பொருட்டு; முதலில் விநாயகர் துதியாக அமையும் காப்புச் செய்யுள்; அவர் இயற்றிய சிவஞானபோதம் என்னும் சைவசித்தாந்த நூலில், இடம்பெறச் செய்தமை குறிப்பிடத்தக்கது. விக்கினங்களை நீக்கியருள்பவர்; எடுத்த கருமங்களைத்; தடைகளின்றி முடித்து அருள்பவர்; விநாயகப் பெருமான்.

**கல்லானிழன் மலை**
**வில்லா ரருளிய**
**பொல்லா ரிணைமலர்**
**நல்லார் புனைவரே.** - சிவஞானபோதம்: காப்பு.

விநாயகர் முதல்வணக்கத்திற்குரியவர் என்பதும்; இடர் களைபவர் என்பதும்; அவரை முதலில் வணங்கித் தொடங்கும் கருமங்கள், எளிதில், நிறைவேறும் என்பதும் நம்முன்னோர்கள், சான்றோர்கள்; நன்கு அறிந்திருந்தனர். அதனாலேயே, பண்டைக் காலத்திலிருந்து,

புலவர்கள் மற்றும் நூல்களை இயற்றுபவர்கள்; முதலில் விநாயகர் துதியாகக் காப்புச் செய்யுள் படைத்து; அதன்பின் நூலை எழுதி நிறைவு செய்யும் நியமம் கடைப்பிடிக்கப் பட்டு வந்தது; இன்னமும் வருகிறது.

**நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்**
**கற்குஞ் சரக்கன்று காண்.**

இச்செய்யுள், விநாயகர்காப்பு ஆகத், திருவருட்பயன் நூலில், உமாபதி சிவாசாரியார் இடம்பெறச் செய்துள்ளார்.

நன்மைகளைத் தரவல்ல ஆனைமுகன் ஆகிய பிள்ளையாரை, மெய்யன்போடு வழிபாடு செய்து வந்தால்; கல்வி மூலம் அடையப்பட வேண்டிய மெய்யறிவு மற்றும் கலைகள் என்பன யாவும், எளிதாகவும், விருப்பத்துடனும் கற்றுத் தேர்ச்சியடையலாம்; என்பது மேற்படி காப்புச் செய்யுள் தரும் பொருள் ஆகும்.

**வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்**
**நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு**
**துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமல் சார்வார் தமக்கு.**

இப்பாடல் ஔவையார் பாடிய, மூதுரைக் கடவுள் வாழ்த்து ஆகும்.

## விநாயகர் முதன்மைத்தவம்:

### சுருக்கம்

- விநாயகர் முதல்வணக்கத்திற்குரியவர். ஆலயங்களில் நடைபெறும் நித்திய, நைமித்தியக்கிரியைகள்; பூசை ஆராதனைகள் யாவும் விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்தியே; தொடங்கி நடைபெறுகின்றன. மீறினால், தடைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.
- வீட்டில் வழிபாடுகள் மற்றும் சைவசமய, சமூகவிழாக்கள்; வைபவங்கள்; பூர்வ, அபரக்கிரியைகள், சடங்குகள் யாவும் விநாயகரை முதலில் வழிபாடு செய்து, அவருக்கு முதல் வணக்கம் செலுத்தியதுடன், தொடங்கி நடாத்தப்படுகின்றன.
- தொழில், கல்வி, சமூகப்பணிகள் தொடர்பான எக்கருமத்தையும், செய்யத் தொடங்குவதற்குமுன், விநாயகரை வணங்கும் மரபு, நெடுங்காலமாக இருந்து வருகிறது. அலட்சியம் செய்தால் அவலங்களைச் சந்திக்க நேரிடும். இது அனுபவ உண்மை.
- "கணபதி பூசை கைமேல் பலன்."

- பிள்ளையார் சுழியிட்டு எழுதத் தொடங்குதல்; பிள்ளையாருக்கு முதல்வணக்கம் செலுத்துவதாக அமையும் வழக்கம் ஆகும்.
- விநாயகருக்குக் காப்புச்செய்யுள் முதலில் பாடி, அதன் பின்னரே, நூல்கள் எழுதுவது சைவமரபு.
- பிரயாணத்தைத் தொடங்குமுன்னர், பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்து; பிரயாணத்தில் இன்னல்கள், இடையூறுகள் வராமல் காக்குமாறு வேண்டுதல் செய்தல், மரபு ஆகும்.
- விநாயகருக்குள் சகல சக்திகளும் அடக்கம். ஆதலால் அவர் சகல சௌபாக்கியங்களையும் தருவார் என்ற நம்பிக்கை உண்டு. விக்கினங்களை நீக்க வல்லவர். அதேவேளை, தம்மை முதலில் வழிபடாதவருக்கு விக்கினங்களை, வருவிப்பவர்.
- அந்தவகையில், அறக்கருணை, மறக்கருணை இரண்டையும் செய்பவர்.
- "வேழமுகத்து விநாயகனைத் தொழ; வாழ்வு மிகுந்து வரும்: முத்தியும் சித்திக்கும்.
- மூலாதாரத்திற்கு உரியவராக விளங்குபவர் விநாயகர். எனவே, முதல்வணக்கத்திற்குரியவர்.
- விநாயகர், தமக்குமேலே வேறொருதலைவர் அற்றவர். தமக்குத்தாமே, தலைவனாய் விளங்குபவர்.
- தமது திருவயிற்றினுள், உலகம் முழுவதையும் உள்ளடக்கி, இன்னல் வராமல் காத்தருள்பவர்.
- விநாயகர் அவதரித்த திருநாள்; ஆவணி மாதத்து பூர்வபட்ச (வளர்பிறை) சதுர்த்தித் திதியும்; விசாக நட்சத்திரமும்; கூடிய சோமவாரம் (திங்கட்கிழமை); சிம்மலக்னம்.
- எந்த ஒருமங்கல காரியம் இடம்பெறும்போதும்; பூரணகும்பம் வைக்கும் வழக்கம் சைவமக்களிடையே இருந்து வருகிறது. அதனை வைக்கும்போது முதற்காரியமாக, இடம்பெறுவது, பிள்ளையார் பிடித்து வைத்து, முதல்வணக்கம் செலுத்துதல் ஆகும்.
- விநாயகப்பெருமானை; மனம், மொழி, மெய்யினால்; எஞ்ஞான்றும் வழிபட்டு வந்தால்; வாழ்வில் அமைதி நிலவும்; அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் நான்கு வாழ்க்கைப் பயன்களும் கிடைக்கும் என நூல்கள் கூறுகின்றன.

# 04 விநாயகர் திருவவதாரம்

## விநாயகர் திருவவதாரம்: பின்புலம்

தேவர்களும் அசுரர்களும் பகைவர்கள். தேவேந்திரன், தேவர் களின் அரசன்; அசுரேந்திரன், அசுரர்களின் அரசன். இவ்விருதரப் பினருக்குமிடையே, அடிக்கடி போர்கள் நிகழும். புராணங்கள், அப்போர்கள் பற்றிய செய்திகளை விவரித்துக் கூறியுள்ளன.

அசுரர்களுக்குக், குருவாகவும், ஆலோசகராகவும், விளங்கியவர், சுக்கிராச்சாரியார் ஆவார். முன்னர், ஒரு காலத்திலே; நடைபெற்ற போரிலே; அசுரர்கள், தேவசேனைகளிடம் தோற்றுப்போயினர். தேவர்களுடன் போர்தொடுத்து; அவர்களைத் துன்புறுத்துவதே அசுரர்களின் நோக்கம். அந்த நோக்கத்தை அடைவதற்குச் சர்வ வல்லமைகளும் படைத்த, மாவீரன் ஒருவனை, எங்ஙனம் பெற்றுக் கொள்ளலாம், என, அசுரேந்திரன்; தங்கள் குலகுருவாகிய, சுக்கிராச்சாரியரிடம் ஆலோசனை கேட்டான். அதற்குக் குலகுரு; வசிட்ட முனிவர் மரபில் உதித்த, மாகத முனிவரிடம்; ஓர் அசுரக் கன்னிகையை அனுப்புமாறும்; அவள், முனிவருடன் சேரும்போது; ஆண்மகன் ஒருவன் தோன்றுவான்; அவன் தேவர்களை வெற்றிகொண்டு, நோக்கத்தை நிறைவு செய்வான், என்றும் கூறினார்.

அசுரேந்திரன்; தேவர்களை வெற்றிகொண்டு; அசுர சாம்ராஜ் யத்தை, மீளவும் நிறுவுவதற்காக; சுக்கிராச்சாரியரின் ஆலோசனைப் படி; அசுரகன்னிகையான, விபுதை என்பவளைத் தவம் செய்து கொண்டிருக்கின்ற, மாகதமுனிவரிடம் அனுப்பினான். விபுதை, முனிவரை அணுகி; அவர் தவத்தில் மூழ்கியிருப்பதைக் கண்டு; உரிய தருணம் வரும்வரை, தாமும் தவத்தில் ஈடுபட்டுக் கொண்டு; அவர் அருகில் இருந்தாள். அவ்வாறு; "ஓடுமீன் ஓடி, உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு"; என்பதற் கிணங்க; விபுதை, முனிவரின் தவம் முடியும்வரை, பொறுமை காத்தாள். தக்க தருணம் வந்ததும்; ஆண்யானை, அதன் பிடியுடன் (பெண்யானை) இணைந்து, இன்பம் துய்க்கும் காட்சியை; முனிவர் நோக்கி, அவரும் ஆண், பெண் உறவில் மனம் கொண்டார். அந்த வேளை, விபுதை, இதுதான் தகுந்த நேரம் என்பதை உணர்ந்து; மாகதமுனிவர் முன் சென்று; அவரை வணங்கி, காதல் உண்டாகும்படி நின்றாள்.

முனிவர் மனம் மகிழ்ந்து; விபுதையை நோக்கி; "யாம் இருவரும், யானை உருவெடுத்துக் கூடி இன்புற வேண்டும்", என்று தமது விருப்பத்தை, விபுதையிடம் தெரிவிக்க, அவளும் இசைந்தாள். விபுதை, பெண்யானையாக, வடிவெடுக்க; முனிவர் ஆண்யானையாகத் தோன்றி, இருவரும் ஆரத்தழுவி, இன்பம் நுகர்ந்தனர். முனிவருக்கு விபுதை வயிற்றில் தோன்றியவனே, கயமுகாசுரன்.

பெண்யானையின் அளவற்ற உடல் உரோமங்களிலிருந்தும் எண்ணற்ற அசுர வீரர்கள் தோன்றினார்கள். மாகத முனிவருக்குப்

பழைய உணர்வு தோன்றியது. விபுதைக்கு விடைகொடுத்து, அவளைப் போகுமாறு கூறிவிட்டு; மீண்டும், முனிவர் தவம் செய்யலானார். விபுதையும் தன் மகனுடன் இருப்பிடம் சென்றடைந்தாள். கயமுகன் உயிர்களை வதைத்து, அவற்றின் இரத்தத்தைப் பருகித் திரிந்தான்.

## கயமுகன் தோற்றம் - நோக்கம்

கயமுகனைத் தோற்று வித்ததன் நோக்கம்; தேவர்களைப் போரில் வென்று; அசுரர்கள் இழந்த சாம்ராஜ்யத்தை மீளவும் நிறுவுவதற்கே யாகும். யானைமுகம் கொண்டிருந்தமையினால், கயமுகன் என்னும் பெயர் வரக்காரணமாயிற்று. அசுரகுலத்தவரின் குருவாகிய சுக்கிராச் சாரியார்; கயமுகனை அணுகி, அவனின் பிறப்பின் நோக்கத்தை எடுத்துரைத்து; தவம் புரிந்து, சிவபெருமானிடம் வரங்களைப் பெற்றாலேயே அந்நோக்கத்தை நிறைவேற்றல் சாத்தியமாகும்; என்று கூறி, அவனைத் தவம் செய்யும்படி ஆலோசனை வழங்கினார்.

கயமுகன், தான் எடுத்த பிறவியின் நோக்கத்தைக், குலகுரு மூலம் அறிந்து கொண்டதும்; மேருமலைச்சாரலில்; சிவபெருமானை நோக்கி, மூவாயிரம் ஆண்டுகள் கடுந்தவம் செய்தான். சிவபெருமான், கயமுகன் முன்தோன்றி, அவன் கேட்ட வரங்களை, வழங்கி மறைந்தருளினார்.

எவராலும் அழிக்கமுடியாத வச்சிரயாக்கையையும்; ஆயுதங் களையும்; பல்வேறு வல்லமைகள், ஆற்றல்களையும் வரங்களாகச் சிவபெருமானிடமிருந்து பெற்ற கயமுகாசுரன்; இந்திரன் முதலிய தேவர்களைப் போரில் வென்று; முன்னர் இழந்த அசுர சாம்ராஜ்யத்தை மீண்டும் நிறுவினான். மதங்கமாபுரம் என்னும் எழில் மிக்க நகரத்தை உருவாக்கி, அதைத் தலைநகராகக் கொண்டு; ஏழுலகிலும் தமது ஆதிக்கத்தையும், கொடுங் கோன்மையையும், ஈன இரக்கமின்றிச் செலுத்தி; வல்லாட்சி புரிந்தான்.

இந்திரன் முதலிய தேவர்களைத் தமக்கும்; தமது அசுரப் பரிவாரங்களுக்கும் பணிவிடைகள் செய்யும்படி கடுமையான கட்டளை களைப் பிறப்பித்தான். தவறியவர்களுக்குக் கொடூரமான தண்டனை களை வழங்கினான். தேவேந்திரன் மற்றும் தேவர்கள் அனைவரும்; தினமும், காலை, மத்தியானம், மாலை ஆகிய மூன்று வேளையும்; தம் முன்னிலையில் வந்து; தனித்தனி ஆயிரத் தெட்டு முறைகள் தோப்புக் கரணம் போடும்படி பணித்தான்.

முட்டியாகப்பிடித்த இரண்டு கைகளினாலும், நெற்றியிலே மூன்று முறைகுட்டி; வலக்காதை இடக்கையினாலும்; இடக்காதை வலக் கையினாலும் பிடித்துக்கொண்டு; தாழ்ந்தெழுந்து; கைகளைக் கூப்பிக் கும்பிடல்; தோப்புக்கரணம் எனப்படும்.

தேவர்கள், கயமுகாசுரனின் மூர்க்கத்தனமான கட்டளைகளை, மறுத்தற்கு அஞ்சி; அவன் இட்ட இழிதொழில்களையும் பணிகளை யும், சிரமேற்கொண்டு செய்துவந்தனர்.

அசுரத்தனமும், மிருகத்தனமும் கொண்டவர்கள், அசுரர்கள், ஆவர். அவர்களை அவுணர், அரக்கர், இராட்சதர், நரகர் ஆகிய பெயர் களாலும் அழைப்பர்.

## தேவர்களின் வேண்டுதல்

கயமுகாசுரனின் கொடுமைகளைத் தாங்கிக்கொள்ள முடியாத தேவர்கள்; விட்டுணுவின் தலைமையில், திருக்கைலாயமலைக்குச் சென்று; கயமுகாசுரனுக்கு வரங்களை வழங்கிய சிவபெருமானிடம், தங்களின் அவலங்களை எடுத்துரைத்துத், தங்களைக் காப்பாற்று மாறு வேண்டினர். சிவபெருமான் தேவர்களின் விண்ணப்பத்தை ஏற்று; "புத்திரன் ஒருவன் நம்மிலிருந்து தோன்றுவான்; கயமுகாசுரனை வெற்றி கொண்டு; தேவர்களின் துயர்நீக்கி, அவர்களைக், காத்தருளுவான்", எனத் திருவாய்மலர்ந்தருளினார்.

## விநாயகர் தோற்றம்

விநாயகர் தோன்றியமையின் முதன்மைக் காரணம்; தேவர்களின் துயர்களை நீக்கியருளுவதற்குச் சர்வவல்லமை கொண்ட புத்திரன் ஒருவனைத் தருவதாக; சிவபெருமான் விஷ்ணுவிடம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுதல் ஆகும். அந்தவகையில், கயமுகாசுர சங்காரம், விநாயகர் தோற்றத்தின் முதற்காரணமாகும். தீயவர்களை அழித்து, நல்லவர்களைக் காப்பாற்றுதல்; அவதாரநோக்கம் எனப்புனித நூல்கள் கூறுகின்றன.

## விநாயகர் தோற்றம் பற்றிய புராண, வரலாற்றுத் தகவல்கள்

### 01. அகரமும், உகரமும் இணைந்தமை:

சிவபெருமான் இந்திராதி தேவர்களின் துயர்களை, நீக்கி யருளுவதற்குத் திருவுளங் கொண்டார். திருக்கைலாயமலையில் அமைந்துள்ள நந்தவனத்திற்கு, உமாதேவியாருடன் எழுந்தருளி னார். அங்குள்ள "மந்திரசாலா" என்னும் சித்திர மண்டபத்திற்குள், இருவரும் பிரவேசித்தனர். அங்கு வரையப்பட்டிருந்த சித்திரங் களையெல்லாம், மகிழ்ச்சிப் பெருக்கோடு, கண்டுகளித்து வருகையில்; அங்கு எழுதப்பட்டிருந்த பிரணவத்தின்மீது; சிவ பெருமான், மற்றும், உமாதேவியார் ஆகியோரின் பார்வை நிலைகொண்டது. அக்கணமே, பிரணவம் இரண்டாகப் பிரிந்து, அகரம் ஆண்யானையாகவும்; உகரம் பெண்யானையாகவும் வடிவம் கொண்டன. இரண்டும் இணைந்து இன்பம் துய்த்தன. அத்திருக்காட்சியை, உமாதேவியார் சிறிது நேரம் உற்று நோக்கிய பின்னர்; சிவபெருமானை விளித்து, "பிரணவ எழுத்து, யானை வடிவமாய்ச் சேர்வது ஏன்?" என வினவினார். அப்பொழுது, சிவபெருமான், தேவியை நோக்கி, "தேவி; நானும் நீயும் இவ்வாறு ஒன்று சேர்ந்து உலக நன்மைக்காகப் புத்திரனைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதை, இது காட்டுகிறது", என்று சொல்லி, அன்போடு தேவியைப் பார்த்தார். தேவியின் பார்வை, சித்திரத்தில் இருந்த பெண்யானை மீது ஒன்றித்து லயித்திருந்தது. அதேவேளை

சிவனும் ஆண்யானையை நோக்கினார். இருவரும் இன்பப் பெருக்கோடு நோக்க, அவ்விருயானைகளும் ஒன்றோடொன்று கூடி இன்ப உறவாடின. அப்பொழுது, சிவனும், தேவியாரும் மானசீகமாகத் தங்களை அவ்வாறு எண்ணி மகிழ்வெய்தினர். அந்தக்கணத்திலே, அங்கே, அவர்கள் முன்பாக, கோடி சூரியப் பிரகாசம் பொருந்திய வரும்; யானைமுகம் கொண்டவருமான விநாயகர் தோன்றினார். அப்பொழுது, அங்கு பிரசன்னமாயிருந்த பார்வதி, பரமேச்வரர் மகிழ்ச்சியோடு; அவரை வாரியணைத்து; உச்சிமுகர்ந்து, தங்களது மடியில், இருத்திவைத்துக் கொண்டார்கள். பின்னர், சிவன், விநாயகரை நோக்கி,

"மகனே; தேவர்கள் துயர் தீர்க்க உதித்துள்ளவன், நீ; என் கணங்களுக்கெல்லாம், நீதான் தலைவன். என்னிடமிருந்து சிறிதும் வேற்றுமையில்லாத உன்னை, முதலில் வணங்கிய பின்னரே, யாவரும் எக்காரியத்தையும் தொடங்குவராக. உனக்குச் சர்வவல்லமை களையும், சக்திகளையும் அளித்தோம். உன்னை யார் உள்ளன்போடு வணங்கி, வழிபடுகிறார்களோ, அவர்களுக்கு எந்தவித விக்கினங்களும் நேரிடாமல்; இடர்கள் இடையூறுகளும் ஏற்படாமல்; அவர்களின் அனைத்து வேண்டுதல்களும் விருப்பங்களும், நிறைவேறி, மங்களம் உண்டாகட்டும்," என அருளினார்.

விநாயகரும், தாய் தந்தையரை வலம்வந்து; அவர்களை வணங்கினார். அப்பொழுது, தந்தையார், மகனை நோக்கி;

"கணநாதா! இப்போது முதல் வேலையாக, நீ செய்ய வேண்டிய காரியம் ஒன்று உளது. அசுரகுலத்தலைவனும்; தேவர்கள் அனைவரை யும் தனது பராக்கிரமத்தால், அடக்கி, அவர்களுக்குக் கொடுமை களைப்புரிந்து; வருத்தி வருபவனுமாகிய கயமுகாசுரனை, யுத்தம் புரிந்து; சங்காரம் செய்து; தேவர்களின் துன்பத்துக்கு ஒருமுடிவு கட்டுவாயாக", என்று கூறியருளினார்.

விநாயகர் திருவவதாரத்தின் பிரதான நோக்கம் பற்றிப் புராணங்கள் மேற்கண்டவாறு கூறுகின்றன. முக்கியமாக, இவ்வாறு, கந்தபுராணத்தில் விநாயகரின் தோற்றம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், விநாயகர் தோன்றியமை பற்றிப் பின்வரும் தேவாரப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**பிடியத னுருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்**
**கடிகண பதிவர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.**

மிகுந்த கொடையும், வடிவழகும் கொண்ட பெருமக்கள் வாழுகின்ற வலிவலம் எனப்பெயருடைய திருத்தலத்தின் கண்; சிவபெருமான் களிற்று (ஆண்யானை) வடிவமும்; உமாதேவியார், பெண்யானை வடிவமும் கொண்டு; தமது திருவடிகளை அன்போடு தொழும் அடியவர்களின் இடர் கெடுக்கக் கணபதியைத் தந்தருளினார்.

ஆகவே, அடியார்கள் எதிர்கொள்ளும் இடர்களைப் போக்கவே, விநாயகர் தோன்றினார்.

### 02. உமாதேவியார் உருவாக்கிய, பிள்ளையார்:

உமாதேவியார், ஏனைய பெண்களைப் போலத், தாமும் ஒரு குழந்தையைப் பெற்றுக் கொஞ்சி விளையாடி; அதன் பூரிப்பைக் கண்டு மகிழவேண்டுமென விரும்பினார். மண்ணினால் ஒரு குழந்தையை உருவமைத்து, உயிர் கொடுத்து; அதனைத் தமது மடியில் வைத்துக், கொஞ்சிக்குலாவிக் கொண்டிருந்தார். இவ்வரிய காட்சியைக் கண்டு, மகிழ்ந்த சிவபெருமான்; தேவர்களுக்கு அறிவித்து, அவர்களை வரவழைத்து; புத்திரப் பேற்றினை ஒரு விழாவாகக் கொண்டாட விழைந்தார்.

தேவர்கள் அனைவரும் விழாவுக்கு வருகை தந்தனர். அவர்களுடன் சேர்ந்து சனிபகவானும், விழாக்காணக் கயிலாயத் திற்கு வந்தார். அவரது கண்பார்வை, குழந்தையின்மீது விழுந்ததும் அக்கணமே, குழந்தையின் தலை அறுபட்டது. உடனே, தலையும் மாயமாய் மறைந்தது. உமாதேவியார் பெரிதும் வருந்தினார். அப்பொழுது, சிவபெருமான், வனத்திலே வடக்கே தலைவைத்துப் படுத்துறங்குகின்ற ஏதாவது ஒரு விலங்கின் தலையைக்கொய்து, கொண்டுவருமாறு, தமது பூதகணங் களுக்குக் கட்டளை பிறப்பித்தார். அவர்கள் காட்டுக்குள் சென்று, எங்கும் தேடி, யானைத்தலை ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அந்த யானைத்தலையைப் பொருத்திச், சிவபெருமான் குழந்தையை உயிர்ப்பித்தார். உமாதேவியார் பெருமகிழ்ச்சியும், ஆனந்தமும் அடைந்தார். யானைமுகங்கொண்ட தமது புதல்வரைக் கணங்களின் தலைவர் ஆக்கினார். அதன் காரணமாக, கணபதி, கணேசன், கணநாதன் ஆகிய திருநாமங்களைப் பெற்றுள்ளார்.

### ஏனையபுராண வரலாறுகள்:

இவ்வாறு மேலும் பல புராண வரலாறுகள்; விநாயகர் தோற்றம் பற்றி, உள்ளமை குறிப்பிடத்தக்கது.

விநாயகரின் திருவவதாரம் பற்றிய வரலாற்றுக்கதைகள், சிவ புராணம், மச்சபுராணம், வராகபுராணம், கந்தபுராணம் ஆகியவற்றில் காணப்படுகின்றன. எனினும், விநாயகரின் பிரதான அவதார நோக்கம்; கயமுகாசுர சங்காரம் நிகழ்த்துதல் ஆகும். தேவர்களுக்குக், கயமுகா சுரனால் ஏற்பட்ட இன்னல்கள், துயர்கள், துன்பங்களைத் தீர்க்கச் சிவபெருமானால், தோற்றுவிக்கப்பட்டவர், விநாயகப் பெருமான் ஆவார். அதனால், தனக்குமேல் வேறொரு தலைவன் இல்லாதவர், என்ற பொருளை உணர்த்தும் திருநாமத்தை உடையவராக, விநாயகப் பெருமான் விளங்கும் அதேவேளை, கயமுகசங்கார மூர்த்தியாகவும் திகழ்கின்றார்.

பல படைப்புக் காலங்களில்; பல்வேறு விதமாக, விநாயகர் திருவவதாரம் நிகழ்ந்தமை பற்றிப் புராணங்கள் கூறும். இவை, ஒவ்வொன்றுக்குப் பின்னாலும், ஒவ்வொரு தத்துவம் உள்ளமையை, நாம் உணர்ந்து, அதில் பொதிந்துள்ள உண்மைக் கருத்தை அறிய முயற்சிப்போமாக.

## 03. உமாதேவியாரால் படைக்கப்பெற்ற, நரமுக விநாயகர்:

உமாதேவியார், அந்தப்புரத்திலுள்ள திருமஞ்சன அறைக்குச் செல்லும் போது; வழக்கமாகச் சிவகணங்களான நந்தி மற்றும் பிருங்கி ஆகியோரைக் காவலர்களாக அமர்த்திவிட்டுத்; தோழியர்களாகிய ஜயை, விஜயையுடன் நீராடச் செல்வார். அன்றொருநாள், அவ்வாறு திருமஞ்சன அறைக்குச் செல்லும் போது, நமக்கென ஒருதனிக் காவலரை, நாமும் வைத்திருக் கலாமே, என்ற ஒரு கருத்தைத் தோழியர், உமாதேவியாரிடம் தெரிவித்தனர். உமாதேவியாரும் அதற்கு இணங்கினார்.

உமாதேவியார், தன்னுடைய திவ்விய சரீரத்தைத் தம் திருக்கரங்களால் வழித்து, அதிலிருந்து பெறப்பட்ட மஞ்சள்பொடி, குங்குமம், மற்றும் வாசனைப்பொடி ஆகியவற்றைத் திரட்டிப் பிசைந்து, ஒரு குழந்தையாக உருவம் அமைத்து, அதற்கு உயிர் கொடுத்தார். மனித வடிவத்தில்; தேவர் இலட்சணங்களுடன், அந்தப்பிள்ளையின் உருவம் அமைந்திருந்தது. பிள்ளையார் என்றே அழைக்கப்படப்போகிற அந்தப் பிள்ளையை, அங்கு காவல் செய்யும்படி கூறி; எவரையும் தனது உத்தரவின்றி, உள்ளே அனுமதிக்கக் கூடாது, என்ற கண்டிப்பான உத்தரவையும்; அந்தப் பிள்ளையிடம் வழங்கி விட்டுத்; தேவியார் நீராடச் சென்றார்.

அவ்வேளை, தனது திருவிளையாடலைப்புரிய எண்ணி, தேவியாரைக் காணும் பொருட்டுச் சிவபெருமான் அந்தப்புரத்திற்கு வந்தார். அங்கு நின்ற, புதுக்காவலாளி அவரை உட்பிரவேசிக்க விடாமல் தடுத்தான். "இவன் யார்? அந்தப்புரத்திற்கு ஓர் ஆண்பிள்ளை எப்படி வரமுடியும்? என்னை எப்படித், தடுக்க முடியும்?" என்று சிவபெருமானுக்கு ஒரே கோபம் வந்து விட்டது. எல்லாம் அறிபவர் ஆக விளங்குகின்ற சிவபெருமான், எதுவுமே அறியாதவர் போல; அந்தக் காவலாளியின் தலையை வாளினால் துண்டித்து விட்டார்.

உண்மையில், அனைத்தையும் தெரிந்து கொண்டுதான் சிவ பெருமான் இப்படியொரு திருவிளையாடல் செய்தார். "அலகிலா விளையாட்டுடையோன்" எனச் சிவனை, ஓர் அருளாளர் குறிப்பிடுகிறார். காரணம் பின்வருமாறு அமைகின்றது. கயமுகாசுரனைச் சங்காரம் செய்து, அவனால் துன்புறுத்தப்படு கின்ற தேவர்களைக் காப்பதுதான், விநாயகரின் திருவவதார நோக்கம்.

கயமுகாசுரன் என்பவன் யானைத்தலையுடையவன். தன்னைப் போன்று, யானைத்தலை படைத்த இன்னொருவன்தான்; தன்னை வதம் செய்யமுடியும் என்று, சிவபெருமானிடம் வரம் பெற்றிருந்தான். அத்துடன், அப்படித்தன்னை வதம் செய்யக்கூடிய எதிரி, ஆண், பெண் உறவுமூலம் பிறக்காதவனாகவும் இருக்க வேண்டும், என்னும் நிபந்தனையையும் உள்ளடக்கிய வரத்தையும், சிவபெருமானிடம் பெற்றிருந்தான்.

சிறிது தொலைவில், ஒரு யானை வடக்கே தலைவைத்துப் படுத்திருந்தது. வடக்கே தலைவைத்துப் படுத்தால், உலகத்திற்கு

அமங்களம், கேடுகள் உண்டாகும் என்பது ஐதீகம். அந்த யானையைத் தண்டிக்க வேண்டியிருந்தது. சிவபெருமான் இவ்விரண்டையும் இணைத்துத் தமது திருவிளையாடலை நிகழ்த்தினார்.

உமாதேவியார், தாம் உருவாக்கிய பிள்ளை சிரச்சேதம் செய்யப்பட்டுள்ளமை கண்டு பெரிதும் துயருற்றார். அப்பொழுது, வடக்கே தலைவைத்துப் படுத்திருந்த யானையின் தலையைக் கொய்து, கொண்டுவரச் செய்து; பிள்ளையின் தலைவெட்டப் பட்டிருந்த உடலில் பொருத்தி; பிள்ளையாராக உயிர்பெறச்செய்து, உமாதேவியாரை மகிழ்வித்தார் சிவபெருமான். ஆனைமுகன் என்ற பெயரையும் பிள்ளையார் பெற்றார். பிள்ளையார், கயமுகாசுர சங்காரம் நிகழ்த்துவத்திற்கு, இனி எவ்விததடையும் இல்லை. தடைகள் யாவும் அகற்றப்பட்டுவிட்டன. சிவபெருமானின் திருவிளையாடல் நோக்கமும் எய்தப்பட்டு விட்டது.

## விநாயகருக்குத் தந்தையார் வழங்கிய முதன்மை:

விநாயகர் தோற்றம் பெற்றதும்; தந்தையாகிய சிவபெருமான்; தாயாகிய உமாதேவியார், இருவரையும்; அவர்களின் திருப்பாதங் களைத் தொட்டு வணங்கினார். அவர்கள் தமது மூத்த திருக் குமாரனுக்கு ஆசிவழங்கிக் கருணை செய்தனர். அப்பொழுது சிவபெருமான், விநாயகரை விளித்து, "எக்கருமத்தையும், எவரும் ஆற்றத் தொடங்குவதற்குமுன்; முதலில் வணங்கப்படும் முதன்மையை விநாயகருக்கு வழங்குகிறேன். கயமுகாசுரனைச் சம்ஹாரம் செய்து, தேவர்களின் துயர் தீர்ப்பாயாக, விஷ்ணுவுக்கு ஏற்பட்ட சாபத்தையும் நீக்குக", என்று கிருபை செய்தார். தாம் இட்ட பணியை நிறைவு செய்யும் பொருட்டு; பூதகணங்களைப் படைத்துச், சேனைகளாக்கி; விநாயகரைப், பூதகணங்களுக்குத் தளபதியாக நியமித்தருளினார்.

பின்னர், சிவபெருமான்; உமாதேவியார் சகிதம், விநாயகரை யும் அழைத்துக் கொண்டு; அங்கிருந்து திருக்கைலாயமலைக்கு எழுந்தருளினார். அங்கு சென்றதும்; விநாயகரைச், சிவபெருமான், தமது கோயிலின் கோபுர வாயிலுக்கு அருகாமையில், நாயகனாக, விநாயகரை அமர்த்திவிட்டு; தாம் உமாதேவியாருடன் கோயிலினுட் சென்று வீற்றிருந்தருளினார்.

விநாயகர், கணங்களின் தலைவராக விளங்குவதன் காரண மாகக்; கணபதி, கணேசன், கணநாதன் ஆகிய திரு நாமங்களாலும் அழைக்கப்படுகிறார்.

## பிள்ளையார் திருவவதாரம் பற்றி, "பிள்ளையார் கதை" என்னும் நூல் கூறுவதாவது:

"மதகரி உரித்தோன் மதகரியாக; மதர்விழி உமைபிடிவடிவம் அதாகிக்; கூடிய கலவியில் குவலயம் விளங்க; நீடிய வானோர் நெறியுடன் வாழ; அந்தணர் சிறக்க; ஆனினம் பெருக; செந்தழல் வேள்வி வேதாகமம் சிறக்க; அறம் பல பெருக; மறம்பல சுருங்கத், திறம் பல அரசர் செகதலம் விளங்க;

வெங்கரிமுகமும் வியன்புழக்கையோடு, ஐங்கரதலமு; மலர்ப் பாதமும் இரண்டும்; பவளத்து ஒளிசேர்பைந்துவர் வாயுந்; தவளக்கிம்புரித் தடமருப்பு இரண்டும்; கோடிசூரியர் போற்குலவிடு மேனியும்; பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்; நெற்றியில் நயனமும்; முப்புரிநூலும்; கற்றைச்சடையும் கனக நீண்முடியுந்; தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்; ஐங்கரத்து அண்ணல் வந்து அவதரித்தலும்".

கயமுகாசுரனைச் சம்ஹாரம் செய்து, தேவர்களைக் காப்பாற்று வதற்காகவே; விநாயகப்பெருமான் ஆவணிச் சதுர்த்தியன்று, அவதரித்தார், எனப்புராண வரலாறு கூறுகிறது.

**கைவேழமுகத்தவனைப் படைத்தார் போலும்**
**கயா சுரனை யவனாற் கொல்வித்தார் போலும்.**

- அப்பர் தேவாரம்

## தத்துவரீதியில், யார் இந்தக் கயமுகாசுரன்?

மனிதரைப் பற்றியுள்ள ஆணவமலமே, இந்தக் கயாசுரன் ஆக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ஆணவத்தின் இரு கூறுகள், "நான்" எனும் அகந்தையும்; "எனது" எனும் மமதையும் ஆகும். இவற்றை முறையே, தற்பற்று, பொருட்பற்று எனவும் கூறலாம். ஆணவம் என்பது தன்முனைப்பு.

ஆணவமலம், பிறவிக்கு வித்து ஆகும். பிறவி, துன்பத்திற்குக் காரணம். எனவே, ஆணவம் மனிதரிலிருந்து நீங்கப்பெறின்; பிறப்பு - இறப்புத் தொடர் முற்றுப் பெற்றுவிடும். துன்பம் துயர்களும் நீங்கிவிடும். மும்மலங்களினின்றும் நீங்கப்பெற்ற உயிர், பேரானந்தப் பெருவாழ்வைப் பெற்று, "இன்பமே, எந்நாளும் துன்பமில்லை", என்ற உயர்நிலையை அடையப் பெற்றுவிடுகிறது.

விநாயகப் பெருமானை; மனம், மொழி, மெய்யினால் வணங்கி, வழிபாடு செய்து வருபவர்கள்; மும்மலநீக்கம் பெற்று விடுவர். மனிதப் பிறவியின் அதிஉயர் குறிக்கோள் எய்தப்பட்டும் விடுவர். "இந்தச் சரீரம், எமக்குக் கிடைத்தது; கடவுளை வணங்கி, முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்", என்பது நாவலர் பெருமான் அருள்மொழி.

விநாயகர் தோற்றத்தின் உட்பொருள்; ஆணவ ஒழிப்பு ஆகும். "அல்லவை தேய, அறம் பெருகும்" என்கிறார், வள்ளுவப் பெருந்தகை.

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்**
**கண்ணிற் பணிமின் கனிந்து.**

## விநாயகரின் பெருச்சாளி வாகனம்: தத்துவ விளக்கம்

கயமுகாசுர சங்காரம், விநாயகப்பெருமானால் நடத்தப்பட்டு, இறுதியில்; கயமுகாசுரன் பெருச்சாளியாக உருமாற்றப்படுகிறான். பெருச்சாளியை, விநாயகப்பெருமான் தமது வாகனமாக வரித்துக்

கொண்டார். பெருச்சாளி, எலி, மூஷிகம், மூஞ்சூறு என்பன ஒரு பொருளையே குறிக்கும் சொற்கள். பெருச்சாளி, இருளையே நாடும் பிராணி. இரவு நேரங்களிலேயே அதன் நடமாட்டம் அதிகமாக இருக்கும்.

பெருச்சாளி; ஆணவம், அறியாமை என்பனவற்றைக் குறிப்பதாக விளக்கம் தரப்படுகிறது. ஆணவமலம்; இருள்மலம் என்றும்; இன்னும் கூறப்போனால்; இருளினும் கொடியது என்றும் சைவசித்தாந்த நூல்கள் கூறும். இருள் தன்னை இனங்காட்டும்; ஆனால், தன்னுக்குள் மறைந்துள்ள மற்றைய பொருட்களை; மறைத்து வைத்துக் கொள்ளும் தன்மையது. ஆனால் ஆணவம், தன்னையும் காட்டாது, மறைந்து கொள்ளும்; அதேவேளை, தன்னுள் மறைந்துள்ள பிறபொருள் களையும், இனங்காட்டாது, அவற்றை மறைத்துக் கொள்ளும் தன்மையது. எனவேதான், ஆணவம், இருளினும் கொடியது எனக் கூறப்படுகின்றது.

மனிதனின் துன்பங்களுக்குக் காரணம்; மனிதப்பிறவியெடுத் தமையாகும். மனிதப்பிறவிக்குக் காரணம், கன்மவினையேயாகும். கன்மவினை - நல்வினையோ, தீவினையோ; - அனுபவித்துத்தான் தீர்க்கவேண்டும். செயலுக்கேற்ற விளைவு நிச்சயம் உண்டு. எனவே, மனிதன் அநுபவிக்கின்ற துன்பங்களுக்கு, அவனிடமுள்ள ஆணவம் காரணமாகின்றது. ஆணவத்தின் இருகூறுகள்; "நான்" என்ற அகந்தையும் "எனது" என்ற மமதையும் ஆகும். இவற்றை முறையே "தற்பற்று"; "பொருட்பற்று" எனக்கூறுவர்.

ஆணவச்செருக்கும் கர்வமும், ஒருங்கே கொண்டதும்; பிறருக்குக் கொடுமைகளையும், துன்பங்களையும் இழைப்பதில் வல்லமையும் கொண்ட அசுரர்களின் தலைவன் கயமுகாசுரனின் மறுவடிவமே பெருச் சாளியாகும். அப்பெருச்சாளியைத் தமது திருப் பாதங்களின்கீழ், கட்டுப்பாட்டில் வைத்திருப்பது, விநாயகப் பெருமானின் திருவருட்திறன் ஆகும்.

விநாயகப்பெருமான், தம்மை உள்ளன்போடு வணங்கி வழிபடுபவர்களை; அவர்களின் துன்பங்கள், துயர்களுக்குக் காரண மான ஆணவமலத்தையும்; அதன்காரணமாக ஏற்படும் வெவ்வினை களையும், வேரோடுகளைந்து; தம்மோடு அணைத்துத், திருவருள் புரிகின்ற, பெருங்கருணைத்திறன் கொண்ட முதன்மைக் கடவுள் ஆவார்.

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்**
**கண்ணிற் பணிமின் கனிந்து.** - பதினொராந் திருமுறை

## விநாயகப் பெருமானின் எலி வாகனம்; அதன் தத்துவம்:

"தூலகாயர்", என; உடல் பருத்த காரணத்தினால்; விநாயகர் அழைக்கப்படுகிறார். மலைபோல் தோற்றமளிக்கிறார். ஆனால்,

அவருக்குக் குழந்தைமனசு. குழந்தை என்றால் நிறையச் சாப்பிட வேண்டும்; கொழு, கொழுவென்று இருக்க வேண்டும். எல்லோரினதும் கவனத்தையும், அன்பையும், அரவணைப்பையும், தம்பால் ஈர்க்க வேண்டும், என்பது எதிர்பார்ப்பு. அவ்வளவும் விநாயகரிடம் காணப் படுகின்றன. விநாயகரை நம்பினார் கெடுவதில்லை. எங்கும் வெற்றி; எக்கருமத்திலும், எதிலும் வெற்றி; அதனால் வெற்றி விநாயகன் என அழைக்கப்படுகிறார். விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்தி, ஆரம்பிக்கும் அத்தனை முயற்சிகளும்; வெற்றி பெறுகின்றன. "தூலகாயர்", ஆனபோதிலும்; விநாயகர், தமது அடியார்களின் இதயத்தில்; கனதியில்லாமல், இலேசாக வீற்றிருக்கிறார்.

விநாயகர், பருத்து, யானைபோல இருக்கிறார். அதற்கு நேர் மாறாக, மிகச்சிறிய உருவத்தை உடையது எலி. அவ்வாறே, மூஞ்சூறு; எலியைவிடச் சற்றுப்பெரியது. அவ்வளவுதான். பென்னம் பெரிய கடவுளுக்குச் சின்னஞ்சிறிய ஊர்தி. இங்கு ஓர் உண்மையை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இது நகைப்பிற் குரிய விடயமன்று. விநாயகப்பெருமான் எத்துணை பெரிய கடவுளாக; அருட்திறனால்; தெய்வீகத்தினால், அடியார்க்கு எளியனாய் நின்று, திருவருள் புரிகின்றாரோ; அத்துணை, சின்னஞ் சிறிய வாகனத்தைத் தாம் வைத்துக் கொண்டாலும்; அவருக்கு, வாகனத்தினால் பெருமையோ, கௌரவமோ வேண்டியதில்லை. விநாயகர்; "வேண்டுதல், வேண்டாமை இலான்." இந்த வள்ளுவர் வாக்குப், பொய்யாமொழி. "வேண்டுதல், வேண்டாமை இலான்; அடி சேர்ந்தார்க்கு, யாண்டுமிடும்பை இல." என்கிறார், திருவள்ளுவர். விநாயகப்பெருமானைத் தாங்கும் வாகனமாக; அவரின் திருவடிகளைப்பொருந்தி; அடியாள் ஆக விளங்குகின்ற; எலிக்கும், மூஞ்சூறுக்கும்; விநாயகப்பெருமானைத் தாங்குதலாலும்; அவரின் ஊர்தியாக விளங்குவதினாலும், மதிப்பும் கௌரவமும் கிடைக்கின்றன. அதேவேளை; எலி, மூஞ்சூறு ஆகியவற்றின் சக்திக்கு ஏற்றபடி; அவற்றின்மீது கருணை கூர்ந்து, கனம் இல்லாமலும் இருக்கிறார், விநாயகர். தம் பக்தர்கள்மீது கொண்டுள்ள அளப்பருங்கருணையையும், காருண்ணியத்தையும் இது காட்டுகின்றது. தமது வாகனத்திற்குச் சிரமம் கொடுக்காமலும்; அதற்கு, மரியாதை, கௌரவம் யாவும் ஏற்படுத்தும் வகையிலும்; இது அமைந்துள்ளமை, நோக்கற்பாலது. எவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டு, விளங்குவதில், விநாயகப்பெருமானுக்கு நிகர் அவரேதான்.

யானைக்கு, அதன் தந்தங்களில் அதிக கௌரவம். அவை வெள்ளை வெளேர் எனப் பிரகாசிக்கும். கொம்புகள் என்றும் கூறப்படுகின்றன. அந்தக் கொம்புகளில், ஒன்றையேமுரித்து அதனால் மகாபாரதத்தை, மேருமலையில், விநாயகர் எழுதினார். விநாயகர்; தமது கௌரவம், அழகு, மதிப்பு எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கின்ற தந்தத்தைக் காட்டிலும் தர்மத்திற்கு; தர்மத்தை உள்ளடக்கமாகக் கொண்ட மகாபாரதத்திற்கு; ஆக எதையும் தியாகம் பண்ணவேண்டும்; என்பதைத்தானே, தமது தந்தத்தைத் தியாகம், செய்துள்ளமை கோடிட்டுக் காட்டுகிறது. மகாபாரதப்போர்; தர்மத்திற்கும், அதர்மத்திற்குமிடையே நடந்த போர். இறுதியில் தர்மம், அதர்மத்தை வென்று, வெற்றிவாகை சூடியது.

## 05 விநாயகர் திருவடிவம்: பொது

திருக்கோயில் வழிபாடு, சைவ சமய மரபில், இன்றியமையாத ஓர் அங்கமாகும். "ஆலயம் தொழுவது, சாலவும் நன்று" என்றும்; "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும்; அன்புக் கட்டளையிடும், மகுட வாசகங்கள்; இதனை உறுதிப்படுத்துகின்றன. சைவநெறியில்; இறைவன் சாந்நித்தியம் பெற்று; ஆன்மாக்கள் ஈடேற்றம் அடையும் பொருட்டும்; இகபர சுகங்களை, எய்தும் பொருட்டும்; திருவருள் பாலிக்கும் இடமாக அமையும் ஆலயங்களின் நிர்மாணம்; இறைவனுடைய திருவுருவங்களை உருவாக்கும் சிற்ப நுணுக்கங்கள், அளவு பரிமாணங்கள்; மூர்த்திப்பிரதிஷ்டை; நித்திய நைமித்தியங்கள்; மகோற்சவ விதிகள் என்பனவற்றிற்கு, ஆதார நூல்கள் சிவாகமங்கள் ஆகும்.

"ஆகமங்கள் வகுத்துக் கூறும் திருக்கோயில் வழிபாட்டிற்கு, நிலைக்களனாக விளங்குபவை, இறைவனது திருவுருவங்களாகும். இறைவனது தெய்வீக சாந்நித்தியத்தை ஏற்படுத்த வல்ல கிரியைகள், திருவுருவங்களிலேயே, நடைபெறுவன. ஆகம வழிபாட்டில் இடம் பெறும் திருவுருவங்களில், முதன்மை பெறுபவர், விநாயகர். கிரியை களிலும் விநாயகரே முதன்மையான வழிபாட்டிற் குரியவராவார். ஆகமங்கூறும் சமய வழிபாட்டில், விநாயகர் வழிபாடு முதன்மை பெற்று விளங்குகின்றது." - கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர், "இந்துப் பண்பாட்டு மரபுகள்"

எல்லாம் வல்ல இறைவனின் ஆற்றல்களையும், வல்லபங் களையும்; சிற்றறிவு கொண்டமனிதர்கள் புரிந்து, உளங்கொள்ளற் பொருட்டு; பல திருவுருவங்களை அமைத்தனர், நம்முன்னோர். பல நாமங்களையும் சூட்டி வழிபட்டு வந்தனர்; பாடிப் பரவினர். பக்தி நெறி வளர்ச்சி பெற்றது. அத்தகைய வழிபாட்டை நாம் இன்றும் பின்பற்றி வருகின்றோம். ஓர் உருவம், ஒரு நாமம், குணங்குறிகள் இல்லாத இறைவனுக்குப், பல உருவங்கள் கொடுத்துப், பல நாமங்கள் சூட்டி, குணங்குறிகள் கற்பித்து வணங்கி, பூசை ஆராதனைகள், புரிந்து, பூரிப்பு எய்தினர். மனநிறைவு பெற்றனர். இன்றும், நம்முன்னோர் களைப் பின்பற்றி; விக்கிரக வழிபாடு; நித்திய நைமித்தியக் கிரியைகள், பூசைகள் செய்து; நம்முடைய வேண்டுதல் களை இறைவனிடம் சமர்ப்பித்து, அவற்றைப் பெற்று, நிறைவான வாழ்வு வாழ்ந்து வருகின்றோம். நம்பிக்கையே ஆதாரம்.

கணபதி பூசை கைமேற்பலன். வெவ்வினைகளை வேரோடு களைபவன், விக்கின விநாயகன். நம்பினார் கெடுவதில்லை; இது நான்குமறைதீர்ப்பு. அத்துடன் அனுபவ உண்மையுமாகும்.

மனித அறிவின் எல்லையைத் தாண்டி; எரியுறு நீர் போல; வெந்நீரில் வெப்பம் போல; எல்லா உலகங்களிலும், எல்லா

உயிர்களிலும் வேறறக் கலந்து வியாபித்து நிற்கும் பரம்பொருளை, அதன் அளவிறந்த ஆற்றலை; சிற்றறிவுடைய மனிதர்கள், அறிந்து, உளங்கொண்டு உணர்ந்து, கொள்ளற் பொருட்டு, உருவாக்கப் பட்டவையே கடவுளரின் திருவடிவங்கள்.

பரம்பொருளாக விளங்கும் இறைவனின் எண்ணிறந்த ஆற்றல் கள், வல்லமைகளுள்; இடர்களைதல், விக்கினங்களை நீக்குதல் என்பனவும் இடம்பெறுகின்றன. இந்தப் பேராற்றலை உருவகப்படுத்து வதாக, அமையப்பெற்ற திருவுருவமே, விநாயகப் பெருமானின் திருவடிவம்.

விநாயகரின் திருவடிவம், நம் ஞானிகளின் ஆழ்ந்த சிந்தனை யின் வெளிப்பாடு; தத்துவக் கருத்துக்கள் பொதிந்துள்ளன. பிரணவ வடிவமாகிய, ஓங்காரம், விநாயகருக்குரியதாயிற்று. விநாயகரின் ஒடிந்த தந்தம், தலைக்கிரீடம், ஒடியாத மருப்பு, துதிக்கை, பேழை வயிறு என்பனவற்றை எண்ணக்கோட்டால், இணைத்தால் தோன்றுவது; ஆனைமுகனின் வடிவம் ஆகும்.

விநாயகரின் திருவுருவத்தில் அமைந்துள்ள நான்கு திருக்கரங்கள், தேவர் கூறாகவும்; யானைமுகம் விலங்கின் கூறாகவும்; பேழை வயிறும் குறுங்கால்களும் பூதக்கூறாகவும்; தந்தம் ஒடிந்துள்ள வலது பாகம், பெண்ணாகவும், தந்தம் உள்ள இடப்பாகம் ஆணாகவும் கொண்டு; உலகிலுள்ள உயர்திணை, அஃறிணை அனைத்துப் பொருள் களும், தனக்குள் அடக்கம் என்பதைக் குறிப்பால் உணர்த்தும், விந்தைமிகு வடிவத்தைக் காணலாம்.

திருவடிகள் இரண்டும் ஞானத்தின் நிலைக்களன் என்று கூறப்படுகிறது. வெவ்வினையை வேரறுத்துப் போக்கும் வல்லமை யுடையன. சாதாரண நிலையில், யானையானது அதனது காலிலே அடிவைக்கும் மனிதனை; உயர்த்தி, தூக்கி, முடிமீது ஏற்றும் தகையது. அதுபோல, ஆனைமுகப் பெருமானின் திருவடிகளைத் தாழ்ந்து வணங்குபவர்களை; அப் பெருமான், தூக்கி, மேலுலகிற்கு - சொர்க்கலோகத்திற்கு, ஏற்றுவான். ஆறு ஆதாரங்களிலும், ஓங்கி ஒளிரும் ஆனைமுகனை, அறுகம்புல் இட்டு, வணங்குதல், சாலச் சிறந்தது. "நான்" என்ற அகந்தையும்; "எனது" என்ற மமதையும்; ஆணவச்செருக்கு என்பதன் அடையாளங்கள். மனிதரிடம் ஆணவச் செருக்கு இல்லாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கில்; அறுகம் புல்லை விரும்பி ஏற்று, அடியார்களுக்கு அருள்பாலிக்கிறார். அறுகம்புல்லின் காம்பில் மூன்று தளிர்கள் காணப்படுகின்றன. மனம், மொழி, மெய் ஆகிய மூன்றையும் இணைத்து, ஒருமைப்படுத்தி; இம்மூன்றினது தூய்மையும் பேணி; விநாயகரை வழிபட்டு, இறை அருளைப் பெற வேண்டியதன் இன்றியமையாமையை, அவை வலியுறுத்துவதாக அமைகின்றன.

ஔவையார் அருளிய "விநாயகர் அகவல்" நூலில் விநாயகரின் திருத்தோற்றம், பின்வருமாறு விவரிக்கப்பட்டு உள்ளது:

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன்னரை ஞாணும், பூந்துகிலாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக்கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும், நாலிரு புயமும்
மூன்று கண்ணும், மும்மதச் சுவடும்
இரண்டு செவியும், இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே.

விநாயகப் பெருமானின் திருப்பாதங்கள் செந்தாமரை மலர் போன்றன. யானைமுகமும்; உறுதியான தந்தமும்; பெரியதும் பருத்ததுமான வயிறும்; தொங்கிய துதிக்கையும்; நான்கு பெரிய தோள்களும்; மூன்று கண்களும்; இரண்டு செவிகளும்; ஐந்து கரங்களும்; கரங்கள் இரண்டில் தரிக்கப்பெற்ற அங்குசம், பாசம் என்னும் ஆயுதங்களும்; நீலவண்ண மேனியும்; ஒளிர்கின்ற பொற் கிரீடமும், முப்புரிப் பூணூலும்; ஒளி பொருந்திய மார்பும்; பொன் அரைஞ்ஞாணும்; வெண்பட்டு ஆடையும் கொண்டு விநாயகர் விளங்குகிறார்.

விநாயகரின் திருவடிவம், "பிள்ளையார் கதை" என்னும் நூலில், யாழ்ப்பாணத்து வரத பண்டிதர் அவர்களால் பின்வருமாறு விவரணம் செய்யப்பட்டுள்ளது.

வெங்கரிமுகமும் வியன்புழைக் கையோடு
ஐங்கரதலமும் மலர்ப்பதம் இரண்டுங்
கோடி சூரியர் போற் குலவிடு மேனியும்
பேழை போல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனக நீண்முடியுந்
தங்கியமுறம் போல் தழை மடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்து அவதரித்தும்.

யானைமுகம், ஓங்கார வடிவினர் என்பதையும்; ஐந்து திருக் கரங்கள் - தும்பிக்கை உட்பட, ஐந்தொழில்களையும் தாம் ஒருவரே நிகழ்த்துபவர் என்பதையும்; மூன்று கண்கள்; சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களையும் உணர்த்துவதையும்; பெருவயிறு, எல்லா அண்டங்கள் சராசரங்கள் அனைத்தையும், தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளார் என்பதையும் விளக்கிக் காட்டுகின்றன. அவரின் பெரியசெவிகள் இரண்டும், ஆன்மாக்களை மும்மலங்களின் பாதிப்புக்கள் தாக்காமல், காத்தருளி; வினைவெம்மையை நீக்குபவர் என்பதைக் குறிக்கின்றன.

தும்பிக்கை தவிர்ந்த ஏனைய நான்கு திருக்கரங்களிலும்; பாசம், அங்குசம், தந்தம், மோதகம் என்பனவற்றைத் தாங்கியுள்ளார்.

யானைமுகன் என்பதால், யானைக்குரிய மும்மதங்களும், விநாயகருக்கு உண்டு, என்றும்; அவை இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி எனவும் நூல்கள் குறிப்பிடுகின்றன.

இசைக்கலை, நடனக்கலை, யோகக்கலை ஆகியவற்றின் அதிதெய்வமாக விளங்குபவர், விநாயகக் கடவுள். ஔவையாரும் இதனை உணர்ந்தே; விநாயகரிடம், "பாலும், தெளிதேனும், பாகும் பருப்பும், இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய், துங்கக் கரிமுகத்துத் தூமணியே, நீயெனக்குச் சங்கத் தமிழ் மூன்றுந்தா", எனப் பணிவுடன் விண்ணப்பம் செய்கிறார். சங்கத்தமிழ் என்பதில் இயல், இசை, நாடகம் மூன்றும் அடங்கும்.

விநாயகர் தன்னுடைய நீலமேனி, வேழமுகம், பெரும் பாரக் கோடு, துதிக்கை ஆகிய சர்வ அவயங்களாலும் விநாயகர் திருவடிவம் யோகநிலை உண்மைகளையே உணர்த்திக் கொண்டிருப்பதும்; ஔவையாருக்கு விநாயகப் பெருமானே, யோகநிலை உண்மைகள் அனைத்தையும் உணர்த்தும் ஞானகுருவாயமைந்தமையும்; விநாயகர் அகவலில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமை நோக்கற்பாலது.

"ஓம்" எனும் பிரணவத்தின் உண்மை வடிவினையும் உண்மைப் பொருளையும்; உலகமுதற் காரணியாகிய நாத வடிவத்தையும்; வெளிப்படுத்துவதாக விநாயகர் திருவுருவம் அமைந்துள்ளமை, நம் முன்னோரின் ஆன்மீக அறிவுத்திறன் விருத்திக்குச் சான்றாகும். அகண்டவெளி ஆகாயத்தில், ஓங்கார நாதத்திலிருந்து, அண்டசரா சரங்கள் தோன்றின, என்பதை விநாயகரின் திருவுருவம் விளக்குவ தாக அமைகின்றது.

விநாயகர், ஞானமே வடிவானவர்; ஓங்கார வடிவினர்; வேதமந்திர சொரூபியாக உள்ளவர்; அந்த வகையில், முதன்மைத்துவம் பெறுகிறார்.

**நாத விந்து களாதி நமோ நம**
**வேத மந்திர சொரூபா நமோ நம.**

இவ்வாறு அருணகிரிநாதர் தாம் பாடிய திருப்புகழ் நூலில், விநாயகப் பெருமானின் முதன்மைத்துவம் மற்றும் இறைத்துவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை, கருத்திற் கொள்ளற்பாலது.

## விநாயகர் திருவுருவம்: தத்துவ விளக்கம்

விநாயகர் திருவுருவத்தை; ஔவையார், தாம் பாடிய "விநாயகர் அகவல்" என்னும் திருநூலில், மிகத் தெளிவாக விவரித்துள்ளார். "பேழை வயிறும், பெரும்பாரக் கோடும்; வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்; அஞ்சுகரமும் அங்குச பாசமும்; நெஞ்சிற்குடிகொண்ட நீல மேனியும்" கொண்ட கற்பகக் களிறு; மூஷிக வாகனத்தில் எழுந்தருளி அடியார்களை ஆட்கொள்ளும் பாங்கினை, அருளியுள்ளார்.

விநாயகரின் திருவுருவத்தில் அமைந்துள்ள அங்க அவயவங்கள், மற்றும் பொருள்கள்; தத்துவரீதியாக எவ்வெவற்றைக் குறிக்கின்றன

என்பதை அறிவோம்: விநாயகரின் திருவுருவம் சைவசிந்தாந்தம் மற்றும் சிவாகமங்கள் என்பவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரணவம் ஆகிய ஓங்காரம்; விநாயகர் முதற்கண் வழிபடும் கடவுள் ஆதலின்; அவருக்குரியதாயிற்று. தமக்கு மேலே, வேறொரு தலைவர் இல்லாதவர், என்னும் கருத்துப்பட அமையப் பெற்றது, விநாயகர், என்னும் அவரின் திருநாமம்.

விநாயகரின் திருவுருவில்; சிவன், விஷ்ணு, பிரமா ஆகிய மும் மூர்த்திகளின் அருட்தன்மைகளும், செயல்களும் பொருந்திக் காணப்படு கின்றன.

**வடிவம்:**
ஞான வடிவினர், ஓங்கார வடிவினர், வேதமந்திர சொரூபி. விநாயகரின் முழுமையான வடிவம் "ஓம்" எனும் பிரணவத்தைக் குறிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. பிரணவன் என்பது அவரின் திருநாமம்.

> **"நாத விந்து களாதி நமோ நம**
> **வேத மந்திர சொரூபா நமோ நம."**

இவ்வாறு, அருணகிரிநாதர், திருப்புகழில், விநாயகப் பெருமானின் திருவுருவத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

**விநாயகரின் திருவடிவ அமைப்பு:** ஆண், பெண் இரண்டும் சேர்ந்ததே. வலதுபாகம்: ஆண்; இடது பாகம்: பெண்.

**விநாயகரது திருவுருவத்தில்** அமைந்துள்ள நான்கு திருக் கரங்கள் அமரர்கூறு; வேழமுகம் விலங்கின் கூறு; பேழை வயிறும் குறுங்கால்களும்; பூதக் கூறு; என்பன; உயர்திணை, அ.்றிணை என்கின்ற திணைப்பாகுபாடு; மற்றும் ஆண், பெண், அலி என்னும் பால்வேற்றுமை - இவற்றைக் கடந்தவர் என்னும் நிலைப்பாட்டினைக் கொண்டவர் என்பதை உணர்த்துகின்றன. உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும், தன்னுள் அடக்கம் எனச்சுட்டிச் சொல்லாமல் சொல்லும் அற்புத வடிவம் ஆக அமைந்துள்ளமை, நோக்கற்பாலது.

**விநாயகரின் யானைமுகம்,** பிரணவ சொரூபி என்பதை உணர்த்து கின்றது. மூன்று கண்கள்; சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடரையும் உணர்த்துவதாக உள்ளன.

**விநாயகரின் இருபெரிய செவிகள்;** ஆன்மாக்களை ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களின் பாதிப்புக்கள் தாக்காமல், பாதுகாத்து வினை வெப்பத்தைப் போக்கியருள்பவர், என்பதைப் புலப்படுத்துகின்றன.

**பேழைவயிறு;** பிரமாண்டங்கள் அனைத்தும் அதனுள் அடக்கம் என்பதைக் குறிக்கின்றது.

**திருவடிகள்:** விநாயகருடைய திருவடிகள் ஞானத்தின் நிலைக்களன். வந்த வினையும் வருகின்ற வெவ்வினையையும் வேரறுத்துப் போக்கும், திறத்தன. ஆனையானது தனது காலிலே, அடிவைப் பவனை; முடிமீது ஏற்றும் தன்மையது. அதேபோல, ஆனைமுகக்

கடவுளின் அடிதாழ்பவர்களை, அவன் உயர்நிலைக்கு உயர்த்துவான். அத்துடன் மோட்சமும் அளிப்பான்.

**கும்பம் ஏந்திய கை,** படைத்தல் தொழிலையும்; மோதகம் ஏந்திய கை, காத்தல் தொழிலையும்; அங்குசம் ஏந்திய கை, அழித்தல் தொழிலையும்; பாசம் ஏந்திய கை, மறைத்தல் தொழிலையும்; தந்தம் ஏந்திய கை, அருளல் தொழிலையும் புரிகின்றன. எனவே, விநாயகர் ஐந்தொழில்களையும், தமது ஐந்து கரங்களால் புரிந்து, ஆன்மாக் களுக்குத் திருவருள் பாலிக்கிறார்.

**மும்மதங்கள்:** விநாயகர்; இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி என்ற மும்மதங்களைப் பொழிபவராக உள்ளார்.

**பாசம்:** பாசக்கயிற்றால், விநாயகர் உயிர்கள் உய்யும் பொருட்டுச்; சம்சார பந்தங்கள் கட்டிப்போடப்படுகின்றன.

**அங்குசம்:** தம்மிச்சையாகத் திரிந்தோடும், மதம் பிடித்த நமது பஞ்சப் புலன்களை; இவ்வங்குசம் அடக்கி; மனம்போன போக்கிலே, போகவிடாமல் தடுத்து; நேர் வழியில் செல்லச் செய்கிறது.

**அக்ஷமாலை:** இம்மாலையிலுள்ள மணிகள் 56 ஆகும். அவை ஐம்பத்தாறு அட்சரங்களைக் குறிப்பன என்று கருதப்படுகிறது. அட்சரங்களாவன மெய்நூல்கள் வாயிலாக, விநாயகர் நமக்கு மெய்யறிவு புகட்டுகின்றார்.

**மோதகம்:** வெளியே மூடியுள்ள மாவுக்குள்ளே, இருக்கின்ற பூரணம் (பயறு, தேங்காய், சர்க்கரை சேர்ந்த கலவை), மண்டைக்குள் உள்ள மகாபுத்தியைக் குறிப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன.

**இரத்தினகும்பம்:** ஏராளமான பொன் பொருளையும்; இரத்தினங் கள், மணிகள் ஆகியவற்றையும் வரையாது, வாரி வழங்குகின்ற விநாயகரின் அருள் இயல்பைக் குறிக்கிறது.

**பசு-கோடாரி:** என்னும் இவ் ஆயுதம், மெய்ஞ்ஞானஅறிவை மறைக்கும், அஞ்ஞானத்தை, வெட்டி நீக்கும், கருவியாகக் கருதப்படுகிறது.

**நாகம்:** நாகம் குண்டல வடிவில் அமைந்திருப்பதால்; தோற்றமும் முடிவும் - ஆதியும் அந்தமும் இல்லாத நித்தியத் தன்மையை நினை வூட்டுகிறது.

**தந்தம்:** நல்லோரைக் காக்கவும், தீயோரைத் தண்டிக்கவும் பயன் படும் கருவி.

**சூர்ப்பணம்:** முறம் (சுளகு) போன்ற, அகன்ற காதுகள் எந்நேரமும் அசைந்து கொண்டேயிருப்பது, அடியார்களை; இடர்கள், விக்கினங்கள், அண்ட விடாமல், அவற்றை ஒதுக்கித் தள்ளுவதைக் குறிக்கின்றது.

**வேழமுகம்:** (யானைத்தலை) பிரணவத்தைக் குறிக்கிறது.

**பாம்பு:** வயிற்றைச்சுற்றி, உதரபந்தனமாகப் பாம்பு பயன்படுகிறது. மூலாதாரத்தின் நாயகன், விநாயகன். மூலாதாரத்தில், மூன்றரைச் சுற்றுள்ள பாம்பு வடிவமாகக் குண்டலினி சக்தி உறங்குகின்றது.

இதனைக்குறிக்கு முகமாகவே, பாம்பு விநாயகரின் வயிற்றைச் சுற்றி அணியப் பெற்றிருக்கிறது. என்று நூல்கள் கூறுகின்றன.

**ஐந்துகரங்கள்:** விநாயகருக்கு நான்கு கரங்கள்; அவற்றுடன் தும்பிக்கையும் சேர்ந்து, ஐந்து திருக்கரங்கள் உள்ளன. தம்மை அணுகியவர்களைக் காக்கும் கரம், அபயகரம். பூரணத்திலிருந்து பூரணத்தை (முழுமை) எடுத்தாலும் மீதமாகவுள்ளதும் பூரணமே என்ற மகாவாக்கியத்தின் பொருளை விளக்கும், மோதகத்தை; ஒரு கரத்திலும்; மதம் பிடித்துள்ள யானையை அடக்கும் அங்குசப் படைக்கலத்தை மற்றொரு கரத்திலும்; உயிர்களைப் பற்றியுள்ள பாசம் என்னும் மலங்களை அடக்கும் பாசக் கயிற்றை, இன்னொரு கரத்திலும் தாங்கியும்; உலகின் எந்தமூலை, முடக்குகளிலிருந்தாலும் தனது அடியவர்களை, நோக்கி, நீட்டிக்காக்கும் ஊறு உணர்ச்சிமிக்க துதிக்கையுமாக; விளங்கும் ஐங்கரன் ஆகக் காட்சியளிப்பவன் பிரணவப் பெருந்தகை.

**தலை:** பிறைச்சந்திரனைத் தலையில் தரித்துள்ளார். குற்றங்கள் புரிந்தாரேனும்; அதனை உணர்ந்து, தம் திருவடிகளை வணங்கி வழிபடுபவர்களாயின்; அவர்களை மன்னித்து அருள்புரியும், எல்லை யற்ற கருணையைக் காட்டுகின்றது.

**தோற்றம்:** விநாயகரின் மடித்து வைத்துள்ள ஒரு திருப்பாதம், பூமியையும்; தொந்திவயிறு, நீரையும்; மார்பு, நெருப்பையும்; நெற்றிப் பிறை, காற்றையும்; வளைந்த தந்தம், ஆகாயத்தையும் உணர்த்து கின்றன. விநாயகர் பஞ்சபூதங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

## விநாயகர் திருவடிவம் - தத்துவ விளக்கம்:

★ விநாயகப் பெருமானின் திருவுருவம், பல தத்துவ நுட்பங்களைக் குறிக்கின்றன.

★ அவரில் பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளின் அருள் தன்மைகளும் பொருந்திக் காணப்படுகின்றன.

★ "அனைத்துத் தெய்வங்களின் அம்சங்களின் கூட்டு அமைப்பே கணபதி," எனச் சங்கரர் கூறுகிறார்.

★ "கணபதியின் நாடி, பிரம்மரூபம்; முகம், திருமால் உருவம்; கண், சிவவடிவம்; இடதுபாகம், சக்திரூபம்; வலப்பாகம், சூரிய வடிவம்," எனச் சங்கரர் விளக்கம் தருகிறார்.

★ விநாயகரே முழுமுதற்கடவுள் என்றும்; அவரே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் களையும் செய்வதாகப் புராணங்கள் கூறுகின்றன.

★ அவர் கையில் தரித்துள்ள பாசக்கயிறு, படைத்தலையும்; ஒற்றைக் கொம்பு, காத்தலையும்; அங்குசம், அழித்தலையும்; தும்பிக்கை, மறைத்தலையும்; மோதகம், அருளலையும், குறிக்கின்றன.

★ மற்றொரு விளக்கம்: விநாயகரது எழுத்தாணி பிடித்த கை, படைத்தலையும்; மோதகம் ஏந்திய கரம், காத்தலையும்; அங்குசம்

கொண்ட கை, அழித்தலையும்; பாசம் வைத்திருக்கும் கை, மறைத்தலையும்; அமுதகலசம், ஏந்திய கையான துதிக்கை, அருளலையும் குறித்து நிற்கின்றன.

★ விநாயகரின் யானைமுகம், ஓம் எனும் பிரணவவடிவினர், என்பதை உணர்த்துகின்றது. ஐந்து திருக்கரங்கள், பஞ்ச கிருத்தியங்களையும்; மூன்று கண்கள், சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடர்களையும் உணர்த்துவதாக உள்ளன.

★ இரண்டு பெரிய செவிகள், ஆன்மாக்களை மும்மலங்களின் பாதிப்புகள் தாக்காமல் காத்து, வினை வெப்பத்தைப் போக்குபவர் என்பதைப் புலப்படுத்துகின்றன.

★ பெருவயிறு, எல்லா அண்டங்கள் மற்றும் சராசரங்களையும் தன்னுள் அடக்கியுள்ளமையைக் குறிக்கின்றது.

★ ஒற்றைக்கொம்பு, யானைமுகம், தேவஉடல் ஆகியவை; உயர் திணை, அஃறிணை என்னும் திணைப்பாகுபாடு; மற்றும் ஆண், பெண் பால்வேற்றுமை என்பனவற்றைக் கடந்து இருப்பவர், விநாயகர்; என்பதைக் குறிப்பதாக உள்ளன.

★ விநாயகர், "ஓம்" எனும் பிரணவத்தின் வடிவினர்; பிரணவசொரூபி; பிரணவன் எனவும் அழைக்கப்படுகிறார்.

★ பிரணவம் அ, உ, ம் எனும் மூன்று ஒலிகளின் கூட்டு ஒலியாக விளங்குகிறது. "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்", என்கிறது, பாடலடி ஒன்று.

★ வளைந்த தும்பிக்கையோடு, விநாயகரின்முக வடிவத்தை நோக்கும்போது, அவர் "ஓம்" எனும் பிரணவ வடிவம் பெற்று இருப்பது புலன் ஆகிறது.

★ விநாயகர்; நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூத வடிவங் கொண்டவர்.

★ இவர் தூல, சூக்கும, காரண உடம்புகளுக்கு அதீதமானவர்.

★ இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியமுக்காலங்களையும், கடந்தவர்; வென்றவர்.

★ விநாயகர் விசேடமாக உறைவது, மனிதனின் உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களுக்கும் அடித்தளமாக விளங்கும் மூலாதாரத்திலாகும்.

★ இவரே பிரமன், இவரே விஷ்ணு, இவரே சிவன், இந்திரன், அக்கினி, வாயு, சூரியன், சந்திரன் ஆகிய தெய்வங்களும் இவரே யாவர்.

★ மூன்று சக்திகளையும் தன் அமிசங்களாகக் கொண்டவர்.

★ இவர் சொல்லால் அமையும் ஏழு பிரபஞ்சங்கள் முழுவதிலும், வியாபித்து நிற்பவர்; சர்வ வியாபகர்.

★ சச்சிதானந்த வடிவம் தாங்கி - சத்து, சித்து, ஆனந்தம் - தானே தனிப் பெரும் பொருளாய் அமையும்; ஒப்பு, உயர்வற்ற பெருமையுடையவர், விநாயகப் பெருமான்.

★ இப்பிரபஞ்சம் முழுவதும் இவரிடத்தே தோன்றியது. இவை அனைத்தும் இவரை அண்டியே நிலைபெற்று நிற்பன.

★ இவையாவும் ஈற்றில் இவரிடத்தே ஒடுங்குகின்றன.

★ எல்லோருக்கும் தலைவனாகவும்; தனக்குத்தலைவன் அற்றவனாயும்; தனக்கு மேலே வேறொருதலைவன் இல்லாதவனாயும் விளங்குபவர், விநாயகப் பெருமானாவார்.

★ அறிவுக்களஞ்சியமாக, ஞானத்தின் திருவுருவாக, நான்மறையின் விழுப்பொருளாய் விளங்கும் விநாயகப் பெருமானுக்குப் பொருத்தமுறும் வண்ணம், நுண்ணறிவு நிரம்பிய யானைமுகம் அமைந்து, இவ்வுயர் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

★ யானைமுகம் படைத்த, இத்திருவுருவத்திற்குக் கரங்கள் ஐந்து. அதனால், ஐங்கரன் எனும் திருப்பெயரைப் பெற்றுள்ளார்.

★ "திருவருளே, திருமேனியாக உள்ளவர் விநாயகன்; சர்வ வல்லபரான சிவனிடமிருந்து முதன்முதலாக, எழுந்த ஒலியான "ஓம்" என்பதன் வரிவடிவமே, விநாயகனின் திருவுருவமாகும். யானைமுகமும், மூன்று கண்களும், இரண்டு விசாலமான செவிகளும், ஒற்றைக்கொம்பும், ஐந்துகரங்களும், தொந்தி வயிறும், இரண்டு குறுகிய வடிவமான திருவடிகளும்; விநாயகரது திருவுருவங்களாகும். யானைமுகம், பிரணவவடிவினன் என்பதையும்; மூன்று கண்கள் சூரியன், சந்திரன், அக்கினி ஆகியவற்றையும்; ஐந்து கரங்கள் தானே ஐந்து கிருத்தியங்களையும் செய்பவன் என்பதையும்; இரண்டு விசாலமான செவிகளும், ஆன்மாக்களை மலவாதனை தாக்காது காத்து, வினை வெப்பத்தை போக்கியருளும் என்பதையும்; தொந்திவயிறு, எல்லா அண்டங்களும் உயிர்களும் தனக்குள்ளேயே அடங்கியுள்ளன என்பதையும் உணர்த்துகின்றன."

### விநாயகர் வடிவம்: நவீன விளக்கம்:

விநாயகரின் முறம் போன்ற பெரிய காதுகள், "அதிகம் பிறர் சொல்வதைக் கேள்; பேச்சைக் குறை" என்கிறது. "கற்றலில் கேட்டால் நன்று"; "செவிச்செல்வம், செல்வத்துட் செல்வம்" போன்ற கூற்றுக்கள் நம் பழந்தமிழ் நூல்களில் இடம்பெற்றுள்ளன.

பெரியதலை, "அதிகமாக யோசி; சிந்தித்துச் செயல்படு; ஆராய்ந்து கருமமாற்று;" என அறிவுறுத்துகிறது. ஒருகரத்தில் தாங்கியிருக்கும் பரசு என்னும் கோடரி, "பந்த பாசங்கள்; ஆசை அவாக்கள் ஆகியவற்றை அறுத்தெறி" என்கிறது. சிறிய கண்கள், "உற்றுப் பார்," எனத் தெரிவிக்கின்றன. சிறியவாய், "அளந்து பேசு, அளவாகப் பேசு, அதிகம் அலட்டிக்கொள்ளக்கூடாது" என்பதை உணர்த்துகிறது. ஒரு கரத்தில் தரித்துள்ள பாசம் எனும் கயிறு, "அகில உலகத்தையே, அன்பு எனும் பாசக்கயிற்றினால் கட்டு" என்று, எம்மை வழிப்படுத்துகிறது. விரிந்து, நீண்ட துதிக்கை, "வாரி வழங்கு, வள்ளல்களைப் போல" எனக் கூறுகிறது. பெருவயிறு "நல்லனவற்றை யும் அல்லனவற்றையும் ஏற்றுக்கொள்," என்று சொல்கிறது. ஒற்றைத் தந்தம், "நல்லனவற்றை நினைவில் வைத்துக்கொள்; அல்லனவற்றை அன்றே மறந்துவிடு," என்கிறது. தும்பிக்கை, "தேவைக்கேற்ப வளைந்து கொடு," எனச் சூசகமாக உணர்த்துகிறது. மோதகம், "இன்பம் எங்கே? என்று வெளியில் தேடாதே; உள்ளே உள்ளது இன்பம்" என்ற உண்மையை உணர்த்தி நிற்கிறது.

## விநாயகருக்கு விருப்பமான கரும்பு கூறுவது யாது?

யானைக்குக் கரும்பில் விருப்பம் அதிகம். யானைமுகனுக்கும் கரும்பு என்றால் கசக்குமா, என்ன? விநாயகசதுர்த்தி வழிபாட்டின் போது, கரும்புத்துண்டு வைத்து நிவேதனம் செய்யவேண்டும் என்பர். அதிலும் ஒரு தத்துவம் உள்ளது. கரும்பை வளைத்தால் அது வளையும் தன்மையது. இன்னும் அதிகமாக வளைத்தால், முறிந்து போகும். மனிதமனமும் அப்படிப்பட்டது. மனத்தைச் சந்தர்ப்பம், சூழ்நிலைகளுக்கேற்றவாறு, வளைத்து; எதிர்கொள்ளும் இன்னல்கள், இடையூறுகளைச் சமாளிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும், எச்சூழ்நிலையிலும் மனம் உடைந்துபோக அனுமதிக்கக் கூடாது. விபரீதமான முடிவுகளை எடுக்கக்கூடாது என்பதை உணர்த்துவதற் காகவே விநாயகப் பெருமானுக்குக் கரும்பு நிவேதனமாகப் படைக் கப்படுகிறது, எனச் சான்றோர் கூறுவர்.

## விநாயகர் திருவுருவம்: ஓங்கார வடிவம்

- ★ விநாயகரின் வடிவம், ஓங்கார வடிவம். அவ்வடிவமே பிரணவ வடிவமும் ஆகும். பிரணவசொரூபி என விநாயகர் அழைக்கப்படு கிறார்.
- ★ இந்த உலகம், மற்றும் அண்டசராசரங்கள் அனைத்தும், பிரணவத் திலிருந்தே, தோற்றம், பெற்றன.
- ★ உலகம் தோன்றுவதற்கு, முதல் காரணமாக அமைந்த, பிரணவம்; மகாமாயை என்றும் சொல்லப்படுகிறது.
- ★ விநாயகர், மகாமாயைக்குத் தலைமையாயிருந்து, அதனை இயக்கும் சக்தியே ஆவர்.
- ★ "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்", என்னும் பாடலடி குறிப்பிடுவது, விநாயகரையே யாகும்.
- ★ "ஓம்", எனும் ஓங்காரம் என்பதன் பொருள்; சிந்திப்பவரை உயர்த் துவது என்பதாகும்.
- ★ பிரணவத்தின் ஒருபகுதியாகிய நாதமும் (கீறு); மறுபகுதியாகிய விந்துவும் (சுளி) சேர்ந்து அமைவது, விநாயகரின் துதிக்கை யாகும்.
- ★ விநாயகருக்கு அர்ச்சனை செய்யும்போ, "ஓம் ஓங்காரரூபாய நம" எனும் மந்திரம் சொல்லப்படுகிறது. இம் மந்திரத்தின் பொருள், "ஓம்" எனும் பிரணவமந்திர வடிவினருக்கு வணக்கம் என்பதாகும்.
- ★ யானையின் பிளிற்றொலி, ஏனைய ஒலிகளைக் காட்டிலும் பிரணவ ஒலியைப் பெரிதும் ஒத்ததாக உள்ளது. அத்துடன் மூளையும், கையும்; அதன்தலையிலே அமைந்துள்ளன. நினைக்கும் சக்தியும்; நிறைவேற்றும் சக்தியும் (தும்பிக்கை) ஒரு சேரத் தலையில், அமைந்திருப்பது, யானை முகத்தில் மட்டும்தான் உண்டு. அந்த வகையில், விநாயகருக்கு யானைத் தலை, யானைமுகம் என்பன சிறப்பாக அமைந்துள்ளமை நோக்கற்பாலது.
- ★ பிரணவத்துள் அண்டபகிரண்டமும் அடக்கம் என்பதை விநாய கரின் தொந்தி வயிறு உணர்த்துகின்றது.

★ பிரளய காலத்திலே, சிவபெருமான் தனியாக நின்று; உலகமாகிய மயானபூமியிலே நர்த்தனம் புரிவார். அப்பொழுது; எல்லாம் வல்ல பரமசிவனிடத்திலிருந்து தோன்றும் முதல் ஒலி, "ஓம்" எனும் பிரணவ ஒலியாகும். இதனாலேயே, விநாயகரை, சிவபெருமானின் மூத்த திருக்குமாரரென்றும்; பிரணவ வடிவினர் என்றும் அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

★ விநாயகர் திருவுருவங்கள் முப்பத்திரண்டு என நூல்கள் கூறும். அவை பாலகணபதி தொடக்கம், சங்கடஹர கணபதி வரை கூறப் படுகின்றன.

★ விநாயக திருவவதாரங்கள் பன்னிரண்டாகும்:
வக்கிரதுண்ட விநாயகர்; சிந்தாமணி விநாயகர்; கஜானனர் விக்கி னராசர், மயூரேசர், பாலச்சந்திரர், தூமகேது; கணேசர், கணபதி, மகோற்கடர், துண்டி விநாயகர், வல்லப விநாயகர் என்பனவாகும்.

**ஓங்காரம் - ஓம்**

ஓங்கார வடிவம், பிரணவ வடிவம், எனக்குறிப்பிடப்படும் வடி வங்கள்; விநாயகரின் வடிவத்தையே சுட்டுகின்றன. அதனால், ஓங்கார வடிவினர், பிரணவ வடிவினர் என விநாயகப் பெருமான் அழைக்கப் படுகிறார்.

விநாயகப் பெருமானின்; ஆனைமுகம், சுளகுபோன்ற வடிவமுடைய பெரிய காதுகள், வளைந்த துதிக்கை, ஆகியவற்றை இணைத்து; வடிவமைத்து, நோக்கினால் **"ஓம்"** எனும் பிரணவ வடிவ மாக, விநாயகர் திருக்காட்சியளிப்பதைக் காணலாம். "ஓங்காரரூபாய நம", என்பது விநாயகக் கடவுளைத் துதிப்பதற்கான, அற்புத மந்திரம். **"ஓம்"** எனும் பிரணவ மந்திரம்; ஓரெழுத்து மந்திரம் என்றும்; ஏகாட்சர மந்திரம் என்றும் கூறப்படுகிறது. மந்திரங்கள் அனைத்திற்கும் மூலமந்திரமாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. **"ஓம்"** என்பது மகாமந்திரம் ஆக விளங்குகின்றது. சிவபெருமான் முதல், மற்றெல்லாத் தெய்வங்களுக்குமுரிய மந்திர அட்சரங்களை, ஒலிக்கும் போது, **"ஓம்"** எனும் தலைமை மந்திரத்தை முதலில் சேர்த்தே உச்சரிப்பது மரபு ஆகும். உதாரணமாக, "ஓம் நமசிவாய", "ஓம் சிவாய நம"; "ஓம் சரவணபவ", "ஓம் சக்தியே பராசக்தியே"; "ஓம் முருகா"; "ஓம் நமோ நாராயணாய"; "ஓம் பைரவாய நம", என்னும் மந்திரங் களைக் கூறலாம்.

**ஓங்காரத்துள்ளே உதித்த ஐம் பூதங்கள்**
**ஓங்காரத்துள்ளே உதித்த சராசரம்**
**ஓங்காரதீதத்து உயிர்மூன்றும் உற்றன**
**ஓங்காரம் சீவ பரசிவரூபமே.** - திருமந்திரம்

இவ்வாறு **"ஓம்"** எனும் பிரணவத்தின் மகிமையைத் திருமூலர் தாம் ஆக்கிய திருமந்திரப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். "ஓங்காரம்......பர சிவரூபமே", என்பதிலிருந்து; சிவனும் விநாயகரும் வேறல்லர்; ஒருவரே, என்பது தெளிவாகின்றது.

**"ஓசை ஒலியெலாமானாய் நீயே;**
**உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே"**

- திருவையாறு திருத்தாண்டகம்.

திருநாவுக்கரசுநாயனார்; பரம்பொருளை; ஓசையாகவும், ஒலி யாகவும் உணர்ந்துள்ளமையை; அவர்பாடிய தேவாரப் பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். ஒலி காதால் கேட்கப்படுவது; ஓசை, உள்ளத் தினால் உணரப்படுவது, என்பர் அறிஞர்கள். நாதப் பிரம்மம் ஆக இறைவன் உள்ளமையைத் திருநாவுக்கரசர், மேற்படி பாடலடி மூலம் விளக்கியுள்ளார். ஓசை, ஒலி என்பவற்றின் இணைந்த வடிவமாக; ஓம் எனும் பிரணவம் உள்ளது. பிரணவத்தின் வடிவமாகக் காட்சியளிப் பவர், விநாயகர்.

வேதங்கள்; ஐயா! என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்" ஆகிய இறைவன், அடியேன் "உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய்" நிற்பவன், என்கிறார் மாணிக்கவாசகர்.

நம் உள்ளத்துள், ஓங்காரமாய் மிளிர்கின்ற விநாயகப் பெருமான், நமது அகங்கார, மமகாரங்களை, வேரறுத்து அழிக்க வல்லவன்.

## ஓங்காரம் - வேத விழுப்பொருள்:

ஓங்காரம் என்பது; அதனை மனத்தினால் நினைப்பவரை மேல்நிலைக்கு உயர்த்துவது, என்னும் பொருளுடையது, என்று அறிஞர் கூறுவர். ஓங்கார வடிவினராக விளங்குபவர், விநாயகக் கடவுள். விநாயகர் என்பதன் பொருள், தமக்கு மேலே, தலைவர் இல்லாதவர் என்பதாகும். பிரணவ மந்திரத்திற்கு மேலேயும், ஒரு மந்திரம் இல்லை, என்பது இதிலிருந்து பெறப்படும் கருத்தாகும். இக்காரணங்களினால், பிரணவப்பொருளாகவும்; பிரணவத்தின் வடிவ மாகவும், விளங்கும் விநாயகப் பெருமான், முதல் வணக்கத்திற் குரியவர், எனும் சிறப்பைப் பெறுகிறார்.

ஓம் எனும் பிரணவ ஒலி; ஆதியில் ஒப்பற்ற பேரமைதியிலிருந்து, இறைவாக்காக / நாதப்பிரம்மம் ஆகத் தோன்றியது. அதுவே முதல் ஒலி; ஓங்கார ஒலி ஆகும். ஓங்காரத்திலிருந்து ஆகாயவெளி, (பிரபஞ்சகளம்), மற்றும் காற்று, தீ, நீர், நிலம் எனும் பஞ்சபூதப் படைப்புக்களும் தோற்றம் பெற்றன. அந்த வகையில்; பிரபஞ்சத் தோற்றங்கள், அண்டசராசரங்கள் அனைத்திலும்; நீக்கமற நிறைந்தும், செறிந்தும்; அங்கிங்கெனாதபடி எங்கும், ஊடுருவியும்; ஓங்காரம் கலந்துள்ளது.

இந்த உலகத்தின் கர்த்தாவாகிய கடவுள்; என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர் ஆவார். அந்த வகையில், ஓங்காரமும் கடவுளும் வேறல்லர்; ஒன்றே, என்ற உண்மை புலனாகின்றது. இரண்டும் ஒரு பரம் பொருளையே குறிக்கின்றன. ஓங்காரம்; எங்கும் எதிலும், "எரியுறுநீர்" போல; பரவி; ஒன்றாய், உடனாய், அதேவேளை வேறாய் இருப்பதால்; பிரணவம் என அழைக்கப்படுகிறது. பிரணவத்தின் வடிவமாகவும் பொருள் ஆகவும் விளங்குபவர் விநாயகப் பெருமான்.

நான்கு வேதங்களும், ஓங்காரத்திலிருந்தே ஆரம்பிக்கின்றன. ஓங்கார மந்திரத்தைச் செபித்தல், வழிபடுதல், போற்றுதல் என்பன இறைவனை வழிபடுதலுக்கு நிகரானதாகும். ஓங்காரத்தை உச்சரித்துக் கொண்டு இறைவனைத் தியானிக்க வேண்டும், என்று உபநிடதங்கள் கூறுகின்றன. அதேவேளை, கடவுளை அறிவதற்கும், அடைவதற் குமான வழிமுறையும் அதுவாகவே உள்ளது, எனச் சாத்திர, தோத்திர நூல்கள் கூறுகின்றன.

மனித உடலில் ஆறு ஆதாரங்கள் உள்ளன. அவற்றில் மூலா தாரமே, பிரணவத்தின் உறைவிடம் என ஆன்றோர் கொண்டனர். பிரணவம் என்றும் ஓங்காரம் என்றும், அழைக்கப்படும் ஒலியே, பிரபஞ்சத் தோற்றத்திற்கும் காரணம் என்பதையும்; மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் மூலம் என்பதையும், உணர்ந்த நம்முன்னோர்; பிரணவ ஒலியான ஓங்காரத்திற்கு வடிவம் கொடுத்து; யானை முகத்தைத் திருவதனமாகக் கொண்ட விநாயகர் வழிபாடு, உருவ வழிபாடு ஆகத் தொடக்கம் பெற்றிருக்க வேண்டும் என்னும் கருத்தும் உள்ளது.

### "ஓம்" வழிபடும் பரம்பொருள்:
### ஓசை, ஒலியின் இறைத்துவம்

கடல் அலைகள் எழுப்பும் ஓசையைக் கூர்ந்து கவனித்தால், 'ஓ' என்று, இரையும் சப்தம் போல இருக்கும். ஒரு சங்கினை எடுத்துக் காதில் வைத்துக் கவனித்துக்கொண்டால்; அங்கும் 'ஓ' என்று ஒலிக் கும் ஓர் ஓசை எழுவதைக் கேட்கமுடிகின்றது. ஒரு குழந்தை, பிறக்கும் போது, 'ஓ' என்ற ஒலியை எழுப்புகிறது. அந்த ஒலிதான், அந்தக் குழந்தை உயிருடன் இருப்பதை உணர்த்துகின்றது. எமது தமிழ் எழுத்துக்கள் எல்லாவற்றின் ஓசைகட்கும், முதலாய் இயல்பாகத் தோன்றி, ஓயாது ஒலிசெய்து கொண்டிருப்பது, 'ஓ' வென்னும் ஒலியேயாகும். இதனை நம் முன்னோர் ஆராய்ந்தறிந்து, அதனை வழிபாட்டுக்குரியதாக்கி வணங்கினர். எல்லா உயிர்களுக்கும், எல்லாப் பொருள்களுக்கும்; முதலாய், மூலமாய் நிற்கும்; எல்லா வல்லமைகளும் கொண்ட பரம்பொருளை நினைந்து எல்லா எழுத் தோசைகட்கும், முதலாய் இயற்கையிலே ஒலிக்கும், 'ஓ' எனும் எழுத்தோசையை, வழிபட்டு வரலாயினர், நம்தமிழ் முன்னோர்.

இவ்வியற்கை, முதல் ஓசை, வடமொழியில் "ப்ரணவம்" என்று வழங்கப்படுகிறது. "ப்ரண". என்பதன் பொருள் "பழைய" என்பதாகும். எனவே, வடமொழி அறிஞர்கள், 'ஓ' எனும் பழைமையுடைய அவ் வோசைக்குப், "பிரணவம்" எனப் பெயர் சூட்டினர்.

இனி, 'ஓ' எனும், பிரணவ ஒலி; கேட்கப்படுவதேயன்றிக்; கண்ணி னால், காணக்கூடியதன்று. கடவுள் வணக்கம், கண்களினால் காணக் கூடிய வடிவம் கொண்ட பொருளை நிறுத்தி, அதனெதிரே செய்யப் படுவதாகவே, இதுவரை இருந்து வருகிறது. பொதுவாக, மக்கள் யாவரும், தம் அன்புக்குரிய ஒன்றைக், கண்குளிரக் கண்டு; அன்பு

பாராட்டிப், பேசி, தம் குறை நிறைகளை முன்வைத்து, வணங்கி வழிபடவே, பெரிதும் விரும்புவர். அது மனித இயல்பு. காதால் மாத்திரம், கேட்குமளவில், அவர்களின் அவா அடங்கப் பெறுவதில்லை. எனவே, ஓங்கார, ஒலி வடிவிலமைந்த, பிரணவ மந்திரத்திற்கு, கட்புலனாகக் கூடிய வடிவம் ஒன்றினை ஆராய்ந்தறிய நம் பண்டைய தமிழ்ச் சான்றோர் முயற்சித்து வெற்றி கண்டனர்.

## "ஓம்" - அதன் வடிவம்

ஒலி, ஓசையைக் கவர்ந்து, ஈர்ப்பதற்கு; மனிதருக்குக் கருவியாக இருப்பது, காது ஆகும். எனவே, காதின் வடிவத்தில்; ஓங்காரத்திற்கு வடிவம் தர, நம்முன்னோர், விழைந்து, செயற்படுத்தினர். 'ஓ' எழுத்தின் வரிவடிவம்; காது வடிவத்தில் அமைந்திருப்பதும்; காது ஒலியைக் கேட்கும் கருவியாக, இயற்கையாகவே விளங்குவதும்; எத்துணை பொருத்தம் என்பதை உணர்ந்து, நம்முன்னோர் அறிவுத் திறனை வியக்கிறோம். நம் பழந்தமிழ்ச் சான்றோர்கள், ஓசையை உணரும் தன்மை வாய்ந்த செவியின் உருவமைப்பை உற்று நோக்கியே, உலகின் முதலோசையாக எழுச்சிபெற்ற ஓங்காரத் திற்குக், கட்புலனால் காணக்கூடிய உருவினை அமைத்த நுட்பம், திறன், ஞானம்; தற்பொழுது அனைவரினதும் கருத்தையும் கவனத்தை யும் ஈர்த்துள்ளமை நோக்கற்பாலது.

இங்ஙனம், ஓங்கார வடிவிலே, கண்ணுங் கருத்தும், ஒருநிலைப் பட்டு, உயர்ந்து நிற்க; அத்தமிழ்மக்கள் சிரத்தையோடு உச்சாடனஞ் செய்து வந்த 'ஓம்' எனும் ஓங்கார ஒலி, பெறுதற்கரிய பயன்கள் பலவற்றைத் தமக்கும், தம்மைச் சார்ந்தோருக்கும், பிறர்க்கும்; தருதல் கண்டு; அவர்கள் அந்த ஓரெழுத்து மந்திரத்தை, ஒரு தலைசிறந்த, இம்மை மறுமைப் பயன்மிக்க திருமந்திரமாகக் கருதலாயினர். பரம்பரை, பரம்பரையாக, விநாயக வழிபாடு தொடர்ந்து வரலாயிற்று.

## ஓங்காரமூர்த்தி: யானைமுகம் சிறப்பு

ஓங்கார மந்திரத்தை, வாயினாற் சொல்லியும்; வரிவடிவில் எழுதியும்; கடவுள் வழிபாடு ஆற்றிவந்த தமிழ்ச் சான்றோர்கள்; தாம் அதனால் பெரும்பயன் அடையப்பெற்ற மட்டில்; விட்டுவிடாது; தாம் பெற்ற நற்பயன்களை; ஏனைய மக்களும், பாமரர்களும் பெற்று இன்புறல் வேண்டுமெனக் கருதினார்கள். "யாம் பெற்ற இன்பம், பெறுக இவ்வையகம்", என்கிறது, திருமூலர் திருமந்திரம். 'ஓம்' எனும் பிரணவமந்திரத்தை, பொதுமக்கள்; அதன் எழுத்து உருவில் கண்களால் கண்டும்; எழுத்தின் ஒலியைக் காதுகளால் கேட்டும்; உச்சாடனஞ் செய்தும்; இறைவனை வணங்கி வழிபடுமளவிற்கு, அவர்கள் உள்ளம் ஒருப்படாரென உணர்ந்து; அந்த ஓங்காரவுரு வினைப், பொதுமக்கள் உள்ளம் ஏற்றுக்கொள்ளத் தக்கதொரு வடிவம் யாதாகலாமெனத், தமிழ்ச்சான்றோர் ஆராய்ந்தறிய முயன்றனர்.

நாம் பொதுவாக அறிந்த உயிரினங்களிலே; ஓங்கார வடிவினை, நமது கண்முன்னே, துலக்கமாகக் காட்டுவன: யானையும் நாகபாம்பும் ஆகும். யானையின் முகமும்; அதன்கீழ்த் தொங்கும், நீண்டுசுருண்டு

காணப்படும் தும்பிக்கையும்; "ஓ" எனும் தமிழ் எழுத்தின் வடிவத்தை ஒத்திருக்கின்றன. அங்ஙனமே நாகபாம்பின் படமும்; நீண்டு சுருளும் தன்மையுடைய அதன் உடல்பாகமும், ஓங்கார வடிவினை ஒத்திருக்கக் காணப்படுகின்றன. யானையும் பாம்பும், ஓங்கார வடிவினை வினை யொத்திருப்பினும்; அவ்விரண்டினுள் யானையின் வடிவமே, அதற்கு மிகவும் பொருத்தமானதாகத், தமிழ்ச் சான்றோர்களால் தேர்ந்தெடுக் கப்பட்டது. அதற்கான காரணங்களும் உண்டு; அவையாவன:

எல்லா உயிர்களிலும், யானையே உருவத்திலும், வலிமையிலும், பெரியது. யானை எந்த உயிரையும் கொன்று, அதன் உடலை உண்பதில்லை. இது தாவரபட்சிணி; இலை, தழைகளையும்; புல் பூண்டுகளையும்; காய் கனிகளையும், தின்று உயிர் வாழும், சைவ விலங்காக விளங்குகின்றது. கடவுளுக்கும், யானைக்கும் பல வழிகளில் ஒற்றுமை நிலவுகிறது. கடவுள் தன்னை அன்பினால், உருகி வழிபடும் ஏழை அடியார்களுக்கு எளியராய்; அவர்கள் வேண்டுவனவற்றை ஈய்பவர். அவ்வாறே, யானையும் அதனுடன் அன்பாகவும், அணைவாக வும் பழகுவாரிடத்தே. அதனது பெருவலிமையைக் காட்டாது; அவர்களுக்கு, மிக அடங்கி, இட்ட பணிகளையெல்லாஞ் செய்து, அவர்களுக்குப் பெரிதும் பயன்படும் ஒரு விலங்காகத் திகழ்கின்றது. இங்ஙனமாக, விலங்குகளுள் யானையானது, பலவகையில், கடவுளியல்போடு ஓரளவிற்காயினும், ஒத்திருத்தல் கருதியே, தமிழ்ச் சான்றோர்கள் ஓங்காரவடிவினைப் பொதுமக்கள் யாவரும், உள்ளம் ஒருவழிப்பட்ட நிலையில், கண்ணாரக் கண்டு வணங்கி வழிபாடு செய்வதற்கு மிகவும் பொருத்தமானதொன்றாய், யானைமுகமுடைய பிள்ளையார் உருவினை அமைத்து, வழிபாட்டுக்குரியதாக்கினர். அந்த வகையில் கற்றோர், கல்லாதவர்; பண்டிதர், பாமரர் ஆகிய எல்லாத் தரப்பினரும்; ஓங்காரமூர்த்தியான விநாயகப் பெருமானை வழிபட லாயினர். இங்கே தரப்பட்ட கருத்துக்கள், மறைமலையடிகளின் "தமிழர் மதம்" என்னும் ஆய்வு நூலிலிருந்து பெறப்பட்டுத் தொகுக்கப்பெற்றது, என்பதை நன்றியுடன் அறியத்தருகிறோம்.

எல்லாவொலிகட்கும் முற்பட்டு, ஓங்கார ஒலியே இயற்கையாய்த் தோன்றி, நிலவக் காணப்பட்டமையினால்; ஓங்காரத்தை உருவில் காட்டும்; பிள்ளையார் வணக்கமே, முதல் வணக்கத்திற்குரியதாயிற்று. இன்றுவரை, அம்மரபு இருந்து வருகிறது.

## ஓம் எனும் பிரணவ மந்திரம்

★ விநாயகர் ஓங்கார வடிவினர்.

★ அ + உ + ம் எனும் மூன்று தமிழ் எழுத்துக்களின் கூட்டொலியே ஓம்.

★ ஓம் என்பது பிரணவமந்திரம் ஆகும். ஓம் என்னும் ஒலி, மகா மந்திரம் எனப்படுகிறது.

★ அநாதியில், ஒப்பற்ற பேரமைதியிலிருந்து இறைவனின் வாக்காக வும், ஒலிவடிவம் பெற்றும், நாதப்பிரமம் தோன்றியது. அதுவே ஓங்காரம். ஓம் எனும் ஓங்கார ஒலியிலிருந்துதான் ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் எனும் பஞ்சபூதப்படைப்புக்கள் அனைத்தும் வெளிப்பட்டன.

★ இந்த வகையில், உலகின் படைப்புக்கள் அனைத்திலும்; அசைவன; அசையாதன; உயிருள்ளன, உயிரற்றவை; எல்லாவற்றிலும்; ஓங்காரம் ஊடுருவிச் செறிந்துள்ளது.

★ ஓங்காரம், படைப்பின் உயிர்த்தத்துவம்

★ ஓங்காரம், அனைத்து உயிர்களிலும் பரந்திருப்பதால் அது பிரணவம் என அழைக்கப்படுகின்றது.

★ உயிர் என்பதன், ஒத்த கருத்துள்ள சொல் பிராணன்.

★ பிரணவன் என்னுஞ்சொல், பிள்ளையாரைக் குறிக்கிறது.

★ "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்", என ஓங்கார மூர்த்தியாகிய விநாயகர் சிறப்பிக்கப் பெறுகிறார்.

★ விநாயகருக்கு முதல் வணக்கம், முதல் பூசை, முதல் வழிபாடு, முதல் மரியாதை செய்யப்படுவது போன்று; ஓம் எனும் பிரணவ ஒலி; இறைவனின் நாமங்கள், மந்திரங்கள் என்பவற்றுடனும் முன்னுக்கு இணைத்துக் கூறப்படுவது மரபு ஆகும்.

★ ஓம் நமசிவாய, ஓம் சிவாய நம; ஓம் முருகா, ஓம் சரவணபவ; ஓம் சக்தி; ஓம் நாராயணாய நம; ஓம் பைரவாய நம இவை உதாரணங்கள்.

★ ஓங்காரத்தை இறை மந்திரங்கள், நாமங்கள் ஆகியவற்றுடன் முன்னுக்கு இணைத்து, உச்சாடனஞ் செய்வதால், அவற்றின் சக்தி பன்மடங்கு அதிகரிக்கிறது.

★ அ, உ, ம் என்பவற்றின் ஒலி; ஓம் என்று உச்சரிக்கப்படுகிறது. ஒவ்வொரு திருநாமத்துக்கும் ஒரு பீஜ அட்சரம் உண்டு. அதன்படி "அ" என்பது பிரமாவையும்; "உ" என்பது விஷ்ணுவையும்; "ம்" என்பது சிவனையும் குறிக்கும் எனக் கூறப்படுகிறது.

★ "ஓம்" எனும் மந்திரம்; படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் ஆற்றும் மும்மூர்த்திகளையும், தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது.

★ ஆதியில் பரம்பொருள் ஒன்றுதான் இருந்ததென்றும்; அப்பரம் பொருளில் ஏற்பட்ட அதிர்வினால், "ஓம்" என்ற முதல் ஒலி ஒலித்த தென்றும்; அதனால் "ஓம்" என்ற ஓங்கார ஒலியும் அந்தப் பரம் பொருளே, என்றும் இருக்கு வேதம் ஓங்காரத்தைப் போற்றித் துதிக்கிறது.

★ "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே", என அப்பர்பெருமான் இறைவனை விளித்துப்பாடுகிறார்.

★ பரம்பொருளின் சக்தி, ஒலி வடிவாய் வெளியேறிப் பிரபஞ்ச இயக்கங்களை நிகழ்த்துகின்றது என்று இருக்கு வேதம் கூறுகிறது.

★ 'ஓம்' என்னும் மூல ஒலியே பிரபஞ்ச உற்பத்திக்கும்; விரிவிற்கும்; இயக்கத்திற்கும், ஒடுக்கத்திற்கும் காரணமாக உள்ளமைபற்றிச் சைவநூல்கள் கூறுகின்றன.

★ உலகில் ஏற்படுகின்ற அனைத்து ஒலிகளிலும், ஓங்காரம் ஊடுருவிச் செறிந்து காணப்படுகின்றது.

★ 'ஓம்' எனும் மூல ஒலியை மாத்திரம் தனியாக ஒலிப்பதனால் மனவடக்கம், புலனடக்கம் சித்திப்பதோடு; மனத்தை அலைய விடாமல், ஒருமுகப்படுத்திப், பரம்பொருளைத் தியானிக்கவும்; அதில் நிலைத்து நிற்கவும் செய்யமுடிகிறது.

★ அத்தகைய "ஓம்", எனும் ஒலிக்கு வடிவமாக, விநாயகர் விளங்குகின்றார். தமிழ்மொழி வரிவடிவத்தில் அமைந்த "ஓம்", விநாயகரின் முகவடிவமாக அமைந்துள்ளமை உணர்தற்பாலது.

★ சிவத்திலிருந்து நாதமும்; சக்தியிலிருந்து விந்துவும், இணைந்ததே, விநாயகர் தோற்றம். சிவசக்தி இணைப்பினால் எழுந்த ஓங்கார ஒலி; பிரணவம் என அழைக்கப்படலாயிற்று.

★ பிரணவம் - ஓம், என்னும் ஒலியே எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விளங்குவதால்; அதையே மூலாதாரகணபதி, விநாயகர் எனப் பல பெயர்களால் அழைக்கின்றோம்.

★ ஓங்காரம் எனும் பிரணவம் எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்தும்; விறகில்தீ போலவும், பாலில் நெய் போலவும் மறைந்தும், நின்று இயங்குவதனால்; அதனைப் பரம்பொருள் ஆகவே வழிபட வேண்டும்.

★ ஓங்கார ஒலியை நாம் அனைவரும், எவ்வித வேறுபாடுகளுமின்றி, உச்சரித்து, உலகில் பரவச் செய்வதன்மூலம்; தனிமனித அமைதி, குடும்ப அமைதி, சமூக அமைதி, நாட்டில் அமைதி, உலக அமைதி என்பன உறுதிப்படுத்தப்படுகின்றன.

★ "ஓம்" எனும் ஓங்கார உருவத்தை உணர்த்துவது, யானைமுக வடிவம் ஆகும். ஆனமுகன் ஆக, விநாயகர் விளங்குகிறார்.

★ "உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா";

"வேதங்கள்; ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே";

"மெய்ஞ் ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே".

- மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம்

சிவனும், விநாயகரும் வேறல்லர்; ஒருவரே என்பது உணர்த்தப்படு கிறது.

★ ஓங்கார சாதனையை; ஜபம் ஆகத் தனித்தும் செய்யலாம்; யாரும் செய்யலாம்; இதற்கு வருணாச்சிரம விதிமுறை கிடையாது; எனப் பதஞ்சலியோக சூத்திரம் கூறுகின்றது.

★ ஓங்காரம் வாழ்வில் உய்தியைத்தரும்; உயர்வைத்தரும். வேத மந்திரங்களை; "ஓம்" என்றுமுதலில் உச்சரிக்காமல் கூறுபவர், நரகத்தில் வீழ்வர்.

★ பிரணவமந்திரத்தின் சாதனையை; அதன் பெருமையை, மாண்டுக்கிய உபநிடதம் சிறப்பாகக் கூறுகிறது. நாம் மூச்சை வெளிவிடுவதிலும், உள்ளிழுப்பதிலும் ஓங்காரம் மறைந்துள்ளது; இணைந்துள்ளது. மூச்சு நின்றதும், ஓங்காரம் ஒலிப்பதும் நின்றுவிடுகிறது.

★ பிறப்பு முதல் இறப்பு வரை; ஓங்கார சாதனையை நாம் செய்து கொண்டே இருக்கிறோம். "நற்றவா, உன்னை நான் மறப்பினும், சொல்லும் நா நமச்சிவாயவே", என்கிறார் அப்பர் அடிகள். அவ்வாறே, ஓங்காரமந்திரத்தை நாம் மறப்பினும்; எமது உயிர் மூச்சு, அதனைசாதனை செய்து இருக்கும்.

★ அ + உ + ம் என்பவற்றின் கூட்டு ஆன ஓங்கார மந்திரத்தைச் செபிக்கும்போது, உடம்பின் கீழ் "அ" ஒலியைத் தொடங்கி; உடம்பின் நடுவே, "உ" என்றும்; புருவமத்தியில், "ம்" என்றும் சொல்லவேண்டும். இப்படி "ஓம்", எனும் மந்திரத்தை ஒலிக்கும் போது; அந்த ஓசையும் அதன் ஆற்றலும்; சஹஸ்ரம் எனப்படும் உச்சந்தலைக்கு மேல், பன்னிரண்டு விரற்கிடை வரை, பாயும். அதையே துவாதசாந்தம் என்பர். சுழுமுனை நாடியில் ஒளி உண்டாகும். "சிவலிங்கதரிசனம் கிடைக்கும்" என அறிஞர்கள் கூறுகின்றனர்.

★ "ஓம்" எனும் பிரணவமந்திரத்தை முதலில் உச்சரித்து; அதனைத் தொடர்ந்து, பஞ்சாட்சர மந்திரம், சடாட்சர மந்திரம் மற்றும் மந்திரங்களை உச்சரித்தல் மரபு ஆகும். அதனால், செய்த தீவினைகள் நீங்கிச், சிவபுண்ணியம் சேரும்; இகபரசுகங்கள் கிடைக்கப்பெறும். நோய்கள்; முக்கியமாக சுவாசநோய், இரத்த அழுத்தநோய் என்பன குணமாகும். மனக்கவலைகள் நீங்கும். ஆயுள் பலம் நீடிக்கும்.

★ ஓங்காரத்திலிருந்தே அனைத்தும் உதித்தன; அனைத்தும் நிலைத்தன; அனைத்தும் ஆயின. அதன் அதிசயம் சொல்லுதற்கு அரிதே. நமக்கு நற்றுணையாவது பிரணவப் பொருளேயாகும்.

★ வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவதும்; ஓதுவார் தமை நல்நெறிக்கு இட்டுச் செல்வதும்; ஓங்காரமாகிய பிரணவமே யாகும்.

★ இம்மையிலும் அம்மையிலும் நமக்கு உற்றதுணை ஓங்காரம்.

★ அகரமென வறிவாகி யுலகமெங்கும்
அமர்ந்த அகர, உகர, மகரங்கள் தம்மாற்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
பலவேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில் பொருள் நான்கினையு மிடர்தீர்ந்தெய்தப்
போற்றுநருக்கு அறக்கருணை புரிந்து, அல்லார்க்கு
நிகரி மறக்கருணைபுரிந் தாண்டுகொள்ளும்
நிருமனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

★ "ஓங்காரத்தில் உதித்ததுலகெலாம்; ஓங்காரத்தில் நிலைத்ததுல கெலாம்; ஓங்காரத்தில் ஒடுங்கும் உலகெலாம்."

★ உலக உற்பத்திக்கு மூலகாரணம் பிரணவம். அகார, உகார, மகாரங் களின் வரிவடிவமே "ஓம்" எனும் பிரணவம். சிவத்திலிருந்தே நாதமும்; சத்தியிலிருந்து விந்துவும் சேர்ந்ததே விநாயகர் வடிவம்.

★ "நாத விந்துக்களாதி நமோ நம
வேத மந்ர சொரூபா நமோ நம." - திருப்புகழ்

- ★ விநாயகரின் திருவடிவம், ஆணும் பெண்ணும் சேர்ந்த வடிவமாக, அமைந்துள்ளது. கொம்பில்லாத வலப்பக்கம் பெண் ஆகவும்; கொம்புள்ள இடப்பக்கம் ஆண் ஆகவும் கொள்ளப்படுகிறது.
- ★ "ஓம் ஓங்காரரூபாய நம" என்னும் மந்திரம்; விநாயகருக்கு அர்ச்சனை செய்யும்போது கூறப்படுகிறது. "ஓம்" எனும் பிரணவ மந்திர வடிவினருக்கு வணக்கம் என்பதாகும்.
- ★ பிரணவம் என்றால்; என்றும் வாடாமல்; காலத்தால் தேயாமலும், அழியாமலும்; எப்போதும் புதுமையாய் உள்ள ஆன்மதத்துவம் ஆகும்.
- ★ விநாயகர் வடிவத்திலுள்ள;
  - நான்குகரங்கள்; தேவர்கூறு ஆகவும்.
  - யானைத்தலை, தும்பிக்கை என்பன; விலங்கின் கூறாகவும்.
  - பேழை வயிறு, குறுகிய கால்கள் என்பன; பூதக்கூறாகவும்.
  - தந்தம் இல்லாத ஒரு பாகம்; பெண் பாகமாகவும்
  - தந்தம் உள்ள இடது பாகம்; ஆண் கூறாகவும்.
  - முகம்; அஃறிணைக் கூறாகவும்; கொள்ளப்படும்.
- ★ விநாயகரின்;
  - மூன்று கண்கள்; இச்சை, கிரியை, ஞானம் மூன்றையும் குறிப்பன.
  - நெற்றிக் கண்; எதனையும் பரஞானத்தால் காணவேண்டும் என்பதைக்குறிக்கின்றது.
  - விரிந்த காதுகள்; அன்பர்கள், அடியார்கள் கூறுவதைக் கேட்கும் ஆவலும் விருப்பமும் உடையவர் என்பதைக் குறிக்கின்றன.
- ★ விநாயகரின் யானை வடிவம், அவரின் ஆனந்தத்துவம்.
- ★ விநாயகர் அன்பும் கருணையும்; அறிவும் ஞானமும்; நிறைந்தவர்.
- ★ அவர் வெவ்வினையை வேரோடுகளைபவர்; திருவும் கல்வியும் வழங்குபவர்; விக்கினங்களை நீக்குபவர்; இடர்களைபவர்.
- ★ மெய்ப்பொருளும், மெய்யறிவும் பேரின்பமும் தருபவர்.
- ★ "ஓம்" என்னும் பிரணவமந்திரம், சப்தகோடி மஹாமந்திரங்களிற் குள்ளேயும் மிகச் சிறந்ததும், சக்தி வாய்ந்ததும் என அறிஞர்கள் கூறுவர்.
- ★ மந்திரம் என்பது, நினைப்பவனைக் காப்பது; என்பது பொருள்.
- ★ சைவத் திருமுறைகளும், 'ஓம்' எனும் பிரணவப்பொருளினுள்ளே, அடங்குகின்றன.
- ★ "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்", எனப் பிரணவ வடிவினரான விநாயகர், பெருமைப்படுத்தப்படுகின்றார்.
- ★ எதனையும் எழுதத் தொடங்கும்போது, பிள்ளையார் சுழி இடுவது சைவமரபு. பிள்ளையார் சுழி; "ஓம்" என்னும் பிரணவ மந்திரத் தைக்குறிக்கும் வரிவடிவம்; என்று கொள்ளப்படுகிறது.

### பிரணவ மந்திரம்: மகத்துவம்:

- ★ "ஓம்" என்ற ஏகாட்சர மந்திரம்; பிரணவ மந்திரம் எனப்படுகிறது.
- ★ விநாயகரின் திருவடிவம் "ஓம்" காரமாகும்.

★ பிரணவ மந்திர உபாசனையால்; எல்லா விக்கினங்களும்; இடர்கள்; தடைகளும் நீங்கி விடுகின்றன.

★ விநாயகரை வழிபட்டு வருபவர்களை; விக்கினங்கள் எதிர்கொள்வ தில்லை.

★ விநாயகர்; தம்மை மெய்யன்போடு வழிபட்டு வருபவர்களுக்கு, விக்கினங்களைப் போக்கி, இன்பத்தையளித்து, அருள்புரிகிறார். அதனால், விக்கினேஸ்வரன், விக்னராஜா என்னும் திரு நாமங் களாலும் அழைக்கப்படுகிறார்.

★ இக்காரணங்களால்; எக்காரியத்தைத் தொடங்கும் போதும், முதல் வணக்கம் விநாயகருக்கே; என்னும்நிலை ஏற்பட்டது.

★ "ஓம் வக்ர துண்டாய ஹூம்", என்பது, விநாயகர் வழிபாட்டிற்குரிய எட்டு அட்சர மந்திரமாகும்.

★ மகா விஷ்ணு இம்மந்திரத்தை உபாசனை செய்துதான் மது, கைடபர் ஆகிய அரக்கர்களை வதம் செய்தார் என்பது புராண வரலாறு.

★ தேவேந்திரன்; கௌதம முனிவரின் சாபம் காரணமாக; யோனியாக மாறிவிட்ட சரீரத்தை; இம்மந்திரத்தை உபாசனை செய்து, விநாயகர் அருள் பெற்றுத்தான்; சாப விமோசனம் கிடைக்கப் பெற்று, இயல்பு நிலையை அடைந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

★ முருகப் பெருமான்; விநாயக மந்திர உபாசனையால்; விநாயகரின் அருளைப் பெற்றுத் தாரகாசுரனை வதம் செய்ததாகப் புராணம் கூறுகிறது.

★ விஷ்ணு, வாமனாவதாரம் எடுத்தபோது; தந்தையாகிய காசிப முனிவரிடம், விநாயகர் சடாட்சரமந்திர உபதேசம் பெற்று; அம்மந்திரத்தை உபாசனை செய்ததன் பயனாக; மகாபலியை வலிகெடச் செய்து அடக்கியதாகப் புராணம் கூறுகிறது.

★ பரசுராமர், இம்மந்திர உபாசனை செய்து, அருள்பெற்று, இருபத் தொரு தலைமுறை அரசர்களை அழித்ததாகச் சொல்லப்படுகிறது.

★ விநாயகர்; அடியார்கள் வேண்டும் வரங்களை, வேண்டியபடி வழங்குவதால்; விநாயகரை; எல்லாக்கருமங்களிலும்; முதலில் வழிபட்டு வருகின்றனர். முதல் வணக்கம் விநாயகருக்கே; என்னும் மரபு தொடர்கின்றது.

★ ஆலய வழிபாட்டிலும் சரி; வீட்டு வழிபாட்டிலும் சரி; எக்காரியங் கள், கருமங்கள் தொடங்கும் போதும் சரி; கல்விகற்றல்; ஏடு தொடங்குதல் ஆரம்பிக்கும் போதும் சரி; பிள்ளையார் வணக்கம் தான் முதலில் இடம்பெறும்.

★ விநாயகரை வணங்கித் தொடங்காத எக்கருமமும்; சித்தி பெறுவ தில்லை; பல்வேறு இடர்கள், இடையூறுகள்; தடைகள், தடங்கல் கள்; துன்பங்கள், துயர்கள்; தோல்விகள் ஆகியவற்றைச் சந்திக்க நேரிடும். இது வெறுமனே ஐதீகம் மட்டுமன்றி, அநுபவ உண்மையு மாகும்.

★ நாம் வாழுகின்ற இவ்வுலகம், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களால் ஆனது, மனித உடல்,

அவ்வாறே பஞ்சபூதங்களால் உருவானது. "அண்டத்திலே உள்ள வையே, பிண்டத்திலும் உள்ளன" என்ற கூற்றின் கருத்து, இதுவே யாகும்.

★ நிலத்திற்கும், காற்றுக்கும் அதிபதி; சூரியன்; ஆகாயத்திற்கு அதிபதி, விஷ்ணு; அக்கினிக்கு அதிபதி துர்க்கை; நீருக்கு அதிபதி, கணேசப்பெருமான். இவ்வாறு ஆகம நூல் கூறுகிறது.

★ இந்த அதிபதிகளில், கணபதி, சப்தம் பிரம்ம ஸ்வரூபம்; ஓம் காரவடிவினர்; பிரணவ சொரூபி.

★ எல்லா மந்திரங்களுக்கும் முன், "ஓம்" எனும் பிரணவ மந்திரம் இருப்பதைப் போல; எல்லாப் பூசைகளுக்கும் முதலில் கணபதி பூசை இருக்கின்றது.

★ "கணபதி பூசை கைமேல்பலன்"; என்பது ஆன்றோர் அநுபவமொழி.

★ "ஓம்" எனும் பிரணவமந்திரத்தை, பிரம்ம முகூர்த்தவேளை அதிகாலை 3 மணிமுதல் 6 மணிவரை உச்சரித்து வந்தால்; உடல், உள, ஆன்மீகரீதியாக, அடையும் பயன்கள் அநந்தம் என ஆன்மீகப் பெரியோர் கூறுகின்றனர். அநுபவரீதியாகக் கண்டறிந்த உண்மை.

★ "ஓம்" என்ற சொல்லில், அகர ஒலி; உகர ஒலி; மகர ஒலி; மூன்று ஒலிகளும் இணைகின்றன.

★ "ஓம்" எனும் பிரணவமே, வேதத்தின்மூலம்.

★ அனைத்து மந்திரங்களுக்கும், தாய் மந்திரம், காயத்ரி மந்திரம் எனக் கூறப்படுகிறது.

★ அத்தகைய சிறப்பு வாய்ந்த காயத்ரி மந்திரத்தின் சாரத்தைச் சுருக்கினால்; "அ", "உ", "ம" எனும் மூன்று எழுத்துக்களாகக் கிடைக்கிறது.

★ இம்மூன்று எழுத்துக்களின் ஒலிகளும் இணைந்து உருவானதே "ஓம்" எனும் ஓங்காரம்.

## விநாயகர் வடிவம்: மேலதிக தகவல்கள்

"ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால் வாய் ஐங்கரத்தன் ஆறு
தரு கோட்டம் பிறை இதழித் தாழ் சடையான்
தரும் ஒரு வாரணத்தின் தாள்கள்."

எனச் சிவஞானசித்தியார், எனும் நூலில், விநாயகர் வடிவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

உயர்திணை, அஃறிணை அம்சங்கள் பொருந்திய விநாயகர் வடிவம்; தேவராய், மனிதராய், பூதராய்; விலங்காய்; ஆணாய்ப் பெண்ணாய்; அனைத்துமாய்த் திகழ்கின்றது, என நூல்கள், கூறுகின்றன.

விநாயகர், இடையின் கீழ் மனிதஉடல், இடைக்கு மேல் கழுத்து வரை, தேவர் உடம்பு; மேலே யானை - விலங்கின் தலை; பெருவயிறு, பூதம்; ஒருபக்கத் தந்தம், ஆண்தன்மை; மற்றொருபக்கம் பெண் தன்மையைக் குறிக்கும் என்பர்.

விநாயகரின் உடலுறுப்புக்கள் பற்றித் தேவாரங்களில், குறிப் பிடப்பட்டுள்ளன.

**கண்கள்:** விநாயகருக்கு வலக்கண், இடக்கண், நெற்றிக்கண் என மூன்று கண்கள் உள்ளமை பற்றி, ஞானசம்பந்தர் தேவாரப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**முகம்:** யானை முகமுடைய விநாயகரின் திருமுகப் பொலிவு; கரியின் முகம், ஆனைமுகன், வேழமுகத்தவன், கடமாமுகத்தினான்; என்று ஞானசம்பந்தர், நாவுக்கரசர் ஆகியோரால் தேவாரங்களில்; குறிக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு விநாயகர் முகத்தைக் குறிக்க, கரி, ஆனை, மா, வேழம், புகர் முதலான சொற்களைக் கையாண்டுள்ளனர்.

**கைகள்:** ஐந்து திருக்கரங்களைக்கொண்டு விளங்குபவர், விநாயகர். அவரின் ஐந்தாவது கை; தும்பிக்கை, துதிக்கை என அழைக்கப்படுகிறது. "கை வேழமுகத்தவன்" என்கிறார், நாவுக்கரசர்.

**கொம்பு:** ஆனைமுகத்தையுடைய விநாயகரின் முகத்தில், காணப் பெறும் ஒற்றைக் கொம்பினை, "ஒற்றைச் சேர்கொம்பு" என்று ஞானசம்பந்தர், தேவாரப்பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**வயிறு:** பிள்ளையாரின் வயிறு, அனைத்து அண்டங்களும் மற்றும் சராசரங்களும்; உயிரினங்களும், அடங்கிய பேழை வயிறாக உரு வகிக்கப் பெறுகின்றது. "மத்தள வயிறனை உத்தமி புதல்வனை" என விநாயகர், அருணகிரிநாதர் பாடிய திருப்புகழில் குறிப்பிடப்படுகிறார். சுந்தரர், "எண்ணிலியுண் பெருவயிறன்"; "வயிறுதாரி" எனத் தேவாரப் பாடல்களில் குறிப்பிடுகிறார்.

**ஐந்துவகை விநாயக வடிவங்கள்:** அவையாவன; நின்ற கோலம், அமர்ந்தகோலம், நர்த்தன கோலம், வலஞ்சுழி விநாயகர், இடஞ்சுழி விநாயகர்.

**விநாயகர் சக்திகள்:** சித்தி, புத்தி, வல்லபை, மோதை, பிரமோதை, சுமகை, சுந்தரி, மனோரமை, மங்கலை, கேசினி, காந்தை, சாருகாசை, சுமந்திமை, நந்தினி, காமதை ஆகியோர்.

### விநாயகரின் ஐந்துகரங்கள்:

**ஐந்து கரத்தனை யானை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.**

ஐங்கரன், ஐந்துகரத்தன் என அழைக்கப்படுகின்ற விநாயகரின் ஐந்து கைகளும் உணர்த்தும், ஐந்து செயல்தத்துவங்கள்:

1. **துதிக்கை:** இரத்தினகலசம் ஏந்திய கை, இது பெற்றோரை வணங்கி வழிபடும் கை.

2. **மோதகக் கை:** இது தமக்காக தாம் நிவேதனங்களை உண்ணப் பயன்படுத்தும் கை.

3. **தந்தம் ஏந்திய கை:** கயமுகாசுரனை அழித்துத் தேவர்களைக் காத்த கை. மகாமேருவினை ஊடாகக்கொண்டு; வியாசர் சொல்ல, மகாபாரதம் எழுதிய கை.

4. **அங்குசம் ஏந்திய கை:**
5. **பாசம் ஏந்திய கை:**

} இவையிரண்டும் உயிர்களைப் பற்றி நிற்கும், மும்மலங்களை / பாசவினை களைக் கட்டறுப்பன.

**விநாயகரின் வடிவம், பஞ்சமூர்த்திகளின் சொரூபம் என வட மொழிச் சுலோகம் ஒன்று கூறுகிறது.**

★ விநாயகரின் நாபி - பிரம்ம சொரூபம்;
★ விநாயகரின் முகம் - விஷ்ணு சொரூபம்;
★ இடப்பாகம் - சக்தி சொரூபம்;
★ வலப்பாகம் - சூரிய சொரூபம்;
★ முக்கண்கள் - சிவ சொரூபம்;

சிவனுக்கும் உமாதேவியாருக்கும் இடையில்; கந்தன் வடிவம் இருப்பின்; மூவரும் சேர்ந்திருக்கின்ற அவ்வடிவம் சோமாஸ்கந்த வடிவம் எனப்படும். இடையில் விநாயகர் வடிவம் இருப்பின், அவ்வடிவம் "கஜமுக அநுக்கிரகர்" வடிவம் எனவும் அழைக்கப்படும்.

**தும்பிக்கை ஆழ்வார்,** என, விஷ்ணு கோயில்களில் காணப்பெறும் விநாயகர், வழங்கப் பெறுகின்றார்.

**வலம்புரி விநாயகர்:** விநாயகரின் துதிக்கை, வலம் சுழித்திருப்பின் வலம்புரி விநாயகர் என்றும் இடம் சுழித்திருப்பின் இடம்புரி விநாயகர் என்றும் கூறப்பெறும். பொதுவாக, இடம்புரி விநாயகரே பெரும்பாலும் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். வலம்புரி விநாயகர் வெற்றியைத் தருபவர். வலஞ்சுழி விநாயகரைத் திருவலஞ்சுழி என்னும் தலத்திலும், பிள்ளையார் பட்டியிலும் கண்டு தரிசிக்கலாம்.

முன்னவனே, யானை முகத்தவனே, முத்திநலம்
சொன்னவனே, தூய்மெய்ச் சுகத்தவனே, மன்னவனே
சிற்பரனே, ஐங்கரனே, செஞ்சடையஞ் சேகரனே,
தற்பரனே, நின்தாள் சரண்.

# 06 விநாயகர் வழிபாடு

## விநாயகர் வழிபாடும் அதன் முக்கியத்துவமும்:

விநாயகர் முதல்வணக்கத்திற்கும், வழிபாட்டுக்கும் உரியவர். சைவர்கள் வாழுகின்ற ஊர்கள் தோறும்; ஆகம விதிப்படி அமைக்கப் பெற்ற, பிள்ளையார் ஆலயங்கள் உள்ளன. இவற்றைத் தவிர குளக் கரைகள், நதிக்கரைகள், மரத்தடிகள், முச்சந்திகள் தெருக்கள், திண்ணைகள், வயல்வெளிகள் என எங்கும் வீற்றிருந்து, அருள் பாலித்து வருபவர் பிள்ளையார். பிள்ளையார் கூரையில்லாத வெளிகளிலும்; திறந்த வெளிகளிலும்; கருங்கல் அல்லது வெள்ளைக்கல் என்பவற்றை வைத்தும்; அக்கற்களில் செதுக்கப்பட்ட உருவங்களை நிறுவியும்; மரங்களின் அடியிலும் உருவங்களை அமைத்தும்; எளிய முறையில் அவரை நினைந்து; மலர் சாத்தியும்; பத்திரங்கள், அறுகம்புல் சாத்தியும்; அவரை வணங்கி வழிபாடு செய்பவர்களுக்கும் திருவருள் பாலிக்கும் பெற்றியர். அத்துணை எளிவந்த தன்மையர் ஆகப் பிள்ளையார் விளங்குகின்றார்.

ஆலயங்களில் மாத்திரமல்ல மற்றைய இடங்களிலும் ஆகாயம் பார்க்க அமர்ந்திருக்கும் கடவுள் நமது முதல்வணக்கத்திற்குரிய பிள்ளை யார். அவரை ஏழைகளின் கடவுள் என்றும் கூறுவர்.

சைவமக்கள், வாழுகின்ற பிரதேசங்களில் ஊர்கள் தோறும் பிள்ளையார், எதிலும் பிள்ளையார், எந்த வைபவங்களிலும் பிள்ளையார், எந்தச்சுபகாரியங்கள், நற்கருமங்கள், நற்செயல்கள் தொடங்கும் முன்னர், பிள்ளையாரை வழிபடுவது வழக்கம். அவ்வாறு பிள்ளையாரை, முதலில் வணங்கித் தொடங்கும் கருமங்கள், சுபகாரியங்கள் அனைத்தும் வெற்றி பெறுவது நிச்சயம்.

பிள்ளையாரை முதலில் வழிபாடு செய்யாமல்; தொடங்கிச் செய்யப்படுகின்ற கருமங்கள், செயல்கள் என்பவற்றிற்குத் தடைகள், இடர்கள், இடையூறுகள், இழுபறிகள், அலைச்சல்கள் என்பன இடை யிடையே குறுக்கிட்டே தீரும். சிலவேளைகளில் முற்றுப்பெறாமலும் போய்விடும். "எண்ணைச் செலவு; ஆனால் பிள்ளை வளர்ச்சி இல்லை", என்றொரு பழமொழி, இச்சந்தர்ப்பத்தில், நிலைமையைப் புரிய வைக்கின்றது.

பிள்ளையார் வழிபாடு சைவமக்களின் வாழ்க்கையுடன், பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. யானைக்கு அதன் தும்பிக்கையில் பலம் அவ்வாறே; பிள்ளையாரை வழிபாடு செய்து வரும் மக்களுக்கு; பிள்ளையார் மீது அவர்கள் கொண்டுள்ள பரிபூரண நம்பிக்கையில் பலம். "நம்பினார் கெடுவதில்லை; இது நான்கு மறைத்தீர்ப்பு."

நாம் வாழுகின்ற பூமி, மற்றும் அண்டங்கள் அனைத்தும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உருவாக்கப்பட்டவை. அவற்றை; நிலம், நீர், நெருப்பு, காற்று, விண் எனத்தமிழில் கூறுவர். "அண்டத்தில் உள்ள இவ்வைந்தும், பிண்டத் திலும், உண்டு", என நூல்கள் கூறுகின்றன. பிண்டம் என்பது நமது உடம்பு.

எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்திருப்பவர் விநாயகப்பெருமான். அவரவர் வசதிக்கேற்றபடி ஆகம விதிகளுக்கமைய கல், செம்பு, பஞ்சலோகம், வெள்ளி, தங்கம் ஆகியவற்றைக் கொண்டு பிள்ளையார் உருவம் அமைத்து வீட்டில் பூசை அறையில் அல்லது, புனிதமான மாடத்தில் வைத்துத் தினமும் காலை, மாலை, நண்பகல் வேளைகளில் பூசித்து வரலாம்.

## விநாயகர் வழிபாடு முதல் வணக்கத்திற்குரியவர்:

விநாயகர் முதல்வணக்கத்திற்குரியவர். ஆலய வழிபாட்டிலும் சரி; வீட்டு வழிபாடுகளிலும் சரி; எந்தக் கருமங்களைச் செய்யத் தொடங்குவதற்கு முன்னரும்; சமயக் கிரியைகளின் போதும்; விநாயகரே முதலில் வழிபாடு செய்யப்படுகின்றார். இந்துக்கள் தமது அன்றாட வாழ்க்கையில், எடுத்த கருமங்கள், மேற்கொள்ளும் முயற்சிகள், செய்கின்ற தொழில்கள் யாவும் இன்னல்கள், இடையூறுகள், தடைகள், விக்கினங்கள் இன்றி, வெற்றிகரமாக நிறைவு பெறவேண்டும் என்ற நோக்கத்தினை எய்துதல் பொருட்டே முதலில் விநாயகரை வழிபாடு செய்து வருகின்றனர். "கணபதி பூசை, வழிபாடு கைமேல் பலன், பயன்" என்பது அநுபவம் மூலம் பெற்ற முதுமொழி.

நம்பிக்கையுடன், தும்பிக்கையானை, மனம், மொழி, மெய்யினால் வழிபாடு செய்து வந்தால் அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் நான்கு வாழக்கைப் பயன்களையும், அடையப் பெறலாம். இக, பரசுகங்கள் எனப்படும் இம்மையில் இன்பம்; மறுமையில் மோட்சம் எனும் மரணமிலாப் பெருவாழ்வு அனைத்தையும் பெறலாம். துன்பங்களுக்குக் காரணமான, பிறவிப்பிணியிலிருந்து விடுதலை பெறுவதற்கும்; பிறப்பு - இறப்புத் தொடரை முடித்துக் கொள்வதற்கும் உறுதுணையாக வருவது விநாயகர் வழிபாடு ஆகும்.

வாழ்க்கையில் விக்கினங்கள் வராமல் காப்பவர்; விக்கினங்களைத் தீர்ப்பவர், விநாயகர்; என்னும் காரணத்தால்; விக்கினேஸ்வரன், விக்னராஜா என்னும் திருநாமங்களால் அழைக்கப்படுகின்றார். விநாயகர் அறக்கருணை; மறக்கருணை இரண்டையும் செய்பவர். தம்மை உள்ளன்போடு வழிபடுபவர்களுக்கு; விக்கினங்கள் ஏற்படாமல் காப்பவர் வந்தபின் நீக்கியருள்பவர். இது விநாயகரின் அறக்கருணையாகும். விக்கினங்களை வருவித்து மக்கள் தம்மை அணுகச் செய்து, வழிபாடு செய்வதால் அவ்விக்கினங்கள், இடர்கள், தடைகள் என்பவற்றை நீக்கியருளுதல் மறக்கருணையாகும்.

ஓங்கார மூர்த்தியாகவும், ஞான வடிவினராகவும்; இப்பிரபஞ்சத்தின் கர்த்தாவாகவும் விளங்குகின்ற விநாயகப்பெருமானின் திருவடிகளை, மலர்தூவி உள்ளன்போடு வணங்கி வழிபாடு செய்து வருபவர்களுக்கு "வாக்கு உண்டாம், நல்ல மனமுண்டாம்; மாமலராள் ஆகிய மகாலட்சுமியின் கடாட்சம் உண்டாம்." என்று உறுதி செய்கிறார், ஔவைப்பிராட்டியார்.

விநாயகனே, கொடிய வினைகளை, மூலவேரோடு களைந்து, அழிக்கவல்லன. ஒரு முள் மரத்தை அதன் மூலவேரோடு பிடுங்கியெடுத்து அகற்றும்போதுதான், தழைகள் மீண்டும் அங்கு தோன்ற முடியாமல் போய்விடுகின்றது. அவ்வாறு, நாம் எடுத்த பிறவிகள்

தோறும், செய்த கொடிய வினைகள், எஞ்சி நிற்கவிடாது, தமது திருவருளினால், அவற்றை முழுமையாக அகற்றவும், அழிக்கவும் வல்லவர், விநாயகப்பெருமான்.

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்**
**கண்ணிற் பணிமின் கனிந்து.**

விநாயகர் பொதுவாகப் பிரமச்சாரியாகவே குறிப்பிடப்படுகின்றார். ஆயினும், சித்தி, புத்தி எனும் இரு தேவியர்கள் உளர் என்று புராணங்கள் கூறுகின்றன. தத்துவரீதியாக நோக்கில், இதன் உண்மை புலப்படும். சித்தி என்பது எடுத்த கருமங்களில் வெற்றி பெறுவதைக் குறிக்கும். புத்தி என்பது விவேகம், அறிவு, உள ஆற்றல்கள் ஆகியவற்றைக் குறிக் கின்றது. மனிதர்களுக்கு, அவர்கள் எடுத்த கருமங்கள், யாவற்றிலும் சித்திகளையும் நல்கி, வாழ்க்கையின் வெற்றிக்கும் உயர்வுக்கும்; விநாயகர் வழிபாடு; வழிசெய்கின்றது. விநாயகரை வழிபாடு செய்து வருபவர்களுக்கு; விக்கினங்கள் வராமல் திருவருள் பாலிக்கின்றார். அதேவேளை விக்கினங்கள் வந்தால் அவற்றை நீக்குபவராகவும் விளங் குகின்றார். விநாயகரை வணங்குபவர்களுக்கு அறியாமை, மந்தபுத்தி, விவேகக்குறைவு என்பவற்றை அகற்றி, அவர்களில் அறிவொளி, புத்திக்கூர்மை, விவேக ஆற்றல் என்பவற்றைப் பெருகச் செய்கின்றார். சித்தியும், புத்தியும் அந்த வகையில் விநாயகப்பெருமானின் திருவருட் சக்திகள் ஆவர். சித்திவிநாயகர், ஞானவிநாயகர் ஆகிய திருநாமங்கள், அந்தவகையிலேயே, வழங்கப்பட்டு வருகின்றன.

விநாயகப்பெருமானை வழிபட்டு வருபவர்களுக்கு பல்வேறு வல்லபங்கள், கலைத்திறன்கள், அறிவு ஆற்றல்கள் என்பவற்றை வழங்கி அருள்புரிகின்றார். விநாயகரின் தேவியாக வல்லவாம்பிகையையும், புராணங்கள் குறிப்பிடுகின்றன. விநாயகர் மிகுந்த வல்லபங்கள், ஆற்றல் கள் நிறைந்தவர்.

விநாயகர் வழிபாடு, நமக்கு எடுத்த கருமங்களில் சித்தி; அக் கருமங்களை ஆற்றுவதற்கு வேண்டிய விவேக புத்தி; மற்றும் அறிவு ஆற்றல்கள் அவற்றுடன் வல்லமைகள் யாவற்றையும் வழங்குகின்றது.

நமது வாழ்க்கை சீரும், சிறப்பும்; செம்மையும், மேன்மையும்; செழிப்பும், உயர்வும் பெறுவதற்கு; மனதில் உறுதிவேண்டும். வாக்கினிலே இனிமைவேண்டும் நினைவில் நல்லது வேண்டும். நெருங்கின பொருள் கைப்படவேண்டும் மற்றும் உடல்நலம் நீளாயுள், நிறைசெல்வம், உயர் புகழ், மெய்ஞ்ஞானம் இவையனைத்தும் வேண்டும். விநாயகர் வழிபாடு இவை அனைத்தையும் வழங்குகின்றது.

எல்லாவகை அறிவையும், அறுபத்து நான்கு கலைகளையும், சகல செல்வங்களையும், ஈற்றில் முத்தியையும் தருபவர் "பிரணவப்பொருளாம் பெருந்தகை ஐங்கரன்". என்று ஔவையார் ஒரு பாடலில் குறிப் பிட்டுள்ளார். ஆனால் விநாயகருடைய பாதமலரை, நம் தலையில், சூடிக் கொள்வோம், என்று, நமக்கு அறிவுரை பகர்கின்றார்.

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புத மலர் தலைக்கணிவோமே",

என்பது ஔவையார் பாடலடிகள். மேலும்;

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

என்பது, ஔவையார் அருளிய மூதுரையில் கடவுள் வாழ்த்துப் பாடல். தினந்தோறும், விநாயகப்பெருமானுக்கு, முதல்வணக்கம் செலுத்தி, அவரின் திருவடிகளைத் தொழுவோருக்கு சொல்வன்மை, பொருட் செல்வம், நன்மனம், உடல்நலம், என்பன கிடைக்கப் பெறுதல் உறுதி என்பது பாடலின் பொருள்.

ஆறுவகையான அறிவையும் தருபவர்; மெஞ்ஞான, விஞ்ஞான சொரூபியாக விளங்குகின்ற வித்தக விநாயகர். எந்த வித்தையையும், கலையையும், கற்கத் தொடங்கு முன்னர் விநாயகருக்கு முதல்வணக்கம் செலுத்திவிட்டு அதன்பின் ஆரம்பிப்பது இந்து மக்களின் வழமையும், மரபும் ஆகும். செய்காரிய சித்தி, இடர்கள், தடைகள் நீக்கம், புத்திக் கூர்மை, ஆயுள்திறன், உடல்பலம், உளபலம், ஆயுள்பலம், ஆன்மீகபலம், அன்பு உள்ளம், கருணைப்பெருக்கம், மெய்ஞ்ஞானம் இவற்றிற்கெல்லாம் மூலமும், முதலும், மூலாதாரமாகவும், ஊற்றுக்கண் ஆகவும் விளங்குபவர் மூத்தவிநாயகர் ஆவார்.

அத்துணை பெருமையும், அருமையும்; மகிமையும், மகத்துவமும், ஒருங்கே கொண்ட பிள்ளையார்; பிள்ளையார் ஆலயங்களில் மூலவர் ஆகக் கருவறை என்று சொல்லப்படுகின்ற மூலஸ்தானத்தில் வீற்றிருந்து அருளுவார். அத்துடன் கொடிமரத்தின் முன்னாலும் பிள்ளையார் அமர்ந்திருந்து அநுக்கிரகம் செய்வார். சிவாலயம், அம்பாள் ஆலயம், முருகன் ஆலயம், விஷ்ணு ஆலயம், மற்றும் கிராமியத் தெய்வ ஆலயங்கள் எல்லாவற்றிலும் ஆலய உட்பிரகாரத்தில் பிள்ளையார் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கக் காணலாம். கொடிமரத்தின் முன்னிலையிலும், சிறிய மாடத்திலும் வீற்றிருப்பார்.

நமது சைவநெறிப் பண்பாட்டுக் கலாச்சார, ஆன்மீக, சமூக, சமய வழிபாட்டுப் பாரம்பரியத்தில் பிள்ளையார் வழிபாடு செய்வதற்கு முதலிடம் எப்போதும், கொடுக்கப்பட்டு வருகின்றது. "அவனின்றி ஓர் அணுவும் அசையாது". இக்கூற்றை இன்னும் விரித்தால் பிள்ளையாரை நினைந்து, முதல்வணக்கம் செலுத்தி, வழிபாடு செய்யாமல் தொடங்கு கின்ற எக்கருமமும் சித்திக்காது; அதன் இலக்கை அடைய முடியாது; நிறைவு பெறாது என்பது தெளிவாகும்.

எல்லாக் கருமங்களையும், ஏனைய தெய்வங்களுக்கான நித்திய, நைமித்தியக் கிரியைகள், பூசை, ஆராதனைகள், வீட்டில் நடைபெறு கின்ற மங்கல சுபகாரியங்கள், அமங்கல கிரியைகள், மற்றும் விழாக்கள், வைபவங்கள், சமய, சமூக நிகழ்வுகள், விவசாயம், கைத்தொழில், வியாபாரம் தொடர்பான ஆரம்ப நிகழ்வுகள்; கல்வி ஆரம்பம் யாவும் முதலில் விநாயகருக்கு வணக்கம் செலுத்தி, வழிபாடு செய்த பின்னரே; ஆரம்பிப்பது நம் தமிழர் மரபு ஆகும்.

## பிள்ளையாரின் எளிவந்ததன்மை

பிள்ளையார், பெருமையும் அருமையும் வாய்ந்தவர். அதேவேளை மிகவும் எளிவந்த தன்மையர் ஆவார். ஆகமங்களில் விதிக்கப்பட்டபடி, பிள்ளையாருக்குத் தனிக்கோயில் அமைத்து அவரின் விக்கிரகத்தை, மூலஸ்தானமாகிய கருவறையில் பிரதிட்டை செய்து மகாகும்பாபிஷேக விதிப்படி நடாத்தப்பெற்று; நித்திய மற்றும் நைமித்தியக் கிரியைகள், மகோற்சவங்கள், ஆராதனைகள் என்பன காலநேரந்தவறாமல் நிகழ்த்தப் பட்டு வருகின்ற பிள்ளையார் ஆலயங்கள் சைவமக்கள் வாழ்கின்ற ஊர்கள், நகரங்கள் தோறும் பரவலாகக் காணப்படுகின்றன. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", ஆகிய அன்னை ஔவையாரின் திருவாக்குகள் எஞ்ஞான்றும் நினைவில் கொள்ளப்பட வேண்டியன.

ஆகமங்கள் விதித்த முறைப்படி; கருங்கல், வெள்ளைக்கல், சுதை, செம்பு, வெள்ளி, தங்கம் மற்றும் ஐம்பொன் என்று சொல்லப்படும் பஞ்சலோகம் முதலியவற்றை மூலப்பொருளாகக் கொண்டு; பிள்ளையார் விக்கிரகங்களை வடிவமைத்து; ஆலயங்களில் தாபித்து; பூசை வழிபாடு செய்து, பிள்ளையாரின் அநுக்கிரகத்தைப் பெறலாம். அதேவேளை மிக எளிமையாக, பசுவின் சாணம், மஞ்சள், சந்தனம், புற்றுமண், திருநீறு, வெல்லம், களிமண், வெண்ணெய் என்பவற்றில் இலகுவாகக் கிடைக்கக் கூடிய ஒன்றில் ஒரு கைபிடி அளவில் எடுத்து, உருண்டையாக உருட்டி; அதனைக் கூம்பு வடிவத்தில் பிடித்து; அதன் மேல்நுனியில் அறுகம்புல் குற்றி, ஓர் இலையில் வைத்து விட்டால் அவ்வுருவத்தில் பிள்ளையார் எழுந்தருளுவார்.

பிள்ளையார் மிகவும் எளிமையான கடவுள். எவர் கூவி அழைத் தாலும், கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து அருள் தருவார். மனம், மொழி, மெய்த்தூய்மையையும், உள்ளன்பையுமே, அவர் பெரிதும் அவரின் அடியார்களிடமிருந்து வேண்டுபவர். அவர் யாவர்க்கும் பொதுவானவர். ஆதி பரம்பொருளான பிள்ளையார் அற்பத்தாவரமான அறுகம்புல்லையும் ஏற்றுக்கொள்கிறார்; காட்டுப் பூவான எருக்கலைப்பூவையும் உவந்து ஏற்கின்றார். பிள்ளையாரைப் பொறுத்தவரை; புல் மாலை போட்டவருக்கும் சரி, ரோஜாப்பூக்கள் மாலைகள் அணிவித்தவருக்கும் சரி வேறுபாடுகள் காணப்படுவதில்லை.

மங்களகரமான வைபவங்களின்போது, நிறைகுடம் வைப்பது சைவமக்களால் பின்பற்றப்படுகின்ற சமய, கலாச்சார மரபாகும். அப்பொழுது முதல் கருமமாக செய்யப்படவேண்டியது பிள்ளையார் பிடித்து வைத்தல் என்பதாகும். எங்கும், எதிலும், முதல் வணக்கமும், முதன்மையும், பிள்ளையாருக்கே என்பதை மறவாது, நினைவில் கொண்டிருத்தல் இன்றியமையாததாகும்.

விநாயகர் வழிபாடு; ஆலயங்களுக்குச் சென்று; அங்கு நடைபெறுகின்ற நித்திய பூசைகளில் கலந்து கொண்டு செய்து வரலாம். தினமும் ஆலயம் சென்று விநாயக வழிபாடு செய்து வருதல் மிகநன்று. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", என்பது ஔவையாரின் அமுத வாக்கு. தினமும், ஆலயம் சென்று விநாயகர் வழிபாடு செய்ய இயலாதவர்கள் வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, சதுர்த்தி தினம் மற்றும் பூரணை, அமாவாசைத்தினங்கள், மகோற்சவம்

நடைபெறும் காலங்களில் ஆலயம்சென்று வழிபாடு செய்தல், அத்தியா வசியம் எனப் பெரியோர்கள் எம்மை வழிப்படுத்தியுள்ளனர். கேட்டு நடந்தால், உண்டு நல்வாழ்வு. அல்லது தாழ்வு தவிர்க்க முடியாததாகி விடும். பெரியவர்கள், மூத்தோர்கள், பெற்றோர் ஆகியோர் ஆலய வழிபாடு, வீட்டில் வழிபாடு ஆகியவற்றில் தாம் ஈடுபாடு கொண்டு இளையோர்களுக்கு முன்மாதிரியாக விளங்கி வழிகாட்டினால்தான் இளைய சந்ததியினர் அவற்றைப் பின்பற்றுவர்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", என்று ஔவைப் பிராட்டியார் நமக்கு அறிவுரை கூறியுள்ளார். ஏறத்தாழ ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் சைவத்தமிழ்மக்கள் வாழ்ந்து வருகின்ற தமிழ் நாட்டில் விநாயகர் வழிபாடு தோன்றியது என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். சாதாரண பொதுமக்களின் அன்பிற்கும், வழிபாட்டிற்கும் உரியவராகவும் எப்போதும் அவர்களால் விரும்பித் தொழப்படும், செல்லப்பிள்ளையார் ஆகவும் விளங்கி வருகின்றார்.

## விநாயகர் மகிமை

வெவ்வினையை வேரறுப்பவர்; வெற்றியைத்தருபவர்; சிந்தை தெளிவிப்பவர்; அறிவையும், அறிவின் தெளிவு ஆன ஞானத்தையும் நல்குபவர்; விக்கினங்களை நீக்குபவர்; இடர் களைபவர்; செய்கருமம் கைகூட்டுபவர்; மும்மலபந்தம் நீக்கியருள்பவர்; திருவாக்கும், செஞ்சொல் பெருவாக்கும், பீடும், நம்மில் உருவாக்கவும், பெருக்கவும் அருள்பவர்; தூய நன்மனத்தைத் தருபவர்; நல்ல எண்ணங்கள் நம் மனத்தில் தோன்றவும்; சொல்தூய்மை, செயல்தூய்மை ஏற்படவும், அருள்பவர்; துன்பங்களை நீக்கி, இன்பம் தருபவர்; "உவமையில்லாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம், திருப்பெருகு சிவஞானம்", ஆகிய முப்பெரும் ஞானம் வழங்குபவர்; வேண்டுவார் வேண்டுவன ஈய்பவர்; குருவாக எழுந்தருளி ஆட்கொள்பவர்; முத்தியளிப்பவர்; எல்லையில்லா ஆனந்தம் அளிப்பவர்; சித்தியளிப்பவர்; புத்திதருபவர்; எமக்கு, எமது அத்தியா வசியத் தேவைகள் - (அவை உலகியல் வாழ்க்கை சம்பந்தமாகவோ, ஆன்மீகம் சம்பந்தமாகவோ இருக்கலாம்.) - அனைத்தையும் தந்தருள்பவர்; நமக்கு அல்லனவற்றை நீக்கி நல்லனவற்றையெல்லாம் வழங்குபவர்.

விநாயகப்பெருமான் திருவருளால் நோயற்ற வாழ்வு; குறைவற்ற செல்வம்; உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ் ஞானம் ஓங்கி வாழ்வோமாக.

## வழிபாடும்: பண்பும் பயனும்:

"வழிபாடு", என்றதும், முதலில் நம் மனத்தில் தோன்றுவது கடவுள் வழிபாடு ஆகும். "மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே", என்கின்றார். அப்பரடிகள், "அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது", என்பது ஔவையின் அருள்வாக்கு. அத்தகைய சிறப்பு வாய்ந்த மனிதப் பிறவியை எமக்கு ஈய்ந்த பேருபகாரத்திற்கு; கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டியது, எமது கடப்பாடு ஆகும். கடவுள் வழிபாட்டின் மூலம், நாம் நன்றியைச் செலுத்த முடியும். விநாயகர் வழிபாட்டின் மூலம், எமது நன்றியை நாம் செலுத்த வாய்ப்பு ஏற்படுகின்றது.

பெற்றோரை வழிபடுதல், குருவை வழிபடுதல், பெரியோரை வழிபடுதல் என்பனவும் வழிபாடு என்பதில் அடங்கும். மாதா, பிதா, குரு, தெய்வம், பெரியோர்கள், தென்புலத்தார்(பிதிர்கள்) ஆகியோர் வழிபாட்டிற்

குரியவர்கள். வழிபாடு செய்யத் தவறுபவர்கள், தயங்குபவர்கள், செய்ந் நன்றி மறந்த குற்றத்திற்கு ஆளாவார்கள். விநாயகர் வழிபாடு எல்லாக் குற்றங்களையும், அவற்றால் எதிர்கொள்ளவேண்டிய, விக்கினங்களையும் இடர்கள், இடையூறுகள், காரியத்தடைகள் ஆகியவற்றையும் நீக்கும் வல்லமை கொண்டது.

**பிடியத னுருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்**
**கடிகண பதிவர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.**

திருஞானசம்பந்தப்பெருமான் இத்தேவாரப்பாடல் மூலம் கணபதிப் பெருமானை வழிபாடு செய்பவர்களின் இடர்கள், இடையூறுகள், விக்கினங்கள் என்பன நீக்கப்படுகின்றமை பற்றிக் குறிப்பிடுகின்றார். விநாயகர் வழிபாட்டின் மகிமை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இடர் நீக்குபவர், கணபதிப்பெருமான்.

"வழிபடு", என்னும் சொல், வழிபாடு ஆக மருவிற்று என்று கூறப் படுகின்றது. எமக்கு முன்னர் காலங்களில் அருள் வாழ்வு வாழ்ந்து, வளம் பெற்ற அருளாளர்கள், சான்றோர்கள் எவ்வழிச் சென்றனரோ அவ்வழியின் அடிச்சுவட்டில் நாமும் செல்லல் என்பதை உணர்த்துவதாக; "வழிபடு", "வழிப்படுத்தல்" என்னும் சொற்கள் அமைகின்றன. "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று", என்பது பழம் பாடல். அந்த உயர்ந்தோர் எவ்வழிச் சென்றனரோ, அந்தச் செப்பனிடப்பட்ட சரியான பாதையில் செல்லுதல் என்பதை உணர்த்துவதாக, "வழிபடு" என்னும் சொல் உருவாக்கியமை நோக்கற்பாலது.

எம்மை வாழ்க்கையில் நல்வழிப்படுத்துபவர்கள், நன்னெறிப் படுத்துபவர்கள் யாவர்? முதலில் எம்மையும்; நாம் வாழுகின்ற உலகம், மற்றும் எமக்கு, உயிர்வாழ்வதற்குத் தேவையான போகங்கள் - (தனு, கரண, புவன, போகங்கள்) என்பவற்றையும் படைத்து எமது வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்பவர், சைவசமயத்தின் கருத்துப்படி முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் ஆவார். அவரின் மூத்த திருக் குமாரரான விநாயகர், சிவமூர்த்தங்களுள் ஒன்று. அம்மூர்த்தம் முதன்மையானதாகவும் கொள்ளப்படுகின்றது. அந்தவகையில், சிவனும் விநாயகரும் வேறல்லர், ஒருவரே. தத்துவரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து இதுவாகும்.

கடவுளை மனித நிலைப்படுத்தி, அக்கடவுளுடன் ஓர் அன்னி யோன்ய, மனித உறவை ஏற்படுத்திக்; கடவுளை; தந்தையாக, தோழனாக, தலைவனாக, காதலனாகப் பாவித்து உறவு கொண்டு வழிபாடு செய்வது தான், பக்தி மார்க்கம் எனப்படுகிறது.

**முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பக்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்**
**சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
**அத்தனெனக் கருளிய வாறார் பெறுவார் அச்சோவே.**

இவ்வாறு சிவனின் அளப்பருங்கருணையையும்; அதனால் தம்மை வழிப்படுத்திப், பேரானந்தப் பெருவாழ்வும், சிவமாந்தன்மையையும் உவந்தளித்த பெரும் பேற்றையும் வியந்து போற்றி மாணிக்கவாசக

சுவாமிகள் மேற்கண்ட திருவாசகப் பாடலை பாடியுள்ளார். தம்மை வழிப் படுத்தியவர் என்ற பொருளில் இறை வழிபாடு இங்கு இடம்பெறுகின்து. நமது சைவநாயன்மார்கள், பக்திநெறியில் நின்று நம்மை இறை வழிபாட்டில் ஈடுபடுவதற்கு, வழிப்படுத்திய பெருமைக்குரியவர்கள். நம்மை; நல்முறையில் தாம் வாழ்ந்து காட்டி வழிப்படுத்துபவர்கள் நமது வணக்கத்திற்கும், வழிபாட்டிற்குமுரியவர்கள். அந்தவகையில் நமது தாய், தந்தை, ஆசிரியர்கள், பெரியோர்கள் ஆகியோர் நமது வணக்கத்திற்கும், வழிபாட்டிற்குமுரிய கண்கண்ட தெய்வங்கள். இவர்கள் யாவரும் புன்னெறியதனிற் செல்லும் நமது போக்கினை மாற்றி; நன்னெறியதனிற் செல்வதற்கு நம்மை வழிப்படுத்துபவர்கள். அவர்களின் சொற்கேட்டு, அதன்படி வாழ்ந்தால், உண்டு நல்வாழ்வு. மறுத்தால் தாழ்வு வாழ்வில் தவிர்க்க முடியாததாகிவிடும்.

நாம் ஒரு கருமத்தையோ, தொழிலையோ, அன்றாடம் வேலை களையோ, பிரயாணங்களையோ, கல்விகற்றலையோ ஆரம்பிப்பதற்கு முன்னர் முதல் வேலையாக விநாயகரை வழிபாடு செய்கின்றோம். இது நமது சைவப் பாரம்பரியம் ஆகும். நம்பினார் கெடுவதில்லை. விநாயகர் வழிபாட்டின் மகிமையையும், பெருமையையும் உணர்ந்தவர்கள் வெற்றியை நோக்கி பயணித்தவர்கள் ஆகிவிடுகின்றனர். எண்ணியது எண்ணியாங்கு எய்தல் உறுதி.

## வழிபாடு - அதன் பன்மைத்துவம்:

வழிபாட்டின் பன்மைத்துவப் பண்பும், விநாயகர் வழிபாட்டின் பயனாக விளங்குகின்றது. விநாயகர் வழிபாட்டின் விரிவாக்கம் என்று கூறலாம். நாம் ஒரு கருமத்தையோ, சுபகாரியத்தையோ, பிரயாணத் தையோ, வேறு செயல்களையோ தொடங்கும்போது, முதலில் விநாயகரை வணங்கி, வழிபாடு செய்கின்றோம். விநாயகர் ஆத்மார்த்தமாக எம்மை வழிப்படுத்துகிறார். அடுத்து, பெற்றோர், குரு, பெரியோர், மூத்தோர் ஆகியோரை வழிபட்டு, அவர்களின் நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் பெற்றுக்கொள்கின்றோம். நல்வாழ்த்துக்கள், நம்மை வாழ்விப்பன என்பதில் அசையாத நம்பிக்கையுடையவர்கள், சைவநெறியில் வாழ்பவர்கள் வாழ்த்துக்களும் வழிபாடுதான்.

வாழ்த்துபவர்கள்; முதலில் விநாயகப்பெருமானை வணங்கி, அதன்பின்; "அருட்பேராற்றல், கருணையினால், உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி, வாழ்க வளமுடன்; வாழ்க வையகம்" என வாழ்த்தவேண்டும். இத்தகைய வாழ்த்துக்கள்; திரிகரண சுத்தியுடன் வாழ்த்துபவரினால் வழங்கப்பட வேண்டும். பயன் உறுதியாகிவிடும்.

வாழ்த்துபவர்கள்; அவர்களிடம் வாழ்த்தைப் பெறுபவர்களை நல்ல முறையில் வழிப்படுத்துகின்றனர். பெரியோர்கள் சொற்கேட்டு நடந்தால், எக்காரியங்களிலும் வெற்றிபெற முடியும். எந்தக் கருமத்தையும், நீதிவழி முறையில் நின்று செய்தல் வழிபாடு ஆகும்.

ஆலயந்தொழுவது வழிபாடு; வீட்டில் காலையும், மாலையும் பிரார்த்தனை செய்வது வழிபாடு. நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும், இறைவனைப் பிரார்த்திப்பது, வழிபாடு. தியானித்தல், செபித்தல், கூட்டுப்பிரார்த்தனை, திருமுறைப்பாடல்களைப் பண்ணோடு இசைத்தல் அனைத்தும் வழிபாடு ஆகும்.

வையத்துள்; வாழ்வாங்கு, வாழும் முறையறிந்து வாழுதல், வழிபாடே யாகும்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்.** - திருக்குறள்

அகவழிபாடு, புறவழிபாடு எதுவாக இருப்பினும் மனம், மொழி, மெய்த்தூய்மையுடன் செய்யும்போதே, பண்பும் பயனும், உள்ளதாக உன்னதம் பெறுகின்றது. எமக்கு இறைவனோடு மனம் ஒன்றி வழிபாடு செய்தல் சித்திக்கிறது.

"செய்யுந்தொழிலே தெய்வம்", என்னும் ஆன்றோர் கூற்றுக்கு அமைய ஒவ்வொருவரும் தாம் மேற்கொண்டுள்ள தொழிலை; பணியைக், கடமையுணர்வோடு, நேர்மையாக; அவற்றைத் தொண்டாக ஏற்று; கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் அறவழிநின்று ஆற்றிவரும்போது அது தெய்வ வழிபாடாக மலர்ச்சி பெறுகின்றது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அப்பரடிகளின் திருவாக்கு நமக்கு வழிகாட்டி, நம்மை வழிப்படுத்துகின்றது. அப்பரின் உழவாரத்தொண்டு, இறை வழிபாடு ஆகும். தொண்டு செய்தல் மிகச்சிறந்த வழிபாடு ஆகும்.

வழிபாடு என்பதன் பன்முகத் தன்மையை, சைவசமயிகள் அனைவரும், அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். வழிபாடு என்பதில் திருக்கோயில் வழிபாடு, வீட்டில் வழிபாடு இவ்விரண்டும் முதன்மை பெறுகின்றன. மனிதநேயம், ஆன்மநேயம் ஆகிய இரண்டையும் வாழ்வில் பேணி வருதல்; அதாவது, மனிதர்களையும் மற்றும் அனைத்து உயிரினங்களையும், இயற்கை வளங்களையும்; நேசித்தல், பாதுகாத்தல், பராமரித்தல், சேவித்தல் என்பன வழிபாடு ஆகும். எல்லா மனிதர் களிடத்திலும் அன்பும், கருணையும் செலுத்துவதே மனிதநேயம். எல்லா உயிர்களிடத்தும் அன்பும், கருணையும் செலுத்துவதே ஆன்மநேயம் ஆகும்.

**எல்லோரும் இன்புற்றிருக்க**
**நினைப்பது வேயல்லாமல்**
**வேறொன் றறியேன் பராபரமே.** - தாயுமானவர்

எண்ணம், சொல், செயலால் எவர்க்கும், எப்போதும் நன்மையே செய்யக் கூடிய நாட்டத்தோடிருத்தல், வழிபாடு ஆகும்.

**அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்**
**இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே.** - தாயுமானவர்

எனவே தன்னலம் கருதாது, சேவை செய்தல் வழிபாடு ஆகும்.

**எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல்**
**எண்ணியுள்ளே ஒத்துரிமை யுடையவராய்.....**

என்று வள்ளுவர் கூறியுள்ளபடி வாழுதல், வழிபாடு ஆகும்.

## தொண்டு என்பது இறை வழிபாடு:

தொண்டு செய்பவர், தொண்டர் ஆவார். தொண்டு செய்தல் இறைவழிபாடு. சரியை, கிரியை யோகம், ஞானம் என்பவை சைவ நாற்பாதங்கள். அவை நால்வகை வழிபாட்டு நெறிகளை உணர்த்துகின்றன. அவற்றுள் சரியை என்பது தொண்டு நெறியென வழங்கிவரப்படுகின்றது.

"தொண்டர் தம் பெருமை, சொல்லவும் பெரிதே", என்பது, ஔவையார்; "உலகில் மிகப்பெரியது எது?" என முருகப்பெருமான் கேட்டபோது, அவருக்கு கூறிய விடையாகும்.

சைவத்தின் சமய, சமூக நோக்கின் மூலாதாரம் தொண்டு ஆகும். இறைவனை உசாவி, விசாரித்து, இறைவனின் ஒப்புதல் பெற்று; "நான் செய்கின்றேன்", "எனது பணத்தைக் கொண்டு செய்கின்றேன்", என்னும் அகந்தை, மமதை உணர்வினை நீக்கி; எவ்விதமான கைம்மாறும் கருதாது; இறைவனின் திருவருட்துணையே தஞ்சமெனக்கருதி; இறைசிந்தனை யோடு பிறர் நலனின் பொருட்டுச் செய்யப்படுகின்ற பணி, சேவை, வினைகள் என்பன தொண்டுகள் ஆகும். அத்தகைய தொண்டு, வழிபாடு எனப்படுகிறது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் திருவாக்கும்; "பணிபுரி பலனை எதிர்பாராதே", என்ற கீதை வாக்கும்; "பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர் தொகுத்தவற்று ளெல்லாம் தலை", என்ற வள்ளுவர் வாக்கும்;, தொண்டு எனும் ஆன்மீக விழுமியத்தை விளக்குவதாக அமைகின்றன. தொண்டு என்பது பற்றில்லா வினை.

தொண்டு என்பது, இறைவழிபாடு. அதனால் எந்த விதத்திலும் சுயநலங்கருதி, வழிபாடு செய்தல் ஆகாது. குளிக்கப்போய் சேறு பூசுதல், தகாது. உண்மைத் தொண்டு வினைகள் பற்றில்லா வினைகளாக அமைவதாலும்; கடவுளின் கருத்தறிந்து, நீதிவழுவா நெறியில் நின்று செய்யப்படுவதாலும் ஏனைய பற்றுள்ள நல்வினை, தீவினைகளைப் போன்று, பிறவிக்கு வித்தாவதில்லை, முத்திக்கு வித்தாகின்றன.

எல்லா உயிரினங்களுக்கும் வேற்றுமை காட்டாது தொண்டு செய்தல் சைவத்தில் இறைபணியாகவும், இறைவழிபாடாகவும் கொள்ளப்படு கின்றது. பணிவு, இன்சொல், முகமலர்ச்சி, எளிமை ஆகிய பண்புகள், தொண்டின் இலட்சணங்கள்.

இனம், மதம், மொழி, சாதி, குலம், பிரதேசம், பதவி, அந்தஸ்து, பால், பணம், பண்டம் ஆகியவற்றின் அடிப்படையில் வேற்றுமைகள், ஏற்றத்தாழ்வுகள் காட்டாது; சமத்துவம், சகோதரத்துவம், மனிதாபிமானம், மனிதத்துவம் என்பவற்றைப் பேணி, மனிதம் காத்து, ஓம்பி ஆற்றப் படுவது தொண்டு. அப்பொழுதுதான் அது வழிபாடு ஆக மலர்ச்சி பெறுகின்றது. "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்பது, ஔவையின் பொய்யாமொழி.

சேக்கிழார் நாயனார், செய்தருளிய திருத்தொண்டர் பெரியபுராணம், அறுபத்து மூன்று சிவனடியார்களின் தொண்டு திறத்தை உலகத்தவர்க்கு அறிவிப்பதாக விளக்குவதாய் அமைந்துள்ளமை; அந்நூல் திருமுறைகள் வரிசையில் இடம்பெறக் காரணமாயிற்று. சிவனடியார்கள் தம் தொண்டுத் திறத்தால் சிவபதம் பெற்றார்கள். பஞ்சபுராணம் பாடும்போது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகிய சிவதோத்திரங் களுடன் ஐந்தாவதாகத் திருத்தொண்டர் பெரியபுராணம் இடம்பெறுவது சைவத் தொண்டுக்கும், தொண்டர்களுக்கும் சிவனுக்கு இணையான உயர்நிலையினை வழங்கியுள்ளமையைக் காட்டுகின்றது.

## தொண்டு மனப்பான்மையும்; வழிபாடு மனப்பான்மையும் ஒன்றே:

**"அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்**
**இன்ப நிலை தானே வந்து எய்தும் பராபரமே".**

இவ்வாறு தொண்டின் இனிமை பற்றித் தாயுமானவர் விளக்கியுள்ளமை கவனத்திற்கொள்ளப்பட வேண்டியது. தொண்டு பராட்டுக்காகவோ, விளம்பரத்திற்காகவோ, புகழ் பெறுவதற்காகவோ செய்தல் ஆகாது. குளிக்கப்போய், சேறு பூசிக்கொள்ளளாமா? எந்தச் சுயலாபத்தையும் எதிர்பார்த்துச் செய்தால் அதனை தொண்டு என்றோ, சேவை என்றோ அழைக்கமுடியாது. தன்முனைப்பு என்பது தொண்டுக்கு இடையூறு செய்யும் பண்பு. அந்தவகையில் வழிபாட்டிற்கும் அது இடைஞ்சல் செய்யும், அன்பும். கருணையும்; தொண்டையும் சரி; வழிபாட்டையும் சரி; வழிநடத்திக் கொண்டிருக்கின்றன.

அன்பு, கருணை என்பனவற்றின் தோற்றங்களில் அமையப்பெற்ற மனிதன் தான் யார் என்பதை உணர்ந்து; தன் வாழ்விலும், செயலிலும் அன்பையும், கருணையையும்; ஆராதித்தும், பின்பற்றியும் வாழ்வது இறைவழிபாடு ஆகும். "அன்பே சிவம்" என்பது திருமூலர் வாக்கு.

அன்பும் சிவமும் ஒன்றே. சிவனும், விநாயகரும் வேறல்லர், ஒருவரே. அந்தவகையில் அன்பும், விநாயகரும் ஒன்றே. அன்பினை ஆராதித்தல்; அன்பினை வாழ்வில் போற்றி வாழுதல்; விநாயகர் வழிபாட்டின் பண்பும், பயனுமாகும். பிரணவ சொரூபியாக விளங்கும் விநாயகர் அன்பு வடிவினராகவும் விளங்குகின்றார் என்பதை அவரை வழிபாடு செய்பவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். அன்பினால் ஆகாத தொன்றில்லை. அன்புதான் உலக மகாசக்தி என்பதை உணர்வோமாக. அன்பினை வழிபடுதல், ஆராதித்தல், அன்பு வழியில் வாழுதல் என்பது விநாயகர் வழிபாடேயாகும்.

விநாயகப்பெருமானை மனதில் நினைத்து தியானிக்கும்போதும்; அவரின் பல்வேறு நாமங்களை நாவினால் நவிலும்போதும் அவர் புகழைப் பாடும்போதும்; பேசும்போதும்; இந்த வழிகளில் அவரை வழிபாடு செய்யும்போதும் எமது மனங்களில் எதிர்மறை எண்ணங்கள், சிந்தனைகள் என்பன தோன்றாமலும் அவை செயல்மூலம் வெளிப் படுத்தப்படாமலும் தடுக்கப்படுகின்றன. நேர்மறை எண்ணங்கள் தோன்ற ஊக்குவிக்கப்படுகின்றன. மனதில் அன்பும், கருணையும் பிறர்மீது கரிசனையும் நிரம்புகின்றன. அகத்திலும், முகத்திலும் மலர்ச்சி பிரகாசிக்கின்றது. நம்மைச் சுற்றியுள்ள சூழல் தூய்மையடைகிறது. பகைவர்கள் யாவரும் நண்பர்களாகி விடுகின்றனர். குழப்பங்கள் நீங்குகின்றன. மனத்தில் அமைதியும், ஆனந்தமும் நிறைகின்றன. வழிபாட்டின் பயன் அறுவடையாகின்றது. வழிபாடு என்பது; எமது மனம், புத்தி, சொல், செயல் என்பவற்றை தூய்மையாக்கும் மாபெரும் ஆன்மீக சாதனைப் பயிற்சியாகும்.

## தோப்புக்கர்ணம் உரிய முறையில், போடுவது எவ்வாறு?

**விக்கினேசுவரரைத் தரிசிக்கும் பொழுது யாது செய்தல் வேண்டும்?**

முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும், நெற்றியிலே மூன்று முறைகுட்டி; வலக்காதை இடக்கையினாலும்; இடக்காதை வலக்கை யினாலும், பிடித்துக்கொண்டு, மூன்றுமுறை தாழ்ந்து எழுந்து கும்பிடல் வேண்டும். இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான், தாம் எழுதிய முதலாம் சைவவினாவிடை நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**தோப்புக்கரணத்தை முறையாகப் போடுவதற்கான படிமுறைகள்:**

படி 1 : முதலில் நம்முடைய தோள்பட்டை அளவுக்குக், கால்களை விரித்து வைத்துக் கொண்டு; நிமிர்ந்து நிற்க வேண்டும்.

படி 2 : இடதுகையால் வலதுகாது மடலையும்; வலதுகையால் இடது காது மடலையும் பிடித்துக் கொள்ள வேண்டும்.

படி 3 : கட்டைவிரல் காதின் வெளிப்புறத்திலும்; ஆட்காட்டிவிரல் (சுட்டு விரல்) காதின் உட்பக்கத்திலும்; பிடித்தபடி இருக்க வேண்டும். வலதுகை கட்டாயமாக இடதுகையின்மீது இருக்க வேண்டும்.

படி 4 : தலையை நிமிர்த்தி நேராக வைத்து, மூச்சுக்காற்றை உள்ளிழுக்க வேண்டும்.

படி 5 : மூச்சுக்காற்றை உள்ளிழுத்துக் கொண்டே நம்மால் எந்த அளவுக் குச் சிரமமின்றித் தாழ்ந்து, குந்தியிருக்க முடியுமோ; அந்த அளவு தாழ்ந்து குந்தி உட்கார வேண்டும்.

படி 6 : பின்பு மூச்சுக்காற்றை வெளியிட்டவாறே, அப்படியே எழுந்து, பழைய நிலைக்கு வந்து நிமிர்ந்து நிற்க வேண்டும்.

(கருத்து : இந்து ஒளி - தீபம் 21, சுடர் 8)

இப்படி **மூன்று**தரமாயினும்; **ஐந்து**தரமாயினும்; **ஏழு**தரமாயினும்; **ஒன்பது**தரமாயினும் விநாயகரை மனதில் தியானித்துக் கொண்டு தோப்புக்கரணம் போடவேண்டும்.

## தோப்புக்கர்ணம் பற்றிய விஞ்ஞான விளக்கம்:

நமது முன்னோர்கள், விநாயகர் வழிபாட்டின், ஓர் பிரதான அங்க மாகத், தோப்புக்கரணம் போடுவதைக் குறிப்பிட்டிருந்தார்கள். தற்காலத்தில் அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்த அறிஞர்கள்; தோப்புக்கரணம் போடுதல்; உடல் ஆரோக்கியத்திற்குப் பெரிதும் இன்றியமையாத உடற் பயிற்சியாக உள்ளமையைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தோப்புக்கரணம் போடும்போது கைகளால், நமது காது மடல்களை இறுகப்பற்றிக் கொள்கின்றோம். காதுமடல்களின் அடிப்பகுதியில், உடலின் எல்லா உறுப்புக்களையும் இணைக்கின்ற புள்ளிகள் உள்ளன. அதனால், காதுமடல்களைக் கைகளினால் பற்றிப் பிடித்துக்கொண்டு, தோப்புக்கரணம், தாழ்ந்து, எழுந்து போடும்போது உடலின் உறுப்புக்கள் அனைத்தும் செயல்படுவதற்கான ஒருவகை தூண்டுதல் கிடைக்கிறது.

மேலும் தோப்புக்கரணம் போடும்போது; தாழ்ந்து இருந்து, பின் எழும்போது காலில் உள்ள "சோலியஸ்", எனும் தசை இயங்க வாய்ப்பு ஏற்படுகின்றது. அப்பொழுது, "சோலியஸ்" தசையால், உடல் முழுவதும் இரத்த ஓட்டம் சீராகும். இதயத்தின் தசைகளைப் போன்றே இதுவும்

செயல்படுகிறது. இதன்மூலம் நமது தண்டு வடத்தின் மூலாதாரத்தில் சக்தி உருவாகிறது.

தோப்புக்கரணம் போடுவதால்; தினமும் தொடர்ந்து பயிற்சி செய்து வருவதால்; மூளையிலுள்ள நரம்புக்கலங்கள் சக்தி பெறுகின்றன என்பதை அறிவியல் நிபுணர்கள் ஆய்வு மூலம் கண்டறிந்து வெளிப் படுத்தியுள்ளனர். பாடங்களைக் கற்பதில், பின்னடைவில் உள்ள மாணவர்கள் கிரகிக்கும் திறன், நினைவாற்றல், அவற்றின் விளைவாக பரீட்சையில், குறைந்த மதிப்பெண்கள் எடுத்த மாணவர்கள், ஆகியோர் தொடர்ந்து தோப்புக்கரணப் பயிற்சியில் ஈடுபட்டு வந்தபின்; நல்ல முன்னேற்றம் அடைந்தமை ஆய்வு மூலம் கண்டறியப்பட்டமைபற்றி ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

நமது மூதாதையர்கள், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, ஆன்மீக அடிப்படையில் விநாயகருக்கு முதல்வணக்கம் செய்யும்போதே தோப்புக் கரணம் போடவேண்டியதன் முக்கியத்துவத்தைச் சாத்திர நூல்கள் வாயிலாகவும், செயல்முறையாகவும், உணர்த்தியமை இந்துக்கள் ஆகிய எம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. அத்துடன் பெருமையாகவும் உள்ளது. இந்துசமய வழிபாடுகள், நம்பிக்கைகள், சம்பிரதாயங்கள், பூசை, ஆராதனைகள், விரதங்கள், விழாக்கள் என்பன மூடநம்பிக்கைகள் அல்ல. அவை நன்னம்பிக்கைகள் என்பதை உணர்த்துவதாகவும் உள்ளன. இந்துசமய நெறிமுறைகளில் ஆன்மீகமும், அறிவியலும் இருகண்கள் போன்று, இணைந்தே உள்ளன. பரீட்சைக்கு செல்லும் முன்னர், விநாயகரை வணங்கி, வழிபாடு செய்துவிட்டு; இந்து மாணவர்கள் நம்பிக்கையோடு பரீட்சை மண்டபத்தை நோக்கித் தைரியத்துடன் சென்று; பரீட்சை எழுதி, வெற்றி பெறுவதற்கான காரணம் இப்பொழுது புரிகின்றதல்லவா! "நம்பினார் கெடுவதில்லை இது நான்குமறை தீர்ப்பு" - இதுதான் அர்த்தமுள்ள இந்துமதம்.

அமெரிக்க உடற்கூற்றுவைத்தியர், எரிக்றொபின்ஸ், தோப்புக்கரண பயிற்சியால், மூளையிலுள்ள நரம்புக் கலங்கள் உசுப்புப் பெற்று, சக்தி பெறுகின்றன என்பதை ஆய்வு மூலம் கண்டறிந்து கூறுகின்றார். படிப்பில் பின் தங்கி, பரீட்சையில் குறைந்த மதிப்பெண்கள் பெற்றுத் தோல்வி யடைந்த மாணவர்கள் தோப்புக்கரணப் பயிற்சியின்பின், நல்ல மதிப் பெண்களைப் பெற்றதாகக் கூறுகிறார்.

யேல் பல்கலைக்கழக நரம்பியல் நிபுணர், யூஜினியஸ் அங் என்பவர் தோப்புக்கரணம் போடுவதால், அக்குபஞ்சர் புள்ளிகள் தூண்டப் படுவதுடன், மூளைக்கலங்களும் சக்தி பெறுவதாக கூறுகின்றார்.

வெளிநாடுகளில், "SUPER BRAIN YOGA", "அதிசக்தி மூளை யோகா" எனத் தோப்புக்கரணம் அழைக்கப்படுகிறது.

நம்முன்னோர்கள், விநாயகப்பெருமானை தினசரி வழிபாடு செய்வதற்கான பிரதான முறையாகத் தோப்புக்கரணம் போடுவதை நியமமாகக் கொண்டனர். இதன்மூலம், நாம் விநாயகப்பெருமானின் அருளையும், உடல்நலம், உளநலம், ஆன்மநலம், நீளாயுள் என்பவற்றை யும்; நோயற்றவாழ்வையும்; அறிவுநலம், ஞானநலம் இணையப்பெற்ற கல்விநலம் மற்றும் செல்வங்கள் அனைத்தையும் பெறலாம்.

நன்றி: **இந்து ஒளி**

## தோப்புக்கரணம் பற்றிய, புராண வரலாற்று விவரணம்

பிள்ளையார் முன்னிலையில் நின்று, தோப்புக்கரணம் போடும் முறையை, உலகிற்கு முதலில் அறிமுகம் செய்தவர், மகாவிஷ்ணு, என்று ஒரு புராண வரலாற்றுக் கதை உள்ளது. ஒருமுறை, மகாவிஷ்ணு வினுடைய சக்கராயுதத்தை அவருடைய மருமகன் விநாயகர், விளையாட்டாகப் பிடுங்கி, உடனே அதனைத் தமது வாய்க்குள் போட்டு வாயை மூடிக்கொண்டார். எல்லோருக்கும் செல்லப்பிள்ளையான, விநாயகரிடமிருந்து வலோற்காரமாகச் சக்கரத்தை திரும்பப் பெறுவது என்பது முடியாத காரியம். அத்துணை வலிமை மிக்கவர் விநாயகர். அவரை மிரட்டியோ, கடிந்து பேசியோ; சக்கரத்தை மீட்பதும், சாத்தியமில்லை. அவ்வேளை சாதுரியமாக, விநாயகர் வசமுள்ள சக்கரத்தை, மீட்பதற்கு மகாவிஷ்ணுவுக்கு ஒரு யுக்தி தோன்றியது.

பிள்ளையார் சிறு குழந்தையாக இருப்பதால்; அவரை வாய்விட்டுச் சிரிக்கவைத்துக், குதூகலப்படுத்தினால் அந்த மகிழ்ச்சியில் அவர் வாயைத் திறப்பார். அப்பொழுது அவரின் வாயில் இருந்து சக்கரம் கீழே விழும். அப்பொழுது விரைந்து சென்று சக்கரத்தை எடுத்துக் கொள்ளலாம்; என்பதுதான் மகாவிஷ்ணு மனதில் உதித்தயுக்தியாகும். அக்கணமே, மகாவிஷ்ணு, தமது நான்கு திருக்கரங்களாலும், தமது காதுகளை மாறி இறுகப் பற்றிக்கொண்டு; மேலும் கீழுமாக இருந்தும், எழுந்தும் நடனம் புரிந்தார். இந்த விசித்திர நடனத்தைக் கண்ட விநாயகர் விழுந்து, விழுந்து சிரித்தார். வாய்விட்டுச் சிரிக்கும்போது சக்கரம் அவரின் திருவாயில் இருந்து, நழுவிக், கீழே விழுந்தது. தருணம் பார்த்துக் கொண்டிருந்த மகாவிஷ்ணு, உடனே சக்கரத்தை எடுத்துக் கொண்டார்.

"தோர்பி" "கர்ணம்" என்னும் இரு சொற்கள் இணைக்கப்பெற்றுத், "தோப்புக்கரணம்", என்ற சொல், உருவாக்கம் பெற்றது என அறிஞர்கள் விளக்குவர். "தோர்பி" என்னும் சொல்லின் பொருள், "கைகளினால்" என்பதாகும். "கர்ணம்" என்றால் காது என்று பொருள். எனவே, "தோர்பி கரணம்" "தோப்புக்கரணம்" ஆக மருவிற்று என்பர். தோப்புக்கரணம் என்றால் கைகளினால் காதுகளைப் பிடித்துக் கொள்வது என்ற அர்த்தம் தரப்படுகின்றது.

## விநாயகர் வழிபாட்டு முறைகளில் தேங்காய் உடைத்தல்:

விநாயகரை வழிபடும்போது, அவரை மனதில் நினைத்து, தேங்காய் உடைப்பது, சைவமக்களின் வழக்கமாக உள்ளது. நாழிகேரகண்டம், தாம்பூலம், கதலிபலம் என்னும் இம்மூன்றும் பிள்ளையாருக்கான பிரதான நிவேதனப் பொருள்கள் ஆகும். இவற்றை முறையே தேங்காய், வெற்றிலை, வாழைப்பழம் என்று கூறுவர்.

ஆணவ அழிப்பு, அகந்தை, மமதை ஒழிப்பு என்பவற்றை குறிப்பதாகத், தேங்காய் உடைத்தல் என்பதன் தத்துவம் அமைகின்றது. தேங்காயை இரண்டு பாதிகளாகவோ, சிதறுதேங்காயாகவோ, உடைத்து விநாயகப்பெருமானை அர்ச்சித்து வழிபடும் வழக்கம் நடைமுறையில் உள்ளமை நோக்கற்பாலது.

எந்தவொரு சமய, சமூக காரியத்தையும் துவங்கும்போது முதலில், நாம் விநாயகப்பெருமானை வழிபாடு செய்கின்றோம். இதன் பிரதான அங்கமாகக், கற்பூரதீபம் ஏற்றி; தேங்காய் உடைத்தல் விளங்குகிறது. இதில் அடங்கியுள்ள தத்துவத்தை நோக்குவோம்:

தேங்காய் ஆன்மாவையும்; தேங்காயின் மூன்று கண்கள் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் குறிக்கும். தேங்காயின் ஓடு எனப்படும் சிரட்டை ஆன்மாவைப் பற்றியிருக்கும் மலங்கள் அல்லது பாசங்களின் கடினத்தன்மையைக் குறிக்கின்றது. அந்த ஓடு, ஒரு கருவியின் துணை இன்றி உடைக்கப்படுவதில்லை. இது, ஆன்மாவை மூடியிருக்கும் பாசம், இலகுவில் விலக்க முடியாதது என்பதையும்; பாசத்தை நீக்குவதற்குக், குரு வடிவம் அவசியம் என்பதையும் விளக்குகிறது.

## பிள்ளையாருக்கு தேங்காய் உடைப்பதற்கான காரணம்:

தேங்காய்க்கு நாழிகேரகண்டம், என்று மற்றொரு சொல், மந்திரங் களில் கூறப்படுகிறது. "நாழிகேரகண்டம், கதலிபழம், தாம்பூலம், நைவேதியாமி", என்பது அர்ச்சனை மந்திரம். தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு என்பவற்றைக் குறிப்பன; மேற்படி வடமொழிச் சொற்கள்.

பிள்ளையாருக்கு தேங்காய் உடைப்பது எதற்காக? என்னும் வினாவிற்கு விடையாக, ஒரு தெய்வீக சம்பவம் கூறப்படுகிறது. விநாயகர், தமது தந்தையான சிவபெருமானை விழித்து அவரது சிரசை தமக்கு பலியாகத் தரும்படி, கேட்டுவிட்டார். யாவற்றையும் விட, மிக உயர்ந்தது; பெரிதும் பெறுமதிமிக்கது; வழங்குபவரிடமிருந்து பிரிக்கமுடியாதது எனக் கொள்ளப்படுகின்ற அரும்பொருள் எதுவோ அதைத் தியாகம் பண்ணி னால்தான் சர்வவல்லமைகளுமுடைய மகாகணபதிப் பெருமானுக்குப் பிரீதியாக அமைகின்றது. அத்தகைய பெரிய தியாகம், அர்ப்பணிப்பு; மனப் பூர்வமாகச் செய்வதற்கும்; தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் வழங்குவதற்கும், தயார் என்ற அறிகுறியாகத்தான் சிவபெருமானைப் போலவே மூன்று கண்களைக் கொண்ட தேங்காயைப் படைத்து அதனை மகாகணபதிப் பெருமானுக்கு, நாம் சமர்ப்பணம் செய்யும்படியாக இறைவன் திருவருள் பாலித்திருக்கின்றார்.

சிதறுதேங்காய்; விநாயகரை நினைந்து; உடைக்கின்ற வழக்கம் இந்துக்கள் மத்தியில் நெடுங்காலமாக இருந்து வருகின்றது. நேர்த்திக் கடன் தீர்ப்பதற்கும்; நேர்த்தி வைத்துச் சிதறுதேங்காய்கள் உடைக்கப்படு கினறன. தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் இவ்வழக்கம் பெரிதும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. தேர்த்திருவிழாவின்போதும், தேரில் சுவாமி வீதிவலம் வரும்போது தேர்முட்டியின் முன்றலிலும்; பின்னர் வீதிகளிலும், நூற்றுக்கணக்கில் அடியார்கள், மற்றும் விரதிகள் சிதறுதேங்காய்கள் உடைப்பது கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும். தேங்காயின் ஓடு கடினமானதாக இருக்கிறது. நமது ஆணவம், அதன் குணங்களான "நான்" எனும் அகந்தை, தற்பற்று; "எனது" எனும் மமதை, பொருட்பற்று என்பவற்றைக் கடினமான தேங்காய் ஓடு குறிக்கின்றது.

ஆணவம்; அதன் குணங்களான; அகந்தை, மமதைகள் என்ப வற்றைக் குறிக்கும், தேங்காயின் கடினமான மேல்சிரட்டை; அதாவது மண்டையோட்டை உடைத்தால், உள்ளே அமிர்த நீராக இளநீர் இருப்பதையும், இனிய சுவையையும் அனுபவித்து மகிழலாம். அவ்வாறே, நம் மனத்தில் அழுக்குகளான ஆணவமலம் மற்றும் அதன் குணங்களான அகந்தை, மமதை, ஆசை அவாக்கள், சுயநலபற்று, பொறாமை, சினம், காமக்குரோதங்கள் போன்ற மனமாசுக்கள் நிலைத்து இருக்கும்வரை; துன்பமேயன்றி இன்பம் இல்லை. ஆதலால் ஆணவமலத்தை உடைத்து,

மனத்திலிருந்து நீக்கினாலேயே மனம் தூய்மைபெறும்; எண்ணங்கள் தூய்மையாக இருக்கும்; செயல்களும் எவர்க்கும் தீமை பயக்காதனவாய்; அதேவேளை நன்மை பயப்பனவாய்; யாவற்றையும் வாழ்விக்கும் அமிர்தசஞ்சீவியாய் விளங்கும். ஆணவமலமே பிறவிக்குக் காரணமாக அமைகின்றது, என்பது சைவசித்தாந்தம் தரும் விளக்கம். இதுவே விநாயகரை நினைத்து, தேங்காய் உடைத்தல், சிதறுதேங்காய் உடைத்தல் என்பவற்றின் தத்துவரீதியான விளக்கம்.

ஆனால், சைவசமயிகளில் பெரும்பான்மையினர் தேங்காய் உடைத் தலின் தத்துவத்தையோ; தாற்பரியத்தையோ, கருத்தில் கொள்ளாது விளையாட்டாகவே, எடுத்துக் கொள்கிறார்கள். பிறவிக்குக் காரணமான ஆணவமலம் நீங்கப் பெறாமையாலேயே, துன்பங்களுக்குக் காரணமான பிறப்பு, இறப்புத் தொடர்கிறது. இவ்வுண்மையை மனத்தில் நிறுத்தி, அருமையாகக் கிடைக்கப்பெற்ற, மனிதப்பிறவி வாய்த்த காலகட்டத் திலேயே நம் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் நீக்கி; அதற்காக விநாயகப்பெருமானை மனம், மொழி, மெய்யினால் வணங்கி, வழிபட்டு; அவரின் திருவருளைப் பெற்றால்; பிறவித் தொடரிலிருந்து விடுதலைபெற்று; முத்தியின்பம் என்னும் பேரானந்தப் பெருவாழ்வைப் பெறலாம்.

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்**
**கண்ணிற் பணிமின் கனிந்து.** - பதினொராம் திருமுறை

விநாயகப்பெருமானே, பிறவிக்கு காரணமான, கன்மவினைகளை, வேரோடு களைய வல்லவர். பிறவியே துன்பங்களுக்கு எல்லாம் காரணம். எனவே, பிறப்பு - இறப்புத் தொடரை முடித்துக் கொள் வதற்கும்; முத்திப்பேறான, பேரானந்தப் பெருவாழ்வை அடைவதற்கும்; விநாயகனை வணங்கி, வழிபாடு செய்து வருதல் வேண்டும். தேங்காய் உடைத்தல் தத்துவம் செயலாக வேண்டும்.

மனிதர்களின் அகங்கார, மமகாரங்களை நீக்கியருள வல்லவர் விநாயகர். விநாயகரைக் காட்டிலும், உடம்பில் பருமனான தெய்வம், நமது சமயத்தில் வேறில்லை. ஆனைமுகன் என்று அழைக்கப்படுவதும், விநாயகருக்குப் பருத்ததலை, பேழைவயிறு, பெரியஉடம்பு அதனால், அவருக்கு "தூலகாயர்" என்றொரு பெயரும் உள்ளது. விநாயகர், பார்வைக்கு குழந்தை போன்றவர். குழந்தைக்கு அழகையும், எவரையும் ஈர்க்கும் கவர்ச்சியையும், அந்தப்பருவத்தில் தருவது எது? குழந்தை உடம்பு பருமனாவும்; தொந்தியும் தொப்பையுமாகக் கொழுகொழு வென்று குளிர்ச்சியாக உருண்டு, திரண்டு இருந்தால்தான் அதற்கு அழகு. எவரையும், தம்பால் பார்வையை ஈர்க்கக்கூடிய அழகு, அத்தகைய அழகே ஆகும்.

## மார்கழி மாதச் சிறப்பு:

மாதங்களில், மார்கழிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. பூவுலகில் வாழுகின்ற மனிதர்களுக்கு, ஒருவருடம்; தேவர்கள் வாழுகின்ற தேவலோகத்தில், ஒருநாளுக்குச் சமமானதாகும். அந்தவகையில் தேவர் களுக்கு ஒருநாள்; மனிதர்களுக்கு ஒருவருடம்.

தைமாதம் முதல், ஆனிமாதம் இறுதிவரை உள்ள காலப்பகுதி, பூவுலகத்தில், மனிதர்களுக்கு; உத்தராயணம் எனவும், ஆடிமாதம் முதல் மார்கழிமாதம் முடிய உள்ள காலப்பகுதி, தட்சணாயனம் எனவும், கூறப்படுகிறது. ஒவ்வொன்றும் ஆறு மாதங்களைக் கொண்டுள்ளது.

உத்தராயணம் முழுவதும், தேவர்களுக்குப் பகல்; தட்சிணாயணம், அவர்களுக்கு இரவு. மனிதர்களுக்கு இராக்காலத்தின் கடைசிக்கூறு அல்லது முகூர்த்தம் விடியற்காலம் என்றும் அதிகாலை என்றும் அழைக் கப்படுகின்றது. சூரியன் உதிப்பதற்கு ஐந்து நாழிகை அல்லது இரண்டரை மணித்தியாலங்களுக்கு முன்உள்ள காலப்பகுதி விடியற் காலம், அதிகாலை, பிரம்மமுகூர்த்தம். அவ்வாறே, தேவர்களுக்கு விடியற்காலம், பிரம்மமுகூர்த்தம் என அமைவது, மார்கழிமாதம் ஆகும்.

கடவுள் வழிபாட்டிற்கு, மிகவும் ஏற்புடைய காலப்பகுதி, அதிகாலை யாகும். இதனை, வைகறை யாமம்; என்றும் கூறுவர். "வைகறை துயில் எழு", என்று, ஆத்திசூடியிலும், "வைகல் தோறும் தெய்வம் தொழு", என்று, கொன்றை வேந்தனிலும் ஔவையார் கூறியுள்ளமை கருத்தில் கொள்ளற்பாலது.

**எழுக புலருமின் ஏத்துக பொன்னடி**
**தொழுது வணங்குக தூநீறணிக**
**பழுதிலைத் தெழுத்தும் பன்னுக பன்முறை.....**

இவ்வாறு, சூரியன் புலர்வதற்குமுன், நித்திரைவிட்டு எழுந்து, கடவுளை வணங்கி வழிபடுமாறு, சிவயோக சுவாமிகள் நமக்கு அறிவுரை பகர்ந்துள்ளார்.

தேவர்களுக்கு அதிகாலையாகவும்; பிரம்ம முகூர்த்தமாகவும் விளங்குகின்ற மார்கழிமாதம் விநாயகர் வழிபாட்டிற்கும்; சிவவழி பாட்டிற்கும், விஷ்ணு வழிபாட்டிற்கும் மிகவும் உகந்த மாதமாகக் கொள்ளப்படுகிறது. சிவபெருமானுக்குத் திருவெம்பாவை உற்சவம்; மகாவிஷ்ணுவுக்குத் திருப்பாவை; மற்றும் வைகுண்ட ஏகாதசி; ஆகிய உற்சவங்களும், விரதங்களும் மார்கழி மாதத்திலேயே நடைபெறுகின்றன. பெண்களால் பாவைநோன்பு, நோற்கப்படுவதும் மார்கழியிலேயேதான். மார்கழி நீராடல், அதிகாலையில் நிகழ்த்தப்படுகிறது. வீதிகள் தோறும் வெண்சங்கு முழக்கம், திருப்பள்ளியெழுச்சி; திருவெம்பாவை பாடல்களை ஓதுதல் என்பன இடம்பெறுதல், மார்கழிமாத, அதிகாலை வேளையில் தான் விநாயக ஷஷ்டி விரதம் அனுட்டிக்கப்படுவதும்; கயமுகாசுர சம்ஹாரம் விநாயகப்பெருமானால் நிகழ்த்தப்படுவதும், மார்கழியிலேயே யாகும். மார்கழி ஞாயிற்றுக்கிழமைகளில் விரதம் அனுட்டிக்கப்படுகிறது. இந்துக்களுக்கு மார்கழி புனித மாதம். இந்த மார்கழி மாதத்தில் புலால் உண்ணல், தவிர்க்கப்படுகிறது. இறைவழிபாட்டிற்கு; மார்கழி மிகவும் ஏற்ற, சிறந்த மாதமாக இந்துக்கள் கொள்கின்றனர்.

"மாதங்களில் நான் மார்கழி" என்று கண்ணபிரான் பகவத்கீதை யிலேயே கூறுகின்றார்.

"மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்நாள். நீராடப்படுவது போவதுவீர் என்பது ஆண்டாள், நாச்சியார் திருவாக்கு. இறைவழிபாட்டிற்கு என்று மார்கழிமாதம் நெடுங்காலமாகக் கொள்ளப்பட்டுவருவதால், மார்கழி மாதத்தில் எவ்வித மங்கல கருமங்களும் நடத்தப்படுவதில்லை.

மார்கழிமாதம் குளிர்காலம். நோய்கள் ஏற்படுவதற்குரிய காலம். ஆகவே இம்மாத்தில் சுற்றாடல் சுத்தம், சுகாதாரம், உடற்சுத்தம் என்பன நன்கு பேணப்படல்; உடல் நலத்துடன் நோய்க்கு இடங்கொடுக்காது உணவு, உறக்கம், உடல்உறவு என்பவற்றில் அளவுமுறை பேணுதல், என்பனவற்றில் கண்ணும் கருத்துமாக இருத்தல் அவசியம். அணியும் ஆடைகள், உடைகள், வசிக்கும் வீடு, வளவுகள் என்பவற்றில் சுத்தம் பேணுதல்; நோயின்றி வாழ்வதற்கு இன்றியமையாததாகும். ஆடைகள், உடைகளை தினமும் தோய்த்து, உலர்த்தி அணிந்துதான், கோயிலுக்குச் செல்லவேண்டும். என்ற விதி ஏற்படுத்துவதற்குக் காரணம் சுத்தம் பேணுதல் ஆகும். அதிகாலையில் நீராடுதல், உடல்நலம்பேண உதவு கிறது. அவ்வாறே, அதிகாலையில் ஆலயத்திற்கு நடந்து செல்லுதல், ஆலயத்தை மூன்று, ஐந்து முறைகள் சுற்றி வலம் வருதல்; விநாயகர் சந்நிதியில் சிரசில் முஷ்டியாகப் பிடித்த கைகளினால் மூன்று முறைகுட்டி தோப்புக்கரணம் போடுதல். நிலத்தில் வீழ்ந்து அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல். அங்கப் பிரதட்சணம் செய்தல், பெண்கள் அடிஅழித்தல், ஆடுதல் யாவும் உடற்பயிற்சிகள் ஆகும். இறை நினைப்புடன் உள்ளத்தில் தியானித்தல்; உளநலம் பேணுவதற்குரிய வழிமுறையாகும்.

மார்கழி மாதத்திற்கு மற்றுமொரு சிறப்பு உண்டு. அச்சிறப்பு திருவாசகம் தந்தது. மார்கழி மாதத்தில் திருமுறைகள் யாவற்றையும் திருக்காப்பிட்டு வைத்துவிட்டு, திருவாசகம் மாத்திரமே ஓதப்படுகின்ற வழக்கம். பண்டு தொட்டு மரபுவழியாக, வந்து கொண்டே இருக்கின்றது.

திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, சிவபுராணம் ஆகியன திருவாசகத்தில் இடம்பெறுகின்றன. மாணிக்கவாசகர் சுவாமிகளின் வரலாற்றினை உள்ளடக்கமாகக் கொண்டு, பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவாதவூரடிகள் புராணம்; திருவெம்பாவைக்காலம், பத்து நாட்களும் ஆலயங்கள், மடாலயங்கள் ஆகிய புனித இடங்களில், புராண வித்தகர்கள் படித்து பயன் சொல்வார்கள். அடியார்கள், விரதிகள் ஆகியோர் பக்தி பூர்வமாகக் கேட்டு பயன்கொள்வர். புராணபடனம் எனக் கூறுவர். காப்புச் செய்யுள், விநாயகர் துதியாக அமைகின்றது.

**காப்பு :** **பவளமால் வரையில் நிலவெறிப்பதுபோற்**
**பரந்தநீற் றழகுடச் சுடம்பிற்**
**றிவளமாதுடன் நின்றாடிய பரமன்**
**சிறுவனைப் பாரதப் பெரும்போர்**
**தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்**
**றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்**
**கவளமா களிற்றின் திருமுகம் படைத்த**
**கடவுளை நினைந்து கை தொழுவாம்.**

- திருவாதவூரடிகள் புராணம்

## மார்கழிப் பிள்ளையார்:

மார்கழிமாதம் முழுவதும், தினந்தோறும் வைகறையில் பிரம்மமுகூர்த்த வேளையில் துயில் நீத்து எழுந்து; நீராடி, கடவுளை வணங்கி; பெற்றோர், மூத்தோர்களையும் அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்கி, அவர்களின் ஆசிகளைப் பெற்று, அதன்பின் வீட்டு முற்றம், வாயில் ஆகிய பகுதிகளை நன்கு பெருக்கி, மஞ்சள் நீர்

அல்லது கோமயம் (பசுவின் சாணம்) கலந்த நீர் தெளித்துச், சுத்தம் செய்துவிட்டு அங்கு வட்டமாகச் சிறிய பகுதியை பசுவின் சாணத்தினால் மெழுகி; பச்சையரிசி மாவினால் அழகிய கோலம் போட்டு; அதன்மீது பசுவின் சாணத்தினால் அல்லது மஞ்சள் மாவினால் பிள்ளையார் பிடித்து வைத்து; அதன் மேல்நுனியில் அறுகம்புல்குற்றி; அறுகம்புல், மலர்கள், முக்கியமாக மஞ்சள் பூசணிக்காய்மலர் ஆகியவற்றைச் சாத்தி, வழிபாடு செய்யும் வழக்கம் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் சைவத்தமிழ் மக்களிடையே நெடுங்காலமாக இருந்து வருகிறது. தற்காலத்தில் இம்மரபு அருகி வருவது வருத்தத்திற்குரியது. நமது மரபுகள், சமயச் சடங்குகள், ஆலய வழிபாடு என்பன யாவுமே அர்த்தமுள்ளவை. உடல்தூய்மை; உள்ளத்தூய்மை, ஆன்மநலம்; சூழல், சுற்றாடலைத் தூய்மைப்படுத்துதல், உடல், உள, ஆரோக்கியம், நோயற்ற வாழ்வு என்பன அவற்றினால் நன்கு பேணப்படுகின்றன. மருத்துவ வசதிகள் இல்லாத பழைய காலங்களில் நோய் நொடிகள் இன்றி ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தமைக்கு சமய அநுட்டானங்கள்; சமய மற்றும் கலாச்சார பண்பாடு மரபுகளைப் பேணிவந்தமை காரணமாகும்.

இந்துசமயம்; சமய நோக்குடன், சமூகநல நோக்கமும் கோண்டு உள்ளது. மார்கழிப் பிள்ளையார் பிடித்து வைத்து, தினமும் வழிபாடு செய்து வருபவர்களுக்கு எவ்விக்கினங்களும் அவர்கள் வாழ்வில் குறுக்கிடாமல், அவர்களை விக்கினேஸ்வரப்பெருமான் காப்பாற்றுவார். அவமிருத்துக்கள், தற்கொலை மற்றும் விபத்துக்கள் காரணமாக உயிர் நீத்தவர்கள் மலினம் அடைந்து; பேய், பிசாசு வடிவில் அவர்களின் உயிர்கள் தங்களுக்குத் தொடர்புடையார் வாழ்கின்ற வீடுகளுக்குச் செல்லும்போது விநாயகர் காவல் காப்பதால் வீட்டின் உள்ளே புகமுடியாது. அவை எறும்புகளாகவும், வேறு ஊர்வனவாகவும் உருமாறி; மார்கழிப் பிள்ளையார் வீற்றிருக்கும் இடத்தில் கோலமிட்ட பச்சையரிசி மாவையும், குருணல்களையும் உண்டு மீள்கின்றன. அதேவேளை பிள்ளையார்; முன்வாயிலில், பிடித்து வைத்து; அதிகாலையில் வழிபட்டு வருபவர்களுக்கு விநாயகப்பெருமான் பாதுகாப்பு வழங்கி அருள் புரிகின்றார். பச்சையரிசி மாவினால் கோலம் இடவேண்டும் என்ற விதி ஏற்பட்டமைக்கு இதுவே காரணம். அதேவேளை, செங்கட்டித்தூள், சுண்ணாம்பு, வெண்கட்டி முதலியவற்றினால் கோலம் இட்டால் அவற்றை எறும்புகள் உண்ணமாட்டா. அதனால் பைசாசுகள் சாபமிடுவர். அத்தகைய வீடுகளில் தரித்திரம் அதிகரிக்கும். முறையாகக் கோலமிட்டு, மார்கழிப் பிள்ளையார் பிடித்து, வழிபாடு செய்துவரும் வீட்டை தேவர்கள் அடைந்து நல்லாசிகள் வழங்குகின்றார்கள்.

மார்கழிப் பிள்ளயைார் பிடித்து வைத்துப் பூக்கள், அறுகம்புல் சாத்தி; விக்கினேஸ்வரப்பெருமானே; எங்கள் இல்லத்தில் அசுர மற்றும் கெட்டதேவதைகள் என்பவற்றாலும், தீயவர்களாலும் விக்கினங்கள் நேரா வண்ணமும்; நோய், பிணிகள் அணுகாமலும், எம்மைக் காத்தருள வேண்டும் என வேண்டுதல் செய்து, பக்தியோடு பிரார்த்தித்தல் முறை ஆகும். எனப் பெரியோர் கூறியுள்ளனர்.

மார்கழிமாதம் முழுவதும்; தினமும் இவ்விதம் அதிகாலையில் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கி வழிபாடு செய்துவந்த; பிள்ளையார் உருவங்களைத் தைப்பொங்கல் தினத்தன்று எடுத்துக்

கொண்டு சென்று அவற்றை ஆறு, குளம், நீர், கடல், ஏரி போன்ற நீர் நிலைகளில் இடுதல் மரபு ஆகும். இவ்வாறு நீர்நிலைகளுக்குப் பக்தி பூர்வமாகக் கொண்டு சேர்ப்பதற்கு முன்னர் மோதகம் அவித்து வைத்து பிள்ளையாருக்குப் படைத்து வழிபடுவர். அதன்பின், நீர்நிலைகளுக்கு கொண்டு செல்வதை ஒரு விழாவாகச் செய்யும் வழக்கமும் உண்டு.

பிள்ளையாருக்கு மோதகப்பிரியர் என்று ஒரு பெயரும் உண்டு. மோதகம் உருண்டை வடிவானது. அந்த உருண்டை வடிவான உலகத்தை மோதகம் சுட்டி நிற்கிறது. பிள்ளையாரின் பேழைவயிறு உலகம் முழுவதையும் அங்குள்ள அண்டசராசரங்களையும்; தம்வயிற்றினுள் அடக்கிவைத்து இருப்பதைக் குறிக்கும். ஓங்கார ஒலியிலிருந்தே நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களும் தோன்றின. இப் பஞ்சபூதங்களின் சேர்க்கையாலேயே, அண்டங்கள் தோன்றின. கோள்கள் தோன்றின. உலகமும் மற்றும் அண்டசராசரங்களும் தோன்றின. அண்டத் திலுள்ளதுதான், பிண்டத்திலும் உள்ளது என்பர். நமது உடல்தான், பிண்டம், ஆகும். பஞ்சபூதங்களின் சேர்க்கையாலேயே; நமது உடலும்; நாம் வாழும் உலகமும் உருவாக்கம் பெற்றன.

'ஓம்' எனும் பிரணவ ஒலியே, உலகத்தோற்றத்திற்குக் காரணம், என்று சைவநூல்கள் கூறும். 'ஓம்' எனும் ஓங்கார மந்திரமே, எல்லா மந்திரங்கட்கும் முதல் ஆக உள்ளது. 'ஓம்' அல்லது பிரணவம் என்னும் ஒலியே எல்லாவற்றிற்கும் ஆதாரமாகவும் விளங்குகிறது. அந்தப் பிரணவப் பொருளையே; விநாயகர், கணபதி, கணேசன், ஐங்கரன், ஆனைமுகன், விக்கினேஸ்வரன், கஜானன், ஹேரம்பன் என்றெல்லாம் பல்வேறு திருநாமங்கள் கொண்டு போற்றி வழிபாடு செய்கின்றோம். மூத்தபிள்ளையார், மூத்தவிநாயகர் என அழைக்கப்படுவதற்குக் காரணம்; உலகிலும், மற்றைய அண்டங்களில் உள்ள அனைத்திற்கும் முதலிலும், முதலாயும் தோன்றியமையே காரணம். எனவேதான், விநாயகர் முதல் வணக்கத்திற்கும் உரித்துடையர் ஆக விளங்குகின்றார்.

விக்கினேசுவரப் பெருமானுடைய அநுக்கிரகம் நமக்கு இருக்கும் போது; எடுத்த கருமங்கள் அனைத்தும் தடையின்றிக் கைகூடும். விக்கினங்கள் நமக்கு வராமல் காப்பவர்; வந்தபின் நீக்குபவர், பிள்ளையார் என்பதை உணர்ந்து; அவரை முன்வைத்துத் தொடங்கும் கருமங்கள் அனைத்திலும் வெற்றி உறுதி, என்பதைக் கருத்தில் கொள்வோம்.

**திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்; செஞ்சொல்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்**
**ஆதலால்; வானோரும் ஆனைமுகத்தானைக்**
**காதலால் கூப்புவர்தம் கை.** - கபிலதேவர்

"என் இடர் கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான்", இவ்வாறு, நம்பியாண்டார்நம்பி, தமது திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலையில், விநாயகரின் இடர் தீர்க்கும் தன்மையை வியந்து குறிப்பிடுகிறார்.

மேலும், விநாயகர்புராணம், "இடர்கள் முழுவதும் அவனருளால் எரிவிழும் பஞ்செனமாயும்", எனக் கோடிட்டுக் காட்டுகின்றது.

திருஞானசம்பந்தர், "பிடி அதன் உரு உமை கொளமிகு கரியது; வடிகொடு தனது அடி வழிபடும் அவரிடர்; கடிகண பதிவர அருளினன்",

என்னும் தேவார அடிகளில்; விநாயகர், தம்மை வழிபடும் அடியார்களின் இடர்கள், இடையூறுகளைக் களையவே; விநாயகர் தோன்றினார் என்னும் உண்மையை நமக்கு அறிவிக்கிறார்.

இவ்வாறு பெருமையும் பேரருளும்; உடைய விநாயகர்; ஆலயங்களில் மட்டுமன்றி; ஆற்றங்கரை, குளக்கரை, தெருமுனை, நாற்சந்தி, முச்சந்தி; ஆலமரத்தடி, அரசமரத்தடி, வேப்பமரத்தடி; பாடசாலை, சத்திரம், மடம், என்று தம்மைப் பிரதிஷ்டை செய்யப்பட்ட இடங்களில் வீற்றிருந்து, அனைவருக்கும் அருள்பாலிப்பார். "யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒருபச்சிலை" என்று திருமூலர், கூறியது போல; ஓர் அறுகம்புல், ஒரு வன்னிப்பத்திரம், அல்லது ஏதாவது கிடைக்கக்கூடிய பச்சிலையை விநாயகருக்குச் சாத்தி வழிபடலாம். சாணத்தை, களிமண்ணை, சந்தணத்தை, மஞ்சளைப் பிடித்துவைத்து, அறுகம்புல்குற்றி வழிபடலாம்.

## அறுகம்புல்லின் பெருமையும் மகிமையும்:

பிரணவசொரூபியும், முதல்வணக்கத்திற்குரியவனுமான விநாய கனை வழிபாடு செய்வதற்கு; நறுமணம் கமழும் அழகிய மலர்கள் ஏராளமுள்ளன. எனினும், வயல்வெளிகளிலும் மற்றும் சாலையோரங் களிலும், பொதுவாக எல்லா இடங்களிலும் காணப்படுகின்ற; அறுகம்புல் விநாயக வழிபாட்டில் எத்துணை முக்கியத்துவம் பெறுகின்றது; அதற் குரிய காரணம் என்ன? என்பனபற்றி ஆராய்வோம்.

முன்னொரு காலத்தில் கடவுள்பக்தி மிகுந்த அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவ்வந்தணனுக்கு நாட்டைப் பரிபாலனஞ்செய்து வந்த அரசன், அரசி ஆகியோருக்குமிடையே ஏற்பட்ட தப்பபிப்பிராயம் முற்றி; ஒருவரையொருவர் சபித்துச்; சாபமிட வேண்டிய நிலமை ஏற்பட்டது. சாபத்தின் விளைவாக; அரசன் காளைமாடு ஆகவும், அரசி ஏழ்மைமிக்க தாழ்ந்த குலப்பெண்ணான புலைச்சியாகவும், அந்தணன் கழுதையாகவும் பிறக்க நேரிட்டது.

இவ்வாறு வாழ்ந்து வரும்போது; ஒருநாள் அடைமழை பொழிந்தது. தற்செயலாகப் புல்லுக்கட்டைச்சுமந்து கொண்டு வந்த புலைச்சி; உழுது கொண்டிருந்த காளைமாடு; பொதிசுமந்து சென்ற கழுதை மூன்றும் ஒரு விநாயகர் ஆலயத்தில் மழைக்கு ஒதுங்கிநிற்க வேண்டியதாயிற்று.

அன்று சதுர்த்தி தினம். கோயிலில் இருந்த புனிதர்கள், கோயிலின் தூய்மை கெட்டுவிடுமே என்று எண்ணி அவர்களை வெளியில் விரட்டினர். மூவரும் ஆலயத்தைச் சுற்றிச்சுற்றி ஓடும்போது, புலைச்சியின் புல்லுக்கட்டிலிருந்து; காளையும், கழுதையும் இழுத்துத்தின்ற அறுகம் புற்கள்; மற்றும் புலைச்சியின் தலையில் இருந்த புற்கள் அனைத்தும், இறைவனின் சந்நிதியில் வீழ்ந்தன. அவற்றில் மூன்று அறுகம்புற்கள் காற்றின் வேகத்தினால் பறந்து, இறைவன் திருவுருவில் வீழ்ந்தன. அது விநாயகருக்கு அறுகம்புல் அர்ச்சனையாயிற்று. இதனைக் கண்ணுற்ற அர்ச்சகர்கள் திகைத்துப்போய் அபிஷேகம் செய்து, விநாயகப் பெருமானைத் தூய்மைப்படுத்தினர். இவ்வாறு செய்யப்பட்ட அபிஷேகம்,

திருமஞ்சனம் ஆகியது. அறுகம்புல் அர்ச்சனைக்குகந்த பத்திரம் ஆகியது. அம்மூவரும் ஆலயத்தைச் சுற்றிச்சுற்றி வந்தமை விநாயகப்பெருமானை வலம் வந்தமையாகியது. அதனால் புலைச்சி, காளைமாடு, கழுதை, இம்மூவரின் சாபம் நீங்கப்பெற்று. மேல்நிலையை அடைந்தனர். அறுகம் புல் மகிமை அத்துணை சிறப்பும், பெருமையும் வாய்ந்தது.

அறுகம்புல், மலர்கள் என்பவற்றை வைத்து; தினந்தோறும் வணங்கி; வழிபட்டு வருபவர்கள் சகல செல்வங்களையும் பெற்றுக்கொள்வார்கள்.

**அறுகம்புல் மகத்துவம்:**

பல்வேறு நறுமணங்கமழும் மலர்கள்; கண்களைக்கவரும், பல்வேறு வண்ணங்கள், நிறங்களில் இருக்கும்போது தன்னிகரில்லாத தலைவனாக, நாயகனாக வீற்றிருக்கின்ற விநாயகப்பெருமானுக்கு மிகவும் உகந்ததாக அறுகம்புல்லே விளங்குகிறது. திருமணத்தம்பதிகளை திருமாங்கல்ய தாரணம் செய்தபின் பெரியோர்கள் அறுகுஅரிசி எடுத்து வாழ்த்துவது நமது மரபு.

"ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி மூங்கில்போல் சுற்றம் பெருகிப்; பதினாறு பெரும்பேறுகளையும், செல்வங்களையும் பெற்று, பெருவாழ்வு வாழ்வீர்களாக" என வாழ்த்துவது மரபு.

அறுகு ஓரிடத்தில் முளைத்து, ஆறு இடங்களிலே வேர்விட்டு நீண்டு, பரந்து, படர்ந்துகொண்டே போகும்தன்மையை உடையது. நீரில்லாத வரண்ட காலத்திலும்; வரட்சியைத் தாங்கக்கூடியது. மழைபெய்து நீர் கிடைத்ததும் துளிர்த்துச்செழித்து வளரும் பாங்கினைக் கொண்டது. மனித வாழ்க்கையில் இன்பமும், துன்பமும் மாறிமாறி வருவது இயற்கையே யாகும். ஆகவே இரண்டையும் ஏற்கும் பண்பு மனிதரிடம் இருக்க வேண்டும்.

விநாயகப்பெருமான் அறுகுபோன்று எளிமையான தோற்றத்தில் அபாரமான தெய்வீக சக்தியைத் தம்முள் அடக்கி நம்மைக் காத்தருள்பவர். விக்கினங்களை எதிர்கொள்ளும் சக்தியையும் தந்து; விக்கினங்களை நீக்குபவர். குண்டலினி சக்திக்குரியவராக விளங்கும் விநாயகமூர்த்திக்கு; அதேகுணம் கொண்ட அறுகம்புல்லைச் சமர்ப்பிப்பது, சாத்தி வழிபடுவது, மிகவும் ஏற்புடையதாகும்.

"உயிர்கள் உடலை விட்டுப்பிரிந்ததும் வினைக்கேற்ப வேறு உடலை அடையும் பொருட்டு முதலில் புல்நுனியைப்பொருத்தி, பசு வயிற்றில் புகுந்து எருவின் வழியாகப் பயிர்களோடு பரவிப்; புருஷகர்ப்பத்தில் தங்கும் என்பது, உபநிடதம் தரும் கருத்தாகும்.

மேற்படி கருத்தின்படி உயிர்கள் உடலை விட்டுப்பிரிந்ததும், உடன் புல்நுனியில் தங்குவதே முதல்படியாதலால் இறைவனின் படைப்பில் முதல் படைப்பாகப் பிரணவமாக; ஓம் எனும் வடிவத்தையுடையவராக; ஓசை; ஒலியெலாம் ஆனவராக; பிரபஞ்சத் தோற்றத்தின் மூலகர்த்தாவாக, விளங்கும் விநாயகப்பெருமானுக்கு அறுகம்புல் சாத்தி, அர்ச்சனை செய்தல் மிகவும் உகந்ததாகிறது.

பக்திநெறியில் நிற்பவர்களும்சரி ஞானநெறியில் நிற்பவர்களும்சரி செல்வம், புகழ், அதிகாரம் உடையவர்களும்சரி, அவர்களுக்கு மிகவும்

முக்கியமானது: மனத்தாழ்மைதான். "நான்", "எனது" என்னும் தன் முனைப்பு, அகங்காரம், பொருட்பற்று, மமகாரம் என்பன அடியோடு இல்லாமல் இருக்க வேண்டும். பணிவு, அடக்கம், பொறுமை, எளிமை, இன்சொல், விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை என்பன மிகுந்திருக்க வேண்டும். இவையே, மானிடதர்மங்கள் ஆகும். இத்தர்மங்களை வாழ்க்கையில் போற்றிக் கடைப்பிடித்து ஒழுகுவது எவருக்கும் இயலக் கூடியகாரியம். ஆனால் இன்றைய காலகட்டத்தில் இவற்றை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுபவர்களைக் காண்பது அரிதினும் அரிதாகி வருகிறது.

எளிமை, தாழ்மை, "தான்" என்னும் அகங்காரம் இல்லாமை ஆகிய இவற்றைப் பக்தர்களுக்கு உணர்த்தவே விநாயகப்பெருமான் எளிய அறுகம்புல்லை விரும்பி ஏற்கிறார்.

விநாகருக்கு அர்ப்பணம் செய்யும் அறுகம்புல் ஒரேகாம்பில் மூன்று முனைகளையுடையதாக இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. அதேவேளை; அடியில் அம்மூன்றும் ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். அதற்கும் காரணம் உள்ளது. விக்கினங்களை விலக்கி வாழ்க்கையில் வெற்றிபெற விரும்புபவர்கள் மனம், வாக்கு, காயம் அதாவது எண்ணங் கள், பேச்சுக்கள், செயல்கள் ஆகிய மூன்றையும் கூர்மைப்படுத்த வேண்டும். தூய்மைப்படுத்தவும் வேண்டும். மூன்றையும் ஒருமைப்படுத்தி, ஏகாக்கிரசித்தத்தைப் பெறவேண்டும். இதுவே இச்சின்னஞ்சிறிய அறுகம் புல் உணர்த்தும் பென்னம்பெரிய தத்துவம்.

நன்றி: **ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்** *(ஆவணி 1998)*

விநாயகப்பெருமானை உள்ளன்போடு மனத்தில் நினைத்து; அறுகம் புல்லை அவரின் திருப்பாதங்களில் சாத்தியும்; அறுகம்புல்மாலையை, அவரின் திருக்கழுத்திலும், திருமார்பிலும் அணிவித்தும்; வழிபடுதலே சாலச்சிறந்தது. காரணங்களைப் பின்வரும் புராண வரலாற்றுத் தவகதை களிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

கௌன்டின்யமுனிவர், விநாயகப்பெருமான்மீது அதிதீவிர பக்தி கொண்டிருந்தவர். அவர் எந்நாளும் விநாயகரைப் பூசிப்பதற்கு, அறுகம் புற்களை மட்டுமே பயன்படுத்தி வந்தார். நறுமணம் கமழும் மலர்கள் இருந்தபோதிலும்; அவற்றைப் பூசைக்குப் பயன்படுத்துவதில்லை. மிகச் சாதாரணமான; எவ்வித வாசனையுமற்ற, அறுகம்புல்லையே, அவர் விரும்பி, விநாயகர் பூசைக்கு உபயோகிப்பதன் காரணத்தை முனிவ ருடைய மனைவி அறிய விரும்பினாள். மனைவியின் விருப்பத்திற் கிணங்கி அறுகம்புல்லின் மகிமையைப் புலப்படுத்தப் புராண வரலாற்றைக் கூறினார்.

## அனலாசுரன் வரலாறு:

அனலாசுரன் என்னும் பெயருடைய அசுரன்; பெயருக்கேற்ப மிகக் கடுமையான அனலைவெளிப்படுத்தி வந்தான். அனலின், கொடும் வெப்பத்தைத் தாங்கிக் கொள்ளமுடியாமல்; அனைத்து உலகங்களிலும் வாழ்ந்து கொண்டிருந்தோர் பெரும் துன்பங்களுக்குள்ளானார்கள். தேவர்

களையும், அனலாசுரன் விட்டுவைக்கவில்லை. விண்ணுலகத் தேவர்கள்; திருமாலிடம் சென்று முறையிட்டார்கள். திருமால், விநாயகப் பெருமானே யாவர்க்கும் மேலானவர்; அவராலேயே அனலாசுரன் இழைக்கும் கொடுமைகளுக்கு முடிவுகட்ட முடியும் என்றும் கூறத் தேவர்கள், விநாயகப்பெருமானை அணுகித், தம் அல்லல்களைக் களைந்து, தம்மைக் காப்பாற்றுமாறு, வணங்கி முறையிட்டனர்.

தம்மை அணுகி: தங்களுக்கு நேர்ந்த விக்கினங்களை நீக்கி யருளும்படி விண்ணப்பிக்கும் தேவர்களுக்கு ஏற்பட்ட விக்கினங்களைத் தீர்த்து வைக்க; விக்னேஸ்வரப் பெருமான், திருவுளங்கொண்டார். விநாயகர், ஒரு அழகிய சிறுவன்போல உருவம் தாங்கி: ஒரு முனிவரின் பர்ணசாலையில் வந்திருப்பதாக, அனலாசுரனிடம், தெரிவிக்குமாறு தேவர்களைப் பணிந்தார். தேவர்கள் அனலாசுரனிடம் விரைந்து சென்று; அவனின் அழகுத்தோற்றத்தைப் புகழ்ந்து; முகமன்கூறி, அதன்பின்னர்; அவனைக்காட்டிலும், சிறந்த எழில் உருவமுள்ள சிறுவன் ஒருவன் முனிவரின் பர்ணசாலையில் இருப்பதாகவும் கூறினார்கள். இச்செய்தி யைக் கேட்டுப் பொறாமை கொண்ட அனலாசுரன், பர்ணசாலைக்கு விரைந்தான். அவனைக் கண்டதும், முனிவர்கள் பயந்து பர்ணசாலையை விட்டு ஓடினார்கள். சிறுவன் மட்டும் எவ்வித பயமுமின்றிப் பர்ண சாலைக்குள் அமர்ந்திருந்தான்.

சிறுவனைக்கண்டு, வெகுண்டெழுந்த அனலாசுரனை; அச்சிறுவன் வடிவத்திலிருந்த, விநாயகப்பெருமான், அப்படியே விழுங்கிவிட்டார். பெருமானுடைய பேழைவயிற்றில் அனைத்து உலகங்களும் அடங்கி யுள்ளமையினால்; உலகங்களிலுள்ள மக்கள், தேவர் உள்ளிட்ட யாவரும் கொடிய வெப்பத்தினால் வருந்தினார்கள். அவ்அரக்கனுடைய வெப்பம் அனைவரையும், அண்டசராசரங்களையும் கடுமையாகத் தாக்கியது. வெப்பத்தைத் தணித்து, கட்டுப்படுத்தப் பலரும் பல முயற்சிகளை மேற் கொண்டனர். பலன் இல்லை.

வேதவல்லுனர்கள்; ஆலோசனைகள் நடத்தினர். ஈற்றில் எண்ணாயிரம் ரிஷிகள் இணைந்து, ஒவ்வொருவரும் இருபத்தொரு அறுகம்புற்கள், விநாயகப்பெருமானுக்குச் சாத்தி; அர்ச்சித்து, தம் குறை களைச் சமர்ப்பித்தனர். பலரும், பல முயற்சிகள் செய்தும் அடங்காத வெப்பம்; விநாயகரை அறுகினால் துதிக்க; தட்பமாகியது. எல்லா உயிர்களும் உய்வு பெற்றன. உலகம் நிலைத்தது.

அப்பொழுது, விநாயகப்பெருமான், மகிழ்ச்சியுற்றுத் தன்னை உள்ளன்போடு, மனங்கசிந்துருகிப் பக்திசெய்து ஒரேயொரு அறுகம்புல் சாத்தி, அர்ச்சித்து, வழிபட்டாலும், அப்பூசை, எல்லாவிதமான வழிபாடு, ஆராதனைகளையும் விடச் சிறந்ததாகவும், அமையும் என்று திருவாய் மலர்ந்து அருளினார்.

### அறுகை உண்டு விநாயகர், பசிதீர்த்தார்:

சனகன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் எல்லாச் செல்வங் களையும் பெற்றிருந்தான். செல்வம், அவனுக்குச் செருக்கை உண்டாக் கியது. மூவுலகிற்கும் சென்று வரக்கூடிய நாரதரை மதிக்கவில்லை:

அலட்சியப்படுத்தினான். விநாயகர் அரசனது செருக்கை அடக்கி பாடம் கற்பிக்க விரும்பினார். அவர் சனகன் அரண்மனைக்குச் சென்று தனது பசியைத்தீர்க்குமாறு வேண்டினார். சனகன் உடன்பாடு ஏராளமான உணவு வகைகளை மாறுவேடத்தில் வந்த விநாயகருக்கு வழங்கினான். ஆயினும் அவரின் பசி அடங்கவில்லை. மேலும், மேலும், உணவு தரும்படி, விநாயகர் கேட்டுக்கொண்டேயிருந்தார். கடைசியில் ஆய்க்கினையைத் தாங்கிக்கொள்ள முடியாதவனாய் சனகன், விநாயகரை கடிந்து: எங்காவது போய், மிகுதிப்பசியைப் போக்கிக் கொள்ளும்படி, வெளியே துரத்தினான். விநாயகர் வெளியே வந்து ஓர் ஏழை அந்தணனின் வீட்டிற்குள் புகுந்தார். அவர்கள், அந்தணர் வடிவில் வீட்டுக்கு வந்த விருந்தினரான விநாயகரை; அன்போடும், பண்போடும் வரவேற்று ஆசனத்தில் இருத்தினர். அந்த ஏழை அந்தணனுக்கு வீட்டிற்கு விருந்தினராக வந்தவரை முன்னர் கண்டதில்லை. எனினும், அவரின் பசிக்கு ஏதாவது உணவு கொடுக்க நினைத்து; அவரை நோக்கி, விநாயகப்பெருமான் தமது வழிபடுதெய்வம் என்றும்; அவரை வழிபட்டு, எஞ்சிய ஓர் அறுகம்புல்மட்டும் தம்மிடம் தற்சமயம் உண்டு, என்று தமது உண்மைநிலையை உரைத்தார்கள். அவர்களின் வறுமை நிலையை உணர்ந்த அந்தணர் வடிவில் வந்த விநாயகர் எஞ்சிய ஓர் அறுகம்புல்லை மட்டும் அவர்; அவர்களிடம், தமக்குத் தரும்படி கேட்டுப்பெற்று, அதனை மகிழ்ச்சியுடன் உண்டு தமது பசியைஆற்றி மகிழ்ந்தார். விநாயகரின் திருவருளினால், அக்கணமே ஏழை அந்தணரின் குடிசை பெரிய மாளிகையாக மாறியது. அந்தணர் குடும்பம் நிறைந்த செல்வத்தையும் பெற்றது.

## வன்னிப்பத்திரம், மந்தாரைமலர் மகத்துவம்:

அறுகம்புல் விநாகப்பெருமானுக்கு மிகவும் பிரியமானது போன்று வன்னிப்பத்திரமும், மந்தாரைமலரும் அப்பெருமானுக்கு மிகவும் பிரிய மானவை. அதன் பின்னணியில் வரலாறு ஒன்று உள்ளது.

தௌமிய முனிவர், தவம் செய்து, இறைவனிடம் வரங்கள் பல பெற்றவர். அவருக்கு மந்தாரன் என்னும் பெயருடைய மகன் இருந்தான். அவன் சௌனகமுனிவரின் மாணவன். அவருடைய குருகுலத்தில் வாசம் செய்து, அவரிடம் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான்.

நந்திகோத்திரத்தில் உதித்த முனிவரின் புதல்வர், ஔரவர் என்பாரும்; அவருடைய மனைவி சுகேதையும் செய்த தவப்பயனாக சமி என்ற புதல்வி பிறந்தாள்.

சமி திருமண வயதை அடைந்ததும், ஔரவர் தமது தவப் புதல்விக்குத் தகுந்த கணவனைத் தேடினார். மந்தாரன் என்பவனை தெரிவு செய்து சமிக்கு வேதமுறைப்படி அவனைத்திருமணம் செய்து வைத்தார். திருமணத்தின்பின் தம்பதிகளாக அவர்கள் ஊருக்குப் போகின்ற வழயில் விநாயகசொரூபம் பெற்ற புருசுண்டிமுனிவர் எதிரே வந்தார். அவர் மிகுந்த தவவலிமையுடையவர். மந்தாரனும், சமியும் அவரை வணங்காமல் விலகிச் சென்றனர். அத்துடன் முனிவரின் தும்பிக்கையுடனான திருமுகத்தைப் பார்த்து, ஏளனமாகச் சிரித்தும்

விட்டனர். அப்போது புருசுண்டிமுனிவர் கடுங்கோபங்கொண்டு, தம்பதி களை நோக்கி, "மூடர்களே நான் விநாயகருடைய திருவருளைப், பெற்று அவருடைய திருவுருவைப் பெற்றுள்ளேன். அதை உணராமல், இளமைச்செருக்கால், என்னை ஏளனஞ்செய்து நகைத்தீர்கள். அந்தக் குற்றத்தினால் நீங்கள் இருவரும் மரங்களாகக் கடவீர்கள்", என்று சாபமிட்டார்.

மந்தாரன், சமி இருவரும் திடுக்குற்று; புருசுண்டி முனிவரிடம் தமக்குச் சாபவிமோசனம் அளிக்குமாறு இரந்து அவரை வேண்டினர். தாம் அறியாமையால் செய்த குற்றத்தை மன்னித்தருளுமாறு முனிவரை இரந்தனர். புருசுண்டிமுனிவா் அவர்களுக்கு மன்னிப்பு அளிக்கத் திருவுளம்கொண்டு, விநாயகப்பெருமான் மரவடிவம் பெற்ற உங்கள் நிழலில் எழுந்தருளி வீற்றிருப்பார். விநாயகரையும், மரங்களாகிவிட்ட உங்களையும்; மக்கள் வணங்கி வழிபடுவார்கள். நீங்கள் மரங்களாகவே இருந்து, இறுதியில் நற்கதியடைவீர்கள். வருந்தாதீர் இவ்வாறு அவர் களுக்கு விமோசனம் அளித்துவிட்டு முனிவர் சென்றுவிட்டார்.

மந்தாரன், சமி ஆகியோரின் பெற்றோர்கள் அவர்களை எங்கும் தேடியலைந்தும்; அவர்களைக் கண்டுகொள்ளமுடியவில்லை. ஈற்றில் ஞான வழியால், தம்பிள்ளைகளுக்கு நடந்தவற்றை அறிந்தார்கள். பெரிதும் வருந்தினார்கள். மந்தாரனின் குருவாகிய சௌனகமுனிவர்; வன்னி, மந்தாரை மரங்களின்கீழ் அமர்ந்து; விநாகப்பெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். பன்னிரண்டு ஆண்டுகள் புரிந்த தவத்தின் பயனாக விநாயகப்பெருமான் கருணை கூர்ந்து காட்சி கொடுத்தருளினார். சௌனகர் விநாயகப்பெருனைச் சாஷ்டாங்கமாக, அவரின் திருப்பாதங் களில் வீழ்ந்து வணங்கி, சீடனான மந்தாரனும், அவரின் மனைவியாகிய சமியும், தங்கள் அடியவராகிய புருசுண்டி முனிவர் இட்டசாபத்தால் மரங்கள் ஆகிவிட்டனர்.

முனிவர் இட்ட சாபத்தையும்; மந்தாரன், சமி ஆகியோர் இழைத்த பாவத்தை கருணைகூர்ந்து தீர்த்தருள வேண்டும் என்று அவரை மன்றாடினார்.

விநாயகப்பெருமான், சௌனக முனிவரை நோக்கி, நாம் வழங்கிய சாபம்: நம்மாலும், நம் அடியார்களாலும், தீரும். நம் அடியார்கள் இட்ட சாபத்தை நம்மால் நீக்கஇயலாது. ஆதலால் இவ்விருவரும் வன்னி, மற்றும் மந்தாரை மரங்களாக இருந்து கொண்டே முத்திப்பேற்றைப் பெறுவார்கள். நாம் அம்மரங்களின்கீழ் என்றும் எழுந்தருளியிருப்போம். வன்னி, மந்தாரை மரங்களையும்; அவற்றின்கீழ் வீற்றிருக்கும் எம்மையும் வழிபடுவோர்; சகல விக்கினங்கள், இடர்கள் யாவும் நீங்கப்பெற்று நல்வாழ்வு வாழ்வர். அவர்களின் வேண்டுதல்கள் யாவற்றையும் பெற்று இன்பமாக வாழ்வர். வன்னிப்பத்திரங்களாலும், மந்தாரை மலர்களாலும் எம்மை அர்ச்சிப்போர் அட்டசித்திகளையும், இகபர சுகங்களையும் பெற்று உய்வர், என வரமளித்து; அம்மரங்களின்கீழ் விநாயகப்பெருமான் கோயில் கொண்டருளினார்.

மந்தாரனும், சமியும் மந்தாரமாகவும், வன்னிமரமாகவும் பல்லாண்டு கள் இருந்தே விநாயகப்பெருமானின் திருவருட்கடாட்சத்தினால் வீடுபேறு

அடையப்பெற்றார்கள். பிள்ளையாரை அர்ச்சித்து வழிபடுவதற்கு, அறுகம் புல் போன்று; வன்னிப்பத்திரம், மந்தாரைமலர் என்பவனவும் பிள்ளையாரு க்கு மிகவும் உகந்தவை.

**யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாய் அறுகு-** - திருமந்திரம்

ஊர்கள் தோறும் பிள்ளையார் ஆலயங்கள் உள்ளன. தமிழ் நாட்டிலும்சரி, ஈழநாட்டிலும்சரி ஒன்றிற்கும் கூடுதலான பிள்ளையார் கோவில்கள் பெரியனவும், சிறியனவும் ஆகக் காணப்படுகின்றன. இவ்வாறான தனித்திருக்கோயில்களைத்தவிர; சிவாலயங்கள், அம்மன் ஆலயங்கள், முருகன் ஆலயங்கள், விஷ்ணு ஆலயங்கள் ஆகிய பெருங்கோயில்கள் அனைத்திலும், விநாயகருக்குத் தனிச்சந்நிதானம் உள்ளன. எந்த நித்திய, நைமித்திய கிரியைகளின்போதும்; மற்றும் பூசை, ஆராதனைகளின்போதும் முதலில் விநாயகப்பெருமானுக்குப் பூசை செய்த பின்னரே ஏனைய பூசை, ஆராதனைகள் என்பன நடாத்தப் படுகின்றன. தவறின் சங்கடங்கள், தடைகள் ஏற்படும் என்னும் அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. பெருங்கோயில்களில் பரிவாரமூர்த்தி களுள் ஒருவராகப் பிள்ளையார் காணப்படினும் மூர்த்தி சிறிதாயினும், கீர்த்தி பெரிது என்பதற்கிணங்க அவரின் கீர்த்தி அருட்திறன் பெரி தாகவே உள்ளன. விக்கினங்களை வருவிப்பவரும், தீர்ப்பவரும் விக்னேஸ்வரன், விக்கினராஜா என்னும் திருநாமங்களைக் கொண்ட விநாயகப்பெருமானேயாவார்.

வைரவர், வீரபத்திரர், ஐயனார், அண்ணமார், முனியப்பர், காளி, மாரியம்மன், நாச்சிமார் போன்ற கிராமியத் தெய்வங்களின் கோயில் களிலும், பிள்ளையாருக்கு, முதலில் பூசைசெய்தே, ஏனைய தெய்வங்களுக்குப் பொங்கல் செய்து, மடைபரவி, பூசை ஆராதனைகள் செய்வது, வழமையாகிவிட்டது. ஆகமமுறைப்படி பூசைகள் நடாத்தப் படாவிட்டாலும் கூட முதல்வணக்கம் விநாயகப்பெருமானுக்கே என்ற நியதி இருந்து வருகிறது.

## "ஓம்" என்ற பிரணவம்

இந்தப் பிரணவம்; சமஷ்டிப் பிரணவம், வியஷ்டிப் பிரணவம் என இருவகைப்படும். சமஷ்டி, தொகுத்துக் கூறுவது. வியஷ்டி, வகுத்துக் கூறுவது, அ, உ, ம என்பதாகும். இந்த வியஷ்டிப் பிரணவமாகிய அகர, உகர, மகரம் மூன்றும் முறையே சத்துவம், ராஜசம், தாமசம் என்ற முக்குணங்களையும்; அயன், அரி, அரன் என்ற மும்மூர்த்திகளையும்; காருக பத்தியம், தாக்ஷிணாக்கியம், ஆகவனீயம் என்ற மூன்று அக்கினிகளையும்; இருக்கு, யசுர், சாமம் என்ற மூன்று வேதங்களையும்; பூமி, அந்தரிக்ஷம், சுவர்க்கம் என்ற மூன்று உலகங்களையும்; காயத்ரி, திருஷ்டுப், ஜகதீ என்ற சப்தங்களையும் உண்டாக்கி, அவைகட்குக் காரணமாகவும் விளங்கும்.

நன்றி: **வாரியார் அமுதம்**

# 07 விநாயகர் விரதங்கள்

## விநாயகருக்குரிய விரதங்கள்:

1. சதுர்த்தி விரதம் - பிரதிமாதமும் வருகின்ற வளர்பிறைச் சதுர்த்தி - ஆவணிச்சதுர்த்தி சிறப்பானது.
2. சங்கடஹரசதுர்த்தி விரதம் - பிரதிமாதமும் வருகின்ற தேய்பிறை சதுர்த்தி
3. வெள்ளிக்கிழமை விரதம் - வாரவிரதம்
4. செவ்வாய்க்கிழமை விரதம் - வாரவிரதம்
5. விநாயகர் சஷ்டி விரதம் (பிள்ளையார் கதை விரதம்)
6. துர்வா கணபதி விரதம்
7. சித்தி விநாயகர் விரதம்
8. துர்வாஷ்டமி விரதம்
9. நவராத்திரி விரதம்
10. வெள்ளிப் பிள்ளையார் விரதம்
11. செவ்வாய் பிள்ளையார் விரதம்

(ஆவணிச்சதுர்த்தி விரதம், விநாயர்சஷ்டி விரதம் ஆகியன முக்கிய மானவை).

## விரதமாவது யாது?

"மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத் தேனும், சுருக்கியேனும், மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும், கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் ஆகும்." ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், இவ்வாறு விரதம் என்பதற்கு வரைவிலக்கணம் தந்துள்ளமை நோக்கற்பாலது.

இறைவனை நோக்கி செய்யப்படுகின்ற தவம்; விரதம் எனவும், நோன்பு எனவும், சைவசமயத்தவர் அழைக்கின்றனர்.

"தனித்திரு, பசித்திரு, விழித்திரு" - இம்மூன்றும் விரத நியமங்கள் ஆகும். இவற்றின் உட்கருத்தை விளங்கிக் கொண்டால், மாபெரும் உண்மை உள்ளமை புலப்படும். புலன்களின் வழியிலே, மனம் செல்லாது விலகி, தனிமையாக மனத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே, "தனித்திரு" என்பதன் சாரம் ஆகும். இறைவனை அடைய வேண்டுமென்ற நினைவில், கணப்பொழுதும் விலகாமல், மனவைராக்கியத்துடன் ஆவலாக இருத்தல், "பசித்திரு" என்பதன் உட்பொருள் ஆகும். புலன்வழி, மனம் போகாது தடுத்தல் பொருட்டு, விழிப்போடு இருத்தல், "விழித்திரு" என்பதன் உட்கருத்து ஆகும்.

★ விரதம் மேற்கொள்வதால்; ஆன்மீகரீதியாகவும், விஞ்ஞான ரீதியாக வும், பல நன்மைகள் ஏற்படுகின்றன. இந்துக்கள் உடல், உள்ளம்,

உயிர் ஆகியவற்றைப் பாதுகாக்க, மிகத்தொன்மையான காலத்தி லிருந்தே விரதங்களை அனுஷ்டித்து வருகின்றனர். இன்றும் தொடர்கின்றனர். விரதம் அனுட்டிக்கப்படும்போது, உடல் இயக்கம் சீர் பெறுகிறது, இரத்தோட்டம் உறுதியாகிறது. சீரான உறுப்புக்களுக்கு ஓய்வு கொடுத்து, உடனிலையை மேம்படுத்துவதே விரதத்தின் உடல்சார் நோக்கம், என மருத்துவ விஞ்ஞானம் கூறுகிறது.

★ உடல்நலம், மனநலம், உயிர்நலம் மூன்றையும் விரதங்கள் நமக்கு நல்குகின்றன. "அன்னசுரனை கூடினால் அட்சரசுரனை குறையும்" என்பர். உணவில் அதிகம் பிரியமான மாணவனுக்கு, கல்வியில் மனம் செல்லாது, என்பது இக்கூற்றின் பொருள். நா அடங்கினால், உடல், கட்டுப்பாட்டிற்குள் அடங்கியிருக்கும். உள்ளமும் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும். உள்ளத்தின் மாண்புதான், உடலின் மாண்பு, உள்ளம், உடல் இரண்டினதும் மாண்புதான் மனிதனின் மாண்பு. விரதம் அனுட்டித்தல் மூலம் பெறப்படும் மாண்பு, சொல்லவும் பெரிதே.

★ விரதம் என்பது இறைவனை நோக்கி செய்யப்படுகின்ற தவம். அதுவே நோன்பு எனவும், உபவாசம் எனவும் அழைக்கப்படுகின்றது. "நோன்பு என்பது, கொன்று தின்னாமை" என்பது ஆன்றோர் வாக்கு. கொல்லாமை, புலாலுண்ணாமை என்பன நோன்பு ஆகும்.

★ தனக்கு வரும் துன்பங்களை பொறுத்தலும், ஏனைய பிறர் இழைக்கும் துன்பங்களைச் சகித்தலும், பொறுத்துக் கொள்ளுதலும், அதேவேளை தாம் பிறருக்கும், ஏனைய உயிர்களுக்கும் துன்பங்கள், தொல்லைகளைச் செய்யாது தவிர்த்தலும் விரதவிழுமியங்கள் ஆகும்.

★ பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம், விட்டுக்கொடுத்தல், அன்பு, கருணை, மனஅடக்கம், பணிவு ஆகிய நற்பண்புகள், விரதங்கள் மூலம் விருத்தி செய்யப்படுகின்றன.

★ விரதம் என்பது சங்கல்பத்துடன், உபவாசம் மற்றும் நியமங்களுடன், செய்யும் "சத்கர்மா"- நற்கருமம் என்றும் விளக்கம் தரப்படுகிறது.

★ "உபவாசம்" என்பதன் பொருள் "உடன் உறைதல்" ஆகும். அதாவது, இறைவனோடு உடன் உறைதல், வாசம் செய்தல் என விளக்கம் செய்வர்.

★ விரத நாட்களில் இறைசிந்தனையோடு இருக்கும்போது, தீயகுணங் களான பேராசை, கடும்பற்று, சினம், உயர்வு, தாழ்வு மனப்பான்மை, முறையற்ற எதிர்ப்பால் கவர்ச்சி, வஞ்சம் ஆகிய மனத்தைப் பற்றிப் பிடிக்காமல், நாம் விழிப்போடு இருத்தல், அவ்வாறு விழித்திருத்தல் விரதம் ஆகும்.

★ உடல்ரீதியாக, விரதம் அனுட்டித்தலின் விளைவாக, உடலின் "மெட்டபோலிசம்", புதுப்பிக்கப்படுவதாக மருத்துவர்கள் கூறுகிறார் கள். அதனால் உடலியக்கம் சீரடைகிறது என்றும் உடலுறுப்புக்கள் புத்துணர்வுடன், தமது பணிகளைச் செய்வதாகவும் சொல்லப்படுகிறது.

★ உண்ணாமலோ, உணவைக் குறைத்தோ, விரதம் மேற்கொள்வதனால் உடலுக்கு ஓய்வு கிடைக்கின்றது, உடலுறுப்புக்களுக்கும், மனத்திற்கும் அமைதி கிடைக்கின்றது. மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும், இதில் ஒத்தகருத்துடையனவாக உள்ளன.

## விநாயக சதுர்த்தி விரதம்

விநாயகப்பெருமான் முதல்வணக்கத்துக்குரியவர். இத்தகைய சிறப்பும், பெருமையுமுடைய விநாயகரை நோக்கி, அநுட்டிக்கப்படும் விரதங்களுள் சதுர்த்தி விரதம், மிகுந்த சிறப்பு வாய்ந்தது. மாதந்தோறும், வருகின்ற பூர்வபட்சத் சதுர்த்தி, விநாயகருக்குரிய விரத நாளாக விளங்குகின்றது.

ஆவணிமாத வளர்பிறை - பூர்வபட்ச சதுர்த்தி, மிகவும் சிறப்புடையது. ஆவணிச்சதுர்த்தி, விநாயகர் அவதரித்த தினமாகும். மாதந்தோறும் வரும் சதுர்த்தியில், விரதம் பிடிக்க இயலதவர்கள் ஆவணிச்சதுர்த்தி அன்று விரதம் அநுட்டித்து, விநாயகப் பெருமானின் அனுக்கிரகத்தைப் பெறமுடியும்.

மாதந்தோறும் வருகின்ற, அபரபக்க - தேய்பிறைச் சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி எனப்படுகின்றது. விநாயகரை நோக்கி, இவ்விரதம் நோற்கப்படுகிறது. பல்வேறு சங்கடங்கள், இடர்பாடுகளிலிருந்து, தம்மை விடுவிப்பதற்கும், விமோசனம் பெறுவதற்கும், சங்கடஹர சதுர்த்தி விரதம் அநுட்டிக்கப்படுகிறது.

## ஆவணிச் சதுர்த்தி விரதம்:

பிரணவ சொரூபியான, விநாயகப்பெருமான், ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த்தியில் அவதரித்தமையால், ஆவணிச்சதுர்த்தி விரதம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கொள்ளப்படுகிறது. இந்நாளில் விநாயகரை அறுகம்புல் தளிர்களினால் அர்ச்சித்து, வழிபாடு செய்து, பகலில் ஒரு பொழுது உணவுண்டு, இரவில் பால், பழம் அல்லது பலகாரம் உட் கொள்ளலாம். இரவில் விநாயகர் ஆலயங்களில், தீபங்கள் ஏற்றி, வழிபாடு செய்தல் மரபு ஆகும்.

ஆவணிச்சதுர்த்தி அன்று, ஆலயங்களில், சிறப்பாக விநாயகர் ஆலயங்களில், விசேட அபிஷேகங்கள், ஆராதனைகள், திருவிழாக்கள் நடைபெறுவது வழக்கம். விரதிகள் இவற்றில் கலந்துகொண்டு, வழிபாடு செய்வதால், நற்பலன்கள் கிட்டும். கணபதி ஹோமம், இலட்சார்ச்சனை என்பனவும் சில ஆலயங்களில் நடைபெறுகின்றன.

**தேவர்கள் தேவன் சிந்து முகத்தவன்**
**மூவர்கள் முதல்வன் முத்தொழிக்கும் காரணன்**
**மேவர மகிழ்வது விளங்கு நாமமும்**
**தாவறு விநாயக சதுர்த்தி யென்பரால்.**

இப்பாடல் விநாயகர் அவதரித்த, விநாயகச் சதுர்த்தி, விரத மகிமையையும், பெருமான் பெருமையையும் எடுத்தியம்புகிறது.

முன்னொரு காலத்தில் சிந்தூரன் என்பான் தேவர்களுக்கும், பூவுலகிலுள்ள மனிதர்களுக்கும், இன்னல்கள், தொல்லைகள் ஆகியவற்றைக் கொடுத்து ஆக்கிரமிப்புச் செய்து வந்தான். தேவர்களை அழித்தொழிக்க எண்ணினான். அத்தகைய கொடியவனை சங்காரம் செய்து தேவர்களைக் காப்பாற்றுவதற்கு விநாயகர் அவதாரம் செய்த திருநாள், ஆவணிச் சதுர்த்தி ஆகும்.

விநாயகர் சதுர்த்தி விரதம், ஆவணிச்சதுர்த்தி அன்று தொடங்கி, புரட்டாதி மாதம் பூர்வபட்ஷ சதுர்த்திவரை அநுட்டிக்கப்பட வேண்டும். என்று விநாயகர் புராணம் கூறுகிறது. எனினும், ஆவணிச்சதுர்த்தி அன்று மட்டும் விரதம் அநுட்டித்தாலே, விநாயகப்பெருமானின் திருவருளை பரிபூரணமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்விரதம் முறையாக முப்பது நாட்களும் அநுட்டிப்பவர், பகல் முழுவதும் உண்ணா நோன்பு இருந்து, இரவில் பூசையை முடித்தபின், பால், பழம், பலகாரம் அல்லது உப்பில்லாத பொங்கல் முதலிய சாத்வீக உணவுகளை, அளவாக உட்கொண்டு வரலாம்.

விரதத்தை முடித்துக் கொள்ளும், புரட்டாதிமாத வளர்பிறைச் சதுர்த்தி அன்று மறுநாள் காலை பாரணம் செய்யும்போது, எல்லோருடனும் அமர்ந்து உணவு உண்ணுதல் வேண்டும். விரத நியமங்களைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஏழைகள், ஊனமுற்றவர்கள், வயோதிபர்கள் ஆகியோருக்குத் தான, தர்மங்கள் செய்தல் உத்தமம். தானங்களில் சிறந்தது, அன்னதானம் ஆகும். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பது ஆன்றோர் வாக்கு.

## விரத மகிமை

ஆவணிமாத, வளர்பிறைச் சதுர்த்தியும், விசாக நட்சத்திரமும், சிம்ம இலக்கினமும், சோமவாரமும் கூடிய சுபமுகூர்த்தத்தில், விநாயகப் பெருமான் அவதரித்தார்.

ஆவணிச்சதுர்த்தி விரதத்தை, அநுட்டித்ததன் பயனாக முருகப் பெருமான்; சூரபத்மனை போரில் வென்றார். உமாதேவியார் இந்த விரதத்தை மேற்கொண்டு, பாவம் நீங்கப் பெற்றவராய் மீண்டும் சிவபெருமானை கணவராகப் பெற்றார் எனப் புராணங்கள் கூறுகின்றன. நளச்சக்கரவர்த்தி, சதுர்த்தி விரதம் மேற்கொண்டு சிவஞானப்பேறு பெற்றார்.

ஆதிசேஷன்; நாரதமுனிவரின் ஆலோசனைப்படி, விநாயகசதுர்த்தி விரதம் நோற்று, விநாயகரின் அருளால், ஐந்துதலை நாகபாம்பாகி, சிவபெருமான் முடியில் அமரும் பெரும்பாக்கியத்தைப் பெற்றான். ஆயிரம் தலைகளைப்பெற்று, ஆதிசேஷன், அவனியைத் தாங்கினான். ஒருதலையோடு விநாயகப்பெருமானுக்கு உதர பந்தனம் ஆனான்.

பஞ்சபாண்டவர்கள், வனவாச காலத்தில் இன்னல்கள், இடர்கள் நேராமலிருக்க; விநாயகரை வேண்டி, சூதமுனிவரின் ஆலோசனைப்படி, விநாயகர் சதுர்த்தி விரதத்தை மேற்கொண்டனர். அதனால், வனத்தில்

வாழும் காலத்தில் எவ்வித இன்னல்களும் இன்றி வாழ்ந்தனர். அத் துணை தொன்மை வரலாற்றுச் சிறப்புடையது, ஆவணிச்சதுர்த்தி விரதம்.

ராஜாகர்த்தமன், சந்திராங்கதன், மன்மதன் (சுயஉருவம் பெற்றான்), தட்சன் மற்றும் பலர் விநாயகசதுர்த்தி விரதத்தை மேற்கொண்டு, தமக்கேற்பட்ட இடர்கள், இன்னல்களை போக்கிக் கொண்டமைபற்றிப் புராணங்கள் கூறுகின்றன.

## விநாயகசதுர்த்தி விரத மகிமை

முன்னொரு காலத்திலே கர்த்தமன் என்னும் பெயருடைய அரசன் இருந்தான். அவ்வரசன் பகைவர்களை வென்று நல்லாட்சி புரிந்து வந்தான். மக்களும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள். அரச தர்மம் தவறாமல், நீதிபரிபாலனம் நடைபெற்றது. கர்த்தமன் அரண்மனைக்கு, ஒருநாள் திருகு முனிவர் வருகை தந்தார்.

முனிவரை நன்கு வரவேற்று, உபசரித்து, அவரின் ஆசியைப்பெற்ற கர்த்தமன், முனிவரைப் பணிந்து “சுவாமி தாங்கள் முக்காலமும் உணர்ந்தவர். பகைவர்களை வென்று, ஒரு குடைக்கீழ், நான் ஆட்சி புரிவது, என் பராக்கிரமத்தைப் பொறுத்தது, என்று என்னைப் புகழ்ந்தாலும், அப்புகழ்ச்சியை நான் முழுமையாக ஏற்றுக்கொள்ள, என் மனம் தயாராக இல்லை. முற்பிறவியில் நான் செய்த, ஏதோ புண்ணிய காரியம் காரண மாகத்தான், இப்பிறவியில் அரசபோக வாழ்க்கையை அனுபவித்து வருகின்றேன், என்று என் உள்மனம் சொல்கிறது. தாங்கள், தயவுசெய்து அதுபற்றி எனக்கு எடுத்துக்கூறி, என் ஐயத்தைப் போக்க வேண்டும்.” என்று விண்ணப்பம் செய்தான்.

பிருகு முனிவரும், கர்த்தமனின் வேண்டுகோளை ஏற்று, அவனின் முன்ஜென்ம விருத்தாந்தங்களைக் கூறத் தொடங்கினார்: அது பின்வரு மாறு அமைகின்றது.

கர்த்தமன், முற்பிறப்பில், ஒரு வைசிகனாக இருந்தான். வணிகம் அவனது குலத்தொழில். எனினும், அவ்வணிகத்தொழிலிலிருந்து, போதிய செல்வம் அவனுக்குக் கிடைக்கப் பெறவில்லை. அதனால், தன் குலத்திற் கேற்ப விதிக்கப்பட்ட தான, தர்மங்களை, அவனால் செய்ய முடிய வில்லை. அதனால், அவனுடைய உற்றார், உறவினர்கள், அவனைத் தூற்றினர். உண்மையான காரணத்தை அவர்கள் அறிய முற்படவில்லை. அக்கொடும் வார்த்தைகளைக் கேட்கப் பொறுக்காதவனாய், மனம் வெறுத்து, தன் உயிரை மாய்த்து விடலாமென்ற, நோக்கத்தோடு, காட்டிற்குச் சென்றான்.

காட்டுக்குச் சென்ற கர்த்தமன், அங்கு சவுபரி முனிவரின் ஆச்சிர மத்தை அடைந்து, முனிவரை வணங்கினான். முனிவர், கர்த்தமனை அழைத்து, வந்த காரியம்பற்றி வினவினார். அவனும் தன்னுடைய கஷ்ட, நஷ்டங்களை விவரமாகக் கூறித், தான் உயிரைவிட்டு விடலாம் என்று காட்டுக்கு வந்ததாகச் சொன்னான். தன்னுடைய நல்ல காலம், முனிவர் பெருமான், அங்கிருப்பதைக் கண்டு, அவரைச் சேவிக்க வந்ததாகவும் கூறினான்.

முனிவர், கர்த்தமன்மீது, கருணை கூர்ந்து, விநாயகரின் மகா மந்திரத்தை உபதேசித்து, அதை அனுசரிக்கும் முறையையும் கூறி, அதை நாள்தோறும் அநுட்டித்து வந்தால், அவனின் இலம்பைகள் யாவும் நீங்கிவிடும், என்றார்.

அந்தச் சமயத்தில், விநாயகசதுர்த்தி வந்தது. முனிவர், விநாயகர் சதுர்த்தி விரதத்தை அநுட்டிக்கும் முறையை அவனுக்கு எடுத்துக்கூறி, உடனிருந்து நடத்தி வைத்தார். விரதத்தின் மகிமையினால், கர்த்தமனின் வீடு அளவற்ற செல்வங்களால் செழிப்புற்றது. மகிழ்ச்சியுற்ற வைசியன், முனிவரிடம் விடைபெற்று, வீடு திரும்பினான்.

அவனுக்குத் திடீரெனக் கிடைத்த சௌபாக்கியங்களை அறிந்து, முன்னர் அவனை வெறுத்து ஒதுக்கி வைத்த உறவினர், அவனை எதிர்கொண்டு அழைத்து, போற்றிப் புகழ்ந்தனர், மதித்து, மரியாதை செய்தனர். அவனும் மட்டற்ற மகிழ்ச்சியுடன், தன் குலத்திற்குரிய தான, தர்மங்களைச் செய்து கொண்டு, இனிது வாழ்ந்தான்.

விநாயகர் சதுர்த்தி விரதம் அநுட்டித்துப் பெற்ற மகிமை, அடுத்த பிறவியிலும் அவனைத் தொடர்ந்தது. அடுத்த பிறவியில், அந்த வைசியன், கர்த்தமன் என்ற பெயரோடு, அரசனாகப் பிறந்து, இன்பங்களில் திளைக்க வழிசெய்தது.

## சதுர்த்தி வழிபாடு:

ஆவணிச்சதுர்த்தியன்று, விரதிகள் அதிகாலையில், சிரஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து, மற்றைய விரத அநுட்டானங் களை மேற்கொள்ள வேண்டும்.

வீட்டிலும் விநாயகர் வழிபாடு செய்யலாம். ஆலயம் சென்றும் வழிபாடுகளை மேற்கொள்ளலாம். ஆலயம் சென்று, அங்கு நடைபெறும், விசேட பூசை, ஆராதனைகள், அபிடேகம், உற்சவம் என்பவற்றில் கலந்து கொண்டு தரிசனம் செய்யலாம். ஆலயத் தொண்டுகளில் ஈடுபாடு கொள்வது புண்ணிய காரியம் ஆகும். தடைகள் நீங்கும், விக்கினங்கள் விலகிவிடும். காரியசித்தி உண்டாகும்.

விரத காலங்களில், இயன்ற தானதருமங்கள் செய்தல் அறம் ஆகும். "அறம் செய விரும்பு" என்றும், "ஈதல் அறம்" என்றும் நம் முன்னோர் கூறியுள்ளனர்.

சதுர்த்தியில், அறுகு, வன்னிப்பத்திரம், மந்தாரைமலர், எருக்கு, கொன்றைமலர், தும்பை, செவ்வரத்தை மலர்கள் என்பவற்றால் விநாயகரை அர்ச்சிப்பது, மாலைகள் தொடுத்து, சாத்துவது உத்தமம்.

மோதகம், அப்பம், அவல், சர்க்கரை, அமுது, பொரி, பால், தேன், எள்ளுருண்டை, மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம், விளாம்பழம், கரும்பு, வள்ளிக்கிழங்கு, தேங்காய், தாம்பூலம், இளநீர் என்பன, விநாயகருக்குரிய நிவேதனப் பொருள்கள். விநாயகர் சதுர்த்தியன்று, இவற்றை நிவேதனம் செய்தால், மிகுந்த நன்மைகள் உண்டாகும்; கஷ்டங்கள் தீரும்.

பாராயணம் செய்வதற்குரிய நூல்கள்: விநாயகர்அகவல், விநாயக புராணம், விநாயகர்கவசம், காரியசித்திமாலை.

★ விரதங்களுள் மிகச்சிறந்தது எது? என்று, ஒரு சமயம், உமையம்மை யார், பரமசிவனிடம் கேட்டதற்கு, சிவன் வழங்கிய பதில் பின்வருமாறு அமைகின்றது: "விரதங்களுள் மிகச் சிறந்தது விநாயக சதுர்த்தி", என்பதே இறைவனின் பதில் ஆகும்.

★ முருகன், கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, தந்தையை நோக்கி, "எண்ணற்ற விரதங்கள் உள்ளதாகக் கூறினீர்களே, அவற்றுள் எந்த விரதம் மிக உயர்வானதும், உன்னத பலனைத் தருவதும், அதே வேளை அனுட்டிப்பதற்கு மிகவும் எளிமையானதும்? எனக் கேட்டார்.

★ அதற்கு விடையளித்த இறைவன், "மகனே, விக்கினங்களை அகற்றி, வேண்டுவார், வேண்டியனவற்றை நிறைவேற்றும் விரதங்களுள், முதன்மையானது, விநாயகரை நோக்கி அனுட்டிக்கப்படும், விநாயக சதுர்த்தியே", எனக் கூறினார்.

★ "அப்படியாயின், சிவவிரதங்கள் யாவற்றையும்விட, உயர்வானதா?", என முருகன், மற்றொரு வினாவைத் தொடுத்தார்.

★ "முருகா; வேதங்கள் உன்னையும், என்னையும் ஒரே மந்திரத்தால் புகழ்கின்றன. அவ்வாறே, விநாயகனையும் மூலமுதல்வனாகப் போற்றிப் புகழ்கின்றன. ஆகவே, விநாயகனை முதலில் வணங்கி, எடுக்கும் காரியங்கள், கருமங்கள் அனைத்தும் இனிது நிறைவேறும், வெற்றி தரும்," எனப் பதிலளித்தார்.

★ சிவனும், விநாயகரும் வேறல்லர், ஒருவரே. அவ்வாறே, சிவனும், முருகனும் வேறல்லர், ஒருவரே, என்ற உண்மை, சிவனின் பதில்களில், தொக்கி நிற்கிறது.

★ முருகன், தேவர்களை வருத்தி, இடுக்கண் செய்யும் அசுரர்களை அழித்துத், தேவர்களைக் காப்பதற்கே, உதித்தவன். தேவசேனாதி பதியாகவும் விளங்குபவன். எனவே, அண்ணன் விநாயகனை நோக்கி, விரதம் அனுட்டிப்பேன், அசுரர்களைச் சங்காரம் செய்து, தேவர்களைக் காப்பேன், என, முருகன் உறுதி பூண்டார், சங்கல்பம் எடுத்துக் கொண்டார்.

★ அண்ணன், பிள்ளையாரை, மனத்தில் நினைத்து, விரதம் அனுட்டித்தார். அப்பம், அவல், பொரி, எள்ளுருண்டை, மோதகம், மற்றும் முக்கனிகள் என்பவற்றை, அண்ணனுக்கு, நிவேதனம் செய்தார். அறுகு, வன்னிப் பத்திரம், என்பவற்றால், கணேச மந்திரம் சொல்லி அர்ச்சித்தார். அதன்பின், சூரன், சிங்கன், தாரகன் முதலிய அசுரத்தலைவர்களைப் போரில் வென்று, தேவர்களைச் சிறைமீட்டார். சூரசங்காரத்தின்போது, சூரனை, வேல்ஆயுதத்தால், சேவலும் மயிலுமாக இருகூறாக்கிச், சேவலை கொடியில் வைத்து, மயிலைத் தம் ஊர்தியாகக் கொண்டார்.

★ விநாயகருக்கு முதல்வணக்கம் செய்து, தொடங்கும் கருமங்கள் அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறும்.

## சந்திரன் பெற்ற சாபம் - 1

விநாயகரின் வாகனம் மூஞ்சூறு என்றும், எலியென்றும் கூறப்படுகிறது. ஆணவமலத்தை அடக்கி, அதனை வெற்றி கொள்வதைக் குறிப்பதாக; விநாயகர் மூஞ்சூறை வாகனமாகக் கொண்டமை குறிக்கிறது. கையில், வைத்திருக்கும் அங்குசம், உலக ஆட்சியைத் தம்வயம் வைத்திருப்பதைச் சுட்டுகிறது.

விநாயகர், முதல்வணக்கத்துக்குரிய கடவுள். அவரை முதலில் வணங்கி, அருள்பெற்றுத் தொடங்கும் கருமம் எவ்வித தடைகளும் குறுக்கிடாமல் இனிது நிறைவேறும்.

ஆவணி மாதத்தில் வரும் வளர்பிறைச் சதுர்த்தியன்று, விநாயகரின் பிறந்ததினம் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒருமுறை, தமது பிறந்த தினத்தன்று, பக்தர்களின் இல்லங்களுக்குச் சென்று, அவர்கள் வழங்கிய மோதகம், கொழுக்கட்டை மற்றும் இனிப்புப் பணியாரங்களை ஏராளமாகப் பெற்று, வயிறு நிறைய உண்ட பின்னர், தமது எலி வாகனத்தில் அமர்ந்து, தமது பயணத்தை ஆரம்பித்தவேளை, பாம்பு ஒன்று வருவதைக் கண்டு, பயந்த எலி, சற்றுத் தடுமாறியது. விநாயகரின் பாரத்தையும் தாங்கிக் கொள்ள முடியாமல் நிலத்தில் எலி வீழ்ந்துவிட்டது. விநாயகரும் நிலத்தில் வீழ்ந்தபோது, அவரின் பருத்த வயிறு வெடித்தது. அப்பொழுது விநாயகரின் தொந்தி வயிற்றுக்குள் திணிக்கப்பட்டிருந்த மோதகங்கள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் வெளிவரத் தொடங்கின. அப்பொழுது அப்பண்டங்கள் முழுவதையும் தமது வயிற்றினுள் திணித்துவிட்டு, அங்கு வந்த பாம்பைப் பிடித்து, அதனால் தம் வயிற்றைச் சுற்றிக் கட்டிவிட்டார்.

அந்தச் சம்பவத்தை, வானில் உள்ள சந்திரன் கண்டுவிட்டு, பரிகாசமாகச் சிரித்தமையால், விநாயகர் கோபமுற்றுச் சபித்துவிட்டார். சந்திரனின் இந்தக்கேலித்தனச் சிரிப்பு, விநாயகரைக் கோபமுறச் செய்தது. அதனால், விநாயகசதுர்த்தியன்று, எவரும் சந்திரனைப் பார்க்கக் கூடாது என்றும், மீறிப் பார்த்தால் தோஷம் ஏற்படும் என்றும் சாபமிடப்பட்டது.

சந்திரன், விநாயகரைப் பார்த்து, நையாண்டிச் சிரிப்புச் சிரித்தமையினால், கிடைக்கப்பெற்ற சாபம், வேறொரு படிப்பினையையும் நமக்கு உணர்த்துகிறது. கடவுளில் நம்பிக்கையற்றவர்களுடன் நட்புக் கொள்ளக் கூடாது. கடவுள், குரு, மற்றும் பெரியோர்கள் ஆகியோரை நிந்திப்பவர்கள், நையாண்டி செய்பவர்கள் ஆகியோருடன் நட்புக்கொள்ளல் ஆகாது. அவ்வாறு, நட்புக் கொள்வார்களேயானால் பல சங்கடங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

பெரியோர்கள் முன்னிலையில், மரியாதையுடன் அவர்களை மதித்து, ஒழுக வேண்டும். தவறினால், செய்த குற்றத்திற்குத் தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும். தெய்வ நிந்தனைக்குக் கழுவாய் இல்லை, என்பதை இந்நிகழ்வு எடுத்துக் காட்டுகிறது.

## சந்திரன் பெற்ற சாபம் - 2

★ விநாயகர் சதுர்த்தியன்று சந்திரனைப் பார்க்கக்கூடாது. மோதகம், கொழுக்கட்டை, விநாயகருக்கு மிகவும் பிரியமான தின்பண்டம். ஒருமுறை, அவரது பிறந்த தினமான ஆவணிச்சதுர்த்தியன்று, தேவர்களும், பூலோக மக்களும், விநாயகரை வாழ்த்தியும், வணங்கியும், அவரை மகிழ்வித்தார்கள்.

★ விநாயகர், பெருமகிழ்ச்சியடைந்து, நடனம் ஆடினார். இக்காட்சியைக் கண்ணுற்ற சந்திரன், விநாயகரைப் பார்த்து, கேலியாகச் சிரித்தான்.

★ விநாயகர், சந்திரன் சிரித்ததைக் கண்டு, கோபம் கொண்டு, தனது கொம்புகளில் ஒன்றை ஒடித்து, அதனைச் சந்திரனைக் குறிவைத்து எறிந்தார்.

★ சந்திரனைச் சதுர்த்தியன்று யாரும் பார்க்கக்கூடாது என்று சாபமிட்டார். அவ்வாறு எவராவது பார்த்துவிட்டால், அன்றைய நாள் முழுவதும் விக்னேஸ்வரப்பெருமானுக்குச் செய்த பூசையும், பெற்ற புண்ணியமும் பலனற்றுப் போய்விடும். தற்செயலாக, அன்றைய தினம், சந்திரனைப் பார்த்துவிட்டால், அதற்குப் பரிகார நிவர்த்தியாக, அடுத்துவரும் சங்கடஹர சதுர்த்தியன்று (தேய்பிறைச் சதுர்த்தியன்று) விநாயகப்பெருமானுக்கு அறுகம்புல் சாத்தி வணங்கினால் அத்தோஷம் நிவர்த்தியாகி விடும்.

## விநாயகர் பொம்மைகள்:

★ விநாயகர் பொம்மைகள் செய்து, ஆவணிச்சதுர்த்தியன்று தொடக்கம் பத்து நாட்கள், பொது இடத்தில், யாவரினதும் பார்வைக்கு வைத்து, விழாக்கள் கொண்டாடி, வழிபாடு செய்து, அதன் பின்னர், கொண்டு சென்று கடல் மற்றும் நீர் நிலைகளில் கரைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலும், மகாராஷ்டிர மாநிலத்திலும், இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இது ஒரு சமய, சமூக விழாவாக அமைகின்றமை, அதன் சிறப்பாகும்.

★ விநாயகர் பூமி தத்துவத்தையுடையவராக இருப்பதாற்றான், விநாயக சதுர்த்தி, விநாயகஷஷ்டித் திதிகளில் களிமண்ணாற் செய்த பிள்ளையாரைப் பெரியோர், சிறியோர் யாவரும் பூசை செய்து வருகின்றனர்.

## சங்கடஹர சதுர்த்தி விரதம்:

சங்கடஹரசதுர்த்தி விரதம், மாதந்தோறும், அபரபக்கச் சதுர்த்தித் திதியன்று விநாயகப்பெருமானை நோக்கி அனுட்டிக்கப்படுகிறது. இவ்விரதத்தை மேற்கொள்ள விழைபவர்கள், ஆவணிமாத அபரபக்க (தேய்பிறை)ச் சதுர்த்தித் திதியன்று தொடங்கி, மாதந்தோறும், குறித்த திதியன்று தொடர்ந்து அனுட்டித்து வருதல் வேண்டும். இது ஒருமாத விரதம். பூரணையையடுத்து வருகின்ற சதுர்த்தி, சங்கடஹரசதுர்த்தி என அழைக்கப்படுகிறது.

"சங்கட" என்ற சொல்லுக்குச், சங்கடங்கள், கஷ்டங்கள், விக்கினங்கள் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. "ஹர" என்ற சொல்லுக்கு, அழித்தல் என்று பொருள்.

இவ்விரதத்தைப் பிடிக்கத் தொடங்குவோர், ஆவணி மாதப் பூரணையை அடுத்துவரும், தேய்பிறைச் சதுர்த்தியன்று தொடங்கி, மாதந்தோறும், வரும் அபரபக்கச் சதுர்த்தி தினங்களில், தொடர்ந்து, அனுட்டித்து வருதல் வேண்டும்.

செவ்வாய்க்கிழமைகளில் வரும் சங்கடஹரசதுர்த்தி அதிசிறப்பு வாய்ந்தது.

ஆண்டுதோறும் ஆடிமாதத்தில் வரும், தேய்பிறைச் சதுர்த்தியை, மஹாசங்கடஹரசதுர்த்தி என அழைப்பர்.

தேய்பிறைச் சதுர்த்தியன்று, சந்திரன் எல்லோருக்கும் தெரியும்படி, பிரகாசமாகத் தோன்றுவான். இத்தினம், சந்திரனுக்கு, விநாயகர் இட்ட சாபத்தை, அவர் நீக்கியருளிய நாளாகும்.

இத்தினத்தில், ஆசாரசீலத்துடன், விரதமிருந்து, விநாயகருக்கு மோதகம் நிவேதனம் செய்து, பூசை செய்வதால், அவர் மிகவும் மகிழ்ந்து, எல்லாவித இடர்கள், இடையூறுகளையும்; சங்கடங்களையும் நீக்கியருளுவார்.

இந்தப் பூசையின் நிறைவில், ரோகிணியுடன் உறையும் சந்திரனை யும் பூசித்தல் முறையாகும்.

**விரதமகிமை:**

புதன் என்னும் பெயருடைய ஓர் அந்தணன், பல பாதகங்களைப் புரிந்து வந்தான். அவற்றுள் அதிபாதகம், தமது தாயாரைக் கொன்றமை யாகும். அத்தகைய கொடுஞ்செயலைப் புரிந்ததன் விளைவாகத் தொழு நோயினால் அவன் பீடிக்கப்பட்டுப் பெரும் வருத்தமுற்றான். அவன்மீது இரக்கம் கொண்ட சூரசேன மன்னன், கணபதி மந்திரத்தை அவனுக்கு உபதேசித்துச், சங்கடஹரசதுர்த்தி விரதம், மாதந்தோறும் அனுட்டித்து வந்தால், தொழுநோய் தீரும் என்று அறிவுரை கூறினான். அந்தணனும், அவ்விரதத்தை மேற்கொண்டு, தன்னைப் பீடித்து வருத்திய பெருநோய் நீங்கப் பெற்றான். இத்தகவல், விநாயகர் புராண நூலில் கூறப்பட்டுள்ளது.

சங்கடஹரசதுர்த்தி விரதத்தைச் சனிதோஷமுள்ளவர்கள் அனுட் டித்து வந்தால், சனீஸ்வரனின் தாக்கம் பெருமளவில் குறையும்.

சூரசேனன் என்னும் அரசன், இந்திரன் மூலமாகச் சங்கடஹர சதுர்த்தி விரத மகிமையைத் தெரிந்து கொண்டு, அவ்விரதத்தை முறையாக மேற்கொண்டு, சங்கடங்கள் நீங்கப்பட்டதுடன், முத்தியையும் அடைந்தான். இவ்விரதம், இகபரசுகங்களை வழங்கவல்லது, என்பது இவ்வரலாற்றிலிருந்து தெரிகிறது.

சனிதோஷமுள்ளவர்கள், சங்கடஹர விரதத்தை முறையாக அனுட்டித்து வந்தால், சனிதோஷத்தின் பாதக விளைவுகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முடியும்.

சங்கடங்களை நீக்கக்கூடிய, இவ்விரதத்தை மனம், மொழி, மெய்த் தூய்மையுடன், முறையாக மேற்கொள்பவர்கள், விநாயகப்பெருமான் திருவருட்கடாட்சத்தினால், எல்லாவிதக் கஷ்ட, நஷ்டங்களும் நீங்கப் பெற்று, சகல சௌபாக்கியங்களையும் பெறுவர். குடும்பத்தில் நல்லிணக் கமும், அமைதியும், சுபீட்சமும் நிலவும். எடுத்த கருமங்கள்; வெற்றியும், சித்தியும் அடையும். நோய் நீங்கும். கல்வி, செல்வம், புகழ் முதலிய எல்லாச் சிறப்புக்களும் பெறுவர்.

## ஆலய வழிபாடு:

அன்றைய தினம், ஆலயத்தில், விநாயகரை, தோப்புக்கரணம் போட்டு வழிபட வேண்டும். ஆலயத்தை எட்டுமுறை சுற்றிப் பிரதட்சிணம் செய்து, வணங்க வேண்டும். என்று கூறப்படுகிறது. பூசைகள் நிறைவு பெற்றதும், வீட்டுக்கு வந்து, விரதத்தை முடித்துக்கொள்ள வேண்டும். இவ்விரதகால, விநாயகர் வழிபாட்டின்போது, பெருமானுக்கு அறுகம்புல் மாலை, வெள்ளெருக்குப் பூமாலை சாற்றி வழிபடுதல் முறையாகும்.

சங்கடஹரசதுர்த்தி தினத்தில், விநாயகருக்குரிய காயத்திரி மந்திரம் உச்சாடனம் செய்தும், ஔவையார் அருளிய விநாயகர் அகவலைப் படித்தும், விநாயகர் காரியசித்திமாலை பாடல்களைப் பாடியும், பிரணவமந்திரத்தை உச்சாடனம் செய்தும், விநாயகப் பெருமானை வணங்கித் துதித்து, வழிபாடு செய்தால் அதிகபலன் உண்டு. எண்ணியவற்றை, எண்ணியபடி, எய்துவர்.

**அகரமென அறிவாகி யுலகமெங்கும்**
**அமர்ந்து அகர உகர மகரங்கள் தம்மால்**
**பகருமொரு முதலாகி வேறுமாகிப்**
**பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு**
**புகரில் பொருள் நான்கினையும் இடர்தீர்ந்தெய்தப்**
**போற்று நகருக்கு அறக்கருணை புரிந்து, அல்லார்க்கு**
**நிகரிமறக் கருணை புரிந்து ஆண்டு கொள்ளும்**
**நிருமனைக் கணபதியை நினைத்து வாழ்வாம்.**

## விநாயகர் சட்டி விரதம்:

இவ்விரதம், பிள்ளையார்கதை விரதம், பெருங்கதை விரதம், மார்கழிச்சட்டி விரதம் எனவும் அழைக்கப்படுகிறது.

ஆண்டு தோறும், கார்த்திகை மாதம், அபரபக்கப் பிரதமை முதல், மார்கழி மாதத்துப் பூர்வபக்கச் சஷ்டி வரையிலான இருபத்தியொரு நாட்கள், இவ்விரதம் அனுட்டிக்கப்படுகிறது.

## விநாயகர் சட்டி விரதம், அநுட்டிக்கும் முறை:

இவ்விரதத் தொடக்க நாளில், விநாயகர் ஆலயத்திற்குச் சென்று, பவித்திரம் அணிந்து, சங்கல்பம் செய்ய வேண்டும். அவ்வேளை, இருபத்தொரு இழைகளோடு கூடிய காப்பை, ஆண்கள் வலது கையிலும்; பெண்கள் இடது கையிலும் கட்டிக் கொள்வர். காப்புக் கட்டுதல் என்று இதனைக் கூறுவர். இது விரத நியமம் ஆகும். ஆலயக் குருக்கள், பவித்திரம் அணிதல், காப்புக் கட்டுதல் ஆகிய காரியங்களை மந்திரபூர்வமாக, விரதிகளுக்கு நடத்தி வைப்பார். இருபத்தொரு நாட்களும், இவற்றைக் கழற்றக் கூடாது.

முதல் இருபது நாட்களும், ஒருவேளை உணவு உண்டு, இறுதிநாள், உபவாசம் (உண்ணா நோன்பு) இருந்து, மறுநாட்காலை, பாரணம் செய்து, இவ்விரதம் நிறைவு செய்யப்படும். பாரணம் செய்தவர், அன்றைய பகற்பொழுதில் உறங்குவதைத் தவிர்த்தல் வேண்டும். உறங்கினால், அது பாவகாரியம் ஆகும்.

மார்கழிச்சட்டியன்று, விநாயகராலயங்களில் நடைபெறுகின்ற கயமுகாசுரசங்காரத்தைத் தரிசித்து, விநாயகப்பெருமானின் திருவருட் கடாட்சத்தைப் பெறுதல், விரத நியமமாகக் கொள்ளப்படுகிறது.

விநாயகர்சட்டி விரத முடிவில், பாரணைத் தினத்தன்று காப்பு அவிழ்த்தல் நிகழ்வு இடம்பெறும். இதனையும் ஆலயக் குருக்களே, ஆலயத்தில் நிகழ்த்தி வைப்பார்.

### விரத நியமங்கள்:

இந்த இருபத்தொரு நாட்களிலும், ஆசாரசீலராய், மச்சமாமிசங்கள் புசிக்காதவராய், பஞ்சமாபாதகங்களில் ஈடுபாடு கொள்ளாதவராய், இயம நியமங்களைத் தவறாது கடைப்பிடிப்பவராய் ஒழுகவேண்டியது விரதி களின் கடமையாகும். தவப்பொழுதை அவப்பொழுதாக்கல் ஆகாது.

### விரதகால வழிபாட்டு முறைகள்:

விரத காலங்களில் ஆலய தரிசனம் செய்தல் வேண்டும். இறை வழிபாடு, மற்றும் அபிஷேகங்கள், பூசை, ஆராதனைகள், திருவிழாக்கள், ஆலயத்தொண்டுகள், கூட்டுப்பிரார்த்தனைகள், விநாயகர் புராண படனம், பிள்ளையார்கதை வாசித்தல், வாசிக்கக் கேட்டல், பாராயணம் செய்தல் என்பவற்றில் சிரத்தையுடன் கலந்து கொள்ளுதல் வேண்டும்.

விநாயகர்சட்டி விரதம், இருபத்தொரு வருடங்கள் தொடர்ச்சியாக அனுட்டிக்கப்பட்டதன் பின்னர், விரத உத்யாபனம் செய்து நிறுத்திக் கொள்ளலாம் எனக் கூறப்படுகிறது.

### வீட்டில் வழிபாடு:

விரத நாட்களில் வீட்டிலும் விநாயகர் படம் வைத்தும், பசுவின் சாணம், மஞ்சள்மா, களிமண், சந்தனம், விபூதி, இவற்றில் ஒன்றில் பிள்ளையார் பிடித்து, அறுகம்புல்குற்றி வைத்தும், விநாயகப்பெருமானை மெய்யன்போடு, காலை, மாலை வழிபாடு செய்யலாம். விநாயகரின் திருவருள் கிடைக்கும். பிள்ளையார்கதை படித்தல், ஔவையார் அருளிய விநாயகர்அகவல் பாராயணம் செய்தல், காரியசித்திமாலை மற்றும் மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை ஆகியவற்றைப் பாராயணம் செய்தல் ஆகியவற்றை வீட்டில் பூசையின்போது நிகழ்த்தலாம்.

விரத நிறைவு நாளன்று, விரதபலன்கள் கிடைக்கப்பெற வேண்டும் என விநாயகரைப் பிரார்த்தித்து, அடியார்கள், ஏழைகள் மற்றும் ஊன முற்றவர்கள் ஆகியோருக்கு உணவளித்தும், அந்தணர்களுக்குத் தானம் வழங்கியும், பசுக்களுக்கு அறுகம்புல் உண்ணக் கொடுத்தும் விரதத்தை நிறைவு செய்தல் முறையாகும்.

### பிள்ளையார்கதை விரத நாட்களில், விநாயகருக்குரிய நிவேதனப் பொருள்கள்:

"கரும்பும் இளநீரும், காரெள்ளும் தேனும், விரும்பும் அவல்", மற்றும் "எள்ளுபொரி தேன் அவல் அப்பமிக்கும் பயறும் இளநீரும் வள்ளிக் கிழங்கும், மாம்பழமும், வாழைப்பழமும், பலாப்பழமும், வெள்ளைப்பாலும், மோதகமும் விரும்பிப் படைத்தேன்," ஆகிய பாடல்வரிகள் விநாயகருக் குரிய நிவேதனப் பொருள்களைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

விநாயகர் உணவுப் பிரியர் என்று கூறப்படுகிறது. விநாயகருக்குக் கரும்பு, இளநீர், எள்ளுருண்டை, தேன், அவல், அப்பம், வள்ளிக்கிழங்கு, மோதகம், கொழுக்கட்டை, பசும்பால், கற்கண்டு, மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் என்னும் முக்கனிகள், திராட்சை என்பனவற்றை நிவேதனம் செய்தல், சிறந்தது.

**பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும்**
**கலந்துனக்கு நான் தருவேன்.** - என்பது ஔவை வாக்கு

**கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி**
**கப்பியகரிமுகன் அடிபேணி** - என்பது அருணகிரிநாதர் திருப்புகழ் வரிகள்.

விநாயகருக்குரிய நிவேதனப் பொருள்களை, இப்பாடல் வரிகளில், அருளாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும் அமுது, சர்க்கரை, பொங்கல், அவரை, நாவல்பழம், நெய். பிட்டு, பொரிமா, லட்டு, வெள்ளரிப்பழம், விளாம்பழம், தேங்காய், மிளகு சாதம், வடை, வெண்பொங்கல், தினைமா, பணியாரம் என்பனவும் விநாயகருக்கு விருப்பமானவையாகும்.

## விநாயகர் சட்டி விரத மகிமை:

விட்டுணு, ஒருமுறை, சிவபெருமானைத் தரிசிக்க விரும்பி, திருக்கைலாயமலைக்குச் சென்றார். விநாயகரைக் கருத்திற் கொள்ளாது, உட்சென்று, சிவபெருமானை வணங்கினார். அப்பொழுது, விட்டுணுவை அமரும்படி கூறிவிட்டு, அருகில் இருந்த உமாதேவியாரை நோக்கித் தம்முடன் சூதாட வரும்படி அழைத்தார். உமாதேவியாரும் சம்மதித்து, இருவரும் விளையாடத் துவங்கினார்கள். விட்டுணு, நடுவர் ஆக அமர்த்தப்பட்டார். சிவபெருமானின் பணிப்பை ஏற்று, விட்டுணு அதற்கு உடன்பட்டார்.

உமாதேவியார் நன்கு கவற்றை எறிந்து விளையாடினார். சிவபெருமான் தோல்வியைத் தழுவும் நிலையில், தேவியாரை நோக்கி, "விளையாட்டில் நின் வலிமை நன்று" என்று கூறி, நகைத்தார், பின்னர், "நீ விளையாட்டில் வெற்றி பெறவில்லை", என்றும் கூறினார். உமாதேவியார், சிவபெருமான் தீர்ப்புச் சொன்னதைக் கேட்டுத் திடுக்குற்று, அவருடன் வாதாடுவதற்கு அஞ்சி, நடுவராகவும், சாட்சியாகவும் கடமையாற்றிய விட்டுணுவை நோக்கி, சரியான தீர்ப்பைக் கூறும்படி கேட்டார்.

விட்டுணு, "சூது வென்றவர், சிவபெருமானே", என்று தீர்ப்புக் கூறினார். விட்டுணுவின் ஓரவஞ்சகத் தீர்ப்பைக் கேட்ட உமாதேவியார், கோபங்கொண்டு, விட்டுணுவை நோக்கி, "நீ, விளையாடினதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தாய், யார் வென்றவர் என்பதைத் தெரிந்து கொண்டு, பொய்த் தீர்ப்பை வழங்கினமையால், தண்டனையாக, நீ கடும்பசி கொண்ட குருட்டுப் பாம்பாகக் கடவாய்", என்று விட்டுணுவைச் சபித்தார். அக்கணமே, விட்டுணு பாம்பு ஆக மாற்றம் பெற்றார். பொய்ச்சாட்சி சொன்னால், தண்டனை கிடைப்பது உறுதி, என்பது இதன் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது.

விட்டுணு துயரடைந்து, முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை வணங்கித், தமக்குச் சாபவிமோசனம் அளிக்கும்படி வேண்டினார். சிவபெருமான் அளப்பருங் கருணையுடையவர், விட்டுணுவை நோக்கி, "நீ, தென்தேசத்திலே, ஆலவனம் என்ற இடத்திற்குச் செல்வாயாக; அங்குள்ள ஆலமரத்தின் அடியில், பொந்து ஒன்று இருக்கிறது. அப்பொந்துக்குள், இச்சாபம் நீங்கும்வரை, கடுந்தவம் புரிந்து கொண்டிரு. அக்காலகட்டத்தில் நம்முடைய குமாரனாகிய விநாயகன் அங்கு வருவான். நீ விநாயகனை அணுகித் தரிசிக்கும்போது, உனக்குச் சாபவிமோசனம் அளித்து, இப்பாம்பு வடிவம் நீங்கப் பெறுவாய்," என்று திருவாய் மலர்ந்தருளினார். விட்டுணு, சிவபெருமானை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, ஆலவனத்திற்குச் சென்று, அங்குள்ள ஆலமரப் பொந்திற்குள் புகுந்து, தவம் செய்யலானார்.

திருமால் பொய்ச்சாட்சி சொன்னதன் விளைவாக, உமையின் சாபத்திற்குள்ளாகி, கடும்பசியுடன், குருட்டு மலைப்பாம்பாகி ஆலமரப் பொந்தில் வாழ்ந்து வந்த காலத்திலே, தேவலோகச் சப்தகன்னியரிட மிருந்து, விநாயகர்சட்டி விரதத்தை அனுட்டிக்கும் முறையையறிந்து, தாமும் விரதம் இருந்தார்.

விநாயகர் கயமுகசங்காரத்தை நிகழ்த்தி, தேவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்த பின்னர், கணபதீச்சரத்திலிருந்து, மூஷிக வாகனத்தில் திரும்பும் வழியில், தம்மை நோக்கி, விட்டுணு மலைப்பாம்பு வடிவில் தவமிருக்கும் ஆலவனத்தைச் சென்றடைந்தார். அங்கு ஆலமரப் பொந்துக் குள் சட்டிவிரதம் அநுட்டித்துக் கொண்டிருக்கின்ற விட்டுணுவுக்குச் சாப விமோசனம் அளித்தார். மகாவிட்டுணு தம் சாபம் நீங்கப்பெற்று, சுயவடிவம் பெற்றார்.

மகாவிஷ்ணு, விநாயகரை நோக்கி, தமக்குக் காட்சியளித்து, சாபம் நீக்கிய அந்த மார்கழிமாத வளர்பிறைச்சட்டி நாளில், விநாயகரை, விரதமிருந்து எவர் வழிபாட்டாலும், அவர்கள் வேண்டும் வரங்களை வழங்கி, சகல துன்பங்கள், துயரங்களிலிருந்தும் விடுபட்டு, இனிய இன்பவாழ்வு வாழ, அவர்களுக்குத் திருவருள் புரியவேண்டும் என்று விண்ணப்பித்தார். விநாயகரும் மகிழ்ச்சியோடு இணக்கம் தெரிவித்தார்.

## விரத மகிமை

மனத்தைப் புலன்வழிச் செல்லாது, ஒருவழிப்படுத்தி, இறை வழிபாட்டில் ஈடுபடுவதற்கு உதவுவது, விரதம். மனத்தை அடக்க முயன்றால் அலையும். அதனால்,மனம், அதாக அடங்க வழி செய்வதே, விரதம். அடங்காத ஐம்புலன்களையும், ஓரளவாவது அடங்கச்செய்து, இறைவழிபாட்டில் ஈடுபடுத்துவது, விரதமாகும்.

மனிதன், தன்னிடமுள்ள அகந்தை - தற்பற்று; மமதை - பொருட் பற்று; ஆகியவற்றை அடங்கச்செய்து, தெய்வீகத் தன்மையை ஒளிவீசச் செய்வது, விரதம்.

# விரத விழுமியங்கள்

★ விரதம் அனுட்டிப்பதன் நோக்கங்களுள், ஐம்புலன்களின் ஆசை, அவாக்களை அடங்கச் செய்தல் முக்கியமானது ஆகும். அத்துடன் எண்ணங்களையும் கட்டுப்படுத்த வேண்டும். "அன்னசுரனை கூடினால் அட்சரசுரனை குறையும்" என்பது ஆன்றோர் வாக்கு. உணவில் பிரியம் இருந்தால், கல்வியில் மனம் செல்லாது, என்பது இக்கூற்றின் பொருள்.

★ "மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு, உணவை விடுத் தேனுஞ், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும்"

- நாவலர் பெருமான்.

★ மனஅடக்கம், புலனடக்கம், அகங்காரம், மமகாரம், அகம்பாவம், சினம், பேராசை, கடும்பற்று, உயர்வு - தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் போன்ற தீயகுணங்களின் பிடியிலிருந்து விலகி இருத்தல்,
- **"தனித்திரு"** என்பதன் அர்த்தம் இதுவாகும்.

★ விரதம், தவம், நோன்பு, உபவாசம் என்பன ஒத்தகருத்துச் சொற்கள். "தவம் செய்வார் தங்கருமம் செய்வார் மற்றல்லார் அவம் செய்வார் ஆசையுட்பட்டு" - திருக்குறள்.

★ தவம், - விரதம் பற்றிக் கூறும்போது, வள்ளுவப் பெருமான் "உற்ற நோய் நோன்றல் உயிருக்கு உறுகண் செய்யாமை அற்றே தவத் திற்குரு", என்கிறார்.

தமக்கு ஏற்பட்ட துன்பம், துயர்களைப் பொறுத்தலும், சகித்துக் கொள்ளலும், ஏனைய உயிர்களுக்குத் துன்பம், இடர்கள் செய்யா திருத்தலும் ஆகிய அவ்வளவே, தவம் - விரதம் ஆகும், என்பது இக்குறட்பா தரும் கருத்து. விரதம் அனுட்டிப்பவர்கள் இவற்றைக் கருத்தில் கொண்டு, விரத காலங்களில் மட்டுமன்றி, வாழ்நாட்கள் முழுவதும், அவற்றைப்பேணி, நலம் காத்து வரவேண்டியது இன்றி யமையாததாகும். "காப்பது விரதம்".

★ **"பசித்திரு"** - என்னும் விரத நியதி, பொதுவாக நோக்குமிடத்து உணவு உட்கொள்ளாமல், குறிப்பிட்ட காலம் இருத்தல், அல்லது உணவைச் சுருக்குதல் - ஒருநேரம் உணவு உட்கொள்ளல், போன்ற கருத்துக்களை உள்ளடக்கியதாகப் புலப்படும். நாவடங்கினால், உடம்பினால் செய்யும் தீயன அடங்கிவிடும். உடல் இன்பங்களைத் தியாகம் செய்யும்போது, புலனின்ப வேட்கையும் தணிந்து விடுகின்றது. புலனடக்கம், மன அடக்கம் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளமை நோக்கற்பாலது.

★ "இறைவனை அடைய வேண்டும்" என்னும் மனவைராக்கியத்தோடு, ஒவ்வொரு கணப்பொழுதையும் கழித்துக்கொண்டு இருத்தல் "பசித் திரு", என்பதால் உணர்த்தப்படுகின்ற உண்மையாகும்.

★ **"விழித்திரு"** என்னும் விரதநியதி, விரதநாட்களில் நித்திரை செய் யாமல், கண்விழித்திருப்பதைக் குறிப்பதாக, பொதுவில் கூறப்படு கிறது. சிவராத்திரி, ஏகாதசி விரதம் அனுட்டிப்பவர் இரவு நான்கு சாமங்களிலும் கண்விழித்திருந்து இறைவழிபாடு செய்வதை

உதாரணமாகக் கூறலாம். அத்துடன் உபவாசம் இருந்து, பாரணம் செய்தவர்கள், அன்றைய பகல்பொழுதில் உறங்குவது, மகாபாவ காரியம் என்று புராணங்கள் கூறும்.

★ ஐம்புலன்கள் வழிச்செல்லும், ஆசை அவாக்கள், மற்றும் தீய எண்ணங்கள், உள்ளத்தினுள்ளே சிறிய அளவில் தன்னிலும் செல்ல விடாது, விழிப்போடு இருத்தல்; விழிப்போடு, கவனமாயிருத்தல், என்பது "விழித்திரு" என்பதன் உட்பொருள் ஆகும்.

★ விரத காலங்களில், பகல் நித்திரை, தாம்பூலம் தரித்தல், புகைத்தல், மது மற்றும் போதைப்பொருள் பாவனை, சிற்றின்பம் துய்த்தல், பிறரை நிந்தித்தல், புறம்கூறல், வீண்வார்த்தைகள் பேசுதல் என்ப வற்றைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். தவறினால் தெய்வ தண்டனைக்கு ஆளாக வேண்டிவரும்.

★ மனிதர்கள் இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும், ஆன்ம ஈடேற்றம் அடைவதற்கும், வழிமுறைகள், சைவநெறியில் விதிக்கப் பட்டுள்ளன. அவ்வாறே, விலக்க வேண்டியவை யாவை? என்பது பற்றியும், குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை வாழ்க்கையில் பேணி, அனுஷ்டிப்பதை விரதமாகக் கொள்ளல் இன்றியமையாததாகும். "காப்பது விரதம்" என்பது முதுமொழி.

★ விரதம் இருவகை: அவையாவன, நித்தியவிரதம், மற்றையது நைமித்திய விரதம். நித்தியவிரதங்கள், மனிதர்களால் வாழும் காலம் முழுவதும் விடாது அனுஷ்டிக்கப்பட வேண்டியவை. கொல்லாமை, கள்ளாமை, மது அருந்தாமை, புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனை தவிரத்தல், பொய்யாமை, செய்நன்றி மறவாமை, தீவினை எச்சம், புலாலுண்ணாமை, கூடாவொழுக்கம், காமம் கொள்ளாமை, பிறர் மனை விழையாமை, வெகுளாமை வெ.:காமை, தீயார் நட்புத் தவிர்த்தல், பயனிலை சொல்லாமையும் கேளாமையும்; அன்புடமை, கருணை, அடக்கமுடைமை, அவாவின்மை, இன்னா செய்யாமை, அழுக்காறு (பொறாமை) கொள்ளாமை, இன்சொல் பேசுதல், பேராசை, கடும்பற்று, எதிர்ப்பால் கவர்ச்சி, உயர்வு - தாழ்வு மனப் பாங்கு, சினம் ஆகிய ஆறு தீக்குணங்களையும் விட்டொழித்தல், ஆகியவற்றை நேர்மையுடன் வாழ்வில் கடைப்பிடித்து, அவற்றின் நலம் காத்து தூயவராய் வாழுதல், நித்திய விரதங்களுள் அடங்குகின்றன.

★ நைமித்திய விரதமாவது, உபவாசம் முதலிய நியமங்களுடனும், சங்கல்பத்துடனும் அனுட்டிக்கப்படுவது. விநாயகசதுர்த்தி, விநாயக சட்டி விரதங்கள், வெள்ளிக்கிழமை, கந்தசஷ்டி, கார்த்திகை, சிவராத்திரி போன்ற விரதங்கள், இவ்வகைக்கு உதாரணங்கள்.

★ இறைவனை எஞ்ஞான்றும் மறவாது, நினைத்து வாழ்வதற்கும், சமய ஆசாரங்களைப் பேணுவதற்கும், மனஅடக்கம், புலனடக்கம் மேற் கொள்வதற்கும், உடல்நலம், மனநலம், உயிர்நலம், மனித ஒழுக்கப் பண்புநலம் ஆகியவற்றை ஸ்திரப்படுத்துவதற்கும், பலவிரத நியதி களை நம்முன்னோர் ஏற்படுத்தினர். "நோன்பு என்பது கொன்று தின்னாமை".

★ மும்முறை, ஒருநாளுக்கு உண்பவன் ரோகி; இருமுறை உண்பவன் போகி; ஒருமுறை உண்பவன் யோகி என்பர். நம் ஆன்றோர்.

மனிதனின் அஞ்ஞான, இருளைப் போக்கி மெய்ஞ்ஞான ஒளியை விளங்கச் செய்ய, விரதங்கள் உதவுகின்றன.

★ விரதத்தின் வழியாக இறையருளைப் பெறுதலே, அதன் நோக்கம்.

★ இறைவனின் திருவருளைப் பெறவேண்டுமென்றால், மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் தூய்மை பெறவேண்டும்.

★ மனத்தில் இறைவனை இருத்தி, இறைசிந்தனையோடு இருத்தல், மனம் மற்றும் கருவி கரணங்களை இறைபணிகளில் செலுத்துதல், இறைவனோடு உபவாசம் செய்தல் - உடனுறைதல், தானதர்மங்கள் செய்தல், சத்சங்கம், நல்லோருடன் இணைந்திருத்தல், மற்றும் கோபம் கொள்ளுதல், பிறரை வைதல், புறம்பேசுதல், கெட்டவார்த்தைகள் பிரயோகித்தல், பிறரை தூர்த்துதல், கோள் சொல்லுதல் ஆகிய வற்றில் ஈடுபடாது இருத்தல் இவை விரதமாகும்.

★ சுருங்கக்கூறின், கடவுளால் விரும்பப்படுவவற்றை செய்தலும்; விலக்கப்பட்டவற்றை செய்யாது விடுதலும், வாழ்க்கை விழுமியங்கள் ஆகும். இவற்றை விரத காலங்களில் பயிற்சி செய்து, வாழ்நாட்கள் பூராகவும் கடைப்பிடிக்க வேண்டும். அப்பொழுதுதான் விரதம் அனுஷ்டித்தலின் பூரண பலன்களைப் பெறமுடியும்.

★ "கடவுளால் விரும்பப்படுபவை: இரக்கம், வாய்மை, பொறாமை, அடக்கம், கொடை, தாய், தந்தை முதலிய பெரியோர்களை வழிபடு தல் முதலிய நன்மைகளாம். கடவுளால் வெறுக்கப்படுபவைகளாவன: கொலை, புலாலுண்ணல், களவு, கள்ளுண்ணல், விபசாரம், பொய், செய்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்" - நாவலர் நான்காம் பாடத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

★ வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கும், நல்லவண்ணம் வாழ் வதற்கும், மனிதப்பிறவி எடுத்ததன் இறுதிப்பயனை எய்துவதற்கும், கடவுளை விசாரித்துக் கருமமாற்றுதல் முன்நிபந்தனையாகும். கடவுளை விசாரித்துக் கருமமாற்றுதல் என்பது; கடவுளால் விரும்பப் படுபவற்றைச் செய்தலும், விலக்கப்பட்டவற்றைச் செய்யாதொழி தலும் ஆகும்.

★ எக்கருமத்தையும், செய்யத் தொடங்குவதற்கு முன்னர், முதலில் விநாயகப்பெருமானை வணங்கி, வழிபாடு செய்து, தேங்காய் உடைத்து, பிள்ளையாரே, நான் தொடங்கும் இக்கருமம், விக்கினங் கள், தடைகள், இடையூறுகள் இன்றி இனிது நிறைவேற வேண்டும், அதற்குத் திருவருள் பாலிக்க வேண்டும். என்று விண்ணப்பித்து, பெருமானின் அருட்துணையுடன் கருமத்தைத் தொடங்குவது என்பதன் உட்கருத்து, கடவுளை விசாரித்து, ஒப்புதல் பெற்றுக் கருமத்தை ஆற்றுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்கு அமைவானதாகும்.

★ மகாத்மாகாந்தியடிகள், சத்தியம், அஹிம்சை இரண்டையும் வாழ் நாள் விரதமாகச் சங்கல்பித்து, இம்மியளவும் வழுவாமல், ஒழுகினார். அதனால், அவர் ஆன்மீக வலிமையைப் பெற்றிருந்தார். உடல் வலிமை, மனவலிமை இரண்டையும் போஷிப்பது ஆன்ம வலிமை யாகும்.

★ விரதம், தவம் என்பவற்றின் மூலம் ஆன்மவலிமை உறுதிப்படுத்தப் படுகிறது.

# 08 காணாபத்திய நெறி

## காணாபத்தியம்

இந்துமதம், ஆறு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை; சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன ஆகும். ஒவ்வொன்றும், ஒவ்வொரு சமயநெறியாக விளங்கு கின்றது. ஒவ்வொரு சமயநெறிக்கும், ஒவ்வொரு கடவுள், முழுமுதல் கடவுளாகப் போற்றி, வழிபாடு செய்யப்படுகிறார். அந்தவகையில், சிவபெருமான், சைவத்திற்கும்; விஷ்ணு, வைணவத்திற்கும்; சக்தி, சாக்தத்திற்கும்; கணபதி, காணாபத்தியத்திற்கும்; முருகன், கௌமாரத் திற்கும்; சூரியன், சௌரத்திற்கும்; முழுமுதல் கடவுள்களாக விளங்கு கின்றனர்.

காணாபத்திய நெறியின்படி, கணபதிப்பெருமானே, மிக உயர்ந்த கடவுளாகக், கருதப்படுகிறார். சிவன், பிரமா, விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளை விட, கணபதிக்கடவுள் மேலானவர் என்பதைக், கணபதி உபநிடதம் கோடிட்டுக் காட்டுகிறது. கணபதியும் விநாயகரும் ஒருவரே என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

காணாபத்தியம், தமிழ்நாட்டிலும், நம்நாட்டிலும், காலப்போக்கில் சைவநெறியுடன் இணைக்கப்பட்டுவிட்டது. பிரமச்சாரியாக விநாயகர் கருதப்பட்டு, அவரின் விக்கிரக வடிவம், ஆலயங்களின் கருவறையிலும், மற்றைய ஆலயங்களில் பிள்ளையார் தனிச் சந்நிதிகளிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளமை, குறிப்பிடத்தக்கது. நமது இலங்கை நாட்டில், சைவத்தமிழர் வாழுகின்ற பிரதேசங்களில், ஊர்கள் தோறும் ஒன்றுக்கும் மேற்பட்ட பிள்ளையார் ஆலயங்கள், உள்ளன. நம்நாட்டில், பிள்ளை யாருக்குத் தரப்பட்டுள்ள முதன்மையும், முக்கியத்துவமும், இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். எதற்கெடுத்தாலும், ஆபத்திலோ, அளவுகடந்த மகிழ்ச்சியிலோ, துன்பத்திலோ, அதிர்ச்சியிலோ, "பிள்ளையாரே!" என்று தான் ஒலியெழுப்புகின்ற பழக்கம், நம்மவர்களிடம் நன்கு வேரூன்றி யுள்ளது.

வடஇந்தியாவில், விநாயகர், சித்தி, புத்தி ஆகிய இரு தேவி யருடன் கூடியவராய், சிலைகள் அமைக்கப்பெற்று, வழிபடப்படுகிறார். வல்லவாம்பிகையுடன் உறைவிநாயகர் விக்கிரகங்களையும், சில விநாயகராலயங்களில், காணமுடிகிறது.

வடமொழிப் புராணங்களான, சிவபுராணம், மச்சபுராணம், வராக புராணம், கந்தபுராணம் ஆகியன விநாயகர் தோற்றம், வரலாறு, அருட்செயல்கள், மற்றும் திருவிளையாடல்கள் பற்றிக் கூறுகின்றன. அவை வெளிப்பார்வைக்கு, உலகியல் சார்ந்தவை போலத் தோன்றினாலும், ஆழ்ந்து நோக்கில், ஆன்மீகம் நிறைந்தவை, அருள் நோக்குடையவை; கருத்துள்ளவை, என்பது தெரியவரும்.

### கணபதி வழிபாடு:

விநாயகரின் மற்றொரு திருப்பெயர், கணபதியாகும். பூதகணங் களுக்குத் தலைவராக இருப்பதால், கணபதி என்ற பெயர், தந்தையாரால் வழங்கப்பட்டது. வழிபாட்டிலும், கணபதிக்கு முதன்மை வழங்கப் பட்டுள்ளது. விநாயகரின் மற்றொரு திருப்பெயர், பிள்ளையார் என்பதாகும். இந்துக்கள் ஒன்றை எழுதத் தொடங்கும்போது பிள்ளையார் சுழி, முதலில் இட்டு, அதன் பின்னரே எழுதத் தொடங்குதல், வழமையாகும். நூல்களை இயற்றுகின்ற புலவர்கள், புலமையுள்ளவர்களும், கணபதிக்குக் காப்புச் செய்யுள் பாடிய பின்னரே, தொடர்ந்து நூலைப் பாடுவது மரபு ஆகும். இவ்வாறு, இடர்; களையும்; கணபதிப்பெருமானை, முதலில் வணங்கி, ஆரம்பிக்கும் எந்த ஒரு கருமமும், காரியமும் வெற்றியாகும் என்பதில், இந்து மக்களுக்குப் பூரண நம்பிக்கையுண்டு. விக்கினங்களை நீக்குபவர், என்பதால், கணபதிக்கு, விக்கினேஸ்வரர், விக்கினராஜா ஆகிய திருப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.

அண்டங்கள் அனைத்தையும், தன் வயிற்றினுள் அடக்கிக் கொள் பவர், என்ற வகையில், "இலம் போதரர்" என்றும், அடியார்களைப் பீடித்துள்ள, மாயை எனும் கொடிய இருளைத் துண்டிப்பவராகையால், "வக்கிரதுண்டர்', என்றும், கணபதிக்கடவுள் அழைக்கப்படுகிறார். கருணை நிறைந்த கடவுள், கணபதிப்பெருமான்.

**பிடியத னுருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்**
**கடிகண பதிவர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.**

- திருஞானசம்பந்தர் தேவாரம்

ஆதியில், சிவபெருமான், தன்னுடைய அடியார்களின் இடர்களைத் தானே நீக்கி, அருள் பாலித்தார். பின்னர், ஒரு இடர் நீக்கும், நிவாரண மூர்த்தியைத், தன்னுடைய குமாரனாகப் பெற்று, அடியார்களுடைய இடர்; களையும் பணியை அவரிடமே ஒப்படைக்கத், திருவுளங் கொண்டார். அவ்வேளை, சிவபெருமான், ஆண்யானை வடிவங் கொண்டார். பிடியாக, வடிவம் கொண்டார், உமாதேவியார். பிடி என்பது பெண்யானை. இருவரும் கூடினர், ஆனைமுகன் தோன்றினான். அடியார்களின் இடர்; களையும் பணி, கணபதிப்பெருமானிடம் ஒப்படைக்கப்பட்டது. விக்ன நிவாரண மூர்த்தியாக, கணபதிப்பெருமான் கொள்ளப்பட்டு வரலானார். இந்த அருட்சம்பவத்தையே, திருஞானசம்பந்தப்பெருமான், மேற்படி தேவாரப்பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

கணபதி, பிரம்மசொரூபி; வேதசாரமாகத் திகழ்கின்றார். இருக்கு வேதத்தில் இவரின் நாமம், கணபதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வேதங்களின் சாரம், பிரணவம். எனவே, கணபதி, பிரணவ சொரூபி, ஓங்காரமூர்த்தி, என்றும் அழைக்கப்படுகிறார். இவர் "பிரணவப் பொருளாம் பெருந்தகை", எனவும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

"அ, உ, ம" என்ற எழுத்துக்கள், ஒன்றிணையும்போது, உருவான 'ஓம்' எனும் பிரணவம், வேதங்களான இருக்கு, யசுர், சாமம் என்பவற்றின் தேறல், என வேதவிற்பன்னர்கள் கூறியுள்ளனர். வேதங்கள் அறிவு

மயமானவை; அறிவுக்களஞ்சியம். அவற்றின் சாரமாய் அமைவது, பிரணவம். பிரணவப்பொருளாய் விளங்குபவர், கணபதிப்பெருமான். கணபதியை வழிபட்டு வந்தால், நாமும் நமது அறிவைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

யசுர்வேதம்; கணங்களுக்கும்; கணங்களின் தலைவனான கணபதிக்கும், முதலில் வணக்கம் செலுத்துகிறது. கணபதிக்கடவுள் முதல்வணக்கத்திற்குரியவர் என்பதை இது காட்டுகிறது. இதைத் தொடர்ந்து, விநாயகன் என்னும் திருப்பெயர், இவருக்கு உருவாயிற்று, விநாயகன் என்பது, சிறந்த, ஒப்பற்ற நாயகன் - தலைவன், என்ற பொருளைத் தருதல் மட்டுமல்லாமல், விகிதநாயகன், தனக்குமேலே தலைவன் என மேலொருவன், இல்லாதவன், தனிப்பெருந்தலைவன், தானே; என்பதையே உணர்த்துகிறது. சுருங்கக்கூறின்; எல்லோருக்கும் தலைவன் ஆகவும், தனக்கு மேலே தலைவன் அற்றவனாயும் விளங்குபவர், விநாயகக்கடவுள் ஆவார்.

## கணபதி உபநிடதம், கணபதி மந்திரமுமாகும்:

இம்மந்திரத்தைச் செபித்துக்கொண்டு, கணபதியை அபிடேகித்துப் பூசை செய்பவர்கள், நாவன்மையைப் பெறுவர். விரதமிருந்து, மந்திரசெபம் செய்பவர்கள்; வித்தைகள், கல்வி, கலைகள் ஆகியவற்றில் வல்லவர்கள் ஆவர். அத்துடன் பயம் எதுவும் ஏற்படாது. இம்மந்திரங்களால் அறுகம்புல் கொண்டு கணபதியை அர்ச்சிப்பவர், குபேரனுக்கு நிகராகப் பெரும் செல்வம் படைத்தவராக வாழ்வில், விளங்குவர். நெற்பொரிகளால் ஆகுதிகள் வழங்குவோர் பெரும்புகழ் அடைவர், மேதைகளாகவும் விளங்குவர். ஆயிரம் மோதகங்களை அவியாக வழங்கி வேட்டல் செய்பவர், தாம் விரும்பும் பேறுகளைப் பெறுவர். நெய், சமித்தி ஆகியவற்றால் ஆகுதி கொடுப்பவர், வேண்டும் அபிலாஷைகளை அடைவர். அத்துடன் குற்றங்கள், பாவங்கள் என்பவற்றிலிருந்தும் விடுபடுபவர். எல்லாம் அறிந்த அறிஞர் ஆகவும் திகழ்வர். இவ்வாறு கணபதி அதர்வசிர உபநிடதம் கூறுகிறது. "கணபதி பூசை, கைமேற் பலன்" என்பது ஆன்றோர் அனுபவ மூலம் பெறப்பட்ட வாக்கு.

## கணபதிக்கடவுளின் எளிவந்த தன்மை:

கணபதிக்கடவுள் மிக எளிமையானவர், இனிமையானவர், இதம் தருபவர், இரட்சிப்பவர். அவ்வகையில் கணபதி வழிபாடு, மக்கள் மத்தியில் பரந்தும், விரிந்தும் காணப்படுகிறது. நம்நாட்டிலும் தமிழகத்திலும், கணபதிப்பெருமான் தனிக்கோயில்களிலும் எழுந்தருளியிருக்கிறார், மற்றைய கடவுளர்களுக்கான கோயில்களிலும், தனிச்சந்நிதானம் தரப்பட்டுள்ளது. அத்துடன், அங்கு, கணபதிக்கடவுள் அரசமரத்தடியில், ஆலமரத்தடியில், மருதமரத்தடியில், ஆற்றங்கரையில், குளக்கரையில், வயல்வெளிகளில், நாற்சந்திகளில், சந்துபொந்துகள் மற்றும் தெருவோரங்களில் எங்கும் எழுந்தருளியிருக்கிறார். எப்போதும், எவருக்கும் கிட்டக்கூடிய கடவுளாக வீற்றிருப்பதே, கணபதிப்பெருமானின் தெய்வீக இயல்பு ஆகும்.

எந்தக் கருமத்தைத் தொடங்குமுன்னரும், அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றிய பின்னரும், அடியவர்கள் குடும்பமாகச் சென்று, தேங்காய்களைச் சிதற அடித்தும், பொங்கல் செய்தும், மடைபரவியும், நிவேதனப்பொருள்களைச் சமர்ப்பித்தும், கற்பூரதீப ஆராதனை செய்தும், அறுகம்புல், மலர்கள், வன்னிப் பத்திரங்களால் கணபதிப்பெருமானை அர்ச்சித்தும், பஞ்சபுராணங்கள் மற்றும் விநாயகர் அகவல் என்பவற்றைப் பாராயணம் செய்தும் வழிபடுவர். இவ்வழிபாட்டில் பக்திக்கே முக்கியத் துவம். மோதகம், அப்பம், அவல், பொரி, எள்ளுருண்டை, சர்க்கரைப் பொங்கல் மற்றும் வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் என்பனவற்றுடன் வெற்றிலை, பாக்கு என்பன கணபதிப்பெருமானுக்குரிய நிவேதனங்கள் ஆகும்.

## கணபதி வணக்கம் - முறை

கணபதியை வணங்கும்போது, அவர் முன்னிலையில் நின்று, இரு கைகளாலும், தங்கள் தலைகளில் குட்டித், தோப்புக்கரணம் போட்டு. வழிபடும் வழக்கம் நம் சைவமக்களிடையே நெடுங்காலமாக இருந்து வருகிறது.

கணபதி உபநிடதம், பின்வரும் பிரார்த்தனையோடு ஆரம்பிக்கிறது:

"ஓம் கணபதியே வணக்கம். நீயே காணும் உண்மை, நீயே படைப்பவனும், காப்பவனும், அழிப்பவனுமாய் இருக்கிறாய். நீயே எல்லாமாயுள்ள பிரமம், நீயே என்றுமுள்ள ஆன்மா என்பதில் ஐயமில்லை. உன்னிடமிருந்தே பிரபஞ்சம் தோன்றுகிறது. இப்பிரபஞ்சம் எல்லாம் உன்னிடமே சென்று ஒடுங்குகிறது. நீயே பிரமன், விஷ்ணு, உருத்திரன்."

## ஆதிசங்கரர் பாடிய கணேச பஞ்சரத்தினம்: (தமிழாக்கம்)

இப்பஞ்சரத்தினத்தைக், கணபதி வழிபாட்டின்போது, பக்தியோடு சொல்லி, வணங்குவோருக்கு, எடுத்த காரியங்கள் யாவும், தடை களின்றிச் சித்திக்கும்.

(1) "தனக்குமேல் வேறு ஒரு தலைவன் இல்லை என்ற ஒப்பற்ற தனிப் பெருந் தலைவனே!

கஜமுகாசுரனை அழித்துத் தேவர்களைக் காத்தவனே! அற்புதம் நிகழ்த்துபவனே! மோதகம் ஏந்தியவனே! சந்திரனைத் தலையில் சூடியவனே! உயிர்களை முக்தி நெறியில் செலுத்துபவனே! உன்னை நம்பும் அடியார்களின் தீவினைகளைப் போக்கிக் கருணை காட்டும் கணபதியே! உம்மை வணங்குகிறேன்."

(2) "தேவாதி தேவனே! பாமரர்களின் அறியாமையைப் போக்குபவனே! வல்லமை நிறைந்தவனே! ஆனைமுகனே! கருணைமிக்க இதயம் கொண்டவனே! அப்பாலுக்கும் அப்பாலாய் வீற்றிருக்கும் பரம் பொருளே! எப்போதும் உன் திருவடியைச் சரணடைந்து, வழிபடும் பாக்கியத்தை அருள்வாயாக."

(3) "சிங்கார வடிவினனே! கருணாமூர்த்தியே! பொறுமை, மகிழ்ச்சி, புகழ், மிக்கவனே! எல்லா உயிர்களும், மகிழும்படி நன்மை அருள் பவனே! அடியார் வேண்டும் வரம் தந்தருள்பவனே! நித்ய வடிவினனே! உன்னை வணங்குகிறேன்."

(4) "கன்னத்தில் மதநீர் பொழியும், கஜமுகப்பெருமானே! சிரிப்பாலே திரிபுர சங்காரம் செய்த சிவபெருமானின் புதல்வனே! பக்தர்களின் துயர் களைபவனே! ஊழிக் காலத்தில் உலகத்தைக் காத்தருள் பவனே! செய்யும் செயல்களின் வெற்றிக்குத் துணைநிற்கும் ஆதி பரம்பொருளே! உன்னை சரணடைந்து போற்றுகின்றேன்."

(5) "ஒற்றைக் கொம்பனே! கணபதீஸ்வரா! சிவபெருமானின் பிள்ளையே! ஆதி அந்தமில்லாதவனே! துன்பம் துடைப்பவனே! யோகியர் உள்ளத்தில் குடிகொண்டவனே! எப்போதும் உன் திருவடிகளில், சிரம் தாழ்த்தி வணங்கும் இச்சிறியேனையும் காத்தருள்வாயாக."

கணபதிப்பெருமானைப் போற்றும், "கணேச பஞ்சரத்தினம்" எனும் இத்துதியை, அதிகாலையில் பாராயணம் செய்வோருக்கு, நோய் நொடிகள், துன்பம், துயர்கள். கவலைகள் அனைத்தும் விலகும். தோஷங்கள் அனைத்தும் நீங்கும். வாழ்வில் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற உன்னதநிலை ஏற்படும். குலம் தழைக்க, மழலைச் செல்வம் கிடைக்கும். நல்ல புகழும், உடல்நலமும், நீளாயுளும், நிறை செல்வமும், மெய்ஞ்ஞானமும் கிடைக்கப் பெறுவர். அஷ்டமா சித்தி களும் கைகூடும். எனவே விக்ன விநாயகப்பெருமானை வழிபடு வோமாக.

**ஸ்ரீ கணபதி மூலமந்திரம்:**

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் கலௌம்
கம் கணபதியே வரவரத ஸர்வ ஜனம்மே
வசமாயை ஸ்வாஹா

**ஸ்ரீ கணபதி காயத்ரி மந்திரம்:**

ஓம் தத்புருஷாய வித்மஹே
வக்ர துண்டாய தீம் ஹி
தந்நோ தந்தி ப்ரசோத யாத்

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கவலை தீருமே.

**கணபதி; 32 வகை:**

(1) பாலகணபதி
(2) தருணகணபதி
(3) பக்திகணபதி
(4) வீரகணபதி
(5) சக்திகணபதி
(6) துவிஜகணபதி
(7) சித்திகணபதி
(8) உச்சிஷ்ட கணபதி
(9) விக்னகணபதி
(10) க்ஷிப்ரகணபதி
(11) ஏரம்பகணபதி
(12) லட்சுமிகணபதி
(13) மஹாகணபதி
(14) விஜயகணபதி
(15) நிருத்தகணபதி
(16), ஊர்த்துவகணபதி
(17) ஏகாட்சரகணபதி
(18) வரகணபதி
(19) திரயாக்ஷரகணபதி
(20) க்ஷிப்ரபிரசாதகணபதி
(21) ஹரித்திராகணபதி
(22) ஏகதந்தகணபதி
(23) சிருஷ்டிகணபதி
(24) உத்தண்டகணபதி
(25) ரணமோசனகணபதி
(26) துண்டிகணபதி
(27) துவிமுககணபதி
(28) மும்முககணபதி
(29) சிங்ககணபதி
(30) யோக கணபதி
(31) துர்க்காகணபதி
(32) சங்கடஹரகணபதி

## விநாயகரின் திருப்பெயர்களும், அவற்றிற்கான காரணங்களும்:

விநாயகரின் மகிமையையும், உருவத்தையும், ஆற்றலையும் விளக்கும் வகையில், அவரின் திருப்பெயர்கள், சிறந்த பொருளுடைய னவாய், அமைந்துள்ளன.

- **விநாயகன்** : தனக்குமேல் வேறொரு தலைவன் இல்லாதவன், தனிப் பெருந் தலைவன்.
- **கணபதி, கணேசன், கணநாதன், கணாதிபன்** : பூதகணங்களுக்கு தலைவன் ஆகச், சிவபெருமானால் நியமிக்கப் பெற்றவர்.
- **விக்னேஸ்வரன், விக்கினராஜா, சங்கட ஹரகணபதி, விக்ன கணபதி** : பக்தர்களின் விக்கினங்கள், இடர்கள், தடைகள், துன்பங்கள் என்பவற்றை நீக்கியருள்பவர். தம்மை நினைக்காதவர்க்கு விக்கினங்களை வருவிப்பவர். வரமுன் காப்பவர், வந்தபின் போக்குபவர், வல்லவர்.
- **இலம்போதரர்** : பெருத்துச் சரிந்த, தொந்தி வயிறுடையவர். எல்லா உலகங்களையும், அண்டசராசரங்களையும், தமது வயிற்றுள் அடக்கி வைத்திருப்பவர்.
- **ஏரம்பர்** : பலமற்றவர்களின் இடையூறுகள், துன்பங்களை நீக்கிப் பாதுகாப்பவர்.
- **ஏகதந்தர்** : ஒன்றைக் கொம்பை - தந்தத்தையுடையவர். விநாயகர் தம்முடைய ஒரு கொம்பை ஒடித்து அதனால், கயமுகா சுரனை சம்ஹாரம் செய்தார். பெருச்சாளியாக, உரு மாற்றம் பெற்றபோது, அதனைத் தமது வாகனம் ஆகக் கொண்டார். பகவான் வியாசர், மகாபாரதத்தைச் சொல்லச்சொல்ல தமது தந்தத்தால், மகாமேருமலையில் எழுதியவர், விநாயகர். அவரே உலகின் முதல் நூல் எழுத்தாளர்.
- **கஜானனர், ஆனைமுகன், கரிமுகன்** : யானைமுகமுடையவர். தம்மை அணுகுபவரின், துன்பங்களை நீக்கியருள்பவர்.
- **வக்கிரதுண்டர்** : வளைந்த துதிக்கையுடையவர்.
- **ஏகதுண்டர்** : ஒரு துதிக்கையுடையவர்.
- **ஆகுரதர்** : எலி வாகனர்.
- **ஐங்கரன்** : ஐந்து கரங்களையுடையவர். ஒரு கையில், பாசக்கயிறு கொண்டு உள்ளார். இன்னொரு கரம் அங்குசம் தரித்துள்ளது. மற்றொன்று அபயகரம். உயிர்களுக்கு அஞ்ச வேண்டாம். என்று பாதுகாப்பு அளித்து, பக்தர்களைக்

காக்கும் கரம், அபயகரம். வரதகரம் இன்னொன்று. அபயம் பெற்ற உயிர்களின், பக்குவ நிலைக்கேற்ப, அருள் செய்வது வரதகரம். மோதகம் ஏந்திய கரமும் அதுவே. வரதகரம் கீழ் நோக்கியிருப்பது, சிறந்த ஞானக்குறி. துதிக்கை ஐந்தாவது கரம், மணம் அறிதல், உணவை எடுத்தல், ஊறு, உணர்ச்சி ஆகிய திறன்கள் உடையது. மோதகத்தையும் ஏந்தியுள்ளது.

கணபதிப்பெருமான் இடர்களை நீக்கி, வெற்றி அருள்பவர், என்பதால், விக்னேஸ்வரர், விக்கினராஜா என்னும் திருநாமங்களால் அழைக்கப்படுகிறார். அடியார்கள், எடுத்த கருமங்கள் தங்கு தடைகளின்றி நிறைவேற, கஷ்டங்கள் நீங்க, தங்கள் இலட்சியங்கள், குறிக்கோள்கள் அடையப்பெற, விக்கினங்கள் நீங்க, வேண்டி, விக்னேஸ்வரரை, முதலில் வணங்கித் தங்கள் கருமங்களை ஆரம்பிக்கும் வழக்கம், இந்துக்கள் மத்தியில் மரபு ஆக வளர்ச்சி பெற்றுள்ளமை, நோக்கற்பாலது.

சிவபெருமான், தன் மூத்தகுமாரன், விநாயகனோடு பின்வருமாறு உரையாடுவதாகப், புராணநூல் ஒன்று குறிப்பிடுகிறது. "உன் பெயர் கணேசன் என்றும், விநாயகன் என்றும், விக்கினராஜன் என்றும், சிவபாலன் என்றும் இருக்கட்டும். உன்னிடமிருந்து வெற்றி, தோல்வி புறப்படட்டும். எல்லாச் சமயங்களிலும் மற்றைய தேவர்களை வழிபடு முன் உன்னை மக்கள் வழிபட்டு, உன் அருளை வேண்டி நிற்கட்டும். அப்படி அவர்கள் செய்யாவிட்டால், அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியில், அவர்களைத் தோல்வியே வந்தடையும்."

தந்தையார் வழங்கிய வரத்தினால், விநாயகர், முதல்வணக்கத்திற் குரியவரானார். இந்துக்கள் எக்கருமத்தைச் செய்யத் தொடங்கினாலும், முதலில் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்து, வணங்கியே அக் கருமத்தைச் செய்யத் தொடங்கும் வழக்கம் இன்றுவரை இருந்து வருகிறது. "நம்பினார் கெடுவதில்லை", என்பது நான்கு மறைவாக்கும், தீர்ப்பும் ஆகும்.

பழங்கால இந்துப் புராண நூல்களில், கணபதியை ஒரு பிரமச்சாரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிற்காலச் சமயமரபுகளில், சித்தி, புத்தி என்ற இரு தேவியர் அவருக்கு உள்ளார்கள். என்று கூறப்படுகிறது. இதன் உட்பொருள், வெற்றிக்கும், ஞானத்திற்கும் விநாயகப்பெருமான் தலைவர் என்பதாகும்.

கணபதியை உரிய முறையில் வழிபட்டு வந்தால், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு வாழ்க்கைப் பயன்களும், கிடைக்கப் பெறுவர், என்று சாஸ்திர நூல்கள் கூறும்.

அப்பா சிவனார், அபிஷேகப் பிரியர், மாமனார் திருமால் அலங்காரப் பிரியர், அவ்வாறே, விநாயகர் நைவேத்தியப் பிரியர். பானை வயிற்றோனுக்குப் பசித்துக் கொண்டேயிருக்கும். அதனால் ஏதாவது புசித்துக் கொண்டே இருக்க வேண்டும். அவர் போசனப்பிரியர்.

ஔவையார், "பாலுந் தெளிதேனும், பாகும் பருப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன்", என்று, முதலில் தொடங்கி, அதன்

பின், தொடர்ந்து, தமதுவேண்டுகோளை, விநாயகருக்கு முன்வைக்கிறார். முத்தமிழ் அறிவை, முழுமையாகத் தமக்கு அருள வேண்டும் என்பதே அவரின் வேண்டுதல் ஆகும்.

## கணேசப் பெருமான்; நாமாவளி:

காணபத்தியநெறி, கணேசனை, முழுமுதற்கடவுளாகப் போற்றும் மதம். கணேசப்பெருமான் ஒருவரேயென்றாலும், அவர் பல திருநாமங் களால் அழைக்கப்படுகிறார். அர்ச்சிக்கப்பட்டு, வணங்கி, வழிபடப்படு கிறார். நூற்றெட்டு நாமங்களைக்கூறி, கணபதிப்பெருமானை அர்ச்சிப்பது, அஷ்டோத்தர சத நாமாவளி எனப்படுகிறது. ஆயிரத்தெட்டு நாமங்களை உச்சாடனஞ் செய்து, கணபதிப்பெருமானை, அர்ச்சிப்பது, சகஸ்ரநாம அர்ச்சனையாகும். ஒவ்வொரு நாமமும், அந்நாமம் வரக் காரணமும், நூல்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

**ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு**
**ஆயிரம் திருநாமம் பாடி, நாம் தெள்ளேணம்கொட்டாமே.**

- மாணிக்கவாசகர்

**பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை** - திருநாவுக்கரசர்

"பிரணவம்", என்னும் "ஓம்" ஒலியே, பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணமாகவும், தோற்றங்கள் அனைத்திற்கும் ஆதாரமாகவும், விளங்கு வதால், அதனையே விநாயகர், கணபதி, பிரணவன், கணேசன், கண நாதன், கஜானன், ஏரம்பன், ஆனைமுகன், தந்திமுகன், ஐங்கரன், நந்திமகன், ஓங்காரமூர்த்தி, கஜமுகன், ஏகதந்தன், எனப் பல்வேறு திவ்விய நாமங்களால் அழைக்கின்றோம்.

விநாயகரின் திருஅவதாரங்கள் பன்னிரண்டு ஆகும். ஒவ்வொரு திருவவதாரத்திலும், வெவ்வேறு, திருநாமம்கொண்டு அழைக்கப்படு கிறார். அவையாவன: வக்ரதுண்ட விநாயகர், சிந்தாமணி விநாயகர், கஸானை விநாயகர், விக்கினராஜ விநாயகர், மயூரேச விநாயகர், பாலச்சந்திர விநாயகர், தூமகேது விநாயகர், கணேச விநாயகர், கணபதி விநாயகர், மகோற்கட விநாயகர், உண்டி விநாயகர், வல்லபை விநாயகர் என்பனவாகும்.

விநாயகர், சிவபெருமானின் மூத்தபிள்ளையாகவும், முதல் புதல்வன் ஆகவும், என்றும் இளமையுடன், பாலகன் ஆகவும், திகழ்வதால், பிள்ளையார் எனப் போற்றி, அழைக்கப்படுகின்றார். பூதகணங்களுக்குத் தலைவனாக உள்ளமையால், கணபதி என்றும் கணநாதன் என்றும், கணேசன் என்றும், திவ்விய நாமங்கள் தரப்பட்டுள்ளன. மந்திரங்கள் அனைத்திற்கும் அடிப்படையாகத் திகழ்வது "ஓம்". எனும் பிரணவ மந்திரம். பிரணவத்தின் வடிவமாக விளங்குபவர் பிள்ளையார். அதனால், பிரணவன், பிரணவரூபன் என்னும் திருநாமங்களும் அவருக்குண்டு. "கணபதி பூசை கைமேற் பலன்", என்பார்கள். முற்றிலும் உண்மை. "குழந்தையும் தெய்வமும், கொண்டாடுமிடத்தில்", என்பது அநுபவ மொழி. கணேசனும். குழந்தைத் தெய்வம். அவரையும் உள்ளன்புடன், போற்றி, மலர்களைச் சூட்டி, விருப்பமான, மோதகம், அவல், பொரி, என்பவற்றை நிவேதித்து, நாமாவளி பாடி, அறுகம்புல் சாத்தி, அர்ச்சித்து, வணங்கி, வழிபாடு செய்து, அதன்பின் கருமங்களை ஆற்றிவந்தால், யாவும் சித்திக்கும், இடர்கள் ஏற்படாது. யாவும் கைகூடும்.

**கணபதி ஹோமம்:**

கணபதிப்பெருமான், முழுமுதற்கடவுள் ஆவார், முதலில் வணங்கப் பட வேண்டிய தெய்வம். அவரை வழிபாடு செய்யும் முறையில், கணபதி ஹோமம் முக்கியத்துவம் பெறுகிறது. சகலவிதமான தோஷங்களையும், நீக்கக் கூடியது, கணபதி ஹோமம், என்று கணபதி உபநிடதம் கூறுகிறது. கணபதி ஹோமம் செய்யும் முறை, கணபதி உபநிஷதத்திலும், மற்றும் "வாஞ்சா கல்பதா", என்ற பெரிய ஹோம முறையிலும், விரிவாக விளக்கப்பட்டுள்ளது. கணபதி ஹோமம் முதலில் செய்து, தொடங்குகின்ற கருமங்கள், காரியங்கள் அனைத்தும் தடைகள், சங்கடங்கள் இன்றி, மேன்மை பெறும்.

உடல், மனம், உயிர் ஆகியவற்றுடன் தொடர்புடைய தடைகள், துன்பம் துயர்கள், நீங்கப்பெற்று, வாழ்வில் சித்தியும், புத்திக் கூர்மையும் கிடைக்கும். பொருளாதார மேம்பாடும், கல்விவிருத்தியும், உடல் ஆரோக் கியமும் மேன்மை பெறும்.

மற்றைய ஹோமங்களைச் செய்வதற்குத், தொடங்குமுன் கணபதி ஹோமம் செய்ய வேண்டும். வெள்ளிக்கிழமை மற்றும் சதுர்த்தி ஆகிய தினங்களில், விடியற்காலை நேரத்தில், கணபதி ஹோமம் செய்வது சிறந்தது.

திருக்கோயில்களில், கும்பாபிஷேகம், மகோற்சவம் ஆகிய நைமித்தியக் கிரியைகள் நடைபெறுவதற்குப் பூர்வாங்கமாக, நடத்தப்படு கின்ற கணபதி ஹோமம், விநாயகரை முதன்மைப்படுத்தி, அவருக்கு முதல்வணக்கம் செய்வதாக அமைகின்றது. நவக்கிரக தோஷங்கள், வேறுவகையில் ஏற்படும் இடர்கள், இன்னல்கள், தடைகள், தடங்கல்கள், வேறுவகையான பாதிப்புகள், பிரச்சினைகள் எதுவும் குறுக்கீடு செய்யாமல் எடுத்த கருமங்கள், காரியங்கள் முழுமையாக நிறைவு எய்த விநாயகரை வேண்டிக் கணபதி ஹோமம் நடத்தப்படுகிறது.

வீடு குடிபுகுதல் இடம்பெறும்போதும்; கிரகதோஷ நிவர்த்திக் காகவும், வீடுகளில் கணபதி ஹோமம் செய்யும் வழக்கம் இந்து மக்களிடம் இருந்து வருகிறது. "கணபதி ஹோமம், கைமேல் பலன்" என்பர்.

கணபதி ஹோமத்தில், கணபதிப்பெருமானை அக்கினி வடிவத்தில் எழுந்தருளச் செய்து, ஹோமகுண்டத்தில், உரிய அவிப்பாகங்கள் வழங்கப் படுகின்றன. மந்திரங்கள் உச்சாடனம் செய்வதன் மூலம் ஹோமம் நடத்தப்படுகின்றது. சிவாச்சாரியார்கள் நடாத்தி வைப்பார்கள். மோதகம், அவல், பொரி, எள்ளுருண்டை, தேங்காய், அரிசிமா, வாழைப்பழம், கரும்பு என்பன நிவேதனப் பொருள்களாக, ஓமகுண்டத்தில் இடப்படுகின்றன.

புதிய தொழில்கள் ஆரம்பிக்கும் போதும், தொழில்கள் சிறக்கவும், வருவாய் அதிகரிக்கவும், காப்புறுதி வழங்கவும் வேண்டிக், கணபதி ஹோமம் நடாத்தப்படுகின்ற வழக்கமும் இருந்து வருகிறது. வழிபாட்டு முறைகளில், கணபதி ஹோமம் மிகச் சிறந்தது, எனக் கணபதி உபநிடதத்தில் கூறப்பட்டுள்ளது.

எங்கும் எதிலும் எஞ்ஞான்றும் முதல் வணக்கம் விநாயகப் பெருமானுக்கே உரியது. இதனைப் பேணிவருபவர்கள், வாழ்வில் நன்மையடைவர்.

## கணபதி மந்திரம்:

கணபதி உபநிடதமே பெருமந்திரம் ஆக அமைகின்றது. இம் மந்திரத்தை, ஜபித்துக்கொண்டு, கணபதிக்கு அபிஷேகம் செய்தால், நாவன்மையுடையவனாகத் திகழ்வான். விரதமிருந்து உணவைத் துறந்து, இம்மந்திரத்தை ஜபித்தால், வித்தைகளில் வல்லமை பெறலாம். உபாசனை செய்பவர்களுக்குப் பயம் எதுவும் ஏற்படாது. அறுகம்புல் சாத்தி, இம்மந் திரங்களால் அர்ச்சிப்பவர், பெருஞ்செல்வத்தைப் பெறுவர். நெற்பொரி களால் ஆகுதிகள் கொடுப்பவர், பெரும்புகழ் அடைவர், அத்துடன் மேதையாகவும் விளங்குவர். ஆயிரம் மோதகங்களை அவிப்பாகமாகச் சொரிந்து, வேட்பவர், தாம் விரும்பும் பேறுகள் அனைத்தையும் பெறுவர். நெய், சமித்து ஆகியவற்றால் ஆகுதி செய்பவரின் விருப்பங்கள் யாவும் அடையப் பெறுவர், குற்றங்கள், பாவங்களிலிலிருந்து விடுபடுவர். எல்லாம் அறிந்தவராகவும் ஆவர். இவ்வாறு கணபதி அதர்வசிர உபநிடதம் கூறுகிறது.

## சங்கற்பம்:

விநாயகரை முதன்மைப்படுத்திச் சங்கற்பம் செய்யப்படுகின்றது. விரதம், அர்ச்சனை, அபிஷேகம், நித்திய, நைமித்தியக் கிரியைகள் மற்றும் பூர்வ, அபரக்கிரியைகள் முதலியன செய்யப்படும்போது; அவற்றை உபயமாகச் செய்பவர் குருவின் முன்னிலையில் சங்கல்பம் எடுத்துக்கொள்வது சைவமரபு ஆகும். ஒருவர் தாம் செய்யும் காரியம் ஒன்றுக்கு மனம், வாக்கு, காயம் மூன்றையும் நேர்படுத்திக் கொள்ளுதல் சங்கற்பம் எனப்படும். சமூகரீதியில் சத்தியப்பிரமாணம் எடுத்தல் என்பதற்கு இணையானதாகும். உறுதிமொழி என்றும் கூறலாம். சத்தியப் பிரமாணம், அதற்குத் தகுதியும், தகைமையும், மேலாண்மையும் உள்ள உயர்அதிகாரி முன்னிலையில் எடுக்கப்படுகிறது. சமய, ஆன்மீகரீதியில் சங்கற்பம், விநாயகரை நினைந்து, முன்னிலைப்படுத்தி, தர்ப்பை தரித்து பிராணாயாமம் பண்ணி, தலையில் குட்டிக் கொள்ளுதலும், சங்கற்ப வசனங்களைச் சிவாச்சாரியார் சொல்லக்கேட்டு, அவற்றைத் தாம், வாய்விட்டுச் சொல்லுதலும் ஆகும்.

## கணபதி ஹோமத்தில், உபயோகிக்கப்படும் பொருள்களும், அவற்றின் பலன்களும்:

| பொருள்கள் | பலன்கள் |
|---|---|
| மோதகங்கள் | - நினைத்த காரியம் கைகூடும். |
| அறுகம்புல் ஹோமம் | - குபேரபலன் கிட்டும். |
| நெய், சமித்து ஹோமம் | - எல்லா நன்மைகளும் கிட்டும். |
| வெல்லம், பொரி ஹோமம் | - மேதையாவர். |
| சர்க்கரை | - இலட்சுமி கடாட்சம் உண்டாகும். |
| தேன், பால், நெய் | - சொர்ண லாபம் அடைவர். |

மற்றும் வெல்லப் பாயாசம், வாழைப்பழம், தேங்காய், பால், தேன், நெய், இவற்றைக் கலந்து கணபதி ஹோமம் செய்தால் சர்வகாரியசித்தி அடைவர்.

# 09 விநாயகர் மகிமை

## புலப்படுத்தும் வரலாற்றுக் கதைகள்

விநாயகர் வழிபாடு, நெடுங்காலமாக இருந்து வருகிறது. இந்துக் களிடையே மாத்திரமல்ல, பௌத்தம் போன்ற வேதத்தை ஒப்புக் கொள்ளாத சமயங்கள் சிலவும், விநாயகர் வழிபாட்டை, ஏற்றுக்கொள் கின்றன. சைவத் தமிழ் மக்கள் வாழுகின்ற ஊர்கள் தோறும், விநாயகர் ஆலயங்கள் உள்ளன. சிவன், அம்பாள், முருகன் கோயில்களிலும், விநாயகருக்குத் தனிச்சந்நிதானங்கள் உண்டு.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கமைய விநாயகர் ஆலயங்கள் இல்லாத ஊரே இல்லை, என்று கூறலாம். எந்தக் காரியத்தையும் தொடங்கும்பொழுது, முதலில் விநாயகப்பெருமானை, வணங்கி,வழிபாடு செய்து ஆரம்பித்தால், இலகு வாக நிறைவுபெறும். அதனாலேயே, முதல்வணக்கத்திற்குரிய கடவுளாக, விநாயகப்பெருமான், மகிமைப்படுத்தப்பட்டுள்ளார். விநாயகர் என்னும் பதம், தனக்குமேலே வேறொரு தலைவர் இல்லாதவர் என்ற பொருளை யுடையது.

விநாயகர் என்றும் வெற்றி தருபவர், வெவ்வினைகளை வேரறுக்க வல்லவர், சித்தி தருபவர், புத்தி தருபவர், முத்தியும் தருபவர்.

மனிதர்கள் சாதாரணமானவர்கள். கடவுளின் அருட்கருணை, கடாட்சம் இன்றி, மனிதர்கள் எதிர்கொள்ளும் இடர்கள், இடையூறுகள், துன்பம், துயர்கள் ஆகியவற்றை நீக்க, முடியாது. கடவுள் வழிபாடு மூலமே இவற்றை நீக்கி, இன்பமாக வாழ முடியும் என்பதை அறிந்தனர். விநாயகரை வழிபாடு செய்து வருவதால், விக்கினங்கள் நீங்கப் பெறுவதும், விக்கினங்கள் வராமல் தடுக்கப்படுவதும், நிதர்சனமாகக் கண்டு அறியப்பட்டன.

விநாயகரின் வரலாற்றுக் கதைகள் மூலம், அவரின் மகிமை அறியப் படுகிறது. அவை, மக்கள் நல்வாழ்வுக்குப் படிப்பினையை வழங்கு கின்றன. அவற்றில் பொதிந்துள்ள தத்துவங்களை அறிய வேண்டுமே தவிர, அவை உண்மையோ, பொய்யோ, கற்பனையோ, கட்டுக்கதையோ என்று ஆராய்வதில் காலத்தைக் கடத்துவது, வீணானதாகும்.

இன்னல்கள், இடையூறுகளை அடக்கி ஆள்பவராக, தம்மை மெய்யன்போடு வழிபடும் பக்தர்களை அவை பற்றிப் பிடிக்காதவாறு தடுப்பவராக, அவர்கள் அறிந்தோ, அறியாமலோ செய்த பாவங்களை நீக்கி அருள்பவராக, விநாயகப்பெருமான் விளங்குகின்றார். அவர் கருணாமூர்த்தி, அவரை மெய்யன்போடு வழிபடுபவர்களின் பாவங்களை நீக்கி, விமோசனம் தரவல்லவர், என்பதைத் தெளிவாகப் புலப்படுத்து வதற்கு எழுந்தவை, விநாயகர் பற்றிய வரலாற்றுக் கதைகளும், சம்பவங்களும் ஆகும்.

**கனியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க்குதவும் – அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்றாள்
நண்ணுவதும் நல்லார் கடன்.**

## விநாயகர் புரிந்த, திருவிளையாடல்கள்:

### தாற்பரியம்

விநாயகர் புரிந்த திருவிளையாடல்கள் யாவும், அவரின் அருட் செயல்கள். உலகத்தவர் நன்மை அடைதற்பொருட்டும், தம்மை வழிபடுப வரின் துயர், துன்பங்களையும், விக்கினங்களையும், நீக்குதற்பொருட்டும் விநாயகர் திருவிளையாடல்கள் பலவற்றைப் புரிந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

புராணங்கள் தவகதைகள். அவை இறைவனின் திருவருட் சிறப்பைச் சொல்வன. சைவத்தின் பிரமாண நூல்கள், வேதம், ஆகமம், பன்னிரு திருமுறைகள், மற்றும் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் ஆகும். அவற்றுள் வேதங்கள், ஆகமங்கள் என்பன, கடவுளால் ஆன்மாக்கள் உய்வு பெறுவதன் பொருட்டு அருளப்பட்டவை. அவை வடமொழியில் உள்ளன. பன்னிரு திருமுறைகள், தோத்திர நூல்கள், மெய்கண்ட சாத்திரங்கள், சாத்திர நூல்கள். அவை தமிழில், முறையே கடவுளின் திருவருள்பெற்ற நாயன்மார்கள், மற்றும் சந்தான குரவர்களால் தமிழில் பாடப்பட்டவை. "எனதுரை, தனதுரையாக", என்று கூறுகிறார்; திருஞானசம்பந்தப்பெருமான். இறைவன் உள்நின்று உணர்த்தச், சைவ சமயகுரவர்கள் வாயிலாக, வெளிப்படுத்தப்பட்டவைகளே, தோத்திர, சாத்திர நூல்கள். எனவே, அந்நூல்களும் இறைவனால் அருளப்பட்டவை யாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட திருநூல்கள், யாவும் ஞானநூல்கள், ஆகும். அவை, சைவசமயத்தின் விதிமுறைகள், பிரமாணங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இத்தகைய பிரமாண நூல்களைத் தவிரப், புராணங்கள், இதிகாசங்கள் என இருவகையான சைவநூல்கள், உள்ளன. அவை, பழைய காலங்களில் நடந்தனவாக நம்பப்படுகின்ற சரித்திரங்களைக், கதைவடிவில், விரித்துரைப்பன. கடவுள்கள், மன்னர்கள், மற்றும் உயர்வகுப்பினர், முனிவர்கள் ஆகியோர் பிரதான பாத்திரங்களாக இடம்பெறுவர். இவை ஆட்சித்தத்துவம், வாழ்க்கைத் தத்துவங்கள், தர்மங்கள் மற்றும் வாழ்வியல் விழுமியங்கள் என்பனவற்றைப் போதிப்பன வாக அமைந்துள்ளன. அறம் தழுவிய, நீதி நெறிமுறை சார்ந்த, அரசியல், இல்லறம், துறவறம், என்பவற்றை எடுத்துக்கூறி, அதன்படி ஒழுகச் செய்வதும், மக்களிடையே இறையுணர்வையும், இயற்கைச்சூழல் உணர் வையும் ஏற்படுத்தி, விழிப்புணர்வைப் பெருக்கி, மக்களை, "வையத்துள் வாழ்வாங்கு வாழவும்", "நல்ல வண்ணம் வாழவும்", மனிதர்களை நெறிப்படுத்தி, வழிப்படுத்தவும், புராண, இதிகாசங்கள் பேருதவியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது கலாசாரம், பண்பாடு, ஆன்மீகம், அறிவியல், மற்றும் அரசறிவியல், வணிகவியல், விவசாயம், ஏனைய தொழில்துறைகள், அனைத்தும் தர்மத்தின் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட வேண்டியதன் இன்றியமையாமையைப் புராணங்கள், இதிகாசங்கள் வற்புறுத்துகின்றன.

"தர்மம் வெல்லும்; அதர்மம் தோற்கும்," என்னும் அருள்வாக்கினை, அடிநாதமாகக், கொண்டவை, புராண, இதிகாசங்கள். போர்புரிவதாக இருப்பினும், நல்லாட்சி, நல்லிணக்கம், வேற்றுமையில் ஒற்றுமை, என்பவற்றை ஏற்படுத்த முயற்சிப்பதாக இருப்பினும், அமைதி, சமாதானம் பேணுவதாக இருப்பினும், அவையனைத்தும் தர்மத்தின் அடிச்சுவட்டில் நிகழ்த்தப்பட வேண்டியதன் அவசியத்தை அழுத்திக் கூறுவன; புராண, இதிகாசங்கள்.

"தருமம் என்றொரு பொருள் உளது", என்கிறது, கந்தபுராணம். எல்லாப் புராணங்களும், இதிகாசங்களும் இக்கூற்றினை ஏற்றுப் பரப்புரை செய்துள்ளன. "தர்மம் தலைகாக்கும், தருணத்தில் உயிர்காக்கும்", என்பது புராண வரலாறுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது. உலகின் சாதாரண மக்களுக்குக், கதைகள்மூலம் தர்மங்களைப் போதிப்பது, நன்மை பயக்கக் கூடியது. அந்தவகையில், யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆலயங்களில், கந்தபுராணம், விநாயகர் புராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பன படிக்கப்பட்டுப் பயன் சொல்லப்படும் மரபு, நெடுங்காலமாக இருந்து வருகிறது. வளர்ந்தோர் கல்வியாகவும், புராண படனம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குற்றச்செயல்கள், தர்மத்துக்கு அஞ்சி, பெரிதும் குறைவடைந்திருந்தன. தர்மத்துக்கு விரோதமாக வாழ்ந்தால், தெய்வ தண்டனைக்கு ஆளாக வேண்டிவரும் என்ற உண்மையைப் புராணங்கள் மூலம் பாமரமக்களும் அறிந்திருந்தனர்.

## தற்கால நிலை: விபரீத புத்தி:

வெறுமனே காக்காய்ப் பொன்னை, இருபத்திரண்டு கரட் தங்கம் என்று நம்பவைக்கும் காலம் இது. புராண இதிகாசங்கள், நீதி நூல்கள், ஒழுக்கவிழுமியங்கள் சார்ந்த நூல்கள், என்பவற்றிற்குப் பதிலாக, தற்கால நவநாகரீக உலகினை நடத்துகின்ற சினிமாத் திரைப்படங்கள், தொலைக் காட்சிகள், கணினி வலைத்தளங்கள், முகநூல்கள், அலைபேசிகள், மற்றும் தொலைத்தொடர்புச்சாதனங்கள், பத்திரிகைகள், ஆபாசப்படங்கள், கதைகள், நாவல்கள், இறுவெட்டுக்கள், நவீன நூல்கள், சஞ்சிகைகள், மேடைப்பேச்சுக்கள், தலைவாலற்ற அரசியல்கள், போதைமருந்துகள் மற்றும் மதுபானங்கள், களியாட்டங்கள், கறுப்புச்சந்தை வியாபாரங்கள், கள்ளக்கடத்தல்கள், இலஞ்சம், கையூட்டல்கள், சொத்துக்குவிப்புகள், பொதுச்சொத்துக்களை அபகரித்தல், என்றிங்ஙனம் நவீன உருவில், புதுப்புது வடிவங்களில் பெருகி வருபவைகள், விரைவில் உலகினைத் தலைகீழாக மாற்றப்போகின்றன, தற்பொழுதும் அடிதலை மாறிய பயங்கர நிலைமைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. பெருமளவில் மக்களைச் சுவீகரித்து வருகின்றன. இத்தகையவர்கள் பக்கத்தில் பெரும்

பான்மையினர் உள்ளனர். வருங்காலத்தில், என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ; யாம் அறியோம். பெரும்பான்மை எனக் குறிப்பிடப்படுவது, எண்ணிக்கையிலேயன்றி, வேறு அடிப்படைகளில் அல்ல, என்பதைக் கருத்தில் கொள்க. "விபரீத புத்தி நாசகாலம்", என்பது ஆன்றோர் வாக்கு.

தற்காலத்தில் மக்களிடையே பெருகிவரும் விபரீத புத்தியும், குயுக்தியும், அழிவிற்கே இட்டுச் செல்லும் என்பது உறுதி. எனவே, விபரீத புத்தியிலிருந்து விடுபட்டு, மனித குலத்திற்கு, விக்கினங்களை நீக்கியும், வராமல் காத்தும், உலகத்தவர் அனைவருக்கும், அருள் பாலிக்குமாறு, விக்னேஸ்வரப்பெருமானை வேண்டுதல் செய்வோமாக.

## விநாயகர் திருவிளையாடல்களின்: பண்பும் பயனும்

எல்லாச் செயல்கள், ஒவ்வொன்றுக்கும், நோக்கும்; போக்கு எனக் கூறப்படுகின்ற நிகழ்வுகளும், முடிவும், தொடர்ந்து அடையப்படுகின்ற பயனும், இருப்பது நியதி.

"குறிக்கோளிலாது கெட்டேன்", என்கிறார், ஓர் அருளாளர். ஆன்மீகமாக இருந்தாலும்சரி, உலகியல் சார்ந்த செயற்பாடுகள் ஆக இருந்தாலும்சரி, குறிக்கோள்கள், இலக்குகள் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். விநாயகப்பெருமான் நிகழ்த்திய திருவிளை யாடல்கள் அனைத்திற்கும் நோக்கங்கள், நிகழ்வுகள்; அடைவுகள், அவற்றால் ஏற்படுகின்ற பயன்கள், நன்மைகள் உண்டு.

தர்மங்கள் அழிந்து போகாமல், காத்தல்; அதர்மங்கள் எழுச்சி பெறுவதைத் தடுத்து, அழித்தல்; அவையே தெய்வீகத் திருவிளையாடல் களின் பண்பும், பயனும் ஆகும். விநாயகர் திருவிளையாடல்கள், தத்துவக் கருத்துக்கள் செறிந்தனவாயும், நல்லோர்களைத்; தீயோர்களின் ஆக்கிர மிப்புக்கள், அடாவடித்தனங்கள், அழிப்பு நடவடிக்கைகள், கொடுமைகள் என்பவற்றிலிருந்து, காப்பாற்றி உய்விப்பனவாயும், அமைகின்றமை நோக்கற்பாலது. ஒவ்வொன்றும் உயர்ந்த நோக்கங்களைக் கொண்டுள்ளது. "அலகிலா விளையாட்டுடையான்," எங்கள் விநாயகன். பெருமானின், திருப்பாதங்களைச் சரணடைந்தால், எமக்கு எவ்வித விக்கினங்கள், இடர்கள், துன்பங்கள் வராமலும், வந்தாலும் அவற்றை நீக்கியும், திருவருள்பாலிப்பான். "நம்பினார் கெடுவதில்லை," இது நான்குமறை தீர்ப்பு.

## திருவிளையாடல், சம்பவங்களும் கதைகளும்:

### (1) காவிரி ஆறு தோன்றியமை:

தேவர்களின் அரசனான இந்திரன், முன்னொரு காலத்திலே, சூரபத்மன் செய்கின்ற கொடுமைகள், அட்டூழியங்களுக்கு அஞ்சி மிகுந்த துயரத்துடன், தன் மனைவி இந்திராணியுடன், இந்திரலோகத்தைவிட்டு நீங்கித் தென்பாரத நாட்டிலுள்ள சீர்காழிப் பதியை அடைந்து, அங்கு மறைந்து வாழ்ந்தான். இந்திரன், அங்கு நந்தவனம் ஒன்றை அமைத்து, பலவகையான மலர்ச்செடிகள், கொடிகள், மரங்கள் ஆகியவற்றை,

வளர்த்து வந்தான். அவை செழித்து வளர்ந்து, பூத்துக் குலுங்கின, அம்மலர்களைப் பறித்து, தினமும் அம்மலர்களினால், சிவபூசை செய்து வரலானான்.

இவ்வாறு, நடைபெற்று வருகின்ற காலத்திலே, மழையில்லாமல் போகவே, கடும் வரட்சியால், நீரின்றி மலர்ச்செடிகள் வாடின. சிவ பூசைக்கு, மலர்கள் இல்லாமையால், இந்திரன் துயருற்று, சிவபெரு மானைத் துதித்தான். அப்பொழுது ஓர் அசரீரி வாக்கு, வானத்தில் கேட்டது. "இந்திரனே! உனது நந்தவனம் அழியாது. இவ்விடத்தில் ஆறு பாயும், வருந்தற்க." - இதுவே அந்த அசரீரி வாக்கு. இந்திரன் கேட்டு ஆறுதலடைந்தான். அவ்வேளை நாரதமுனிவர் இந்திரன் வதியும் இடத்திற்கு வந்தார்.

இந்திரன், நாரதமுனிவரை வரவேற்று, ஆசனத்திலமரச் செய்து, நிலைமையை அவரிடம் கூறி, வருந்தினான். நாரதமுனிவர், அதைக் கேட்டு, "அகத்திய முனிவர், கொடியவர்களான, வில்லவன், வாதாபி ஆகிய இருவரையும் வதைத்ததனால், ஏற்பட்ட பிரம்மகத்திதோஷம் நீங்கும் பொருட்டுச் சிவபூசை செய்துகொண்டு, கொங்கு தேசத்தில் இருக்கிறார். சிவபெருமானால் வழங்கப்பட்ட, பொன்னிநதி, அகத்தியரின் கமண்டலத்திற்குள் இருக்கின்றது. பொன்னிநதியை, இவ்விடத்திற்கு வரச்செய்தால், வரட்சி நீங்கும். உன்மனக்குறையும் நீங்கப்பெறும்," என்று இந்திரனை நோக்கிக் கூறினார். அதற்கு இந்திரன், "நல்லது. அந்தப் பொன்னிநதியை, இவ்விடத்திற்கு வரச்செய்வது எப்படி?" என்று நாரதரைக் கேட்க, அதற்கு முனிவர், "இந்திரனே! விநாயகப்பெருமானை வழிபட்டு, உன் வேண்டுதலைச் சமர்ப்பிப்பாயாயின், அக்கடவுள், அந்நதியை இங்குவரச் செய்தருளுவார்", என்று கூறிவிட்டுத் தமது பதியை அடைந்தார்.

இந்திரன், பெரிதும் மகிழ்ந்து, முனிவர் சொல்லியபடி விநாயகப் பெருமானின் திருவுருவைத் தாபித்து, தேங்காய், முக்கனிகள், மோதகம், பால், தேன் என்பவற்றை நிவேதித்து, அர்ச்சித்து, வழிபாடு செய்தான். விநாயகர், தம் கணங்கள் புடைசூழ, இந்திரன் முன்தோன்றி, "நின் பூசையால் மகிழ்ந்தோம். நீ வேண்டும் வரம் யாது?", என வினவ, அதற்கு, இந்திரன் விநாயகரின் திருப்பாதங்களை வீழ்ந்து வணங்கி, தன் குறையை எடுத்துக்கூறி, "அகத்திய முனிவர், சிவபூசை செய்து கொண்டு, கொங்குநாட்டில், குடகுமலையில் இருக்கிறார். அவரின் கமண்டலத்தினுள்ளே, சிவபெருமானால் வழங்கப்பட்ட பொன்னிநதி தீர்த்தம் உள்ளது. கமண்டலத்தைத் தேவரீர், பூமியில் கவிழ்த்துவிட்டால், பொன்னிநதி இவ்வனத்திற்குப் பாய்ந்து வரும். அப்பொழுது மலர்ச் செடிகள் நீர் பெற்றுச் செழித்து வளர்ந்து, பூக்களை நல்கும், அடியேனுடைய குறைதீரும்", என்று கூறினான். விநாயகர், இந்திரனின் வேண்டுகோளை ஏற்று, அகத்திய முனிவர் தவஞ்செய்து கொண் டிருக்கும், கொங்கு தேசத்திற்கு எழுந்தருளினார்.

விநாயகர் தமது ஞானதிருஷ்டியினால், சிவபெருமானின் திருவரு ளினாலே, பொன்னிநதி அகத்தியரின் கமண்டலத்தில் வந்தமையையும்,

எப்பொழுது அம்முனிவர் பொன்னியை நோக்கி, தமது கையை உயர்த்திக் காட்டுகிறாரோ, அக்கணமே, கமண்டலத்தைவிட்டு நீங்கிப் பூமியிற் பாய்ந்து செல்லும்படி, சிவபெருமான் பொன்னிநதியைப் பணித் துள்ளமையையும், அறிந்து கொண்டார். விநாயகப்பெருமான், காகம் உருக்கொண்டு, அகத்தியர் தவம்செய்யும் இடத்தை அடைந்து காக வடிவில், முனிவரின் கமண்டலத்தில் அமர்ந்தார்.

அகத்திய முனிவர், தமது கமண்டலத்தின்மீது, காகம் இருப்பதைக் கண்டு, காகத்தின் வடிவாய் இருப்பவர், விநாயகப்பெருமான் என்பதை அறியாதவராய்,அதனை அங்கிருந்து கலைத்துவிடும் பொருட்டுத், தமது கையை உயர்த்தி, அசைத்தார். அப்படிக் கையைக் காட்டியமை, பொன்னிநதி, அகத்தியரின் கமண்டலத்தைவிட்டு நீங்கிப், பூமியிற் பாய்ந்து செல்வதற்கான அனுமதி, என்பதைக் குறிப்பிடும் சைகையாகக் கொண்டு, விநாயகர் கமண்டலத்தைக் கவிழ்த்து, பொன்னிநதியை நோக்கி, "நீ, பூமியிற் பாய்ந்து செல்லுதி" எனப் பணித்தருளினார். பொன்னிநதியின் மறுபெயர், காவேரி ஆகும். காவிரி என்றும் அழைப்பதுண்டு. "வான் பொய்ப்பினும் தான் பொய்யாதது", காவிரி என்று, பழந்தமிழ் நூலான பட்டினப்பாலை, அதன் வளத்தை ஏற்றிப் போற்றுகிறது.

காவேரி, மேற்கு மலைத்தொடரிலிருந்து, தமிழ் நாட்டினூடாக பாய்ந்து, கிழக்கேயுள்ள, சீகாழிப் பகுதியில், இந்திரனால் அமைக்கப் பெற்ற நந்தவனத்தை அடைந்தது. இக்காட்சியைக் கண்டு, இந்திரன், உவப்பிலா உவகை கொண்டு, ஆனந்தக் கூத்தாடி, கவலை நீங்கப் பெற்றான்.

நந்தவனம், முன்னர்போலச் செழிப்பாகி, வளம்பெற்றது. மலர்ச் செடிகள் பூத்துக் குலுங்கின. இந்திரன் சிவாகமவிதிப்படி மலர்சாத்திச், சிவபூசை செய்து சீகாழியிலிருந்தான்.

காவேரியாறு, அன்றுமுதல், தமிழ்நாட்டை வளம்படுத்தி வரலாயிற்று. காவேரி தோன்றிய வரலாறு, இவ்வாறு இலக்கிய நூல்களில் கூறப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தவசிரேட்டராகிய அகத்தியருக்கு, முழுமுதற்கடவுளாகிய சிவபெரு மானால் வழங்கப்பட்டமையினாலும், அகத்தியரின் புனித கமண்டலத்தி லிருந்து, விநாயகப்பெருமான் கவிழ்க்கப் பிரவாகித்துப் பாய்ந்தமை யினாலும், காவிரிநதி, புண்ணிய நதிகளுள் ஒன்றாகப் போற்றப்படுகிறது. காவிரியில் நீராடுவோர் தம்மைப் புனிதர் ஆக்கிக் கொண்டவராவர். போக மோட்சங்களையடைவர் என நூல்கள் கூறும்.

"போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச் செல்லுமாகாவிரி", எனவும், "வளம்படப் பெருகி, யாடுவார் பாவந்தீர்த்தஞ்சன மலம்பித் திகழுமா காவிரித் துரித்தியார்", எனவும். சமயகுரவர் நால்வருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திநாயனார், பதிகம் பாடியருளியுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

## (2) விநாயகரின் இளமைப்பருவ விளையாட்டுக்கள்

இளமைப் பருவத்தில், தீராத விளையாட்டுப் பிள்ளையாகத் திருக் கைலாயத்தில், ஓடியாடிப் பல்வேறு விநோத விளையாட்டுக்களில், விநாயகர் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு ஏவல் செய்வதற்குத் துணையாகக் கணங்கள் இருந்தன. அவர் கணங்களின் தலைவர் அல்லவா? அதனால் கணபதி என்று அவருக்கொரு பெயர் உள்ளது.

பூஞ்சோலையில் ஒளிந்து விளையாடுவார். கணங்கள் அவரைத் தேடுவர். பாம்புகளைப் பிடித்து, கழுத்திலும், மார்பிலும் ஆபரணமாக அணிந்து கொள்வார். கோள்களையும், நட்சத்திரங்களையும் பிடித்து. துருவச் சக்கரத்துடன் பிணைத்து, மார்பில் மாலையாகச் சூடிக் கொள்வார்.

திருப்பாற்கடலைக் கடைந்தும், முகர்ந்தும், துளிகளாகச் சிவ கணங்கள்மீது, வீசியும், தூவியும். மழை பொழிகிறது. எனக் கூறுவார்.

திருமால், பாற்கடலில் பள்ளிகொள்பவர். விநாயகர் தமது துதிக்கையை நீட்டித் திருமால், மற்றும் அவரின் உந்திக்கமலத்தில் வீற்றிருக்கும் பிரம்மா, ஆகியோரை, உறிஞ்சுவார். மீண்டும் அவர்களை வெளியில் விடுவார். திருமால் முதலானோர் தாம் மறைக்கப்பட்டிருந்த தையும், பின்னர், முன்போல, தாம் திருப்பாற்கடலில் இருப்பதைக் கண்டும், ஆச்சரியப்படுவர். இது எவ்வாறு நிகழ்ந்தது; என்ன காரணம்; யார் வேலை? என ஒருவரை, ஒருவர் வியப்புடன் வினவுவர். திருமால், தம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்ளும்போது, தமது திருக்கரத்தில் இருந்த வலம்புரிச்சங்கைக் காணாமல் திகைப்படைந்தார்.

அவ்வேளை, சங்கொலி எங்கிருந்தோ கேட்டது. அந்த ஒலி, தம்முடைய சங்கிலிருந்து எழும் ஒலியாகவே இருப்பதை உணர்ந்த திருமால், தமது சங்கை மீண்டும் பெறும் பொருட்டு சிவபெருமானை நோக்கித் தவம் புரியலானார்.

சிவபெருமான், அத்திகிரியில் வீற்றிருக்கும் வலம்புரி விநாயகரை வழிபட்டு, வேண்டுதல் செய்தால், இழந்த சங்கை மீண்டும் பெறலாம் எனத், திருமாலுக்கு அருள் புரிந்தார். திருமாலும், வலம்புரி விநாயகரை வழிபட்டு, அவரின் அருளால், இழந்த சங்கை மீண்டும் பெற்றார்.

## (3) பிள்ளையார், மாம்பழம் பெற்றமை:

விநாயகனுக்கும், முருகனுக்கும், திருமணம் முடிக்கும் பராயம் வந்தது. இவர்களுக்குள், முதலில் திருமணம் யாருக்குச் செய்து வைப்பது, என்பதைத் தீர்மானிக்கத், தந்தையாகிய சிவன் இருவருக்குமிடையே ஒரு போட்டியை வைப்பதென்று தீர்மானித்தார். அவ்வேளை, நாரதமுனிவர், மாம்பழம் ஒன்றைக் கொண்டுவந்து, சிவபெருமானிடம் கொடுத்தார். மாம் பழத்தைக் கையில் வைத்துக்கொண்டு, விநாயகன், முருகன் இருவரையும் தம்முன் அழைத்து இருவரில், எவரொருவர், இவ்வுலகினைச் சுற்றிப் பூப்பிரதட்சணம் செய்துவிட்டு, முதலில் தம்மிடம் வருகிறாரோ அவருக்கு, மாம்பழம் கிடைக்கும், அத்துடன் திருமணமும் முதலில் நிகழ்த்தப்படும். என்று சிவன் அறிவித்தார்.

முருகன், சற்றும் தாமதிக்காது, உடனே மயில்மீது அமர்ந்து, உலகினை வலம்வருவதற்குப் புறப்பட்டுவிட்டார். விநாயகர் ஆறஅமர, அங்கிருந்து சென்று, ஆறுதலாக் நீராடி, நித்திய கருமங்களை முடித்து விட்டு, தந்தை, தாய் ஆகிய சிவன், உமையவள் இருவரையும், ஏழு முறை வலம் வந்து. பக்தியோடு வணங்கி, அவர்கள் முன்னிலையில் நின்று, "தாய் தந்தையர் ஆகிய உங்களையன்றி வேறு உலகம் கண்டிலேன்", என்று கூறி, விநயமாக, அவர்களிடம் பரிசினை வேண்டி நின்றார்.

அனைத்தும் அறிந்தவர், அறிபவர் சிவபெருமான். "எல்லா உலகமும் ஆனாய் நீயே", என்று, சிவபெருமானை விழித்துப் பாடியுள்ளார், திரு நாவுக்கரசுநாயனார். தமிழ் மறையாக விளங்குவது தேவாரம். விநாயகர் எப்பவோ இவ்வுண்மையை உணர்ந்து, செயலில் காட்டியுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

அனைத்தும் அறிந்தவரான சிவபெருமான், தமது மூத்த திருக் குமாரனாகிய விநாயகனின் புத்திசாதுரியத்தையும், விவேகக் கூர்மையை யும் வியந்து, பாராட்டி, போட்டியில் வெற்றி பெற்றுவிட்டமைக்குப் பரிசாக, மாம்பழத்தை விநாயகரிடம் வழங்கினார். சித்தி, புத்தியாகிய இரு பெண்களையும் விநாயகருக்குத் திருமணம் முடித்து வைத்தனர். இவ்வாறு சிவமகாபுராணம் கூறுகிறது.

சித்தி, புத்தி இருவரும் பிரம்மதேவனின் புத்திரிகள் ஆவர்.

முருகப்பெருமான், மயில் வாகனத்திலமர்ந்து எல்லா உலகங்களை யும் மிகவிரைவில் சுற்றிவந்து, திருக்கைலாயத்தை அடைந்தார். அதற்கு முன்னர், விநாயகர், போட்டியில் வெற்றியடைந்து, மாங்கனியையும், தந்தையாகிய சிவனிடமிருந்து பெற்றுவிட்டார். முருகப்பெருமான், போட்டியில் ஏதோ சூழ்ச்சி இடம்பெற்றுவிட்டதென்று கூறி, தந்தை யாருடன் கோபித்துக் கொண்டு, தண்டபாணியாக, ஆண்டிக் கோலத்தில் பழனிமலை சென்று, அங்குகோயில் கொண்டருளினார். ஞானப்பழம் ஆக மிளிர்ந்தார், இன்றும் மிளிர்கின்றார்.

## விநாயகர் மாங்கனி பெற்ற வரலாற்றின் நுண்பொருள்

- வாரியார் சுவாமிகள் தரும் விளக்கம்,

"இருவர், ஒரு கனியை விரும்பினால், அக்கனியைப் பகிர்ந்து இருவருக்கும் கொடுத்திருக்கலாம்தானே? எல்லா உலகங்களையும், ஆக்கியும், அளித்தும், நீக்கியும், அருள்பாலிக்கின்ற எல்லாம்வல்ல இறைவன், மற்றொரு கனியைப் படைத்துக் கொடுத்து, இருவரையும் திருப்திப்படுத்தியிருக்கலாம்தானே! காரைக்காலம்மையாருக்கு, ஒன்றுக்கு இரண்டு கனிகளை வழங்கிய வள்ளல் அன்றோ அவர்! தம்பி, கனிபெறுக; என்று தமையனாரும், தமையனே, கனிபெறுக! என்று தம்பியாரும், சகோதார பாசத்தோடு, விட்டுக் கொடுத்திருக்கலாம், அல்லவா! ஒரு கனியைப் பெற்றுக் கொள்வதற்குச், சகல உலகங்களையும் ஒரு நொடியில் வலம்வருதல், முயற்சிக்குத்தக்க ஊதியமாகுமா? சகல வல்ல

மைகளுமுடைய விநாயகருக்கு, உலகை வலம்வரும் வலிமை இல்லையா? சிவம் என்னும் பரம்பொருளை, வலம்வருவதே, உலகை வலம் வருவதாகும், என்னும் பேருண்மையை, அறிவின் திருவுருவாக விளங்குகின்ற ஆறுமுகப்பெருமான், அறியாதவரா? இன்னோரன்ன பல ஐயங்கள், எழுவது இயல்பு ஆகும். ஆதலின், இதன் நுண்பொருளை, விளக்க வேண்டியுள்ளது.

**விளக்கம்:** சிவம் என்ற பரம்பொருளினுள், எல்லாவற்றையும் காணுந் தன்மை ஒன்று. எல்லாவற்றினுள்ளும், சிவத்தைக் காணும் தன்மை மற்றொன்று,

இதனையே, ஆனைமுகன், ஆறுமுகன் என இருவடிவங்களாக நின்று, ஒரு பரம்பொருள், நமக்கு உணர்த்தியது.

அரும்பு - சரியை, மலர் - கிரியை, காய் - யோகம், கனி - ஞானம். எனவே, சிவத்தின்கண் இருந்தது. ஞானம், என அறிக. ஞானத்தில் விருப்பம் ஏற்பட வேண்டும், என்பதைத் தெரிவிக்கவே, விநாயகனும் வேலவனும் அக்கனியை விரும்பியருளினார்கள். ஞானத்தைக் கூறு போட்டுச் சிதைக்க முடியாதென்பதை, அக்கனியைச் சிவனார் இரண்டாகப் பிரித்துக்கொடுக்காமை, தெளிவாக்குகின்றது. சிவத்திற்கு அந்நியமாக வேறொன்றும் இல்லாமையைத் தெரிவிக்க விநாயகர், சிவனை வலம்வந்து, ஞானமாகிய கனியை முழுமையாகப் பெற்றார். "எல்லாம் சிவனே", என்பதை உலகத்தவர்க்குத் தெரிவிக்கவே, வடிவேற் பரமன், உலகை வலம்வந்து, தாமே ஞானப்பழம் ஆக நின்றனர். ஞானமே அவர், ஞானபண்டிதன், முருகன். ஞானமாகிய கனியைத் தாங்கும் விநாயகன், ஞானகாரகன் ஆவார்.

விநாயகர் வேறு, முருகன் வேறு என்று மலைக்க வேண்டாம். இருவரும் ஒருவரே என்பதை உணர்க."

### (4) அகத்திய முனிவருக்கு, அருள்பாலித்தமை:

விநாயகக்கடவுள், காகவடிவில் சென்று, அகத்திய முனிவரின் கமண்டலத்தைக் கவிழ்த்து, காவிரியாற்றை அதிலிருந்து தமிழ்நாட்டில் பாயச்செய்து, சீகாழியில் இந்திரன் அமைத்த நந்தவனத்தை வளப்படுத்தி, இந்திரனின் வேண்டுகோளை நிறைவு செய்த பின்னர், காக வடிவத்தை நீக்கி, ஓர் அந்தணச் சிறுவன் வேடம் தாங்கிக்கொண்டு, வீதியில் சென்றார். அப்பொழுது, அகத்திய முனிவர், அந்தணச் சிறுவனைக் கண்டு கோபமுற்று, இவன் தன்னுடைய கமண்டலத்திலுள்ள, பொன்னிநதியை வெளியில் பாயச்செய்ய, அத்துணை வல்லமை யுடையவனோ, இவன் யார்? என்பதை விரைந்து அறிந்து கொள்ள வேண்டிய நோக்கில், அவ்அந்தணச்சிறுவனை அவர் பின் தொடர்ந்தார். அந்தணச்சிறுவன், தன்னைப் பின்தொடர்ந்து, வேகமாக வருகின்ற முனிவரைக் கண்டு, பயந்தவன்போல ஓடினான்.

அகத்திய முனிவருக்கு, அந்தணச்சிறுவன், வேறு யாருமில்லை, விநாயகக்கடவுளே, என்பது தெரியாது. முனிவர் கோபங்கொண்டு,

தனக்கு முன்னே ஓடுகின்ற அச்சிறுவனின் தலையில், குட்டுவதற்குத், தன் இரண்டு கைகளையும் முட்டியாகப் பிடித்துக்கொண்டு, வேகமாகத் துரத்தினார். அப்பொழுது, பல்வேறுவிதமான திருவிளையாடல்களை, விநாயகர் நிகழ்த்தினார்.

விநாயகர், அகத்தியருக்கு நெருங்கிப்போவார். பின்னர் சுளித்துக் கொண்டு, விலகத்தூர ஓடிவிடுவார். அகப்படமாட்டார். சிறிது நேரத்தில், ஆகாயத்தில் தோன்றுவார். நான்கு திசைகளிலும் செல்வார். பின், பூமிக்கு வருவார், அகத்தியருடைய கைக்கும் எட்டுவார், நையாண்டி செய்தபடி, தூரத்திற்குப் போய்விடுவார். இவ்வாறாகப், பிராமணச் சிறுவனாகத் தோற்றமளிக்கும் விநாயகப்பெருமான், அகத்திய முனிவரை, அங்குமிங்கு மாக அலைக்கழித்துக், களைத்துக், கோபம் அடையச் செய்தார். அப்பொழுது, அகத்தியர் தளர்ந்து, இந்த மாயக்காரன் வித்தைகள் செய்கின்றான், இவன் சாதாரணமானவனல்லன்; யாராக இருப்பான்? யான் இனிச் செய்வது என்ன? இவ்வாறு தனது ஆற்றாமை பற்றிச் சிந்தித்தார். அக்கணமே, அந்தண இளைஞன் வடிவம் நீங்கப்பெற்று, விநாயகக்கடவுள், தமது திருமேனியை அகத்தியருக்குக் காட்டியருளினார்.

அகத்திய முனிவர், விநாயகப்பெருமானை, வணங்கி, தான்செய்த குற்றங்களை மன்னிக்கும்படி மன்றாடி, மனங்கலங்கி வேண்டி, முன்னர், விநாயகக்கடவுள் என்று அறிந்திராமையால், அவரின் தலையில் குட்டுவதற்கு, முட்டியாகப்பிடித்த தமது கைகளிரண்டையும், மேலே தூக்கித் தம்முடைய நெற்றியில் பலமாகக் குட்டினார்.

அகத்தியர் தமக்குத்தாமே கொடுத்த தண்டனையை, விநாயகப் பெருமான் திருநோக்கஞ் செய்து, அகத்தியரை நோக்கி, "அகத்தியனே! உன் செயல் என்ன? எதற்காக இப்படிச் செய்தீர்?" என வினவினார். அதற்கு அகத்தியர், "எனது அறியாமையால், தேவரீரை, அந்தணச் சிறுவன் என எண்ணி, சிரசில் குட்டுவதற்கு விழைந்தேன். அதற்குப் பரிகாரமாக, என்தலையில் குட்டிக் கொண்டேன்", என்று பணிவாகக் கூறினார். விநாயகக்கடவுள், "உனது மனத்துன்பத்தைப் போக்குதி", என்று திருவாய் மலர்ந்தருளினார். அகத்தியர்; துயர் நீங்கப்பெற்றவராய், விநாயகப்பெருமானின் திருவடிகளில் பலமுறை வீழ்ந்து வணங்கித், தாம், தேவரீர் என்று அறியாமல் செய்த பிழையைப் பொறுத்தருளும்படி, விண்ணப்பித்தார்.

விநாயகப்பெருமான், அகத்தியரை விளித்து, "அகத்தியனே! இந்திரன், நமது தந்தையைப் பூசிப்பதற்கு, மலர்கள் வேண்டி, அமைத்த நந்தவனம் நீரின்றி, மலர்ச்செடிகள், கொடிகள் கருகிவிட்டன. நீர் வேண்டி, எம்மை வழிபட்டான். நீர் வழங்குவதற்காக, உமது கமண்டலத்தைக் கவிழ்த்து, அதனுள் இருந்த பொன்னிநதியைப் பூமியில் பாய்ந்து செல்லக் கட்டளையிட்டோம். காவிரிநதியாகப் பாய்ந்து சென்று நீர் வழங்கிக் கொண்டிருக்கிறது. நீர் செய்தவற்றைச் சிறிதும் மனத்தில் கொள்ளோம். நீ; நம் தந்தையாகிய சிவபெருமானிடத்தில் பக்தியுடையவன். தந்தையின் கட்டளைக்கிணங்கவே, தென்னாட்டிற்கு

வந்தவன் ஆதலால், நமக்கும் அன்புக்குரியவன். எனவே நீயும், வேண்டிய வரங்களைக் கேட்பாயாக; நல்குவோம்", என்றார்.

அகத்திய முனிவர், விநாயகப்பெருமான், திருவாய் மலர்ந்தருளிய வற்றைக் கேட்டு, மகிழ்ச்சியுற்றவராய், எம்பெருமானைத் தொழுது வணங்கி, "அடியேன், பெரும்பாக்கியசாலி", என்று நினைந்து, "தேவரி டத்தும், சிவபெருமானிடத்தும், என்றும் அடியேன், அன்பும் பக்தியு முடையவனாயிருக்கும் வரத்தைத் தந்தருள வேண்டும்", என்றும், "தற்பொது, தங்கள்முன், அடியேன் செய்ததுபோல, முட்டியாகப் பிடித்த இருகைகளாலும், பக்தர்கள் தத்தமது நெற்றியிலே குட்டித், தங்களை வணங்குபவர்களின் குறைகளை நீக்கி அருள் செய்ய வேண்டும்" என்றும், விநாயகப்பெருமானை, வேண்டுதல் செய்தார். இதனையே, தோப்புக்கரணம் போடுதல் என்றும் கூறப்படுகிறது.

மேலும் ஒரு வரத்தை அகத்தியர், விநாயகரிடம் வேண்டிப் பெற்றுக்கொண்டார். அகத்தியரின் கமண்டலத்திலிருந்த நதி, விநாயகர், அதனைக் கவிழ்த்தமையால், நதிநீர் முற்றிலும் பூமிக்குச் சென்றுவிட்டது. சிவபெருமான் வழங்கிய நீர் வெளியே போனமையால், முனிவரின், நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, ஒரு தீர்த்தத்தைத் தந்தருளும்படி, முனிவர், விநாயகரை வேண்டி நின்றார்.

விநாயகப்பெருமான், பூமியில் பாய்ந்து செல்கின்ற, காவிரி நதியி லிருந்து, தமது துதிக்கையினால், சிறிது நீரை அள்ளி, அகத்தியர் வேண்டிக் கொண்டமைக்கிணங்க, அவருடைய கமண்டலத்தை நிரப்பி விட்டார். அகத்தியர் தமது கமண்டலத்தில் நதிநீர், முன்போல இருந்தமை யைக் கண்டு, விநாயகப்பெருமானை வணங்கி, "தமக்கு இனி குறை யேதுமில்லை, கவிழ்த்து வெளியேற்றப்பட்ட நதியையும், முன்போலத் தந்தருளினீர், இனி அடியேன் உய்ந்தேன். இனிமேற் காலத்திலும், நான் நினைத்தபொழுது, எழுந்தருளி வந்து, என் விக்கினங்களை நீக்கி அருள் புரிக", என வேண்டி நின்றார். விநாயகர்; "அங்ஙனமேயாகுக?" என்று கூறி, மறைந்தருளினார்.

## இராவணனுடைய கர்வம் அடங்கியமை:

இலங்கை வேந்தன் இராவணன், மிகச்சிறந்த சிவபக்தன். "இராவணன் மேலது நீறு", என்று, திருஞானசம்பந்தர், தாம் அருளிய திரு நீற்றுப் பதிகத்தில், இராவணனின் சிவபக்தியை ஏற்றிப் போற்றியுள்ளார். ஒருமுறை, இராவணன், தான் அழியாதிருக்க வேண்டும் என்றும், இலங்கையில் தனது ஆட்சி, நிலைத்து நீடித்திருக்கவும், சிவபெருமானைத் துதித்துத் திருக்கைலாய மலையிலிருந்து தவஞ் செய்தான். சிவபெருமான், அவன்முன் தோன்றி, அவனுடைய கையில் ஒரு சிவலிங்கத்தைக் கொடுத்து, இலங்கையில் அதனைப் பிரதிட்டை செய்து, பூசித்து வந்தால், அந்நாடு அழியாது என்றும், விட்டுணு முதலிய தேவர்களாலும், இராவணன் வெற்றி கொள்ளப்படமாட்டான் என்றும் கூறி, அத்துடன் இரண்டு நிபந்தனைகளும் விதித்து மறைந்தருளினார்.

சிவலிங்கத்தைக் கொண்டு செல்லும்போது, வாகனங்கள் எதிலும் ஏறிச்செல்லாமல், நடந்தே செல்ல வேண்டும். இச்சிவலிங்கத்தை, வேறு இடத்தில் வைத்தல் ஆகாது, வைத்தால், பின்னர் அங்கிருந்து எடுக்க முடியாது. இவ்விரண்டுமே, அந்நிபந்தனைகள்.

இராவணன், தான் கேட்ட இரண்டு வரங்களையும், சிவபெருமான் வழங்கியமையையிட்டு, மிகவும் மகிழ்ந்தான். சிவலிங்கத்தைத் தூக்கிக் கொண்டு, இலங்கை நோக்கிப் புறப்பட்டான். இராவணன் வரம் பெற்ற செய்தியை அறிந்த, தேவர்கள் திடுக்குற்றனர். இராவணன் சிவலிங்கத்தை, இலங்கையில் பிரதிட்டை செய்தானேயானால், அவனை யாராலும் அழிக்க முடியாது. தம்மையும் பெரிதும் வருத்துவான். இதனை எப்படியும் தடுத்து நிறுத்த வேண்டும். முளையிலேயே முட்செடியைக் கிள்ளி எறிந்து விடவேண்டும்.

தேவர்கள் தங்களுக்குள் ஆலோசித்து, தங்களுடைய விக்கினங் களை நீக்க வல்லவர், விக்னேஸ்வரப்பெருமான் மட்டுமே என்று தீர்மானித்து, அப்பெருமானைப் பூசித்தனர். "இராவணனுடைய எண்ணம் நிறைவேறினால் நம் அனைவரையும் பெருந்துன்பங்களுக்குள்ளாக்கு வான். ஆகையால், இராவணனின் எண்ணம் நிறைவேறாதபடி விக்கினம் கொடுத்து, எம்மைக் காத்தருள்க", என்று, விநாயகப்பெருமானைத் தேவர்கள் பிரார்த்தித்தார்கள்.

விநாயகப்பெருமான், தேவர்கள் எதிர்கொள்ள, உள்ள விக்கினங் கள், துன்பங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, அவற்றை வர முன்னரே தடுத்துத், தேவர்களுக்கருள்புரியத் திருவுளங் கொண்டார். விநாயகர், உடனே வருணனை அழைத்து, இராவணனின் உடம்புக்குள் புகுந்து, சிறுநீர் பெருகச்செய்து, உபாதையை உண்டாக்குமாறு பணித்தார். தாமும் ஓர் அந்தணச்சிறுவன் வடிவத்தில், இராவணன் வரும் வழியில், அவன் காணும்படி நின்றார்.

வருணன், விநாயகரின் கட்டளைக்கிணங்க, இராவணன் வயிற்றில் உட்சென்று, சிறுநீர் பெருகுமாறு செய்து, உபாதையை ஏற்படுத்தினான். சிவலிங்கம் மிகவும் புனிதமானது. எனவே, சிவலிங்கத்தை கையில் வைத்துக்கொண்டு, சிறுநீர் கழித்தல் ஆகாது. அவ்வாறு செய்தால், அது சிவத்துரோகம் ஆகிவிடும், என எண்ணிய இராவணன், யாராயினும், எதிர்ப்படுகின்றனரா, எனச் சுற்றுமுற்றும் பார்வையைச் செலுத்தினான். அவ்வேளை, அந்தணச்சிறுவன் ஒருவன், இராவணன் எதிரே தென் பட்டான். உடனே, அச்சிறுவனிடம் சிவலிங்கத்தை கொடுத்து, "இச் சிவலிங்கத்தை உன்கையில் வைத்துக்கொள், நான் சிறுநீர்கழித்துச் சுத்திபண்ணி, இங்கு மீளவும் வந்து, உன்னிடம் இதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்வரை, உன் கைகளிலேயே வைத்துக்கொண்டு இவ்விடத்தில் நில். இதனைக் கீழே நிலத்தில் வைத்து விடாதே, பத்திரமாக, கையிலேயே, நான் திரும்பி வந்து வாங்கிக் கொள்ளும் வரை, வைத்திருக்க வேண்டும்", என்று, திரும்பத்திரும்ப வற்புறுத்திச் சொல்லிவிட்டு, இராவணன் சென்றான்.

அப்பொழுது, விநாயகக் கடவுளாகிய அந்தணச்சிறுவன், "நான் பலம் குறைந்தவன், இச்சிவலிங்கத்தைக் கையில் தாங்கும் வல்லமை யற்றவன். நீ வற்புறுத்தித் தருகின்றாய். அதனால் வாங்கிக் கொள்கிறேன். நீ விரைவில் திரும்பி வரவில்லையேல், மூன்றுமுறை, உரக்கக் குரல் எழுப்புவேன். அதற்கும் வந்து சிவலிங்கத்தைப் பெற்றுக்கொள்ளா விட்டால், கீழே நிலத்தில் அதனை வைத்துவிட்டு போய்விடுவேன்", என்றான். வேறுவழியின்றித் தலையை அசைத்துவிட்டு, இராவணன் சென்றான்.

இராவணன் சென்று, குறிப்பிட்ட நேரத்திற்குள் திரும்பி வராமை யால், அந்தணச்சிறுவன் மும்முறை கூவி அழைத்தான். இராவணன் திரும்பி வரவில்லை. முன்னர் கூறியபடி, சிவலிங்கத்தை நிலத்தில் வைத்துவிட்டு, அவ்விடத்தைவிட்டு நீங்கிச் சிறிது தூரத்தில், மறைந்து நின்றான்.

இராவணன், சிறுநீர் கழித்து, உபாதை நீங்கப்பெற்ற பின்னர், திரும்பி வந்தான். அங்கு சிறுவனைக் காணவில்லை. சிவலிங்கம் நிலத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதிர்ச்சியுற்றான். தன் முழுப்பலத்துடன், இருபது கரங்களாலும், இலிங்கத்தைப் பற்றிப் பிடித்துத் தூக்க முயன்றான். பலமுறை முயன்றும், இராவணனால் அசைக்கவும் முடிய வில்லை. திருக்கைலாயமலையைப் பெயர்த்த தனக்கு, இது எம்மாத்திரம் என்று கருதித், தன் முழுப்பலத்தையும் கொண்டு, இலிங்கத்தை, இழுத்துத் தூக்கியும், முடியாமையினால், "இதுமகாபலம்" என்றான். அதன் பின்னர், சிறுவனைத் தேடி, அவன் மறைவில் நிற்பதைக் கண்டு, கோபங்கொண்டு, தனது இருபது கரங்களையும் முஷ்டியாகப் பிடித்து, அந்த அந்தணச்சிறுவனின் தலையில் குட்ட முயன்றபோது, விநாயகப்பெருமான் விசுவரூபங்கொண்டு, இராவணனைத் தமது திருக்கரத்தால் தூக்கிப் பந்தாடுவது போலப் பூமியில் விழாதபடி, பலமுறை எறிந்து, ஏந்தினார்.

இராவணன் அகந்தை நீங்கப் பெற்றவனாய், தான் அறியாமை யினால் செய்த குற்றத்தை, மன்னித்தருளும்படி, விநாயகக்கடவுளை, இரந்து, வேண்டித், துதிக்க, அவரும் இரங்கி பூமியில் விடுத்தார். இராவணனை நோக்கி, "உனது இருபது கரங்களாலும், உன் பத்துத் தலைகளிலும், குட்டுதி. உனது குற்றத்தை மன்னிப்போம்", என்று விநாயகப்பெருமான் கூறவும், இராவணன் அவ்வாறு குட்டிக்கொண்டு, ஆனந்தக் கூத்தாடி, விநாயகரை உவகை கொள்ளச் செய்தான்.

"எம்முடைய திருவருள் நலத்தை வேண்டி, தம் இருகரங்களாலும் உன்னைப்போல், தங்கள் சிரசில் குட்டி வணங்குபவர்களுக்கு அருள் பாலிப்போம்", என்று சொல்லி, விநாயகக்கடவுள் மறைந்தருளினார். அகந்தை, மமதை என்பன ஆணவத்தின் பிரசவங்கள் ஆகும். அசுர சக்திகள் என்றும் கூறப்படுகின்றன. தற்பற்று, பொருட்பற்று என்றும் குறிப்பிடுவர். இவை மனிதரில் இருந்து வெளியேற்றப்பட்டாலேயே. விநாயகப்பெருமான் திருவருட்கடாட்சம் கிடைக்கப்பெறும் என்பது, இவ்வருட்புராண வரலாற்றுச் சம்பவம் உணர்த்துகிறது.

**சைவத்திருமுறைகள் கண்ட, விநாயகமூர்த்தி:**

திருநாரையூர் என்னும் திவ்விய திருத்தலத்திலே, எழுந்தருளி, அருள்பாலிக்கின்ற பொல்லாப்பிள்ளையார் எனப் பேச்சுவழக்கிலும், பொள்ளாப்பிள்ளையார் என இலக்கிய வழக்கிலும் திருப்பெயர் கொண் டுள்ள விநாயகப்பெருமான், அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்தியுள்ளார். ஒன்று, நம்பி என்னும் பெயருடைய அந்தணச்சிறுவன், நிவேதித்த திருவமுதை, நம்பியின் பக்தியையும், அர்ப்பணிப்பையும், அங்கீகரித்து, திருவமுது செய்தமை. அதன் காரணமாக, நம்பியாண்டார்நம்பி என்ற சிறப்புப்பெயர், அந்தணச்சிறுவன் பெற்றான். இரண்டாவது, நம்பியாண் டார்நம்பியின் வேண்டுதலுக்கிணங்கி, சைவத்திருமுறை இருக்குமிடம் தெரிவித்துத், திருமுறைகண்ட விநாயகமூர்த்தியாகத் திருநாமம் பெற்றமை.

தனக்குமேலே, வேறொரு தலைவன் இல்லாத தனிப்பெருந் தலைவர், என்ற மேன்மை, முதல்வணக்கத்திற்கு உரிமையுடைய முதன்மை, ஓங்காரமூர்த்தி என்னும் பெருமை, ஆகிய சிறப்புக்கள் விநாயகருக்கே உரித்துடையன. ஆகையால் மூத்தபிள்ளையார், விநாயகர், மூத்தநாயனார் மற்றும் நம்பி என்ற பொருள் பொதிந்த திருநாமங்களை, சமய நூல்களில் காணக்கூடியதாக உள்ளன. திருநாரையூரில், எழுந்தருளியுள்ள பொள்ளாப்பிள்ளையாருக்கு, நம்பி என்னும் திருநாமமும் வழக்கில் உள்ளது.

உளியினால் செதுக்காமல், பொள்ளாமல் உருவான பிள்ளையார் என்னும் கருத்தில், பொள்ளாப்பிள்ளையார் எனத் திருநாரையூரில், எழுந்தருளியிருக்கும் பிள்ளையார், அழைக்கப்படலானார். காலப் போக்கில், பேச்சுவழக்கில், பொல்லாப்பிள்ளையார் என மருவி, அப் பெயரே நிலைத்துவிட்டது, என்பது அறிஞர் கருத்தாக உள்ளது. பொள்ளாப்பிள்ளையார் என்பதால் அவர் சுயம்புமூர்த்தி ஆவார்.

திருநாரையூரிலே வாழ்ந்து வந்த ஓர் ஆதிசைவப் பிராமண குலத்தைச் சேர்ந்த சிவாச்சாரியார், இந்தப் பிள்ளையார் ஆலயத்திலே பூசகராக இருந்தார். அவருக்கு நம்பி என்னும் பெயருடைய மகன், இளம் பராயத்திலே உபநயனஞ் செய்யப்பெற்று வேதம் முதலிய கலைகளைப் பயின்று வந்தார். தந்தையார், ஒருநாள் வேற்றூருக்குச் செல்ல வேண்டியிருந்தமையால், மகன் நம்பியிடம், பிள்ளையாருக்குப் பூசை செய்யும் பொறுப்பினை ஒப்படைத்துவிட்டுச் சென்றார்.

தந்தையின் சொற்படி, நம்பி விநாயகருக்குப் பூசை செய்தார். முறைப்படி, பொல்லாப்பிள்ளையாருக்குத் திருமஞ்சனம், மற்றும் தீபாராதனைகள் யாவும் செய்தார். தாம் கொண்டுவந்த, அமுது முதலிய நிவேதனத்தை, விநாயகருக்கு முன்பாக வைத்து, "எம்பெருமானே! இதுவே அடியேன் செய்கின்ற கன்னிப்பூசை. ஏதாவது குற்றங்குறைகள் இருப்பின், என்னை மன்னித்தருள வேண்டும். இந்த நிவேதனத்தைத் திருவமுது செய்ய வேண்டும்", என்று விண்ணப்பஞ் செய்தார்.

நெடுநேரமாகியும், பிள்ளையார் திருவமுது செய்யாதிருப்பது கண்டு, மனம் பதகளித்து, அழுது புலம்பினார். சிறுவரான, நம்பி. தான் நைவேத்தியமாகப் படைத்த திருவமுதைப் பிள்ளையார் ஏற்காமையால், தமது பூசையில் ஏதோ தவறு நேர்ந்துவிட்டதாக, எண்ணித் தன் தலையைக் கல்லில் மோதித், தமக்குத் தாமே தண்டனையை வழங்க முற்பட்டார். அவ்வேளை, அந்தணச்சிறுவன் நம்பியின், நம்பிக்கையை யும், அன்பையும், அர்ப்பணிப்பையும் அங்கீகரித்த விநாயகர் நம்பி, “நம்பி, சற்றுப் பொறு”, என்று தடுத்து, அமுது முழுவதையும் உவந்து உண்டு, நம்பிக்குத் திருவருள் பாலித்தருளினார். அன்றுமுதல் “நம்பியாண்டார்நம்பி”, என்னும் திருப்பெயர் நிலைபெற்றுவிட்டது. இந்த அருட்செய்தி, ஊரில் மட்டுமன்றித் தேசமெங்கும் பரவியது. சோழ மன்னன், முதலாம் இராஜராஜன் இதனைக் கேள்வியுற்றான்.

இதேகாலப்பகுதியில், சோழநாட்டை நீதிவழுவாது, ஆட்சிபுரிந்து வந்த அபயகுலசேகர இராஜராஜன், அவ்வப்போது, தமது அரசசபைக்கு வருகின்ற அன்பர்கள், மற்றும் ஓதுவார்கள், திருஞானசம்பந்தர் முதலிய சைவநாயன்மார்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருப்பதிகங் களில், ஓரோர் திருப்பாடல்கள் ஓதக்கேட்டு, கையிரண்டையும் குவித்துத் தமது தலைமேல் வைத்துக், கண்ணீர் ததும்ப, உடல் முழுவதும் சிலிர்க்கச், சிவெருமானுடைய மலர்ப்பாதங்களை மனத்தில் பதித்துத் துதிப்பார். தேவாரத் திருமுறைகள் அனைத்தையும், தேடித்தொகுக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், அவை கிடைக்கப் பெறாமையால் கவலையுற்றிருந்தார். அந்தநேரத்தில்தான், நம்பியாண்டார்நம்பி பற்றிய அற்புதத் தகவல், மன்னருக்குக் கிட்டியது. நம்பியின் உதவியைப்பெற்று, தேவாரத் திருப்பதிகங்களைத் தேடி, நம்பியைக்கொண்டு தொகுப்பிக்க, மன்னர் விழைந்தார்.

நம்பியாண்டார் என்ற பெயர், நம்பி என்னும் அந்தணச் சிறுவனுக்குக் கிடைக்கப்பெற்றமை எவ்வாறெனின், விநாயகர் நம்பியால், அந்தணநம்பி ஆட்கொள்ளப்பட்டமையால் ஆகும். திருநாரையூரில் வீற்றிருக்கின்ற விநாயகரின் திருநாமம் நந்தி.

நம்பியாண்டார்நம்பி, தம்மால் இனிப்பாடசாலைக்குச் செல்ல முடியாது, விநாயகப்பெருமானே தமக்கு வேதங்கள் மற்றும் கலைகளை ஓதிக் கற்பிக்க வேண்டும் என்று விண்ணப்பித்தார். பரமாசாரியராகிய விநாயகப்பெருமான் நம்பியின் வேண்டுதலை ஏற்று, ஓதுவிக்க, நம்பியும் ஓதி, சகலகலாவல்லுனர் ஆனார்.

நம்பியாண்டார் நம்பியை, நேரில் பார்த்து, அவரின் அற்புதங்களின் மகிமையை அறிந்துகொள்ள விரும்பிய சோழமன்னன் முதலாம் இராஜராஜன், திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாருக்கு, நம்பியாண்டார் நம்பி, நிவேதிக்கும்படி வாழைப்பழம், தேன், அவல், எள்ளுருண்டை; மோதகம் முதலிய பிரசாதங்களுடன், திருநாரையூருக்கு வந்து சேர்ந்தார். அங்கு, நம்பியாண்டார்நம்பியை வணங்கி, “இப்பிரசாதங்களைப் பொல்லாப்பிள்ளையாருக்கு இப்பொழுதே நிவேதிக்க” என்று கேட்டுக்

கொண்டார். நம்பி, மன்னரிடம் அவற்றைப் பெற்று, ஆனைமுகப் பெருமானை வணங்கி, "மன்னன் வழங்கிய இந்நிவேதனப் பொருள்களை, உவந்து ஏற்றுத், திருவமுது செய்தருளுக", எனப் பிரார்த்தித்தார். விநாயகர், யாவரினதும் முன்னிலையில், அவற்றை ஏற்றுத், தமது துதிக்கையினால் எடுத்து, திருவமுது செய்தருளினார். மன்னன் இராஜராஜ சோழன் இத்திருக்காட்சியைக் கண்ணாரக்கண்டு, மனம் நெகிழ்ந்து, கண்ணீர் உகுத்தார். நம்பியினுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கித், தமது "நீண்டகால விருப்பம் நிறைவேறும் நாள், வந்துவிட்டதாக எண்ணி, சமய குரவர் மூவரின் தேவாரப்பதிகங்களைத் தேடிப்பெற்றுத், தொகுத்து பூமியிலுள்ளவர்களுக்கு வழங்கும் திருப்பணியை, ஏற்றுக்கொள்ளும்படி, நம்பியை மன்னன் வேண்டி நின்றான்.

நம்பியாண்டார்நம்பி, மன்னன் இராஜராஜனின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, பொல்லாப்பிள்ளையாரை வணங்கி, தமக்குத் திருவருள் பாலிக்குமாறு விண்ணப்பித்தார். பொல்லாப்பிள்ளையார், அசரீரி வாக்காக, "நம்பி! தேவாரத் திருமுறைகள், சிதம்பரத்திலே, மூவர் கையடையாளம் இடப்பட்டுள்ள ஓர் அறையிலே உள்ளன", என்று திருவாய் மலர்ந்தருளினார். அப்பதிகங்களைப் பாடிய நாயன்மார்களின் வரலாறுகளையும் நம்பிக்கு உபதேசித்தருளினார். இந்த அருட்தகவலை நம்பியாண்டார்நம்பி, சோழமன்னனிடம் தெரிவித்தார். மன்னன், நம்பியுடன் சிதம்பரம் சென்றார். தில்லைவாழ் அந்தணருடைய அனுமதிபெற்று, கனகசபைக்கு மேற்குத் திசையிலுள்ள அறையினெதிரே, சமயகுரவர் மூவரின் திருவுருவங்களையும் எழுந்தருளிவித்து, உலாவரச் செய்து, நிறுத்திக்கொண்டு, அவர்களின் முன்னிலையில், திருக்கதவைத் திறந்து பார்த்தபொழுது, கறையான் மண் மூடியிருப்பது கண்டு, அதிர்ச்சியுற்றனர்.

அப்பொழுது, "தற்காலத்திற்கு வேண்டிய பதிகங்களை வைத்துக் கொண்டு, ஏனையவற்றை மண்மூடச் செய்தோம்", என்று, ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. சோழமன்னன் அதனைக் கேட்டுக் கவலை நீங்கப் பெற்றவராய். எஞ்சிய திருப்பதிகங்கள் அடங்கிய ஏட்டுச்சுவடிகளைத் தில்லைவாழ் அந்தணர்களிடமிருந்து பெற்று, நம்பியாண்டார்நம்பியிடம் ஒப்படைத்து, அவற்றைச் சீர்செய்து, தொகுத்து வழங்கும்படி வேண்டினான். சைவத்திருமுறைகள் பன்னிரண்டு ஆகும். அவற்றில் பதினொரு திருமுறைகளை வகுத்தவர் நம்பியாண்டார்நம்பி ஆவார். மேலும், அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாறுகளை "திருத்தொண்டர் திருவந்தாதி", என்னும் நூலின் மூலம் சைவஉலகிற்கு வழங்கியவர், நம்பியாண்டார்நம்பி, என்பது குறிப்பிடத்தக்கது. சேக்கிழார் இயற்றிய அறுபத்துமூவர், திருத்தொண்டர் பெரியபுராணம், இந்நூலை ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பெற்றமை நோக்கற்பாலது.

மறைந்து, மாண்டுபோக இருந்த, அற்புதத் தேவாரத்திருமுறைகள் இருக்குமிடம், தெரிவித்து, நம்பியாண்டார்நம்பி மூலம், வெளிப்படுத்தி அருளியமையினால், திருநாரையூர் பொல்லாப்பிள்ளையார், திருமுறை கண்ட பிள்ளையார் என்று போற்றப்படலானார்.

### (7) முருகன், வள்ளி திருமணம்:

திருமண பந்தத்தில் இரண்டு வகையான ஒழுக்கங்கள் பண்டைத் தமிழர் பண்பாட்டில் இருந்தமைபற்றி, அகநானூறு, குறுந்தொகை போன்ற, சங்ககால இலக்கிய நூல்களில் ஆதாரங்கள் உள்ளன. களவொழுக்கம், கற்பொழுக்கம் என்பனவே அவ்விரண்டுமாம். தமிழ்க்கடவுள் எனப்போற்றப் படுகின்ற முருகப்பெருமான், இவ்விரண்டையும் நிகழ்த்திக் காட்டினார். கற்பொழுக்கம், தெய்வநாயகியை மணந்தும், களவொழுக்கம், வள்ளி நாயகியைச் சேர்ந்தும், உலகத்தவர்க்கு முன்மாதிரியாக விளங்கினார்.

வள்ளிநாயகி, வேடுவகுலப்பெண், குறமகள் என்றும் கூறுவர். சமூகரீதியாக, தாழ்ந்த குலத்தில் தோன்றிய பெண். வள்ளிநாயகிமீது, முருகப்பெருமான் காதல்கொண்டு, வேலன், வேடன், விருத்தன் ஆக, அவர்முன் தோன்றினார். வள்ளிமலையை அடைந்து, அங்கு தமது திருவிளையாடல்களை, வள்ளிநாயகிமுன், நிகழ்த்தியும், அவரை இரந்தும், வேறு யுக்திகளைக் கையாண்டும், அவர் இசைய மறுத்துவிட்டார். குலவழக்கப்படி, தினைப்புலத்தைக் காப்பதுவே, வள்ளிநாயகியின் பணி. அவர், பறவைகள் வந்து தினைக்கதிர்களை அழிக்காமல், அவற்றை விரட்டுவதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்தார். வேடன் வேடத்தில், வந்த முருகன், செய்த தந்திரோபாயங்கள் எதுவும், வள்ளிநாயகியிடம் பலிக்காமல் போகவே, முருகப்பெருமான் செய்வதறியாது திகைப்புற்றார்.

அவ்வேளை, இடர்களைவதில் வல்லவரானவரும், ஆபத்சகாய மூர்த்தியுமாக, விளங்கும் அண்ணன் விநாயகரை, முருகன் தியானித்து, தமக்கு ஏற்பட்ட இடர்களை நீக்கியருளுமாறு வேண்டினார். விநாயகரும், தனது தம்பி முருகனுக்கு உதவத் திருவுளங்கொண்டு. ஒரு பெரிய மதயானை வடிவெடுத்து, தினைப்புனத்தை அதிர வைக்கும் முறையில். பெரும்கர்ச்சனை செய்துகொண்டு, வள்ளிநாயகி எதிரே தோன்றினார். அவர் யானையைக் கண்டு அஞ்சி நடுநடுங்கி, அலறி, முருகனை நோக்கி, ஓடிச்சென்று, "ஐயனே, யானையிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள். உங்கள் சொற்படி நடக்கச் சம்மதிக்கிறேன்", என்று கூறி, வள்ளிநாயகி, முருகனின் பின்புறம் சென்று அவரைத் தழுவிக் கொண்டார்.

அப்பொழுது, முருகன், தமது முன்பக்கத்திலே, யானை வடிவில் எழுந்தருளியுள்ள விநாயகரை வணங்கி, "எம்பெருமானே! தங்கள் வருகையால், என் எண்ணம் நிறைவேறியது, வள்ளிநாயகியும் என்னைச் சேர்ந்தாள். இனி நீங்கள் மீண்டெழுந்தருளுக", என வேண்டி, தமது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்தார். விநாயகரும், விடை பெற்றுக்கொண்டு, தாம் வந்த காரியம் நிறைவுற்றமையையிட்டு, மகிழ்ச்சியைத் தெரிவித்து, அங்கிருந்து மீண்டருளினார்.

முருகக்கடவுளை இடரினின்றும் நீக்கி, வள்ளிநாயகியாரை அவருடன் இணையச் செய்தமையினால், திருத்தணிகைத்தலத்தில் வீற்றிருக்கும் விநாயகப்பெருமான், ஆபத்சகாய விநாயகர் எனப் போற்றப்படுகிறார்.

**(8) அரக்கரை அழித்தமை:**

அழித்தல் என்பதன் பொருள், இல்லாமல் செய்தல் என்பதாகும். மனிதரின் உள்ளங்களில் தோன்றி, அடாத செயல்களாகப் பெருகித் தீமைகளை விளைவிக்கும், தீய எண்ணங்களை அழித்தல் என்பதுதான். இறைவனின் ஐந்தொழில்களுள் ஒன்றான அழித்தல் என்பதன் உட் பொருள். இதனைச் சங்காரம் என்றும் அழைப்பர். இறைவனின் மறக் கருணையின் விளைவே இதுவாகும். உயிர்களின் நன்மை கருதியே மறக்கருணை செய்யப்படுகிறது.

புராணங்களின் வாயிலாக, அரக்கர், அசுரர், அவுணர், நரகர் ஆகியோரை, விநாயகர், சிவபெருமான், முருகன், வைரவர், வீரபத்திரர், காளி, துர்க்கை ஆகிய கடவுளர்கள் எதிர்த்துப் போர்புரிந்து, சங்காரம் செய்த வரலாறுகள் பற்றி அறிகிறோம். சங்காரம் என்பதன் உட்கருத்தைத் தெளிந்து கொள்ள வேண்டும்.

அழித்தல் அல்லது சங்காரம் என்பதன் மற்றொரு பொருள், ஒன்றை இன்னொன்றாக உருமாற்றம் செய்தல், ஆகும். உதாரணங்களாக, விநாயகப்பெருமான், கயமுகாசுரசங்காரம் செய்தபோது, கயமுகாசுரன் பெருச்சாளியாக உருமாற்றம் பெற்று, விநாயகரின் வாகனம் ஆகியமை; முருகப்பெருமான் சூரபத்மனைச் சங்காரம் செய்தபோது, அவன் சேவலும், மயிலும் ஆக மாறியமை என்பவற்றை உதாரணங்களாகக் கூறலாம். மயிலை, முருகன் தமது வாகனமாகக் கொண்டார், சேவலைக் கொடியில் வைத்தார்.

விநாயகரின் திருவிளையாடல்கள், வெறுமனே பொழுதுபோக்குக் கதைகள் அல்ல. அவை படிப்பினைகள் நிறைந்தவை. மனித வாழ்க்கை மேம்பாட்டிற்குத் தேவையான அடிப்படைத் தத்துவங்களை உணர்த்து பவை, தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் இடையே நடைபெறும் போர் பற்றியும், தர்மம் இறுதியில் வெல்லும் என்பதையும், உலகத்தவர்க்கு எடுத்துக் காட்டுவனவாகவே, புராண, இதிகாசக் கதைகள் விளங்குகின்றன. அதேவேளை, பக்திநெறியில் மனிதர்களை வாழச்செய்வதற்கும், தர்மம் தவறாத அறநெறியில் வாழ்க்கையை இட்டுச்செல்வதற்கும், உந்து சக்தியாக இத்திருவிளையாடல் கதைகள் விளங்குகின்றன. ஆனால், பெரும்பாலானவர்கள் அறிவுபூர்வமாகச் சிந்திக்காமல், சாரத்தைவிட்டுச், சக்கையை எடுத்துக்கொண்டு, புராண, இதிகாசங்களை நிந்திப்பதில் தம் வாழ்நாட்களை வீணாக்குகிறார்கள்.

விநாயகரின் திருவிளையாடல்கள் யாவும், அவரின் அருட்செயல் கள் ஆகும். தீயசக்திகள் மக்களுக்கு ஏற்படுத்தும் இடர்கள், இடையூறு கள், காரியத்தடைகள் என்பவற்றைத் தடுப்பவராகவும், நீக்கியருளுபவ ராகவும், பக்தர்களைப் பற்றாதவாறு திருவருள் பாலிப்பவராகவும், விநாயகக்கடவுள் விளங்குகிறார். அதனால், விக்கினேஸ்வரன் என்ற திவ்வியநாமத்தால், அழைக்கப்படுகிறார். எனவே, எமக்கு வருகின்ற இடர்கள், இடையூறுகளையும், விக்கினங்கள், துன்பம், துயர்களையும்,

நீக்கியருளுமாறு, பக்திசிரத்தையுடன், விநாயகரை வேண்டி, திரிகரண சுத்தியுடன் பிரார்த்தித்து, வழிபட்டால், அவர் கருணை கூர்ந்து, அவற்றை நீக்கியருளுவார்.

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்**
**கண்ணிற் பணியின் கனிந்து.** - கபிலதேவர்.

தேவர்களின் விரோதிகளாக அரக்கர்கள் இருந்தார்கள். அரக்கர்கள் மிகுந்த உடல்பலம் கொண்டவர்கள், விரும்பிய உருவங்களை எடுக்கும் வல்லமை உடையவர்கள். தேவர்களைக் கொல்வதையே, குறிக்கோளாகக் கொண்டு, தருணத்தை எதிர்பார்த்திருப்பவர்கள். விநாயகர்; குழந்தைப் பருவ விளையாட்டாகப், பலம் பொருந்திய அரக்கர்களைச் சங்காரம் செய்த வரலாற்று நிகழ்வுகளைக் காண்போம்:

### (9) கழுகு உருவம் கொண்ட அரக்கன்:

விநாயகர், குழந்தையாகத் தாயார் உமாதேவியாரிடம் வளர்ந்து வந்தபோது, கிருத்திரன் என்னும் பெயருடைய அரக்கன் அவரைக் கொல்ல முயற்சித்தான். அவன் கழுகு உருவம்கொண்டு பாலகணபதி யைக் கவர்ந்து, ஆகாயத்தில் தூக்கிச் சென்றான். அங்குள்ளவர்கள், இக்கொடூரக்காட்சியைக் கண்டு, செய்வதறியாது, திகைத்து அலறினர்.

அப்பொழுது, பாலகணபதி தமது விளையாட்டைத் தொடங்கினார். கழுகின்மீது அமர்ந்தவாறே, அவர் தமது மூச்சை உள்ளிழுத்துப், பெரு மூச்சாக வெளிவிட்டார். அத்துடன் கழுகின் அடிவயிற்றிலும், பலமாகத் தமது காலால் உதைத்தார். இவற்றின் அகோரத்தைப் பொறுக்க முடியாமல், கழுகு உருவத்தில் இருந்த கிருத்திரன் என்ற அரக்கன், அலறி அடித்துக்கொண்டு, கீழே நிலத்தில் வீழ்ந்து இறந்தான்.

### (10) அரக்கியின் சூழ்ச்சி

அரக்கர்கள், அடிக்கடி தேவர்களுக்குத் தொல்லைகள் கொடுத்து வந்தனர். முனிவர்கள், இருடிகள் செய்கின்ற யாகங்களைக் குழப்பினர். காசிபமுனிவர், இத்தொல்லைகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில், விநாயகப்பெருமானின் திருவருளை வேண்டித் தவம் மேற்கொண்டார். அவரின் தவத்துக்குக் கருணை கூர்ந்து, விநாயகர் தோன்றி, காசிப முனிவர், அவரின் மனைவி அதிதி ஆகியோருடன், ஆசிரமத்தில் வளர்ந்து வரலானார். தேவர்கள்; அரக்கர்களின் தொல்லைகள், தொந்தரவுகள் இனி நீங்கிவிடும் என எண்ணி மகிழ்ச்சியுற்றனர்.

விநாயகர், குழந்தையாக, காசிபமுனிவருடன் வளர்ந்து வருவதை அறிந்த விரசை என்னும் பெயருடைய அரக்கி, காசிபமுனிவர், மற்றும் அதிதி இல்லாத நேரத்தில், ஆசிரமத்திற்குச் சென்று, குழந்தை விநாயகரைப் பிடித்து விழுங்கிவிட்டாள். அப்பொழுது விநாயகர் குழந்தை,

தமது திருவிளையாடலை ஆரம்பித்தார். அரக்கி விரசையின் வயிற்றுக்குள் சென்ற விநாயகர், தமது கை, கால்களை அசைத்துப் பலமாக உதைத்தார். அரக்கியின் வயிறு வெடித்தது. விநாயகர் அரக்கியின் வயிற்றிலிருந்து, வெளியே வந்தார். காசிபமுனிவரும் மனைவி அதிதியும், நடந்தவற்றை அறிந்து, மகிழ்ந்து ஆறுதல் அடைந்தனர்.

### (11) கிளிகள் உருவில் வந்த அரக்கர்கள்

காசிபமுனிவரின் ஆசிரமத்தில், அவரின் குழந்தையாக விநாயகர் வளர்ந்து வந்தபோது, அச்செய்தியை அறிந்து, இரண்டு அரக்கர்கள், சூழ்ச்சியால் குழந்தையைக் கொன்றுவிடத், தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அவ்விரு அரக்கர்களும் கிளி உருவங் கொண்டு விநாயகரின் கண்களுக்குப் புலப்படும் விதத்தில், அங்கு மிங்குமாகத் திரிந்தனர்.

விநாயகர், அரக்கர்களின் சூழ்ச்சியை அறிந்தார். முனிவரின் மனைவி அதிதியிடம், அந்த அழகான கிளிகள் இரண்டையும் பிடித்துத் தருமாறு, கேட்டார். அதற்கு, அதிதி, பறக்கும் கிளிகளைப் பிடிப்பது இயலாத காரியம் என்று கூறினார்.

உடனே, குழந்தை விநாயகர், பருந்து உருவம் எடுத்தார். கிளிகள் இரண்டையும் இலக்குவைத்தபடியே மேலே பறந்து சென்றார். கிளி களைப் பிடித்துப் பலமாகக் கொத்தினார். கிளிகளாக உருவம் மாறி யிருந்த அரக்கர்கள் இருவரும், மீண்டும், அரக்கர்களாகத் தோற்றம் பெற்று, நிலத்தில் வீழ்ந்து இறந்தனர்.

### (12) இந்திராணி வேடத்தில் அரக்கி

அரக்கி ஒருத்தி, ஏராளமான எருமை மாடுகளையும், உணவையும், ஒருவேளை சாப்பாடாக உட்கொள்வாள். அவளுக்குப் பசியும் அதிகம், உண்ணும் உணவின் அளவும் அதிகம். ஒருநாள் அந்த அரக்கி, உமாதேவியாரிடம் மயூரேச விநாயகராக வளர்ந்து வந்த, பால கணபதியைத் தூக்கிச்செல்ல முற்பட்டாள். அந்த அரக்கி, ஒருநாள் தேவேந்திரன் மனைவி இந்திராணியைப்போல வடிவம் எடுத்து, மயூரேச விநாயகரை அன்புகொண்டு அணைத்து முத்தமிடுபவள்போலப் பாசாங்கு செய்து, அவரைத் தூக்கி; வானத்தில் எறிந்து கொல்ல முயன்றாள். அச்சதித்திட்டத்தைத் தமது ஞானதிருஷ்டியினால் உணர்ந்துகொண்ட விநாயகப்பெருமான், தாமும் அன்புகொண்டவர்போல, அரக்கியின் செவிகளையும், மூக்கையும் வருடிக் கிள்ளினார். அக்கணமே அரக்கியின் உயிர் பிரிந்தது. அரக்கர்கள், தன் ஊன்பெருக்கற்கு, மற்றோர் உயிரின் உடம்பைக் கொன்று உண்ணுபவர்கள். அத்தகையவர்களிடம் பிறர்மீது அன்பு, கருணை, ஈனஇரக்கம், பரிவு, தயை என்பன இருக்க முடியாது. "தன்னூன் பெருக்கற்குத்தான் பிறிது ஊனுண்பான் எங்ஙனம் ஆளும் அருள்", என்று வினா தொடுக்கிறார், வள்ளுவப்பெருந்தகை. விடையும் வினாவிலேயே தொக்கிநிற்கிறது.

மக்களிலும், புலால் - மற்சமாமிசம் உண்ண மறுப்பவர்கள், தேவர்கள் ஆவர். புலால் உண்பவர்கள் அரக்கர்கள் ஆவர்.

### (13) மலைப்பாம்பு உருவத்தில் அரக்கன்:

ஒருமுறை அரக்கன் ஒருவன் மலைப்பாம்பு வடிவங்கொண்டு, விநாயகரைத் தேடி வந்தான். விநாயகரை அணுகி, அவரை இழுத்து முழுமையாக விழுங்கிவிட்டான். அரக்கர் நரமாமிசபட்சணிகள். நரமாமிசம் என்பது மனித இறைச்சி. விநாயகர் குழந்தையாக விளையாடிக் கொண்டிருந்தபோது, இந்நிகழ்வு நிகழ்ந்தது. மலைப்பாம்பின் வயிற்றுக் குள், குழந்தை விநாயகர் விசுவரூபம் கொண்டார். மலைப்பாம்பின் வயிறு வெடித்தது. அரக்கன் மாண்டான். "தன்வினை தன்னைச்சுடும்", என்னும் ஆன்றோர் வாக்கு உறுதியாயிற்று.

### (14) வஞ்சனை அழிவிற்குக் காரணம்:

கூபன், மண்டுகன் என்னும் இரக்கமற்ற, வஞ்சனையே வடிவமான அரக்கர்கள் இருவர், விநாயகரைக் கொல்வதற்குக் கிணறு. தவளை போன்ற உருவங்கள் கொண்டு, தருணம் பார்த்துக் காத்திருந்தனர். விநாயகர், தமது ஞானதிருஷ்டியால் இதனை உணர்ந்தார். "முள்ளை முள்ளாலேயே எடுக்க வேண்டும்" என்பது யுக்திபூர்வமாக அமைந்த பழமொழி. அதற்கேற்ப; வஞ்சகர்களை, வஞ்சனையால் ஒழிக்க வேண்டும் என எண்ணிய விநாயகர், தாமே சென்று கிணற்றில் குதித்தார். நீண்டநேரம் கிணற்றினுள்ளேயே இருந்தார். வெளியில் வரவில்லை.

மண்டுகன், கூபன் இருவரும், விநாயகர் கிணற்றுக்குள், நீரில் அமிழ்ந்துவிட்டதாக எண்ணினர். அதனால் மகிழ்ச்சியில் திளைத்தபடி, அரக்கர்கள் இருவரும் தமது உண்மைத் தோற்றத்துடன் கிணற்றைவிட்டு வெளியில் வந்தனர்.

இருவரும் வெளியே வந்ததும், அவர்களுக்கிடையே, விநாயகரை யார் கொன்றது, என்னும் வினா எழுந்தது. அப்பிரச்சினை, பூதாகரமாக எழுந்து, இருவரும்தான், தான் என்றுவாதம் செய்தனர். முடிவற்ற வாத மாக, உச்சக்கட்டத்தை அடைந்து, ஒருவரைஒருவர் தாக்கிக் கொல்ல முற்பட்டபோது, விநாயகர் கிணற்றிலிருந்து வெளியே வந்தார். அவ் வேளை, மண்டுகன், கூபன் இருவரும், சண்டையிட்டு மடிந்து விட்டனர்.

"சூதும் வாதும் வேதனை செய்யும்", என்ற ஆன்றோர் வாக்கை, இந்நிகழ்ச்சி மெய்ப்பிப்பதாக அமைந்துள்ளது. சூது, வாது இரண்டும் அரக்கர் குணங்கள்; மனிதர்கள் அவ்விரண்டு குணங்களையும் விலக்கி வாழவேண்டும். சூதும், வாதும் மனிதப்பண்புகள் அல்ல. அவை தர்மத்துக்கு விரோதமானவை. அவற்றை விலக்கித், தர்மத்தின் பாதையில் நமது வாழ்க்கையை நடத்திச் சென்றால், உண்டு நல்வாழ்வு என்பதை விநாயகர் கதைகள் எடுத்துக் காட்டுகின்றன.

### (15) ஔவையார் திருக்கைலாயம் சேர்ந்தமை

சுந்தரமூர்த்திநாயனாரும், சேரமான்பெருமாள் நாயனாரும், திருக் கைலாயத்துக்குச் செல்வதாகச் செய்தியொன்று, ஔவையாருக்கு எட்டியது. தாமும் அவர்களோடு இணைந்து, திருக்கைலாயம் செல்வதற்கு விரும்பி, விநாயகருக்குச் செய்யும் பூசைவழிபாட்டை அவசரமாகச் செய்யத் தொடங்கினார், ஔவையார்.

மனம் இரண்டுபட்ட நிலையில், இருப்பதை உணர்ந்து; "ஔவையே! அவசரப்படாமல், வழக்கம்போல, நிதானமாக ஒருமனத்தினராய், வழிபாடு செய், அவர்கள் கைலையைச் சென்றடைய முன்னதாகவே, நாம் உன்னைக் கைலையில் சேர்ப்பிக்கின்றோம்", என்று விநாயகப்பெருமான், திருவாய் மலர்ந்தருளினார்.

ஔவையாரும், மிக்க மகிழ்ந்து, வழக்கம்போல, அமைதியாக விநாயகர் பூசையை நடத்தி முடித்தார். விநாயகர், தம்முடைய துதிக்கை யில், ஔவையாரை அமரச்செய்து, திருக்கைலாயத்தில் சேர்த்தார்.

சுந்தரமூர்த்திநாயனாரும், சேரமான்பெருமாள் நாயனாரும், கைலை யைச் சென்றடைந்தபோது, அங்கே ஔவையார் தமக்கு முன்னமேயே வந்து இருப்பதைக்கண்டு, பெருவியப்படைந்தார்கள். "கணபதி பூசை கைமேற்பலன்", என்பதற்கு இந்நிகழ்வு சான்றாகும்.

**(16) விநாயகரும் வியாசமுனிவரும்**

இமயமலையில் வியாசமுனிவர், பெருந்தவநிலை மேற்கொண் டிருந்த காலகட்டத்தில், அவருடைய அறிவுப்புலனில், "பாரத காவியம்", கருக்கொள்கிறது. அவ்வேளை, பிரம்மதேவர், அவர்முன் தோன்றி, "உலகம் மேன்மையுற, உலகத்தவர் நன்மைக்காக, மகாபாரதத்தை அருளிச் செய்வீராக", என்று வியாசமுனிவரைப் பணித்தார்.

இயற்றுபவரே எழுதினால், பாட்டின் வேகம் தடைப்படும் என எண்ணிய வியாசர், தாம் இயற்றும் மகாபாரதத்தைச் சரிவர எழுதக் கூடியவர் யார்? எனச் சிந்தித்தார். அப்போது, ஞானத்தின்திருவுருவமாகத் திகழும் விநாயகப்பெருமானே, அதற்குப் பொருத்தமானவர் எனத் தீர்மானித்தார்.

விநாயகரை, வியாசர் மனத்தில் நினைத்துத் தியானித்தார். விநாயகர் அவர்முன் தோன்றினார். வியாசர், தாம் உலக நன்மைக்காகவும், மேன் மைக்காகவும், மகாபாரதத்தைப் பாடுவதாகவும், விநாயகப்பெருமான் அதை எழுத்தில் எழுதி அருள வேண்டும் எனவும் தனது வேண்டுகோளைச் சமர்ப்பணம் செய்தார்.

அப்போது, விநாயகர், "மகாபாரதம் இயற்றுவது மிகவும் நல்லது, மக்கள் நன்மை பெறுவார்கள். நான் அதிககாலம் உம்முடன் இருக்க முடியாது. நான் மிகவும் வேகமாக எழுதக்கூடியவன். நான் விரைந்து எழுதக்கூடிய கடுகதி வேகத்திற்கேற்ப, நீர் பாடுவதானால், நான் எழுதச் சம்மதிக்கிறேன்" என்றார்.

வியாசர், முதலில் திகைப்புற்றாலும், பின்னர் விநாயகப்பெருமான் இட்ட நிபந்தனையை, ஏற்றுக் கொண்டார். அத்துடன் "பெருமான் எழுதுகின்ற வேகத்திற்கு ஏற்பப் பாடுகிறேன். ஆனால், தேவரீர் பொருள் தெரிந்து எழுத வேண்டும்" என்று வேண்டினார். விநாயகப்பெருமான் அதற்கு இசைந்தார். வியாசர் மகாபாரதம் பாடத் தொடங்கினார்.

விநாயகப்பெருமான், கயமுகாசுரசங்காரம் நிகழ்த்துவதற்கு முரித்த தமது தந்தத்தை எழுத்தாணியாகவும், மேருமலையை ஏடாகவும் கொண்டு,

மகாபாரத காவியத்தை எழுதியருளினார். இவ்வாறு புராண, இதிகாசங்கள் குறிப்பிடுகின்றன. மகாபாரதலிகிதமூர்த்தி எனவும், விநாயகர் போற்றப்படு கிறார். அந்தவகையில், உலகின் முதல் எழுத்தாளர் என்ற பெருமைக்கும் உரியவர் ஆகின்றார்.

**"......பாரதப் பெரும்போர்**
**தவளமா மருப் பொன் றொடித்தொரு கரத்திற்**
**தரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்**
**கவளமா களிற்றின் திருமுகம் படைத்த**
**கடவுளை நினைந்து கை தொழுவாம்"**

- திருவாதவூரடிகள் புராணம்

**நீடாழியுலகத்து மறைநூலொ டைந்தென்று நிலை நிற்கவே**
**வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம் சொன்ன நாள்**
**ஏடாக மாமேரு வெற்பாக வங்கூரெ முத்தாணிதன்**
**கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.**

- வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.

ஞானமாகிய தமது கொம்பினால், மேருமலையில், மகாபாரதத்தை எழுதினார், என்பது புராண வரலாறு. மகாபாரதம் ஐந்தாம் வேதம் எனப் போற்றப்படும். இதிகாசம் என்னும் நூல் வகைக்குள் இந்நூல் அடங்கும். இதிகாசங்கள், தவகதைகள் தற்காலத்து நாவல்கள் போன்று அவகதை கள், அல்ல.

வியாசர் அறுபது இலட்சம் கிரந்தங்கள் பாடினார். அவற்றில் முப்பது இலட்சம் தேவலோகத்தில் நின்றது. பதினைந்து இலட்சம் அசுரலோகத்தில் நின்றது. பதினான்கு இலட்சம் யட்ச உலகில் நின்றது. மீதி ஒரு இலட்சம் மட்டுமே பூவுலகுக்குக் கிடைத்தது.

பாரதத்தை, வில்லிபுத்தூராழ்வார் தமிழில் பாடியுள்ளார்.

வியாசமுனிவர், விநாயகர் பக்தர். விநாயகருடைய ஓங்கார - ஏகாட்சர மந்திரத்தை உச்சாடனஞ்செய்து, தியானித்து, உலகத்தவர் நன்மைகருதி, உய்யும்பொருட்டு பதினெண் புராணங்களையும், அருளிச் செய்தார்.

இதிகாச புராணங்களின் குறிக்கோள், தர்மம் வெல்லும், அதர்மம் தோற்கும் என்பதாகும். இவ்வுண்மையைப் பாமரமக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம், கதைகள் வடிவத்தில் கேட்பார் பிணிக்கும் வகையில், கேளாரும் வேட்ப; இதிகாச புராணங்கள் எடுத்துக் கூறுகின்றன. மக்களை, அறநெறியில், தர்மத்தின் பாதையில், வாழ்க்கையை இட்டுச் செல்லத்தூண்டுவதும், வையத்துள் வாழும் நெறியறிந்து, வாழ்வாங்கு வாழவும், மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், வழிப்படுத்தி நெறிப்படுத்து வதும்; அதன் விளைவாகத், தனிமனித அமைதி, குடும்ப அமைதி, சமூகத்தில் அமைதி, வாழும் நாட்டில் அமைதி, ஈற்றில் உலக அமைதி எய்தப்படுதலும், இதிகாச புராணங்களின் நோக்கங்கள், இலக்குகள், பயன்கள் ஆகும். வாழ்வியல் விழுமியங்களை எடுத்துரைப்பதன்மூலம், மனித வாழ்வு மேம்பாட்டிற்கு, வழிமுறைகள் தரப்படுகின்றன.

### (17) சித்தி, புத்தி தேவியர், இருவரைத், திருமணம் செய்தமை: அதற்கான கால்கோள்:

விநாயகர், பிரமச்சாரி என்பதே, பொதுவான கருத்து ஆகும். ஆயினும், சித்தி, புத்தி எனும் பெயர்களைக் கொண்டுள்ள இரு தேவியர்களை, விநாயகர் திருமணஞ் செய்தமை பற்றிப் புராணங்கள் கூறுகின்றன.

விநாயகருக்கு முதல்வணக்கம் செய்யாமல், பிரம்மா சிருஷ்டித் தொழிலைச் செய்யத் தொடங்கினார். கடவுளின் திருவருளைப் பெறாமல், பிரம்மாவால் சிருஷ்டிக்கப்பட்டவை அனைத்தும், பல விகார வடிவங் கொண்ட பேய்பிசாசுகள் ஆகத், தோற்றங்களைக் கொண்டிருந்தன. அவை, படைத்த பிரம்மன் அஞ்சும்படி, பல்வேறு துன்பங்கள் செய்தன. அவற்றைக் கண்டு, பிரம்மா புத்தி தடுமாறித் தளர்ச்சியுற்றார், செய்வதறியாது திகைத்தார். பின்பு, விநாயகப்பெருமானது அருள் சிறிதே கிடைக்கப் பெற்றதும், தனது தவறை உணர்ந்தார். எடுத்த கருமங்கள் இடையூறு களின்றி, நடைபெறச்செய்து, வெற்றியைத் தருபவர், விநாயகப்பெருமான். அவர் முதல்வணக்கத்திற்குரியவர், விக்கினங்கள் ஏற்டாமல் தடுப்பவர், அத்தகைய ஆற்றல்மிக்க விநாயகப்பெருமானை, மறந்து, தனது அகங்காரத்தினால், அவரை வணங்காது, உதாசீனஞ்செய்து, சிருஷ்டிக்கத் தொடங்கியமையினாலேயே, இவ்விக்கினங்களும், அவலங்களும் ஏற்பட்டன என்பதைக், காலங்கடந்த நிலையிலாதல், பிரம்மா உணரப் பெற்றார். உடனே பிரம்மா, யோக நிலையில் அமர்ந்து, விநாயகப் பெருமானை நினைந்து பிரார்த்தனை செய்தார்.

அவ்வாறு, பிரம்மா, யோகத்திலிருக்கையில், விநாயகர் குழந்தை வடிவத்தில், அவருக்குக் காட்சி கொடுத்தார். அப்பொழுது பிரம்மா, தாம் சிருஷ்டி செய்ய ஆரம்பித்தபொழுது அநேக இடர்கள், இடையூறுகள் ஏற்பட்டதாகவும், அவற்றையெல்லாம் நீக்கிச், சிருஷ்டி செய்யத் திருவருள் பாலிக்குமாறு, விநாயப்பெருமானை வேண்டுதல் செய்ததாகவும், அதற்கு விக்னேஸ்வரர், "பிரம்மனே! நீ, உன் அகங்கார மேலீட்டினால், திருவருட் துணையின்றிச் சிருஷ்டித்தொழிலை, ஆரம்பித்ததினால், இவ்விடை யூறுகள் யாவும் நேர்ந்தன. இடையூறுகள் நீங்கும்படி நமது 'ஓம்' எனும் ஏகாட்சர மந்திரத்தைச் செபி" என்று, குழந்தை விநாயகர் திருவாய் மலர்ந்து, அம்மந்திரத்தை உபதேசித்தருளியதாகவும் அகக்காட்சியாகக் கண்டார்.

பிரம்மா, தான் செய்த தவறுக்காக வருத்தமுற்று, மன உறுதியுடன், விநாயகர் உபதேசித்த ஏகாட்சர மந்திரத்தை, பல தடவைகள் தொடர்ந்து உச்சாடனஞ்செய்து கொண்டிருந்தார். அவ்வேளை, ஓங்கார மூர்த்தியாக வும், பிரணவசொரூபியாகவும், விளங்குகின்ற விநாயகமூர்த்தி, பிரம்மா முன்னிலையில் தோன்றி. "நீ விரும்பும் வரங்களைக் கேட்பாயாக", என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பிரம்மதேவர், வணங்கி, "அடியேனுக்குத், தேவரீருடைய திருப் பாதங்களை மறவாத அன்பையும், எமக்குத் தரப்பட்டுள்ள சிருஷ்டித் தொழிலை, விக்கினங்களின்றி ஆற்றுவதற்குத் தகுந்த வலிமையையும்

வழங்கியருளுக", என்று விண்ணப்பித்தார். விநாயகப்பெருமான், "பிரம்மனே! எமது கிரியாசக்தி, ஞானாசக்தி இருவரையும் மனதில் தியானித்து, உன் சிருஷ்டித் தொழிலைச் செய்குதி", என்று கூறி மறைந்தருளினார்.

பிரம்மதேவர், விநாயகர் திருவாய்மலர்ந்தருளியபடி இரண்டு சக்திகளையும், நினைத்து வணங்கினார். சித்தி, புத்தி என்னும் திருநாமங் களைக் கொண்ட, இருவரும், பிரம்மாவின்முன் தோன்றினார்கள். பிரம்மா அவ்விரண்டு தேவியர்களையும் நோக்கி, "எனக்கு எக்காலத்திலும், இடர்கள், இடையூறுகள் நேராவண்ணம், எனது அருமைப் புதல்விகளாக அமர்ந்து, அருள்புரிய வேண்டுகிறேன்", என்று பிரார்த்தித்தார். அவரின் விண்ணப்பத்தை ஏற்று, தேவியரிருவரும் கிருபை செய்தார்கள். பிரம்மா மகிழ்ந்து, விநாயகப்பெருமான், சித்தி, புத்தி ஆகிய இரு தேவியர் களோடும், வீற்றிருப்பதாக, பாவனைசெய்து, அவர்களை உள்ளன்போடு பூசித்து வருவாராயினர். விநாயப்பெருமான் திருவருளால், பிரம்மாவின் சிருஷ்டித்தொழில், எவ்வித இடர்களோ, விக்கினங்களோ இன்றி நடை பெற்று வரலாயிற்று.

**சித்தி, புத்தி சமேதரான, விநாயகப்பெருமான்: திருமண வைபவம்:**

பிரம்மா, விநாயகப்பெருமானை வழிபட்டுச், சித்தி, புத்தி ஆகிய இரு தேவியர்களைப், புத்திரிகளாகப் பெற்றார். தமது படைப்புத் தொழிலும், இடையூறுகள் இன்றி நடைபெற்று வருவதையிட்டு, மகிழ்ச்சி யடைந்த பிரம்மதேவர், தமது புத்திரிகளைத் திருமணம் செய்து கொள்ளும்படி, விநாயகரை விநயமாக வேண்டினார். விநாயகரும் தமது சம்மதத்தைத் தெரிவித்தார்.

பிரம்மதேவர், தாமதிக்காமல், திருக்கைலைக்குச் சென்றார். சிவ பெருமானையும், உமாதேவியாரையும் வணங்கி, விநாயகப்பெருமானு க்குத் தமது புத்திரிகள், சித்தி, புத்தி இருவரையும் திருமணம் செய்ய, அனுமதித்தருளுமாறு வேண்டினார். சிவபெருமானும், உமாதேவியாரும், திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்து, அருள் புரிந்தார்கள்.

பிரம்மதேவர், மகிழ்ந்து தமது சத்தியலோகத்திற்குச் சென்று, திருமண வைபவத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தார். தேவர் கள், நவக்கிரக நாயகர்கள், முனிவர்கள், கந்தருவர் அனைவர்க்கும், விநாயகப்பெருமானின் திருமண நிகழ்ச்சி பற்றிக் கூறும்படி, தூதுவர்களை அனுப்பினார். விசுவகன்மாவுக்குத் திருமண மண்டபம் அமைக்கும்படி கட்டளை இடப்பட்டது. யாவும் மிகவும் துரிதமாக நடந்தேறின.

நாரதமுனிவர், திருக்கைலைக்குச் சென்று, சிவபெருமானை வணங்கி, விநாயகக்கடவுளுடைய திருமண வைபவத்திற்கான முன் முயற்சிகள் யாவும் நிறைவேறினமைபற்றிக் கூறி, திருவருள் புரியுமாறு பணிவாக வேண்டினார். சிவபெருமான், விநாயகரைக் கிருபையோடு நோக்கினார். அந்நோக்கு அர்த்தம் நிறைந்தது. அதனைப் புரிந்து கொண்ட விநாயகர். திருமணக்கோலம் பூண்டு, ஐராவதம் என்னும் பட்டத்து யானையில் எழுந்தருளினார். சிவபெருமானும், உமாதேவி

யாரும் இடபவாகனத்தில் ஆரோகணித்தனர். முருகன், வீரபத்திரர் ஆகியோர் தத்தம் ஊர்திகளில் புறப்பட்டுத் திருமண மண்டபத்தை நோக்கிச் சென்றனர். அவ்வாறே, பதினொரு உருத்திரர்கள், ஆதித்தியர், வித்தியேசுரர், வசுக்கள், அட்டதிக்குப்பாலகர் ஆகியோரும் இணைந்து கொண்டனர். பூதசேனைகள், திருநந்திதேவர், கணநாதர்கள் ஆகியோர் வந்து வணங்கினார்கள். மற்றைய, பிரணவம், சத்தகோடி மந்திரங்கள், சிவாகமங்கள் மற்றும் தேவர்கள், கலைகள், காலங்கள், இராசிகள் ஆகியன தேவவடிவு கொண்டு, வந்து வைபவத்தில் கலந்து கொண்டன.

விநாயகக்கடவுள், திருமணக்கோலத்தில், ஏனையோருடன் வரு கின்றமையைக் கண்ட, பிரம்மா, விட்டுணு, ஆகியோர் வணங்கி, வரவேற்று, திருமணமண்டபத்திற்குள் அழைத்துச் சென்றனர். விநாயகக் கடவுள், உட்சென்று சிங்காசனத்தில் வீற்றிருந்தருளினார். சிவபெருமான், உமாதேவியார் ஆகியோரும் சிங்காசனத்தில் அமர்ந்தருளினார்கள்.

தேவமகளிர் அட்டமங்கலங்களை ஏந்த, இலக்குமி முதலிய தெய்வ மகளிர், சித்தி, புத்திகளை அலங்கரித்து அழைத்துவந்து, திருமண மண்டபத்தில், விநாயகக்கடவுளுக்குப் பக்கத்தில் இருமருங்கிலும், அமர்த்தினர். சனகமுனிவர் திருமணக் கிரியைகளைச் செய்தார். பிரம்மா, தமது புதல்விகளின், கரத்தை, விநாயகப்பெருமானின் திருக்கரத்தில் வைத்துச் சரசுவதிதேவி, நீர்விடத் தத்தம்செய்து கொடுத்தார். அப் பொழுது மங்கல வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. தேவர் முதலியோர் அரஹர என்று சொல்லித் துதித்தனர்.

திருமணம் நிறைவேறியபின், அங்கு வந்திருந்த தேவர்கள், கணங்கள், முனிவர்கள், முதலிய யாவரும், சிவன், உமாதேவியார் ஆகியோரையும், சித்தி, புத்தி சமேதராகிய விநாயகப்பெருமானையும், வணங்கித் திருவருட்கடாட்சத்தைப் பெற்றுத் தத்தம் இருப்பிடங்களுக்கு திரும்பினர். சிவபெருமான், உமாதேவியார், கந்தசுவாமியார் முதலியோர், திருமணத் தம்பதிகளை அழைத்துக்கொண்டு, திருக்கைலாயமலை சென்றருளினார்கள். விநாயகப்பெருமான், சித்தி, புத்திகளோடு, உலக முய்ய வீற்றிருந்தருளினார்.

## தத்துவ விளக்கம்

விநாயகர், மூலாதாரத்துக்கு அதிபதி, என்று யோகநூல்கள் கூறுகின்றன. மூலம் எது, என்று அறிவதில்தான் உண்மை தெரியவரும். மனிதர்களின் அறிவுக் கண்களுக்குப் புலப்படுவது உடலில் உள்ள மூலாதாரம் ஆகும். பரப்பிரம்ம சொரூபமான விநாயகர் இங்கேயே உள்ளார்.

குண்டலினி சக்தியின் கிரியைக்குப் பீடமாக அமைவது தேகம் ஆகும். சித்சக்தி அறிவின் நிலைக்களனாகும். இந்த இரண்டு சக்திகளும் ஒன்றுசேர்ந்தபோது கஜானனர் ஆனார். அவரது இடப்பக்கம் குண்டலினி யின் ஆற்றலான சக்தியுடனும், வலப்பக்கம் சித்சக்தியாகிய புத்திக் குடையவளுடனும் தோன்றினார்.

# 10 ஆலய வழிபாடு

கடவுளை மனம், மொழி, மெய்யினால் வழிபாடு செய்வதற்கு அமைக்கப்பெற்ற இடம், ஆலயம் ஆகும். சைவநெறி, ஆலய வழிபாட்டிற்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளது. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", என ஔவைப் பிராட்டியார் கூறியுள்ளமை, கருத்திற் கொள்ளற்பாலது. "திருக்கோயிலில்லாத" ஊர், "திரு இல் ஊர்" என்கிறார் திருநாவுக்கரசர். அத்தகைய ஊர் அழகு இல்லாத ஊர் என்றும், அது ஊர் அல்ல, "அடவி காடே", என்றும், கூறுகிறார். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", என்பது சைவச்சான்றோர் திருவாக்கு.

ஆலய வழிபாடு, அத்தியாவசியத் தேவையாகும். மனித ஆன்மீக ஈடேற்றத்திற்கும், ஒழுக்க வாழ்விற்கும் இன்றியமையாததாகும். எனவே, ஆலயவழிபாட்டினை, மனிதனாகப் பிறந்தவர்கள் ஒரு வாழ்க்கைப் பழக்கமாகக் கொள்ளவேண்டும்.

ஆலயம் என்பதன் பொருள், ஆன்மாக்கள் லயப்படும் அல்லது ஒடுங்கும் இடம் என்பதாகும். ஆலயத்தைத் திருக்கோயில் என்றும் அழைப்பர். கோயில் என்ற சொல்லை கோ + இல் எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். கோ என்றால் தலைவன் எனப் பொருள் கூறுவர். இல், என்றால் இல்லம் ஆகும். கோயில் என்றால் நம் எல்லோருக்கும் தலைவனான, ஆண்டவன் எழுந்தருளி இருக்கின்ற இடம், இல்லம், எனப் பொருள், கொள்வர்.

## ஆலயம் ஏன்?

அண்டங்கள் அனைத்திலும், எங்கும், எதிலும், அங்கிங்கெனாதபடி, நீக்கமற நிறைந்து, சர்வவியாபகமாய் உள்ள, சிவபரம்பொருளுக்கு, நான்கு பக்கங்களிலும் எல்லைகள் வகுத்து, மதிற்சுவர்கள் அமைத்து, ஒரு சிறிய நிலப்பரப்புக்குள், கோயில் நிறுவி, அதனையே இறைவன் உறையும் இல்லமாகக் கொள்ளுதல், எவ்வாறு அறிவுக்குப் பொருந்தக் கூடியதாக இருக்கும் எனப் பகுத்தறிவாளர் எனத் தமக்குத்தாமே பட்டம் சூட்டிக் கொண்டவர்கள், வினா எழுப்புகிறார்கள். அவர்களுக்குத் தக்க பதில் தரவேண்டியது, ஆன்மீக வாதிகளின் கடமையாகும்.

கடவுள் என்னும் பதத்தின் பொருளை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். மனம், வாக்கு, காயம் என்பவற்றிற்கு எட்டாததும், அவற்றின் எல்லைகளைக் கடந்தும், அவற்றிற்கு உள்ளும், நிற்கும் பரம்பொருள் என்பதால் அப்பொருள் கடவுள் என அழைக்கப்படுகிறது. அவ்வாறு, எங்கும் பரந்தும், எல்லாவற்றிலும் செறிந்தும், நீக்கமற நிறைந்திருந்தும், கடவுள் எவருடைய கண்களுக்கும் புலப்படக்கூடியதாக உள்ள பொருள் அன்று. அதுவே கடவுளின் இயல்பும் ஆகும். கடவுளின் சுயநிலை, குணங்குறி, நாமரூபமற்ற அருவநிலை. அதாவது, அது உருவற்றது, உரையற்றது, கரையற்றது, ஆயினும், அது உள்பொருள், மெய்ப் பொருள், பரம்பொருள் ஆக உள்ளது.

அருவமாக, எங்கும் நிறைந்துள்ள கடவுளை, மனத்தினால் தியானிக்கவோ, அதனுடன் பேசி, உறவு கொள்ளவோ, ஞானிகளுக்கே இயலக்கூடியது. மனிதர்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள், ஞானிக ளல்லர், அவர்கள் சிற்றறிவும் சிதறிய எண்ணங்களும் கொண்டு, கவனக் கலைப்பான்களுக்கும் ஆட்பட்டவர்கள். ஒருகணமேனும், சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற திறனற்றவர்கள். அந்தவகையில், அவர்கள் கடவுளுடன் பேசித், தம் குறைநிறைகளை எடுத்துக்கூறி, கடவுளை வேண்டுதல், செய்வதற்கு இயல்பற்றவர்களாக உள்ளனர்.

சாதாரண மக்கள், மற்றும் பாமரர்கள், தாம் பயபக்தியோடு வணங்கி, வழிபடும் கடவுள்களை, உருவமாகக் கண்டு, தரிசிக்கவும், பேசி மகிழவும், தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுமாறு, விண்ணப்பிக்கவும்; தம் துன்பங்கள், துயர்களை எடுத்துக்கூறி, அழுதுபுலம்பித் தம் மனப்பாரத் தைத் தணித்துக் கொள்ளவும், அவாவுறுதல், இயல்பானதேயாகும். அத்தகைய பெரும்பாலான மக்களின் தேவையையும், விருப்பத்தையும் நிறைவு செய்யும் நோக்கில். அமைக்கப்பட்டவைதான் ஆலயங்களும், அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திருவுருவங்களும் ஆகும். விக்கிரக வழிபாட்டின் தோற்றமும், வளர்ச்சியும், பக்தி நெறியின் பரம்பலும், சரியை மற்றும் கிரியை மார்க்கங்களின் எழுச்சியும், ஆலயங்களின் தோற்றத்துடன் வளம் பெறலாயின.

அருவமான, உருவமற்ற பரம்பொருளை; உருவத்திருமேனியிலும், அருவுருவத்திருமேனியிலும் (சிவலிங்கம்) - அடியார்கள் கண்டு தரிசித்து, உய்வு பெறுவதற்கு ஏதுவாக ஏற்படுத்தப்பட்டவையே ஆலயங்கள் ஆகும். இறைவனை முன்னிலைப்படுத்தி, அவனுடன் நேருக்குநேர் பேசி மகிழவும், அவனைத் துதிக்கவும், அவன் புகழ் பாடவும், பூசைசெய்து மனநிறைவு பெறவும், பக்திப் பரசவம் கொள்ளவும், வேறு எவருடனும் பகிர்ந்து கொள்ள முடியாத விடயங்களை இறைவனுடன் மனம்விட்டுப் பேசி, ஆறுதல் பெறவும், விரும்பியவற்றைக் கேட்டுப் பெறவும்; செய்த தவறுகளை எடுத்துக்கூறி மன்னிப்புப் பெறவும், உற்சவங்களைக் கொண்டாடி மகிழவும், ஆத்மதிருப்தியடையவும் ஆலயங்கள் களம் அமைத்துத் தருகின்றன. ஆலயம் இறைவனின் சந்நிதானம்.

உடம்பு வளர்ச்சிக்கு உணவு முக்கியம். அதைப்போன்று, ஆன்மாவின் வளர்ச்சிக்கு, ஆலய வழிபாடு முக்கியமானதாகும். மன அமைதியுடனும், மனஉறுதி, வைராக்கியத்துடனும் வாழ்வதற்கும், எத்தகைய துன்பங்கள் வந்தாலும், இறைவன் துணை நிற்பான், அவன் இருக்கப் பயமேன் என்ற திடநம்பிக்கையுடன், இம்மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், வையத்துள் வாழ்வாங்கு வாழவும், ஆலயங்கள் மனிதர்களுக்கு உறுதுணையாக அமைகின்றன. சைவப் பண்பாட்டின் வளர்ச்சிக்கும், ஒழுக்கவிருத்திக்கும், நாட்டின் ஆட்சி மேம்பாட்டிற்கும், சமூக கலை, கலாசார ஆன்மீகவிருத்திக்கும் நிலைக்களனாக ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயங்கள், அறநெறிக் கல்வியை வழங்குகின்ற வித்தியாலயங்களாகவும் பணியாற்றுகின்றன. ஏழைகள்,

ஊனமுற்றோர், அகதிகள். ஆதரவற்ற முதியோர், நோயாளிகள், ஆகியோரின் அமுதசுரபியாகவும், புகலிடமாகவும் ஆலயங்கள் விளங்கி வருகின்றன.

## ஆலய அமைப்பும் ஆகமங்களும்:

ஆலய அமைப்புக்கும், ஆலயங்களில் நடைபெறுகின்ற நித்திய, நைமித்தியக் கிரியைகள், பூசை, ஆராதனைகளுக்கும், விதிமுறைகளை வழங்குவன ஆகமங்கள் ஆகும்.

ஆலயங்களை முறைவழுவாது, வடிவமைத்து கட்டடநிர்மாணம் செய்யவும், திருவடிவங்கள், விக்கிரகங்கள், சிற்பங்கள் ஆகியவற்றை, விதிப்படி வடித்து, உரிய இடங்களில் ஸ்தாபித்து, கும்பாபிஷேகம் செய்து, தெய்வசாந்நியத்தை வரவழைக்கவும், ஆலயத்தில், நித்திய, நைமித்தியக் கிரியைகள், பூசை, ஆராதனைகள் என்பவற்றிற்கான விதி முறைகள், மந்திரங்கள், நடைமுறைகள் என்பவற்றை வழங்கவும் ஆகச் சிவபெருமானின் திருவுள்ளப்படி, ஆகமங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

சிவபெருமானால் அருளப்பெற்றவை, வேதங்களும், ஆகமங்களு மாகும். அவை சைவசமயத்தின் முதனூல்களாகவும், பிரமாண நூல்களாகவும் விளங்குகின்றன. வேதங்கள் நான்கு; அவையாவன, இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பனவாகும். சிவாகமங்கள் இருபத்தெட்டு, ஆகும். அவை, காமிகம் முதல் வாதுளம் ஈறாகவுள்ளன. சைவத்தின் சிறப்புப் பிரமாணநூல்களாகச் சிவாகமங்கள் அமைந் துள்ளன. சிவாகமங்கள் இருபத்தெட்டையும், தமது அருள் வடிவமாக ஏற்று விளங்குகிறார், என்பது ஆன்மீக நூல்கள் தரும் தகவல்,

"ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்னும், மாணிக்கவாசகசுவாமிகளின் சிவபுராணவரி, மேற்கூறிய தகவலை உறுதி செய்கிறது.

## ஆலய அமைப்பு:

ஆலய அமைப்பு, மனித உடலின் அமைப்புப் போன்றே வடிவமைக் கப்பட்டிருப்பது நோக்கற்பாலது. ஆலயம் மற்றும் கோபுரம், தேர் என்பவை மனித உடம்பினையும், இப்பிரபஞ்சத்தையும் நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளன. ஒரு மனிதன், நீட்டி, நிமிர்ந்து படுத்திருக்கின்ற தோற்றத்தை ஒத்ததாக, ஆலயம் அமைந்து காணப்படுகிறது.

மூலஸ்தானம் எனப்படுகின்ற கருவறையில் மூலவர் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளார். கருவறை சிரசினையும், அடுத்துள்ள அர்த்த மண்டபம், கழுத்தினையும், அதனைத் தொடர்ந்துள்ள மகாமண்டபம், மார் பினையும், தரிசனமண்டபம், வயிற்றையும். அடுத்துவரும் மண்டபங்கள் முறையே, கால்களையும், இராஜகோபுரம், பாதங்களையும் குறிக்கின்றன.

மனிதன், முதுகை நிமிர்த்தியபடி உட்கார்ந்திருந்தால், முள்ளந் தண்டு அமையும், விதத்தைக் கொடித்தம்பம் காட்டுகிறது. மனிதனின் உடம்பில் முப்பத்திரண்டு கட்டுக்களோடு கூடிய முதுகந்தண்டு, கொடி

மரமாகக் காட்சி தருகிறது. கொடிமரத்தில் கொடி ஏறியவுடன் இறைவன் காட்சியளிக்கின்றான். கொடித்தம்பத்தின் அடியில் வீற்றிருக்கின்ற விநாயகர், எமது மூலாதாரத்தில், அரூபியாக இருக்கும் விநாயகப் பெருமானைக் குறிக்கிறது. மூலாதார கணபதியென அழைக்கப்படுகிறார்.

மனிதனின் உடம்பில் ஆறு ஆதாரங்கள் உள்ளன. அவையாவன, மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பனவாகும். இவ் ஆறு ஆதாரங்களும், ஆலயத்தின் அமைப்பிலே, முறையே கொடித்தம்பத்தடி, பலிபீடம்தரிசன மண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபம், கருப்பக்கிருகம் எனப்படும். மூலவர் கருவறை என அமைந்துள்ளன. ஆலயத்தின் மண்டபங்கள் அமைந்துள்ள விதம், வெளி வாயில்புறத்தில் அகன்ற பெரிய மண்டபங்களாக அமைந்து, கருவறையை நோக்கிப் போகப்போகச் சிறுத்து, ஒடுங்கி மூலஸ் தானத்தில் குவிகிறது. நமது மனம் படிப்படியாகக் குவிந்து, ஒடுங்கி, ஒருமுகப்பட்டு, இறைவனை அடையலாம் என்பதை, இம் மண்டப அமைப்பு விளக்குகிறது. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு தத்துவம் இருக்கிறது. இதுவே சைவ ஆலயங்களின் சிறப்பம்சம் ஆகும்.

ஆலய அமைப்பில் கோபுரம் முக்கியமானது. அது இப்பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகிறது. தூலலிங்கம் எனக் குறிப்பிடப்படும், இக் கோபுரம், சூக்குமலிங்கம் என அழைக்கப்படுகின்ற மூலமூர்த்தியின் பிரத்தியட்சமான குறியீடாகும். கோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள சிற்பங் கள், இறைவனின் பல்வேறு திருவிளையாடல்கள், மற்றும் உலகியல் சார்ந்த நடைமுறைகள் என்பனவற்றைச் சித்திரித்துக் காட்டுவதாக அமைகின்றன.

ஆலயங்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்கியே, அமைந்து காணப்படுகின்றன. கிழக்குவாயில் கோயில்கள் என அவை அழைக்கப் படுகின்றன. சில கோயில்கள் வடக்கு அல்லது மேற்கு நோக்கிய வாயில்களைக் கொண்டுள்ளன. எனினும், தெற்குநோக்கி, ஆலயம் அமைவதற்கு விதியில்லை. நடேசர் கோயில்கள், தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளன. அது, விதிமுறைக்கு அமைவாகவே உள்ளது.

சிவாலயங்களில், மூலவராகக், கருவறையில், சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கக் காணலாம். தென்மேற்குமூலையில், கிழக்கு நோக்கியபடி, விநாயகப்பெருமானும், வடமேற்குமூலையில், கிழக்கு நோக்கி, வள்ளி, தேவசேனா சமேத முருகப் பெருமானும், ஈசான மூலையில் தெற்கு நோக்கி வசந்தமண்டபமும், மேற்கு நோக்கி யாக சாலையும், அதனை அடுத்து மேற்கு நோக்கி வைரவரும், அதையடுத்து மணிக்கோபுரமும் அமைவது மரபு ஆகும். மகாமண்டபத்தில் தெற்குமுக மாக அம்பாள் சந்நிதானம் அமையப் பெற்றிருக்கும். தரிசனமண்டபத்தில் நடராசர், மற்றும் எழுந்தருளி மூர்த்திகள் வைக்கும் வழக்கம், சில ஆலயங்களில் உண்டு. நந்தி, பலிபீடம் ஆகியவற்றிற்கு நேர் வடக்கே நவக்கிரக நாயகர்கள் கோயில் அமையப் பெற்றிருக்கும்.

## கும்பாபிஷேகம்:

குடமுழுக்கு என்றும் பெருஞ்சாந்திவிழா என்றும் இதனைக் கூறுவர். இந்த உடம்பு, உயிருக்கு உறைவிடம் ஆக விளங்குவது போன்று, கோயில் இறைவனின் வதிவிடமாகத் திகழ்கின்றது.

திருக்கோயிலில், இறைவனை, உருவத்திருமேனியில் கண்டு, மக்கள் வணங்குகிறார்கள், வழிபாடு செய்கிறார்கள். வேண்டுதல்களைச் சமர்ப்பிக்கிறார்கள். பிரார்த்தனை செய்கிறார்கள், உரையாடுகிறார்கள். பாடிப் பரவுகின்றனர். தெய்வ அருள்சுரக்கும் சந்நிதானம், ஆலயம், என்றும் கூறப்படுகிறது.

ஆலயத்தில், தெய்வங்களின் உருவப்பிரதிமைகளை, அதாவது விக்கிரகங்களை, அமைத்து, அவற்றையே வழிபாடு செய்கிறார்கள், என்பது நோக்கற்பாலது. அவ்வாறாயின், இவ்உருவப்பிரதிமைகளுக்கு, எவ்வாறு அருள்சுரக்கும் வல்லமை கிடைக்கப் பெறுகிறது? என்னும் வினா எழுவது இயல்பானதேயாகும். விடை பின்வருமாறு:

சிவாகமமுறைப்படி, அமைக்கப்படும் ஆலயத்தில், தெய்வப்பிரதி மைகள், சிவாகமவிதிப்படி, ஸ்தாபிக்கப்படுகின்றன. அதன்பின் கும்பா பிஷேகம் நிகழ்த்தப்படுகிறது. அப்பொழுது, கும்பாபிஷேகக் கிரியைகள், மந்திரங்கள் உச்சாடனங்கள் மூலம், இத்தெய்வப் பிரதிமைகள் விக்கிரகங்களுக்கு, மந்திர சரீரங் கொடுத்துப் பிராணப்பிரதிஷ்டையுஞ் செய்து, உயிர்க்களை நிரம்பிய, அருள்சுரக்கும் தெய்வங்களாக, ஆக்கப்படுகின்றன. தெய்வசாந்நித்யம் நிலவக் கும்பாபிஷேகக் கிரியை கள் ஏதுவாகின்றன.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து, ஆலயத்தில், ஆகம விதிகளுக் கமைய, நித்திய மற்றும் நைமித்தியக் கிரியைகள், பூசைகள் நிகழ்த்தப் படுகின்றன. அவற்றின் விளைவாகத், தெய்வசாந்நித்யம், அருள் என்பன மேலும், உறுதியும், வீச்சும் பெற்றுத் திகழ்கின்றன.

நித்திய, நைமித்தியங்களில் நடைபெறுகின்ற கிரியைகள், கும்பா பிஷேகத்தன்று நடாத்தப்பெற்ற கிரியைகளின் சுருக்கமே என்பது நோக்கற்பாலது.

## கும்பாபிஷேகம் - வகைகள்

(1) ஆலயம் முன்னர் இருந்திராத இடத்தில், புதிதாக ஓர் ஆலயத்தை அமைத்து, நிகழ்த்தப்படும் கும்பாபிஷேகம் ஒன்று அதனை அநாவர்த்தனம் என்பர்.

(2) மிகத்தொன்மையான ஆலயம், எதிர்பாராதவாறு மண்மாரி, காடு படர்தல், போர், மற்றும் இயற்கை ஏதுக்கள், குடிப்பெயர்வு என்பவற்றால் பாதிப்புற்று, அழிவுற்ற நிலையில், நீண்டநெடுங்காலமாக, நித்திய, நைமித்தியப் பூசை, ஆராதனைகள் தடைப்பட்டு இருந்த பின்னர், அந்நிலைமைகளைச் சீர்செய்து, அதன்பின்னர், ஆலயத்தைப் புதுப்பித்து, நிகழ்த்தப்படுகின்ற கும்பாபிஷேகம் மற்றொரு வகை; ஆவர்த்தனம் எனப்படும்.

(3) மிக ஒழுங்காக நித்தியபூசைகள், நைமித்தியக்கிரியைகள் மற்றும் விழாக்கள் என்பன நடைபெற்று வருகின்ற, ஆலயத்தில், விமானம், கருவறை மற்றும் மண்டபங்கள், கோபுரம், சுற்றுப்பிரகாரங்கள், பரிவாரமூர்த்திகளின் கோயில்கள், விக்கிரகங்கள், வசந்தமண்டபம், யாகசாலை என்பன பழுதடைந்தால், பாலஸ்தாபனம்செய்து; புனரமைத்தும், திருத்த வேலைகள், திருப்பணிகள் செய்தும், நிகழ்த் தப்படும் கும்பாபிஷேகம் மற்றொரு வகையாகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இது நடத்தப்பட வேண்டும் என்பது விதி. இதனைப் புனராவர்த்தன கும்பாபிஷேகம் என அழைப்பர்.

(4) திருடர் பிரவேசித்தல், வேறு அனர்த்தங்கள், ஆசௌச அசுத்த நிகழ்வுகளால், நித்தியபூசை தடைப்படின், பிராயச்சித்தமாக, உடன் நிகழ்த்தப்படும் கும்பாபிஷேகம், அந்தரிதம் எனப்படும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் ஆலயத்திலும், யாகசாலையிலும் நடைபெறுகின்றன. வேதமரபு. ஆகமமரபு இரண்டையும் இணைத்துக் கிரியைகள் நிகழ்த்தப்படுகின்றன. வேதபாராயணம், திருமுறையோதல், நாத உபாசனை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

கும்பாபிஷேகக் கிரியைகள் மூலம் திருக்கோயிலும் சூழலும், ஊரும், புனிதம் பெறுகின்றன. ஆலயம் தெய்வசாந்நித்தியம் அடை கின்றது. "ஆலயம் தானும் அரன் எனக் கொள்க" என்ற திருவாக்கு, மெய்வாக்கு ஆக மிளிர்கின்றது. அடியார்கள் பக்தியுணர்வு பெறுகின்றனர். தெய்வீகப்பொலிவு பெற்றுத் திகழ்கின்றனர். மக்கள் வாழ்வு, சீரும்திருவும் பெற்று, வளம் நிறைந்ததாக அமையப் பெறுகின்றது.

## கும்பாபிஷேகத்தின் முக்கியத்துவம்:

திருக்கோயில்களில் நடைபெறுகின்ற நைமித்திய விழாக்களுள் கும்பாபிஷேகம் எனப்படும் குடமுழுக்குவிழா, மிகவும் சிறந்ததும், ஆன்மீகக் கருத்து நிறைந்ததுமாகும்.

புதிதாக ஓர் ஆலயம் அமைக்கப்பட்டாலோ, அல்லது பழுது பார்த்துப் புனரமைக்கப்பட்டாலோ, அல்லது பன்னிரெண்டு ஆண்டுகளுக் கொருமுறை, ஆலய கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட வேண்டும் என்ற ஆகமவிதிக்கமையவோ, ஆலயத்தில், மூர்த்திகளின் விக்கிரகங்கள், பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக்கள் கும்பாபிஷேகக் கிரியைகள் மூலம் வலுப்பெறுகின்றன. எங்கும் வியாபக மாகவுள்ள இறைபரம்பொருள், ஆலயத்தில் எல்லோரும் கண்களால் கண்டு, வழிபடக்கூடிய வகையில், விக்கிரகங்களைத் தாபனம் செய்தல், என்பது, பிரதிஷ்டை என்பதன் விளக்கமாகும். பிரதிஷ்டை செய்யும் போது, நிகழ்த்தப்படுகின்ற கிரியைகள், கும்பாபிஷேகக் கிரியைகள் எனப்படுகின்றன. விக்கிரகங்களுக்கு மந்திர வடிவத்தையும், ஷடத்துவ வடிவத்தையும் கொடுத்தல்.

நாமரூபம், குணங்குறிகள் அற்ற இறைவனை, அருவநிலையில், வழிபடுவது என்பது சாதாரண மக்கள் எல்லோருக்கும் சாத்தியப்படக் கூடியதன்று. எனவே, இறைநிலையை, அகன்று, பரந்து, விரிந்த

பரவெளியிலிருந்து, கும்பாபிஷேகக் கிரியைகள் வழியாக, வெளிக் கொணர்ந்து ஒருமுகப்படுத்தி, ஆலயங்களில், விக்கிரகங்கள் வடிவில் பிரதிஷ்டைசெய்து, தெய்வசாந்நியத்தை வரவழைத்து, மக்கள் தரிசனம் செய்ய, ஆகமங்கள் வழிவகுத்துள்ளன. இது சாதாரண மக்களுக்குக் கிடைக்கப்பெற்ற வரப்பிரசாதம் ஆகும். எல்லா மக்களும் கடவுள் வழிபாடு செய்யவும், அதன்பயனாக, ஆன்மஈடேற்றம், மற்றும் இகபர சுகங்கள் ஆகியவற்றைப் பெறவும், ஆலய வழிபாடு வாய்ப்பளிக்கிறது.

இறைவனைத் திருவுருவங்களில் எழுந்தருளச்செய்து, எமக்கு அருள்பாலிக்க வழிவகுக்கும் நோக்கில் ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகிய ஐம்பூதங்களையும் வேண்டுதல் செய்யும் கிரியைகள், கும்பாபிஷேக கிரியைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

விக்கிரகங்கள், நிலத்துடன் தொடர்புள்ள, கல், மண் மற்றும் பஞ்சலோகங்கள் என்பவற்றிலிருந்தே உருவாக்கப்படுகின்றன. ஆகம விதிக்கமைய, விக்கிரகங்கள் வடிக்கப்படுகின்றன. கண்களால் நேரடியாகப் பார்த்தும், மனத்தில் நிலைநிறுத்தியும், கடவுள் வழிபாடு செய்வதற்கு சாதாரண மக்களுக்கு ஏற்றதாக, தெய்வவிக்கிரகங்கள், தெய்வச்சிலைகள் விளங்குகின்றன. இத்தகைய விக்கிரக வழிபாடு திருக்கோயில்களிலேயே செய்வதற்கு வழிவகுக்கப்பட்டிருப்பதால், மக்களின் வாழ்வில் திருக் கோயில் வழிபாடு, முக்கியத்துவம் பெறுகிறது.

## கும்பாபிஷேகத்தின் சிறப்பும், மந்திரங்களின் மகிமையும்:

கும்பாபிஷேகக் கிரியைகள் மந்திரச்சிறப்பு வாய்ந்தவை. மந்திரங் கள், பாவனைகள் என்பன, எமது புலன்களை ஒருமுகப்படுத்திச், சிவநெறியில் செலுத்துவன. கிரியைகள் யாவற்றினதும் உயிர்நாடியாக, மந்திரங்கள் விளங்குகின்றன. எனவே, மந்திர உச்சாடனங்கள், உரிய முறையில் இடம்பெறுதல் இன்றியமையாததாகும். சிவாச்சாரியார்கள் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டியது, முக்கியம்.

“மந்திரமின்றேல் கிரியைகள் இல்லை”, என்பர், அறிஞர்கள். “கிரியைகள் இன்றேல், தெய்வசாந்நித்தியமும் இல்லை”, என்பது இதில் இருந்து பிறக்கும் கருத்து. வேதமரபிலும், ஆகமமரபிலும் காணப்படும் பொதுஅம்சம், மந்திர உச்சாடனம். முறையான உச்சரிப்பே, மந்திரங் களுக்கு உயிர்ப்பையும், தெய்வீக சக்தியையும் வழங்குகின்றது. அடியார் களின் உள்ளங்களை ஒருநிலைப்படுத்தவும், இறைவன்பால் ஈர்த்துச் செல்லவும், இறைவனுடன் ஒன்றிக்கவும், தூய்மை பெறவும், மந்திரங்கள் உறுதுணையாக அமைகின்றன.

மந்திரங்கள் ஆலயச் சூழலையும், வழிபடுவோரின் அகத்தையும், புறத்தையும், சிவாச்சாரியார்கள் மற்றும் தொண்டர்கள் ஆகியோரையும், கிரியைகளுக்குரிய சமித்துக்கள் மற்றும் பொருள்களையும் தூய்மை யாக்குகின்றன.

இவ்வாறு மந்திரச் சிறப்புடன் பொருந்திய ஆலயக்கிரியைகளுள் மிகச்சிறந்தது. கும்பாபிஷேகக் கிரியைகள் ஆகும்.

செப்புத்தகட்டிலே, சக்திவாய்ந்த சக்கரங்களாக, அமைவதும், கலசத்திலுள்ள நீரைச் சக்தி வாய்ந்ததாக ஆக்குவதும், ஓயாது செபிப்பவர்களுக்குத் தம்முழுசக்தியைத் தருவதும், ஆக விளங்குவன மந்திரங்கள் ஆகும்.

"நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளர்ந்த மறைமொழி", மந்திரம் ஆகும். மந்திரமும், தந்திரமும், மருந்தும் ஆக விளங்குபவன், இறைவன்.

"மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித், தீராநோய்
தீர்த்தருள வல்லான்," ஆக விளங்குபவன் இறைவன்.

"தீராநோய்", என்பது பிறப்பு என்னும் பெருநோய். மந்திர சொரூபியாக விளங்குபவன் இறைவன். மந்திரங்களுக்குரிய சக்தி அத்துணை ஆற்றல் வாய்ந்தது. மந்திரங்கள் முறையாக உச்சாடனம் செய்யும்போது எழும் ஒலி அதிர்வுகள், நற்பலன்களை உண்டாக்கவல்லன.

**யாகசாலை:**

கும்பாபிஷேகக் கிரியைகளில் யாகசாலையின் பங்கு முக்கியமானது. இங்கு அக்கினிக்கு முக்கிய இடம் வழங்கப்படுகிறது. ஹோமம், யாகபூசை என்பன நிகழ்த்தப்படுகின்றன. மந்திர, தந்திர பாவனைகளினால் வழிபாடு செய்து, கிரியைகளைப் பூர்த்தி செய்வது, பிரதம சிவாச்சாரியார் தலைமையிலான சிவாச்சாரியப் பெருமக்களின் கடமையாகும். எல்லாத் தெய்வங்களுக்கும் ஆகுதி, யாகசாலையில் வழங்கப்படுகிறது. யாகத்தின்போது, உரிய தெய்வங்களைக் கூவியழைத்து, அவற்றிற்குரிய அவிர்ப்பாகங்கள், அக்கினி மூலம் வழங்கப்படுகின்றன. அக்கினியானது தெய்வங்களையும், வழிபடுவோர்களையும் இணைக்கின்றது. இது வேதமரபு ஆகும்.

**அஷ்ட பந்தனம்:**

கருவறையில் கருங்கல் விக்கிரகங்கள் பதிக்கப் பெறுகின்றன. அவ்வாறே, பரிவாரமூர்த்திகளின் கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட விக்கிரகங்களும் அவற்றிற்குரிய சந்நிதானங்களில் பதிக்கப் பெறுகின்றன. அவை எவ்வாறு தெய்வசாந்நித்யம் பெற்று, வழிபடுவோருக்கு அருள்சுரக்கின்றன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மூர்த்திக்கும் உரிய சக்கரங்களை, செப்பு அல்லது தங்கத்தட்டில் வரைந்து, அடியில் வைத்து அதன்மீது விக்கிரகங்கள் பதிக்கப்படுகின்றன. இதனை அஷ்டபந்தனம் சார்த்துதல் மூலம் செய்வதாக நூல்கள் கூறும். இக்கிரியைகள் மூலம், விக்கிரகங்கள் தெய்வசக்தி பெறுகின்றன. அந்தச் சக்தி பூரணத்துவம் பெறுவதற்குத் தான் கும்பாபிஷேகமும், அதனைத் தொடர்ந்து, மகாபிஷேகமும், பின்னர் தொடர்ந்து ஒரு மண்டலம் - நாற்பது நாட்கள் - அபிஷேகங்களும், ஈற்றில் மண்டலாபிஷேகமும் நடத்தப்படுகின்றன.

குடமுழுக்குக் கிரியைகளின்போது, யாகசாலையில் ஒவ்வொரு மூர்த்திக்கும், குடம். (கடம்) வைத்துப் பூசிக்கப்படுகிறது. குடம், முப்புரி நூலினால் உரியமுறையில் சுற்றப்பட்டு, அதன் உள்ளே நீர்நிரப்பி, மேலே மாவிலை, தர்ப்பை, தேங்காய் என்பனவற்றை வைத்து, மூர்த்தியை அதில்

ஆவாஹனம் செய்து, மந்திர ஜபம், சிவாச்சாரியார்களால் செய்யப்படு கிறது. இந்நிகழ்வு, குடமுழுக்குத் தினத்திற்கு முன்னர், மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நாட்கள், தொடர்ந்து நடைபெறும். இதனால், குடத்திலுள்ள புனிதநீர் சக்தி வாய்ந்த, குறித்த மூர்த்திக்குரிய எல்லா ஆற்றலையும், வலுவையும் பெறுகிறது. கும்பாபிஷேக தினத்தன்று, அந்தக் குடத்திலுள்ள மந்திரிக்கப்பட்ட, புனித நீரினால், மூலமூர்த்திக்கும், மேலேயுள்ள விமானத்தில் பொருத்தப்பட்டுள்ள கலசத்திற்கும் அபிஷேகம் செய்யப்படுகிறது. அதன்பின், மூலமூர்த்தி அருளை வழங்குகின்றது. அந்த அருள் ஆற்றலை, விக்கிரகம் பெறுவதற்கு, நடத்தப்படுவது, கும்பா பிஷேகம் ஆகும். இவ்வாறு, பரிவாரமூர்த்திகளுக்கும், கோபுரத்திற்கும் கும்பாபிஷேகம் நடத்தப்படுகிறது.

கும்பாபிஷேகம் நடந்தேறிய பின்னர், திருவுருவங்கள் மற்றும் ஆலயவளாகம் ஆகியன இறைவன் சாந்நித்தியம் பெற்று, அங்கு வழிபாடு செய்யும் பக்தர்களுக்குத் திருவருள் பாலிக்கின்றன. "ஆலயம் தானும் அரன் எனக் கொள்க" என்பது திருமந்திர வாக்கு. பிம்பம் என்னும் நிலை நீங்கப்பெற்று, திருவுருவம், தெய்வத்தின் திருநாமத்தைப் பெற்றுத் தெய்வீகப் பொலிவுடன், பக்தர்களின் வழிபாட்டிற்கும், உபசாரத்திற்கும் உரியதாகிவிடுகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்பும், கும்பா பிஷேகத்தின் மூலம், நிலைநாட்டப்படுகிறது. அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், பூசை, ஆராதனைகள், அர்ச்சனை, சோடோபசாரங்கள், வேத மற்றும் திருமுறைகள், பாராயணம், திருவிழாக்கள் என்பன இடம் பெறுகின்றன. நித்திய, நைமித்தியங்களை முறையாக ஆலயத்தில் நடாத்தப்படுகின்றன.

## கும்பாபிஷேகம் பற்றிய சுருக்கம்:

கும்பம், விம்பம், அக்கினி ஆகிய மூன்றும் கும்பாபிஷேகக் கிரியைகளில் முக்கிய இடம்பெறுகின்றன. சிவாச்சாரியார் இம்மூன்றையும் இணைத்துக், கிரியைகள் நடாத்துகிறார். ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியாய், எங்கும் எதிலும் நிறைந்து, சர்வவியாபகராய், சர்வவல்லவராய், விளங்கும் இறைநிலையை, கும்பத்திலும், பின்னர் விம்பத்திலும் எழுந்தருளச் செய்பவர், சிவாச்சாரியார் ஆவார். மந்திர உச்சாடனங்கள் மூலம் இக்கைங்கரியத்தை நடத்தி வைக்கிறார்.

கும்பாபிஷேகக் கிரியைகளில், முதலில் அக்கினி என்னும் ஒளி உருவநிலையில், இறைவன், ஆராதிக்கப்படுகிறான். இது யாகசாலையில், இடம்பெறும் ஹோமங்கள் மூலம் நடைபெறுகின்றது. அருவமாகவுள்ள பரசிவம், ஒளி உருவில் எழுந்தருளும்படி, வேண்டிக் கொள்ளப்படுவது, அக்கினி வழிபாடு ஆகும். அடுத்து, ஒளியாய் விளங்கும், இறைநிலையை, நீர் ஆக உருக்கொள்ளச்செய்து, கும்பத்தில், ஸ்தாபித்து, வழிபாடு செய்யப்படுகிறது. இவ்வாறு கும்பத்தில் இறைநிலையை உருவாக எழுந்தருளச் செய்வது, கும்பஸ்தாபனம் அல்லது கடஸ்தாபனம் எனப்படு கிறது. கும்பத்தில் எழுந்தருளி விளங்கும் இறைநிலையை, திருவுருவ விக்கிரகங்களில் விளங்கச் செய்தல், கும்பாபிஷேகம் மூலம் எய்தப் படுகிறது.

மூலவர், மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கும் விமானம், கோபுரம் ஆகியவற்றிற்கும், கும்பாபிஷேகம் நிகழ்த்தப்படுகின்றன. இதனால் ஆலயம் முழுவதுமே, இறைவன் எழுந்தருளி அருள்பாலிக்கும் கோயி லாகப் பக்தர்கள் தொழுகின்றார்கள். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று ஔவையார் மொழிந்தது, ஏன் என்பது, இப்பொழுது புரிகிறதல்லவா! "ஆலயந்தானும் அரன் எனக்கொள்க", என்ற திருமூலர் வாக்கும். பொருள் நிறைந்தது.

திருக்கோயில்களில் சிவாகமமுறைப்படி மகாகும்பாபிஷேகம் நடாத் தப்படுவதால், மக்களுக்கும், நாட்டுக்கும் உலகிற்கும் பெரும்சாந்தி ஏற்படுகிறது. அதனால், பெருஞ்சாந்திவிழா எனவும், கும்பாபிஷேகம் அழைக்கப்படுகிறது.

**திருக்கோயி லில்லாத திருவிலூரும்**
**திருவெண்ணீ றணியாத திருவி லூரும்**
**பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்**
**பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்**
**விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்**
**விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்**
**அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்**
**அவையெல்லாம் ஊரல்ல, அடவி காடே.**

- திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

## திருக்கோயில் தரிசனம்: முறைகள்:

திருக்கோயில், இறைவனின் திருவருள் சுரக்கின்ற, புனித நிலையம். திருக்கோயிலையும் அதன் சுற்றுப் பிரகாரங்களையும் புனிதமாகவும், தூய்மையாகவும் வைத்திருக்க வேண்டியது. வழிபடுபவர்களின் கடமை யாகும். இதனைச் சரியைத்தொண்டு என்றும், சரியை வழிபாடு என்றும் கூறுவர்.

திருக்கோயிலுக்கு வழிபாட்டிற்குச் செல்பவர்கள், நீராடித் தோய்த் துலர்ந்த ஆடைகளை அணிந்து, திருநீறு தரித்துக்கொண்டு, போதல் வேண்டும். இதனால் புறந்தூய்மையர் ஆகிவிடுகின்றனர். "புறந்தூய்மை நீரால் அமையும்", என்கிறது. தமிழ்மறை. அகத்தையும் தூய்மைப்படுத்தி, இறைவனையே மனத்தில் இருத்தி, அவனின் திவ்விய நாமங்களை வாயினால் உச்சரித்தபடியும், திருமுறைப் பாடல்களை இசைத்துக் கொண்டும், பிறருக்கு எந்தவகையிலும், இடையூறுகள் ஏற்படாதவாறு, அமைதி பேணி தூயர்களாய் செல்லுதல் வேண்டும். மனம் தூய்மை பெறுவதற்குப், புறந்தூய்மை உதவுகின்றது.

திருக்கோயில் வழிபாட்டிற்குச் செல்லும்போது, மலர், தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம், ஆகியவை வைக்கப்பட்ட பாத்திரத் தைத் தாமே எடுத்துக்கொண்டு, நடந்து செல்லுதல், முறையாகும். விளக்கேற்ற எண்ணெயையும் எடுத்துச் செல்லலாம்.

திருக்கோயிலைச் சமீபித்ததும், அருகிலுள்ள நீர்நிலையில், கால் களைக்கழுவி, ஆசமனஞ் செய்து, தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தைத்

தரிசித்துக்கொண்டு, சிவநாமங்களை உச்சரித்தவாறு, கோபுரவாயில் ஊடாக, உள்ளேபோதல் வேண்டும். திருக்கோயிலுள்ளே போனவுடன், முதலில் வணங்க வேண்டியவை, பலிபீடம், கொடிமரம், நந்திதேவர் ஆகியவை. திருநந்திதேவரை வணங்கி, "பகவானே, அடியேன் உள்ளே சென்று, இறைதரிசனம் செய்ய அனுமதி தந்தருள வேண்டும்", என்று வேண்டிக்கொண்டு, உள்ளேபோதல் முறையாகும். பலிபீடத்தை வணங்கும்போது, தீயகுணங்களையும், தீயஎண்ணங்களையும், தீயபழக் கங்களையும், அங்கு பலியிடுவதாக எண்ண வேண்டும்.

பலிபீடத்தையும், கொடித்தம்பத்தையும், நந்திதேவரையும் வணங்கிய பின், பலிபீடத்திற்கு இப்பால் நின்று, ஆண்கள் அட்டாங்கமாகவும், பெண்கள் பஞ்சாங்கமாகவும், வீழ்ந்து வணங்குதல் முறையாகும். அட்டாங்க வணக்கமாவது, தலை, கை இரண்டு, செவி இரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு ஆகிய எட்டு உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல், தலை, கை இரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்தில் பொருந்தும்படி வணங்குதல் பஞ்சாங்க வணக்கம் ஆகும்.

**திருக்கோயிலில், சுவாமி சந்நிதானங்களை, எந்தமுறையாகத் தரிசனஞ் செய்தல் வேண்டும்?**

முதலில், விக்கினேஸ்வரப் பெருமானை வணங்கி, வழிபாடு செய்து, அதன்பின், மூலவரையும், அம்பாளையும் தரிசனஞ்செய்து, விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு, அதன்பின், உள்வீதியில் பரிவாரமூர்த்திகள் சந்நிதானங்களை, வலம்வரும்போது, வணங்குதல் வேண்டும்.

தாம் கொண்டுவந்த. பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், கற்பூரம், மலர்கள் முதலியவற்றை, மூலவருக்கு, அர்ச்சகரைக்கொண்டு நிவேதிப்பித்து, கற்பூர ஆராத்தியும் எடுப்பித்து, பிரசாதம் பெற்று, அதன் பின், உள்வீதியில் அமைக்கப்பெற்றுள்ள ஏனைய மூர்த்திகளையும், நவக்கிரகங்கள், வைரவர், சமயகுரவர்கள் ஆகிய மூர்த்திகளையும் தரிசனம் செய்ய வேண்டும். ஈற்றில் சண்டேசுரர் சந்நிதியை அடைந்து, அவரைக் கும்பிட்டு, மூன்றுமுறை கைகொட்டி, இறைதரிசன பலனைத் தரும்படி கேட்டுப் பிரார்த்தித்தல் வேண்டும்.

## சுவாமி சந்நிதானங்களைத் தரிசனம் செய்யும் ஒழுங்குமுறை:

ஆலயத்தில், முதலில் விநாயகப்பெருமான் சந்நிதியை அடைந்து, அவரைத் தரிசனம் செய்துவிட்டு, மூலவராகவுள்ள கடவுளரை, அதன்பின் தரிசனம் செய்ய வேண்டும். மூலவராக விநாயகர் உள்ள விநாயகர் ஆலயங்களில், அவரை அங்கேயே வழிபட வேண்டும்.

விநாயகரைத் தரிசனம் செய்யும்போது, முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும், நெற்றியிலே மூன்றுமுறைகுட்டி, வலக்காதை இடக்கை யினாலும், இடக்காதை வலக்கையிலானலும், பிடித்துக்கொண்டு, மூன்று முறை, தாழ்ந்து, எழுந்து, கும்பிடல் வேண்டும். இதனைத் தோப்புக்கரணம் போடுதல் என்பர்.

ஏனைய சந்நிதானங்களில் தரிசனம் பண்ணும்போது. இரண்டு கைகளையுஞ் சிரசில் ஆயினும், மார்பில் ஆயினும், குவித்துக்கொண்டு, மனங்கசிந்துருகத் தோத்திரஞ் செய்தல் வேண்டும். உள்வீதியில் வலம் வரும்போது, இறைநாமங்களை உச்சரித்துக்கொண்டு, கால்களை மெல்ல நகர்த்திக் கொண்டு மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் சுற்றி வலம்வரவேண்டும். சுற்றி வந்து,மூலவர் சந்நிதானத்தில் நமஸ்காரம் செய்தல் வேண்டும்.

சுவாமிக்கு அபிஷேகம், நிவேதனம் முதலியன நடைபெறும்போது சுற்றிவந்து தரிசனஞ் செய்தல் ஆகாது.

## சண்டேஸ்வரர் வழிபாடு:

திருவீதியிலுள்ள தெய்வசந்நிதானங்களைத் தரிசித்தபின் சண்டேசுரர் சந்நிதியையடைந்து, கும்பிட்டு, இறைவனுக்கு நிவேதனமாகப் படைத்த வற்றை ஏற்றுக்கொண்டு, இறைவனை வழிபட்ட பலனைத் தரும்படி, அவரை வேண்டுதல் செய்ய வேண்டும். சண்டேசுரர், அவ்வேண்டு கோளுக்கிணங்கி, இறைவனுக்கு நிவேதித்தவற்றைப் பூசை முடிந்ததும், நிர்மாலியமாக ஏற்றுக்கொண்டு, இறைதரிசனம் செய்த பலனைத் தருவார். சண்டேசுரர், எப்பொழுதும், மௌனமாகச், சிவனையே சிந்தையில் வைத்து, தியானித்துக் கொண்டிருப்பவர். அதன் காரணமாக அவரின் கவனத்தை ஈர்ப்பதற்கு வழிபடுபவர், மூன்றுமுறை, சண்டேசுரர் சந்நிதியில், கைதட்டுவது, வழக்கமாகும். அத்துடன் தமது ஆடையிலிருந்து ஒரு துண்டுநூலைக் கிள்ளியெடுத்து, அங்கு போடுவதும், காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற வழமை.

சண்டேஸ்வரரைச் சுற்றிவந்து வணங்கக்கூடாது. அவரின் சந்நிதிக்கு, இடதுபுறத்தால் நுழைந்து சென்று, வழிபட்டபின், சென்ற அதேவழியாகத் திரும்பி, உள்வீதிக்கு வருவதே முறையாகும். சண்டேஸ்வரர் எப்பொழுதும் மூலமூர்த்தியை நோக்கியவாறு, ஆழ்ந்த தியானத்தில் இருப்பார். அதனால், ஈசனுக்கும், சண்டேசுரருக்குமிடையே குறுக்கீடு செய்தல் முறையன்று. ஆகையால், அவரைச்சுற்றி வலம் வராமல், வழிபட்டபின் சென்ற வழியாலேயே திரும்பி வரவேண்டும்.

சண்டேஸ்வரரை வழிபட்ட பின்னர், நந்திதேவர் இடத்திற்கு வந்து, அங்கு நின்று, மூலமூர்த்தியைத் தரிசித்துவிட்டு, அதன்பின் பலிபீடத்து க்கு இப்பால், விழுந்து வணங்கி, திருவைந்தெழுத்தை உச்சரித்து, வழிபாட்டை நிறைவு செய்து கொள்ளுதல் முறையாகும்.

திருமுறைப்பாடல்களை, அந்த அந்தக் கடவுள் சந்நிதானங்களில் நின்று, பக்தியுடன் ஓதுதல் நன்று. ஏனைய அடியார்களின், வழிபாட்டிற்கு, எவ் விதக் குழப்பமோ, இடையூறுகளோ ஏற்படாதவாறு, பார்த்துக் கொள்ளுதல் இன்றியமையாதது.

தினமும் திருக்கோயிலுக்கு, வசதியான வேளையில் சென்று, இறைவனை வழிபாடு செய்வது வேண்டற்பாலது. ஆயினும், தற்கால உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள், அவ்வாறு, செய்தல் இயலாத காரியமாகும். ஆகவே, நித்தியமும்,

நியமமாக, ஆலயதரிசனம் செய்ய இயலாதவர்கள், வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை, திங்கட்கிழமைகளில், வாரந்தோறும் ஆலயம் சென்று சுவாமி தரிசனம் செய்தல் உத்தமம் ஆகும்.

### நித்தியமும் ஆலய தரிசனம் செய்ய இயலாதவர், ஆலய தரிசனம் செய்ய வேண்டிய புண்ணிய தினங்கள்:

சோமவாரம் (திங்கட்கிழமை), மங்கலவாரம் (செவ்வாய்க்கிழமை), சுக்கிரவாரம் (வெள்ளிக்கிழமை), பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாதப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, விநாயகர்சட்டி, கந்தசட்டி, சித்திரைப்பரணி, ஐப்பசிப்பரணி, தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம், சித்திரை புதுவருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆனி உத்திரம், ஆடிப்பிறப்பு, ஆடிச்செவ்வாய், ஆவணி ஞாயிறு, புரட்டாதிச் சனிக்கிழமை, ஐப்பசி வெள்ளி, தீபாவளி, கார்த்திகைத்திங்கள் (சோம வாரம்) திருக்கார்த்திகை, மார்கழி ஞாயிறு, மார்கழி திருவெம்பாவை, சுவர்க்கவாயில் ஏகாதசி ஆகிய புண்ணிய காலங்களில் ஆயினும் ஆலயதரிசனம் செய்தல் வேண்டும். மற்றும் மகோற்சவம், நைமித்தியக் கிரியைகள், கும்பாபிஷேகம், திருவிழாக்கள், பொங்கல், மடை, அலங் காரத் திருவிழாக்கள் நடைபெறும் தினங்களிலும், விரதநாட்களிலும், சிராத்தம், மஹாளயம் முதலிய பிதிர் வழிபாட்டுத் தினங்களிலும் ஆலயம் சென்று, கடவுள் வழிபாடு செய்தல் வேண்டும். சைவநாயன்மார்களின் குருபூசைத் தினங்களில், ஆலயதரிசனம் செய்வது மிகவும் நன்று.

சைவநன்மக்கள், தம் வாழ்நாட்களில், இயல்புக்கேற்ற வகையில், நாயன்மார்களினால் பாடல்பெற்ற தலங்கள், மற்றும் மூர்த்தி, தலம், தீர்த்தச்சிறப்பும் பெற்ற தலங்கள், சித்தர்களின் சமாதி, அடக்கத் தலங்கள், ஆகியவற்றிற்கு யாத்திரை மேற்கொள்வது புண்ணிய காரியமாகும்.

### அர்ச்சனை செய்வித்தலின் நோக்கம்:

அர்ச்சனை செய்விப்பவர், கோயிலின் முன்மண்டபத்தில் அமைந் துள்ள நந்திக்கு அருகாமையில் நின்றுகொண்டு, அர்ச்சனைப் பொருட் களை ஒரு தட்டில் வைத்து, அர்ச்சகரிடம் கொடுக்க வேண்டும். அர்ச்சகர், அர்ச்சனை செய்து, அர்ச்சனைப் பிரசாதம், வழங்க வேண்டிய இடமும் அதுவேதான்.

அர்ச்சகர், அர்ச்சனைப் பொருள்களை, எடுத்துச்சென்று, உள்ளே, சுவாமிக்கு அர்ப்பணித்துத், தேங்காயையும் உடைத்து, அவற்றின் மூலம், "சுவாமி இப்பொருள்களைக் கொணர்ந்தவர், இந்தப் பழங்கள்போல், உள்ளம் பழுத்தவர், தன் வாக்குத் தூய்மைக்கு, அறிகுறியாக, இதோ வெற்றிலை, பாக்கும் கொணர்ந்திருக்கிறார். இந்தத் தேங்காய் உட்புறம் போல அவரின் ஆத்மாவும் தூயதாக இருக்கிறது", என்று சுவாமிக்கு அறிவித்து, அர்ச்சனை, தீபாராதனை மூலம், அர்ச்சனை செய்வித் தவருக்கு, மேற்கதி அருளுமாறு, சுவாமியை வேண்டிக் கொள்வார். அதற்கு மகிழ்ந்து, சுவாமி வழங்கிய பிரசாதத்தை, அவருக்கு வழங்கும் ரீதியில், நந்திக்கு அருகாமையில் வந்து, "இதோ பிரசாதம். உனது

பிரார்த்தனையைச் சுவாமி அங்கீகரித்துள்ளார்", என்று கூறி, அர்ச்சகர், அர்ச்சனை செய்வித்தவரை ஆசீர்வதித்து, பிரசாதம் வழங்குவார்.

ஆலயத்தில் செய்யப்படுகின்ற நித்திய, நைமித்தியப் பூசை, ஆராதனைகள், கிரியைகள் மற்றும் ஆலய நிகழ்வுகள் ஒவ்வொன்றும் அர்த்தமுள்ளவை, பலனும் தருபவை. அவற்றை முறையாகக் கடைப் பிடித்தல் தான், வழிபாட்டு முறையாகும். ஆலயத்தில் பிரசன்னமாக உள்ள தெய்வசாந்நித்தியம், மற்றும் இறையருள் என்பன பாதிக்கப்படாமல் இருப் பதற்கும், அவற்றால் பெறக்கூடிய அதியுயர்ந்த பலனை வழிபடுவோர் பெறவைத்தலுக்குமாகவே, ஆலயவழிபாட்டிற்கான ஆசாரவிதிகள், வகுக் கப்பட்டன.

ஆகமங்கள், ஆலய நிர்மாணத்திற்கான விதிமுறைகளை, வகுத்துத் தந்துள்ளன. அதே ஆகமங்கள், ஆலயத்தில் தெய்வசாந்நித்தியம் பரவச் செய்ய வழிசெய்துள்ளன. அந்த ஆகமங்கள் வழிபாட்டு நெறிமுறைகள், மற்றும் ஆசாரங்கள் என்பவற்றையும் வகுத்து வழங்கியுள்ளன. எனவே, ஆலயங்களை அமைப்பதற்கும், தெய்வவிக்கிரகங்களைப் பிரதிட்டை செய்வதற்கும், தெய்வசாந்நியத்தை அங்கு நிலவச்செய்வதற்கும், நமக்கு உபாயஞ்சொன்ன சிவாகமங்கள், நாம் வழிபடுவோர், அவற்றை அணுகு வதற்கும், அடைவதற்கும் சொல்லிவைத்த உபாயங்களை, ஆசாரங் களை, இம்மியளவும் தவறாமல், கடைப்பிடித்தும் அனுசரித்துமே, பயன் பெற வேண்டிய கடப்பாடு, வழிபாடு செய்பவர்களுக்கும் உண்டு.

**யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒருபச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே.** - திருமந்திரம்

**நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா**
**நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்**
**புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்**
**சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்**
**அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி யென்றும்**
**ஆரூரா என்றென்றே அலறா நில்லே.**

- திருநாவுக்கரசர் தேவாரம்

## சைவநெறியில் நின்று வாழும் வாழ்க்கையில் ஆலயத்தின் முக்கியத்துவம்

சைவநெறி நின்று வாழும் வாழ்க்கையில் ஆலயம் ஒரு முக்கிய அங்கம் ஆகும். வாழ்க்கையின் உலகியல் சார்ந்த; ஆன்மீகம் சார்ந்த குறிக்கோள்களை எய்துவதற்கு ஆலய வழிபாடு உறுதுணையாக உள்ளது.

அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் மனித வாழ்க்கைக் குறிக்கோள்கள் என ஆன்றோர் வகுத்துத் தந்துள்ளனர். தர்மஅர்த்த, காம, மோட்சம் என வடமொழியில் இவற்றைக் கூறுவர். இவற்றை அடைவதற்கு

உதவுவதற்காகவே இறைவன், தனு, கரண, புவன, போகங்களைப் படைத்து நமக்கு அளித்துள்ளான். இறைவனுக்கு நாம் என்றென்றும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டிருக்க வேண்டிய கடப்பாடு உடையோம். இறைவனை மனம், மொழி, மெய்யினால் வழிபட்டு வருபவர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் அடையலாம்.

திருக்கோயிலில் இறைவனை வழிபாடுசெய்து வருபவர்கள் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை" என்கிறார் திருஞானசம்பந்தப்பெருமான். இறைவன் உரையைத் தனது உரையாகக்கொண்டவர் அப்பெருமான். எனவே, ஞானசம்பந்தப்பெருமானின் உரை பொய்யாமொழி ஆகும். நம்புங்கள் நல்லதே நடக்கும். அவ்வாறே அவர்கட்கு "வையத்துள் வாழ் வாங்கு வாழ்தல்" என்னும் அறநெறி வாழ்வும் சித்திக்கப் பெறுகின்றது.

மனிதர்கள், எல்லாம்வல்ல இறைவனை, வழிபாடு செய்ய உகந்த இடம், ஆலயம் ஆகும். மனிதர்களாயினும், தேவர்களாயினும் ஆன்ம ஈடேற்றம்பெற, ஆலய வழிபாடு அவசியமாகின்றது. தேவர்களும் பூலோகத்திற்கு வந்துதான் ஆலயவழிபாடுசெய்து, ஆன்மஈடேற்றம் பெற்றதாகப் புராணங்கள் கூறுகின்றன.

பக்திநெறி, ஆலயவழிபாட்டையே வலியுறுத்துகிறது. "முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப் பக்தி நெறியறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்", தமக்கு அருள்புரிந்தவர் பரமாசாரியார் வடிவத்தில் வந்து தம்மை ஆட்கொண்ட சிவபெருமானே என்கிறார் மாணிக்கவாசகசுவாமிகள். சைவசமயகுரவர் நால்வரும் பக்திநெறியை வளர்த்தவர்கள். திருக்கோயில் வழிபாட்டிற்கும், கோயில் பண்பாட்டிற்கும் உத்வேகம் அளித்தவர்கள். சமணம் முதலான புறச்சமயங்களால் ஈர்க்கப் படாது மக்களை நெறிப்படுத்திச் சைவநெறியில் நிலைக்கச் செய்தவர்கள்.

சைவம் சிவசம்பந்தம் உடையது; தொன்மையும், நன்மையும், உண்மையும் கொண்டது. சிவம் என்பது அன்பின் வடிவம்; நீதியின் நிலைக்களம்; கருணையின் திருவுருவம்.

"அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"; என்றும் "அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்" என்றும் திருமூலர் கூறுகிறார்.

ஓருருவம், ஒருநாமம், ஒன்றுமிலாதவன்; குணங்குறிகள் ஏதும் அற்றவன்; காண்டற்கரியவன்; ஆதியும் அந்தமும் இல்லாதவன்; சிவன் எனும் செம்மேனி எம்மான். அத்தகைய இறைபரம்பொருளை; நாம் தரிசித்து வழிபடுவதற்கும், எமது குறைநிறைகளை எடுத்துக் கூறுவதற் கும், அருளைப் பெறுவதற்கும், உரியஇடம் திருக்கோயில். கோ + இல் = கோயில். இறைவனின் இல்லம்; கோயில் என்பதன் பொருள்.

"பக்தி வலையில் படுவான் காண்க" என்றபடி, இறைவன் பக்தனு க்கு அருள்புரிபவன்: இதயசுத்தியோடு கேட்கும் வரங்களை வரையாது வழங்கும் வள்ளல். சேக்கிழார் பெரியபுராணம் குறிப்பிடுகின்ற அறுபத்து

மூன்று நாயன்மார்களின் வரலாறும், பக்தித்திறனும், இதற்குச்சான்றாகும். அடியார்க்கெளியவன் ஆக விளங்குபவன் இறைவன்.

பக்தி செய்வதற்கு உரிய இடம் கோயில். "அழுதால் உன்னைப் பெறலாமே" என்பர். திருத்தோணிபுரத்தில் ஒரு குழந்தை அழுதது. சிவ பெருமான், உமாதேவியார் உடன் இடபாரூடராய்த் தோன்றினார். உமா தேவியார் கொடுத்த ஞானப்பாலை உண்ட குழந்தையின் அழுகை நின்றது. ஞானம் பெற்றார். அவர்தான் ஞானசம்பந்தப்பெருமான். அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பது பழமொழி.

உடலை வளர்ப்பது சமையல்: உள்ளத்தை உயர்த்துவது சமயம் என்பர். சைவசமயம் திருக்கோயில் வழிபாட்டிற்கு முதன்மையளிக்கிறது.

நாம் நீந்த வேண்டுமென்றால் குளம், கேணி, ஆறு, கடல் போன்ற நீர்நிலைகளைத் தேடிச்செல்ல வேண்டும். அதேபோன்று, பக்திநெறியில் நிற்போர், பக்தியை வளர்க்க முயற்சிப்பவர், திருக்கோயிலுக்குச் சென்று, இறைவழிபாடு செய்ய வேண்டும். கோயிலுக்குச் செல்வதால், உள்ளத்தில் கோயில் நிலைத்துவிடும். நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் என்றும், இறைவடிவத்தை, நினைக்க, வணங்க, வழியேற்பட்டு விடுகிறது.

பெற்றோர்களும், பிள்ளைகளைச் சிறுவயதுமுதல் கோயிலுக்குத் தம்முடன் கூட்டிச்சென்று, திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்த வேண்டும். பெற்றோர்கள் அதனைத் தமது கடமையாகக் கொள்ள வேண்டும். தமது கடமையைச் செய்து வந்தால்: பிள்ளைகளது எதிர்கால வாழ்வு, பண்பும், பயனுமுள்ளதாகவும்; ஒழுக்கம் நிறைந்ததாகவும்; அருளும், பொருளும் மிகுந்ததாகவும் அமையும்.

## இறைவனின் திருவருள் ஊற்றுக்கண் திருக்கோயில்

கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும், எதிலும் செறிந்து, வியாபக மாய் இருப்பினும், திருக்கோயிலில் "தயிரில் நெய்போல விளங்கிநிற்பர். மற்றைய இடங்களில் எல்லாவற்றிலும், பாலில் நெய்போல விளங்காது நிற்பர்" - நாவலர் நான்காம் பாலபாடம்.

பசுவில் பால் அதன் உடலில் செறிந்திருப்பினும், அதன் மடியி லிருந்துதான், பாலைக்கறந்து எடுத்துக்கொள்கிறோம். நிலத்தடி நீர், நிலத்தின்கீழ் பரந்து காணப்படினும், கிணறு, ஏரி, குளம், முதலிய ஊற்றுக்கண்களிலிருந்தே, நீரைப்பெற்றுக்கொள்ளுகிறோம். மின்சக்தி எங்கும் பரந்துள்ளது. ஆயினும் மின்நிலையங்களிலிருந்தே எமக்குத் தேவையான மின்வலுவைப் பெற்றுக்கொள்கிறோம்.

ஆலயம் என்பது ஆ = பசு, லயம் = கட்டப்படும் இடம். எனவே, பசு கட்டப்படும் இடம் எனப்பொருள் கொள்ளப்படுகிறது. பசு என்பது உயிர் அல்லது ஆன்மாவைக் குறிக்கிறது. எனவே, ஆன்மா இறைவனுடன் லயித்து, அதாவது ஒன்றித்து இருக்கக்கூடிய இடம் ஆலயம் ஆகும்.

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பினும், திருக்கோயில்கள் தான், இறைவனின் அருள்சுரக்கும் ஊற்றுக்கண்களாக அமைந்துள்ளன.

எனவே, இறைவனின் திருவருளைப்பெற்று, வாழ்க்கை நலங்களை அனுபவிப்பதற்கு திருக்கோயில் வழிபாடு இன்றியமையாதது.

திருக்கோயிலில் இறைவனை வழிபடுவதற்குத் தேவையானவை தூயஅன்புள்ளம், மனஒருமைப்பாடு, பூக்கள், நீர், திருமுறைகளைப் பாடுந்திறன், செபம், தியானம், என்பனவாகும். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று நம் ஆன்றோர் நமக்கு அறிவுரை கூறியுள்ளமை, கருத்தில் கொள்ளற்பாலது.

**எய்தி வழிப்படில் எய்தாதன இல்லை**
**எய்தி வழிப்படில் இந்திரன் செல்வமுன்**
**எய்தி வழிப்படில் எண்சித்தி உண்டாகும்**
**எய்தி வழிப்படில் எய்திடும் முத்தியே.** - திருமூலர் திருமந்திரம்

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று.** - ஔவையார்.

"கடவுளுக்குச் செய்யும் வழிபாடுகளாவன: அவரை மனசினாலே தியானித்தலும்; வாக்கினாலே துதித்தலும்; கைகளினாலே பூசித்தலும்; கால்களினாலே வலம்வருதலும்; தலையினாலே வணங்குதலும்; செவிகளினாலே அவருடைய புகழைக் கேட்டலும்; கண்களினாலே அவருடைய திருமேனியைத் தரிசித்தலுமாம்" - நாவலர் பெருமான்.

கடவுள் வழிபாட்டின் உயிர்நாடி; வழிபாடு செய்பவர் கடவுளிடத்தே கொண்டுள்ள அன்பு. அன்பில்லாத கடவுள்வழிபாடு, பண்பும் பயனு மற்றது. அன்பாவது தம்மால் விரும்பப்பட்டவரிடத்தே, தோன்றும் உள்ள நெகிழ்ச்சி, உயிர்அர்ப்பணம், அதீதபக்தியாகும். கடவுளிடத்தே அன்புடைமைக்கு அடையாளங்களாவன: அவருடைய உண்மையை நினைக்குந்தோறும், கேட்குந்தோறும், காணுந்தோறும் தன்வசமழிதலும், மயிர்க்கால்தோறும் திவலை உண்டாகப் புளகாங்கிதம் கொள்ளலும், ஆனந்த அருவிபொழிதலும், விம்மலும், நாத்தழுதழுத்தலும், உரைதடு மாறலும், கடவுளால் விரும்பப்படுபவற்றைச் செய்தலும், வெறுக்கப்படுப வைகளை செய்யாதொழிதலும், அவருடைய மெய்யடியார்களைக் காணும்பொழுது, கூசாது வணங்குதலும் பிறவுமாம். - நாவலர் பெருமான்.

"கடவுளால் விரும்பப்படுபவைகளாவன: இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய், தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். கடவுளால் வெறுக்கப்படுபவை களாவன, கொலை, களவு, புலாலுண்ணல், கள்ளுண்ணல், விபசாரம், பொய், செய்ந்நன்றிமறத்தல் முதலிய தீமைகளாம்." - நாவலர் பெருமான்.

மனிதர்கள் பகுத்தறிவு உள்ளவர்களாயினும்; தவறுகள் விடுவது, அறிந்தோ, அறியாமலோ, சாதாரணமாக உள்ளது. நன்மை, தீமைகளை உள்ளபடி அறியவும், தீமைகளை விடுத்து நன்மைகளையே செய்யவும் மனிதர்கள் இயலாதவர்களாக உள்ளனர். ஆதலால் தம்வயமுடைய வரும், முற்றறிவு முற்றுத்தொழிலுடையவரும் ஆகிய கடவுளை வணங்கி, திருக்கோயில் சென்று வழிபாடுசெய்து, அவருடைய திருவருள்பெற்று ஒழுகுவோமானால், நாம் தீமைகளை விலக்கி,

நல்லனவற்றையும், நன்மை பயப்பனவற்றையும், செய்து வாழ்வதற்கு இறையருள் வழிநடத்தும்.

மனிதனைத் தூயவன் ஆக்குவது திருக்கோயில். வழிபடுபவரின் வெவ்வினைகள் வேரோடு பாறிவிடும். இக.பர நலன்கள் கிட்டுகின்றன. ஆலயவழிபாடு யாவர்க்கும் உரியது.

**நாடும் நகரமும் நற்றிருக்கோயிலும்**
**தேடித்திரிந்து சிவபெருமானென்று**
**பாடுமின், பாடிப்பணிமின், பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்து கோயிலாய்க் கொள்வனே.** - திருமந்திரம்

திருக்கோயில் சென்று இறைவனை வழிபடுபவர் உள்ளத்தை இறைவன் தனக்கு ஆலயமாகக் கொள்கின்றான் என்பது இதன் பொருள்

## கருங்கல் விக்கிரகங்கள் மூர்த்திச்சிறப்பு

ஓர் ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள கருங்கல் விக்கிர கங்கள் அங்கு சிவாச்சாரியார்களினால் உச்சாடனம் செய்யப்படும் மந்திர ஒலியை உள்வாங்கும் தன்மையன. அவ்வாறு, உள்வாங்கி அவை உயிரோட்டத்துடன் காணப்படுவதால், அவ்விக்கிரகங்கள், மனித உடலி லுள்ள தீவினைப் பதிவுகளை, வேரோடு அழிக்கும் ஆற்றல் வாய்ந்தன. முறையாக ஆலயதரிசனம்செய்து வருவதன்மூலம் தரிசனம் செய்பவர் களின் பிராரத்துவப் பாவப்பதிவுகள் பரம்பரைதோறும் தொடர்ந்துவந்த ஊழ்வினைப்பதிவுகள், வெவ்வினைகள் யாவும், வேரோடு நீக்கப்பட்டு விடுகின்றன.

## சித்தர் ஜீவசமாதிகள்

ஆலயங்கள் சிலவற்றில் சித்தர்களின் ஜீவசமாதி இருப்பதனால் அவ்வாலயங்கள், திருவருள்வீச்சு நிறைந்து காணப்படுகின்றன. அத்தகைய ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுசெய்து வருவதன் மூலமும் கொடிய தீவினைப்பதிவுகள் அழிக்கப்பெற்றுவிடுகின்றன.

தமிழ்நாட்டில், பழனி, திருவண்ணாமலை, இராமேஸ்வரம், மதுரை மீனாட்சியம்மன் ஆலயம், ஸ்ரீரங்கம், திருச்செந்தூர் போன்ற ஆலயங்களில் சித்தர்களின் ஜீவசமாதிகள் உள்ளன. இவ்வாலயங்கள் தெய்வீகசக்தி நிறையப்பெற்றுள்ளன. இவற்றில் சித்தர்கள் சமாதிகளில் மூலவரை நோக்கி தியான நிட்டையில் அமர்ந்த நிலையில் உள்ளனர்.

பழனிமலையில் காந்தசக்தி நிறைய உள்ளமையை அறிந்து கொண்டமையினால்; போகர் என்ற நாமம் பூண்ட சித்தர், அத்தலத்தை நாடினார். அங்கு அவர் ஜீவசமாதியடைந்தார். அண்டத்திலிருந்து வருகின்ற (Cosmic) இறைதுகள்களின் பதிவுகள், பழனிமலையில் நிறைந்துள்ளன. இதனாலேயே பழனித்திருத்தலத்தில் முருகப்பெருமானை வழிபடும்போது நமது உயிர் வலிமை பெறுகிறது. வெவ்வினைகள் வேரோடு அறுந்து விடுகின்றன அங்கு இன்றும் சூட்சும சக்தியாகப் போகர் உலாவிவருவதாக நம்பப்படுகிறது.

ஸ்ரீரங்கத்தில், மகாவிஷ்ணு படுத்த நிலையில், பேராற்றல் நிறைந்த மூலவராக உள்ளார். அங்கு மகான் ஸ்ரீஇராமாநுஜர் ஜீவசமாதியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் சுந்தரர் என்ற சித்தர் ஜீவசமாதி யாக உள்ளார். இன்று அவர் சூட்சுமமாகச் சோமசுந்தரப்பெருமானையும், மீனாட்சியம்மனையும் வணங்கி வருகிறார். அதனால் இவ்வாலயத்திற்குத் தரிசனம் செய்ய வருகின்ற பக்தர்களின் உயிர் சக்தி, வலிமை, பெறு கின்றது.

சித்தர்களின் ஜீவசமாதிகள், இலங்கையில், கதிர்காமம், நல்லூர் செல்வச்சந்நிதி, நயினாதீவு, கீரிமலை, யாழ்ப்பாணம் நீராவியடி ஆகிய தலங்கள் அமைந்துள்ள இடங்களில், காணப்படுகின்றன. இத்தகைய சித்தர் சமாதிகள், அருள்வீச்சு பிரவாகிக்கின்ற ஆலயங்கள் இலங்கையில் ஆங்காங்கே பல பாகங்களில் உள்ளன. சாவகச்சேரி கல்வயல் பதியில் அமைந்துள்ள பெருங்குளம், அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய உள்வீதியில் அதன் வடமேற்கு மூலையில் அருள்மிகு பூதராயர் சந்நிதி உள்ளது. அப்புனித பூமியில், சித்தரின் ஜீவசமாதி அமைந்திருப்பதாக செவிவழிச் செய்திமூலம், அறியக்கிடக்கிறது.

சித்தர் ஜீவசமாதி அமையப்பெற்றுள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்து வந்தால், நிச்சயம் திருவருட்கடாட்சம், கிடைக்கப் பெறுவர். மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக்களை, அத்தகைய திருத் தலங்கள் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## திருக்கோயிலிலே செய்யத் தகாதன:

ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், ஜனன மற்றும் மரண ஆசௌசத்துடன் கோயிலுக்குட் செல்லுதல், எச்சில் உமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்குசிந்துதல், அபானவாயுவிடுதல், பாக்கு, வெற்றிலை உண்ணல், போசனபானம் பண்ணல், நித்திரைசெய்தல், காறிஉமிழ்தல், இருமுதல், தும்முதல், சண்டையிடுதல், வீண்வார்த்தை பேசுதல், கோபங்கொள்ளல், விவாதித்தல், காமங்கொள்ளுதல், குழப்பம் விளைவித்தல், ஆசனத்திருத்தல், பெண்களை இச்சித்துப்பார்த்தல் மற்றும் தீண்டுதல், பெண்களுடன் தகாதமுறைகளில் நடந்து கொள்ளுதல், மது அருந்துதல், புகைத்தல், போதைப்பொருள்பாவனை, மூக்குப்பொடி போடுதல், வன்முறைகள், வன்செயல்களில் ஈடுபடுதல், சூதாடல், பஞ்சமா பாதகங்கள் என, விலக்கப்பட்ட கொலை, களவு, காமம், மதுபாவனை, பொய்யுரைத்தல் என்பனவற்றில் ஈடுபடுதல்; ஆண்கள் தலையிலேனும், தோள்கள் மேலும் சால்வை, உத்தரீயம் இட்டுக்கொள்ளுதல்; தலையில் தொப்பி, தலைக்கவசம் அணிந்திருத்தல்; மேற்சட்டை பெனியன், கோர்ட் முதலானவைகளை அணிந்து கொள்ளுதல்; சால்வையாலோ வேறு போர்வைகளினாலே போர்த்துக்கொள்ளுதல்; பெண்கள் மாதவிலக்குடன் போதல், பிரசவகாலம் அண்மிக்கையில் உட்செல்லுதல்.

இருபாலாரும் விக்கிரகங்களைத் தொடுதல்; மூலவருக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கேபோதல்; ஒருதரம், இருதரம் வலம்வருதல். தூபி, கொடிமரம், பலிபீடம், நந்தி, விக்கிரகம் இவற்றின் நிழலை மிதித்தல்; அகாலத்திலே தரிசித்தல்; ஓடி வலம்வருதல், வீண்கீதம் பாடல், வீண்கீதம் கேட்டல்; ஒலிபெருக்கி மூலம், விளம்பரங்கள் மற்றும் காமஇச்சைகளைத் தூண்டும் விதத்திலான பாடல்கள் என்பவற்றை உள் வீதிகளில் ஒலிபரப்புதல்; திருவிளக்கு நூரக்கண்டும் தூண்டாது விடுதல்; திருவிளக்கில்லாதபோது வணங்குதல்; சுவாமி உற்சவங்கொண்டு திருவீதி உலாவரும்போது அங்கேயன்றி உள்ளே சென்று வணங்குதல்; திரையிட்டபின் வணங்குதல்; திருமாலியத்தை மிதித்தல், கடத்தல்; பாதணிகள் அணிந்து ஆலயத்தினுள் செல்லல்; போதைஏறிய நிலையில் உட்செல்லல்; பலர் சேர்ந்து கும்மாளமடித்தல்; சந்நிதானத்தில் உயிர்ப் பலியிடுதல்; வாகனங்களில் உட்கார்ந்திருத்தல்; செல்பி மற்றும் நிழல் படங்கள் எடுத்தல்; திருநீறு, சந்தனம், குங்குமம், முதலியவற்றை நிலத்தில் சிந்துதல், சுவர்கள் மற்றும் இடங்களில் பூசுதல்; அந்தணர் அல்லாத மற்றைய வழிபடுவோர், சுவாமி விக்கிரகங்களைத் தொட்டுக் கும்பிடுதல், அவற்றிற்குத் தீபங்காட்டுதல், பூசைசெய்தல், மலர்மாலை சூட்டுதல்; மது அருந்திவிட்டும், மற்சமாமிசம் புசித்துவிட்டும் கோயில் பிரகாரத்திற்குள் செல்லுதல்; ஆலயம் பூட்டப்பட்டுள்ளபோதும், சந்நி தானங்கள் திரையிடப்பட்டுள்ளபோதும், ஆலயத்தின் முன்பக்கத்திலும் நின்று வணங்குதல், இடப்புறமாகச்சுற்றி வருதல்.

திருக்கோயிலுள்ளே வழிபாடு செய்கின்ற மற்றைய அடியவர்களின் வழிபாட்டுக்கு இடையூறுகள், குழப்பங்கள், விளைவிக்கக்கூடிய வகையில் ஒழுகுதல், சத்தமிட்டுப்பாடுதல், பேசுதல், அழுதுஅரற்றுதல்; சைவக் கலாசாரம், பண்பாட்டிற்கு ஒவ்வாத உடைகள் மற்றும் அணிகலன்கள்; அரைகுறை ஆடைகள் என்பவற்றை அணிந்துகொண்டு கோயிலுக்குள் வருதல், நாய், பூனைகள் போன்ற வளர்ப்பு மிருகங்ளைக்கொண்டு வருதல்; ஆலயத்தினுள்ளே வீடியோ படம் பிடித்தல், திரைப்படம் எடுத்தல் மற்றும் திரையிடுதல்; கைத்தொலைபேசி பாவித்தல். ஆலயத்தினுள்ளே பொருத்தப்பட்டுள்ள காண்டாமணி, மற்றும் மணிகளை பொருத்தமற்ற நேரங்களில் அடித்தல்; ஆலயத்திற்குரிய பொருள்களைத் திருடுதல், சேதப்படுத்துதல்; திருக்குளத்திற்குள் குப்பைகூளங்களைப் போடுதல், வேறுவிதங்களில் திருக்குளத்தையும், வீதிகளையும் அசுத்தப்படுத்துதல்; மலர்களை விக்கிரகங்கள்மீது போடுதல், மலர்மாலை சூட்டு தல், தீபம் காட்டுதல், கற்பூரம்தீபம் மற்றும் தீபங்கள், குத்துவிளக்கு ஆகியவற்றை வாயினால் ஊதிஅணைத்தல்.

வாகனங்கள், தேர், சப்பரம், சகடை என்பவற்றில் ஏறிஉட்காருதல், உறங்குதல், விளையாடுதல், நிழற்படம் பிடித்தல்; தேர், சப்பரம், மஞ்சம் என்பவற்றை இழுக்கப் பயன்படுத்தப்படும் வடத்தை (கயிறு) காலால் மிதித்தல், கடத்தல், அதன்மீது இருத்தல்.

ஆலயத்தினுள்ளே வழிபாடு செய்கின்ற மற்றைய அடியார்களின் வழிபாட்டிற்கு இடையூறு ஏற்படும் வண்ணம் உரத்து அழுதல், அரற்றுதல், உரத்துப் பாடல்களைப் பாடுதல், குறைகளை எடுத்துக் கூறுதல், ஆடுதல், வேறுவிதத்தில் ஒழுகுதல்.

ஆலயத்தினுள்ளே அமைதியைக் குலைக்கும் தொனியில் ஒலிபெருக்கியைப் பாவித்தல்; அடிக்கடி அறிவித்தல்கள், விளம்பரங்கள் செய்தல், காமஇச்சைகளைத் தூண்டக்கூடிய திரைப்படப்பாடல்களை ஒலிபரப்புதல், சதுரக்கச்சேரி, ஆடல், பாடல் நிகழ்த்துதல்.

ஆலயத்திற்குரிய பொருள்களை, உண்டியலைத் திருடுதல், உடைமைகளைச் சேதப்படுத்துதல், திருவீதிகள், பூந்தோட்டம் ஆகிய இடங்களில் மலசலங்கழித்தல், எச்சில் துப்புதல், குப்பை போடுதல், வேறு வகையில் அசுத்தப்படுத்துதல்; திருடஎத்தனித்தல், சண்டைசெய்தல், வாக்குவாதப்படல், துவிச்சக்கரவண்டி, மோட்டார்சைக்கிள் போன்றவற்றை உள்வீதிக்குள் கொண்டுசெல்லல், பிறர் வழிபாட்டிற்கு இடைஞ்சல், இடையூறுகள் செய்தல்.

## ஆலயத்தில் அமைதியும் தூய்மையும் பேணல்:

அமைதி, தூய்மை இரண்டும் தெய்வீகம் பொருந்தியவை. தெய்வ சாந்நித்தியத்தை ஆலயத்தில் பரிமளிக்கச் செய்பவை. ஆலய வழிபாட்டிற்கு செல்லும் அடியார்கள் ஒவ்வொருத்தரும் இதனைக் கருத்திற் கொண்டு தூய்மை, அமைதி ஆகியவற்றைப்பேணுவதில் சிரத்தை கொள்ள வேண்டும். அமைதி; அகத்திலும் புறத்திலும் நிலவவேண்டும். அவ்வாறே, தூய்மையும்; அகத்திலும் புறத்திலும் வேண்டும்.

"ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என மெய்கண்டார் எமக்கு அறிவிக்கிறார். ஆகவே ஆலயச் சுற்றுச்சூழலில் அமைதி பேணப்பட வேண்டும். அதேவேளை தூய்மையாகவும் சூழலை வைத்திருக்க வேண்டும். சரியைவழிபாடாகத் தூய்மையைப்பேணல் அமைகின்றது. கூட்டுதல், மெழுகுதல், நீரினால் கழுவுதல், வீதிகளைத்துப்பரவு செய்தல், போன்ற பராமரிப்புப்பணிகள், சரியைத்தொண்டாகக் கொள்ளப்படுகின்றன. சமயகுரவர்களில் திருநாவுக்கரசுநாயனார் தமது உழவாரப்பணி மூலம் சரியைத்தொண்டு ஆற்றி, மற்றையோருக்கு வழிகாட்டியவர்; முத்தியடைந்தவர்.

"உள்ளம் பெருங்கோயில்: ஊனுடம்பு ஆலயம்" என்கிறார், திருமூலர். எனவே உள்ளத்தின் தூய்மையே அகத்தூய்மை. உடம்பின் தூய்மையே புறந்தூய்மை ஆகும்.

உள்ளத்தில் பேராசை, கடும்பற்று, சினம், பொறாமை, முறையற்ற எதிர்ப்பால் கவர்ச்சி, பகைமை, வெறுப்பு மற்றும் தீயஎண்ணங்கள், உணர்ச்சிகள் என்பவற்றை நிரப்பிக்கொண்டால்; உள்ளத்தில் தூய்மையும் இருக்காது; அமைதியும் இருக்காது. இத்தகைய கவனக்கலைப்பான்கள் ஆலய வழிபாட்டை அர்த்தமற்றதாக்கிவிடும். குளிக்கப்போய் சேறுபூசிக்கொண்டமைக்கு ஒப்பாகும். தெரிந்துகொண்டு செய்யும்

குற்றங்கள் பெரும்பாவங்கள் ஆகும். அவற்றிற்குப் பாவவிமோசனம் கிடையாது.

ஆலயங்களில் சுவாமி தரிசனம் செய்யும் முறைகள், ஒழுங்குகள் தெரிந்தவர்கள் மற்றையோருக்கு முன்மாதிரியாக நடந்து காட்ட வேண்டும். ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் நடந்து கொள்ளும் விதம்; அவை யாவற்றையும் மீறுவதாகவும், பிறருக்கு இடையூறுகள் விளைவிப்ப தாகவும் உள்ளமை,

அமைதிபேணல், துய்மைபேணல், வழிபாட்டு விதிமுறைகளை அனுசரித்தல்; ஏனையோருக்கு இடையூறுகள், தொல்லைகளை ஏற்படுத் தாதிருத்தல், ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்பதை உறுதி செய்தல்; என்பனவற்றின் மூலம் தெய்வசாந்நித்தியத்தையும், அருட் பிரவாகத்தையும் நிலைபெறச்செய்தல் சிவபுண்ணியம் ஆகும்.

**சிவபுண்ணியங்கள்:**

சிவாலயம் ஆகமவிதிப்படி அமைத்தல், சுவாமி மூர்த்தங்களைப் பிரதிஷ்டை செய்தல்; அவற்றிற்குப் பூசை, விழா ஏற்பாடுகளை வகுத்தல்; அவை முட்டின்றி நடைபெறுவதற்கு வேண்டிய சொத்துக்கள், நிலங் களைக் கொடுத்தல்; அவற்றைக்கண்ணியமான முறையில் பரிபாலித்தல்; கோயிற்காரியங்களை முறையாக நிர்வகித்தல்; பூசைசெய்தல், கோயில் தொண்டுசெய்தல்; திருப்பணிசெய்தல்; முறைப்படி ஆசாரசீலம் பேணி கோயில் வழிபாடுசெய்தல்; தியானம்செய்தல் என்ற இவையனைத்தும் சிவபுண்ணியங்கள் ஆகும். இவற்றை 'நான்' 'எனது' என்னும் தன்முனைப் புடன் செய்தால் அது குற்றமாகும். இவற்றைச் செய்பவர்கள் சிவோஹம் பாவனையில் வழுவாது நின்று தன்னலம் கருதாது செய்தலினால் மாத்திரமே அவை சிவபுண்ணியங்கள் ஆகும். சிவசிந்தனையுடனும், சிவார்ப்பணத்துடனும் செய்யப்படும் கருமங்களே, தன்னலங்கருதாதவை யாக மிளிரும் சிவபுண்ணியங்களாக மலரும்.

கோயில்களை அமைத்துவிட்டால் மாத்திரம் போதாது. அவை செவ்வையாகப் பேணப்படவேண்டும். அத்துடன் பன்னிரண்டு ஆண்டு களுக்கொருமுறை கோயிலில் திருத்தங்கள் மற்றும் புனருத்தாரணம், புனரமைப்புச்செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்படல் வேண்டும். நித்திய, நைமித்தியக்கிரியைகள், பூசைகளில் எவ்வித குறைபாடுகளும் ஏற்பட அனுமதித்தல் ஆகாது. நித்திய, நைமித்தியங்கள் ஒழுங்காக நடைபெறுவதனாலேயே, ஆலயத்தில் தெய்வசாந்நித்தியம் நிலவுகிறது. அத்துடன் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்பும் வளர்ச்சி பெறுகிறது.

சிவாச்சாரியார்கள், ஆலயபரிபாலனம் செய்யும் தர்மகர்த்தாக்கள், மற்றும் வழிபடுவோர் ஆகிய முத்தரப்பினரே, ஆலயத்தின் தூய்மையை யும், தெய்சாந்நித்தியத்தையும் பேணிப்பராமரிக்கும் பொறுப்புடையவர். அவற்றில் தவறுகள் ஏற்படின் நாட்டிற்கும், அரசுக்கும், மக்களுக்கும் பெரும் தீங்குகள், இயற்கை அனர்த்தங்கள், அழிவுகள், போர்கள்,

கொடியநோய்களின் தாக்கம், பஞ்சம் ஏற்படும் எனத் திருமந்திரம் மற்றும் நூல்கள் கூறுகின்றன.

## திருக்கோயிலில் இடமிருந்து வலமாக ஏன் பிரதட்சிணம் செய்ய வேண்டும்?

திருக்கோயிலில் வலம்வரும்போது இடமிருந்து வலம்வருதல்தான் ஆகமவிதிக்கு உடன்பாடானது. அவ்வாறு பிரதட்சிணம் பண்ணுவது, இயற்கையோடு இணைந்ததாகவும் உள்ளது.

நாம் வாழுகின்ற இப்பூமி தன்னைத்தானே சுற்றும்போதும் சரி; சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றிவரும்போதும் சரி; இடமிருந்து வலமாகவே சுற்றுகிறது. அதுவே இயற்கை விதியும், நியதியும் ஆகும்.

இயற்கையின் இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேயே இந்துக்கள் திருக்கோயிலில் இடமிருந்து வலமாகச்சுற்றிவந்து தெய்வங்களை வணங்கி வழிபாடு செய்து வருகின்றார்கள்.

மேலும் நமது வாழ்க்கைச்சக்கரம், சுழல்வதற்கு கடவுள் என்ற மையப்புள்ளி வேண்டும். அதனை மையமாக வைத்தே, நம் வாழ்க்கை இயங்குகிறது.

நமது அன்றாட வாழ்க்கைச் செயல்களின் ஆதாரமும், பணிகளின் மையமும் கடவுள் என்பதை உணரவும், உணர்த்தியும்தான்; கடவுளை மையமாக வைத்து, திருக்கோயில்களில், கடவுள் சந்நிதியைச்சுற்றி வலம் வருகிறோம். இதனையே பிரதட்சிணம் என்று கூறுகின்றோம். இவ்வாறு வலம்வந்து வணங்குதல் இயற்கையோடு இணைந்ததுமாகும்.

**கணபதிப்பெருமான்** பற்றிய, வரலாற்றுப் பதிவுகளும்; உருவங்கள் தொடர்பான செய்திகளும்; கணேசம், ஸ்காந்தம், பிரம்ம வைவர்த்தம், முத்கலம், வாமனம், அக்னி, லிங்கம், மத்ஸயம், வராஹம், விஷ்ணு, தாமோத்தரம், பவிஷ்யோத்தரம், கருடம், காஞ்சி ஆகிய புராணங் களிலும்; காமிகம் முதலான ஆகமங்களிலும்; சிற்பசாஸ்திரங்களிலும், நாராயணோபநிஷத், அதர்வசீர்ஷோபநிஷத், கணபதி தாபனீயோப்நிஷத் ஆகிய உபநிடதங்களிலும் காணலாம்.

**கணபதி:** கணானாம்பதி அல்லது "பூதகணங்களுத்தலைவன்" என்ற மொழிப்பிரயோகம் யஜுர் வேத ஸ்ரீருத்ரத்தில் வந்தாலும் அது சிவனுக் குரிய சொல்லாகவே ஆளப்பட்டுள்ளது. இச்சொல் பிற்காலத்தில் நாம் முதன்மை கொடுத்து வழிபடும் விநாயகருக்குரியதாக்கப்பட்டு விட்டது. பிரம்மாவை வர்த்தபுராணத்தில் "க" என்பது மெய்யறிவையும் "ண" என்பது அதனால் ஏற்படும் முத்தியையும் குறிப்பதாகச் சொல்லப் பட்டுள்ளது. ஆனால் அதர்வசிரசில் "க" மனத்தையும் "ந" வாக்கையும் குறிப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. சக்திகணபதியே; மஹாகணபதி, லஷ்மிகணபதி, ஊர்த்துவகணபதி, உச்சிஷ்டகணபதி, பிங்களகணபதி எனப் பலகோலங்களில் காட்சி தருகிறார்.

## II சைவசமயம்; தொன்மை, மெய்ம்மை, முதன்மை

சைவம், சிவம் சம்பந்தப்பட்டது. சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வாழ்முதலாக; மெய்ப்பொருளாகக் கொண்டது. அன்பே சிவம்; நீதியே சிவம்; அறிவே சிவம்; உண்மையே சிவம்; நன்மையே சிவம்; செம்மையே சிவம்; அழகே சிவம் என விளக்கம் தருவது, சைவம்.

சைவசமயம்; எப்பொழுது தோன்றியது? யாரால் தோற்றுவிக்கப் பட்டது, இவ்வினாக்களுக்கு விடைகாணமுடியாத அளவிற்கு; வரலாற் றுத் தொன்மையுடையது.

"ஆரியர் வருகைக்கு முன்னரே, இந்தியாவில் நிலவிய, வரலாற்று க்கு முற்பட்ட சமயமே, சைவம்"

**– ஜீ. யூ. போப்.**

எனவே, சைவம், வேதகாலத்திற்கு முற்பட்ட காலந்தொடக்கம் இந்தியாவில் இருந்து வருகிறது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி யில், இந்துநதிப் பள்ளத்தாக்கில் உள்ள மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் நடத்திய, அகழ்வாராய்ச்சிகள் இதனைப் புலப்படுத்தி யுள்ளன. சிவவழிபாடும், சைவசமயமும், திராவிட நாகரிகத்துடன் தொடர்புபட்டவை, என்னும் கோட்பாடு நிரூபணமாகியது.

திரிசூலம் கொண்டுள்ளதான ஓர் உருவம், சிவனைக் குறிப்பதாக உள்ளது. இலிங்கங்களும் கண்டெடுக்கப்பட்டன. தாய்த்தெய்வவணக்கம், மரவணக்கம், பாம்பு வணக்கம் என்பன அஞ்ஞான்று இருந்துள்ளமைக்கு ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. மூன்று தலைகளைக்கொண்ட மூர்த்தி யோகநிலையில் அமர்ந்திருத்தல், சிவனைக் குறிப்பதாக உள்ளது. சிந்துவெளி நாகரிக காலம் ஏறத்தாழ கி.மு 3000 - கி,மு 1500 இடைப்பட்ட காலம் எனக் கூறப்படுகிறது. உலக சமயங்களுள் காலத்தால் மூத்தது, சைவம் ஆகும்.

வேதகாலம் ஏறத்தாழ கி.மு 2000 - கி.மு 500க்கு இடைப்பட்ட காலம் ஆகும். இருக்கு, யசுர் வேதங்களில், உருத்திரன், பசுபதி போன்ற தெய்வங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. உருத்திரனே பின்னர், சிவன் எனப் பேசப்படுவதாகச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உருத்திரசிவன் என்னும் கருத்து, சுவேதாஸ்வர உபநிடதத்தில் வளர்ச்சி கண்டுள்ளது.

உருத்திரன் துன்பத்தை நீக்குதல்; இன்பத்தை அருளுதல் ஆகிய தொழில்களை ஆற்றுபவர், சிவனும் அவ்வாறே செய்பவர்.

தமிழ்ச் சங்ககாலம் ஏறத்தாழ, கி.பி 1 - 3 நூற்றாண்டுகளுக்குட்பட்ட காலப்பகுதி. தொல்காப்பியம், மற்றும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற சங்க இலக்கிய நூல்களில் சிவன் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன:

**"நீலமேனி வாலிழை பாகத் தொருவன்"**
**"ஆலமர் செல்வன்"**

"திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள்"

"நீலமணி மிடற்றோன்"

"பிறவாயாக்கைப் பெரியோன்" - சிலப்பதிகாரம்

சிவனின் தனிச்சிறப்புக்கள், புராண இதிகாசங்களிலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

மணிமேகலையில், சமயக் கணக்கர் திறங்கேட்ட காதையில் சைவவாதியின் கொள்கை எடுத்துக் கூறப்படுகிறது:

**"இறைவன் ஈசன் என நின்ற சைவவாதி"**

மேலும், **"நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக",**

எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

## சைவ மறுமலர்ச்சி:

சைவசமய மறுமலர்ச்சி, தென்தமிழ்நாட்டில், கி.பி ஏழாம் நூற்றாண் டில் ஏற்பட்டது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக் கவாசகர் ஆகிய சைவசமயகுரவர்கள், சைவசமய மறுமலர்ச்சிக்கு வித் திட்டு வளர்த்தவர்கள், ஆவர்.

இந்நாயன்மார்களுக்கு முற்பட்டவர்கள்; திருமூலர், காரைக்கா லம்மையார் ஆகியோர். திருமூலர் இயற்றிய திருமந்திரம் என்னும் திருநூல் சைவத்தின் சாத்திர மற்றும் தோத்திர நூலாகத் திகழ்கின்றது.

"சைவம் சிவத்துடன் சம்பந்தமானது" என்று கூறும் முதல்நூல், திருமந்திரம். "அன்பே சிவம்" என்று அழுத்திக் கூறுகிறது, இச்சைவ நூல்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் பக்தி இயக்கத்தை தோற்றுவித்து, வழிநடத்திய சைவச்செம்மல்கள், கோயிற்பண்பாடு, பக்திநெறி ஆகியவற்றைப், பொதுமக்கள் மத்தியில், பரப்பிய பேராளர்கள். புறச்சமயங்களின் செல்வாக்கினை வீழ்ச்சியடையச் செய்து, சைவம் காத்த சான்றோர்கள்.

இந்நால்வரும், மற்றும் அருளாளர்களும் பாடிய அருட்பாக்கள் திருநாரையூர் விநாயகப்பெருமானின் திருவருட்கடாட்சத்தினால் நம்பி யாண்டார்நம்பியால் வெளிக்கொணரப்பட்டுப் பன்னிரு திருமுறைகள் ஆகத் தொகுக்கப்பட்டன. இதில் இராஜராஜசோழனின் பங்கு மகத் தானது. இப்பன்னிருதிருமுறைகள், சைவத்தின் தோத்திர நூல்களாகத் திகழ்கின்றன.

## திருமுறைகள் மொத்தம் பன்னிரண்டு:

- முதல் ஏழு திருமுறைகள் - மூவர் தேவாரங்கள்
- எட்டாந்திருமுறை - திருவாசகம்
- ஒன்பதாந் திருமுறை - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
- பத்தாந் திருமுறை - திருமந்திரம்

❖ பதினொராந் - திருமுறை
காரைக்காலம்மையார் உள்ளிட்ட பன்னிருவர் பாடல்கள்
❖ பன்னிரண்டாந் திருமுறை - சேக்கிழார் பெரியபுராணம்

சைவத்திற்கு வேதம், பொதுநூல்; ஆகமம், சிறப்புநூல். "வேத மோடாகமம் மெய்யாம் இறைவனூல்", என்கிறது; திருமந்திரம். இத் திருநூல்கள், இறைவனால் அருளப்பட்டவை.

வேதம், "வித்" என்னுஞ் சொல்லை அடியாகக்கொண்டு, தோன்றிய சொல். "வித்" என்பதற்கு அறிதல் என்று பொருள் கொள்வர். வேதங்கள் அறிவு நூல்கள். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என வேதங்கள் நான்கு வகைப்படும். அவற்றை நான்மறைகள் எனத் தமிழிற் கூறுவர்.

**"வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது**
**நாதன் நாம நமச்சிவாயவே"** - தேவாரம்.

ஆகமங்கள் இருபத்தெட்டு உள்ளன. இவை மூலஆகமங்கள். உபஆகமங்களும் உண்டு. சைவசமயத் தத்துவங்கள், திருக்கோயில் அமைப்பு, சுவாமி விக்கிரகங்கள் அமைப்பு விதிமுறைகள்; ஆலய நித்திய, நைமித்தியக் கிரியைகள்; வழிபாட்டுச் செயன்முறைகள், வாழ்வியல் தர்மங்கள் என்பன ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

## சாத்திர நூல்கள்:

பழந்தமிழ்நூல்கள், பன்னிருதிருமுறைகள், மற்றும் வேதாகமங்கள் ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்ட தத்துவக் கருத்துக்களை ஒழுங்கு படுத்திச் சைவசித்தாந்த சாத்திர நூல்களைப் பின்னர் வந்த மெய்கண்ட தேவர், அருணந்திசிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாச் சாரியார் ஆகிய ஞானிகள் வழங்கினர். இந்நால்வரும் சந்தானாசாரியர் என்றும், சந்தானகுரவர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

ஏறக்குறைய கி.பி 1148 முதல் கி.பி 1313 வரையிலான காலப் பகுதியில், தமிழ்நாட்டில் தோன்றிய சாத்திர நூல்கள், மெய்கண்ட சாத்திரங்கள் என அழைக்கப்படுகின்றன. இவையே, சைவசித்தாந்தம் என்னும் தத்துவ நெறியின் மூலநூல்கள். சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு ஆகும்.

"சைவசித்தாந்த தத்துவம் திராவிடரின் (தமிழரின்) பேரறிவில் உதித்த பெரும் கொள்கை", என்கிறார், பேரறிஞர் ஜி. யு. போப், என்னும் ஆங்கிலேயர்.

பன்னிருதிருமுறைகள், சைவத்தின் தோத்திரநூல்களாகவும்; பதி னான்கு மெய்கண்ட சாத்திரங்கள், அதன் சாத்திர நூல்களாகவும் அமைந் துள்ளமை சைவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற அரிய பேறு ஆகும்.

**"சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதில் சார் சிவமாம்**
**தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும் நான்மறைச் செம்பொருள்வாய்**
**மைவைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்**
**உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே"**
- திருவருணைக் கலம்பகம்.

## சைவசித்தாந்தம்:

சைவசித்தாந்தம் ஓர் ஒப்பற்ற ஆன்மீக வாழ்க்கைநெறி. இதனைச் சைவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அகத்து (மனம்) ஒழுங்கைக் கடவுள் உணர்வால் காத்து வரும் சமயம், சைவசமயம். வாழ்க்கையின் இறுதிப்பயனை அடைவதற்கு, வழிப்படுத்தி உதவும்நெறி, சைவநெறி.

"எமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது, கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்", - நாவலர் பெருமான்.

வையத்துள், வாழும் நெறியும், முறையும் அறிந்து வாழ்வாங்கு வாழ்ந்து அதன்பயனாக, உயிர் அதனது பிறவி நோக்கத்தை - உண்மைப் பயனை - உய்தியை எய்துவதற்கு உறுதுணையாக விளங்குவது தூய சைவசித்தாந்தம் ஆகும்.

"சைவமாஞ் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது", என்பது ஆன்றோர் வாக்கு.

## முப்பொருள் உண்மை:

சைவசித்தாந்தம் விளக்குவது, முப்பொருள் உண்மை. பதி, பசு, பாசம் என்பவையே அம்முப்பொருள்களும் எனச் சைவசித்தாந்தம் கூறு கிறது.

பதி என்பது சிவம்; பசு என்பது உயிர் அல்லது ஆன்மா. பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள்.

**பதி; அறிவிக்காமல் அறிவது;**
**பசு; அறிவிக்க அறிவது;**
**பாசம்; அறிவித்தாலும் அறியமாட்டாதது-**

பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் அநாதியானவை, அழிவற்றவை என்பதால் உண்மைப் பொருள்கள் எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது.

**சிவம்:** பதி என்றும், பரம்பொருள் என்றும், கடவுள் என்றும், இறைநிலை என்றும், ஒப்பு உயர்வு அற்ற மெய்ப்பொருள் என்றும், ஆதியும் அந்தமும் இல்லாத உள்பொருள் என்றும் சைவசித்தாந்தம், சிவபரத்துவம் பற்றிக் கூறுகிறது.

**"அகர உயிர் போல் அறிவாகி எங்கும்**
**நிகரில் இறை நிற்கும் நிறைந்து"** - திருவருட்பயன்.

அகரமாகிய உயிரெழுத்து, ஏனைய எழுத்துக்களுக்கெல்லாம் முதலாய், அவற்றில் வேறறக் கலந்திருப்பது போல் ஒப்பற்ற முதல்வன் - சிவம்; அறிவே வடிவமாகி; உலகம், உயிர்கள் எல்லாவற்றிலும் வேறறக் கலந்து, சிவபரத்துவமாக நிலைபெற்றிருப்பான் என்பது, திருவருட்பயன் காப்புச் செய்யுள் தரும் கருத்து.

## 12 விநாயகர் பற்றிய ஆன்மீகத் தகவல்கள்:

- வேதகாலந்தொடக்கம், பாரத தேசத்தில் விநாயகர் வழிபாடு, இருந்து வருகிறது. இருக்கு வேதத்தில், கணங்களின் தலைவனாகிய கணபதிக்கடவுள் பற்றிய குறிப்பு உள்ளது.
- இந்தியாவில் மட்டுமன்றி, இலங்கை, பர்மா, மலாயா மற்றும் தூர கிழக்கு நாடுகளிலும் விநாயகர் வழிபாடு உள்ளது.
- சைவம், வைணவம், சாக்தம் மற்றும் பௌத்தம், சமணம் ஆகிய மதத்தவர்களிடையே; பலவிதத்திலும். கருத்து முரண்பாடுகள் இருப் பினும், விநாயகருக்கு முதன்மை வழங்கி வழிபடுவதில், அவர் களிடம் ஒத்த தன்மையைக் காணமுடிகிறது.
- தமிழ்நாட்டிலும், இலங்கைத் திருநாட்டிலும் விநாயகப்பெருமானைப் பிரமச்சாரியாகவே வழிபாடு செய்கின்ற மரபு, இருந்து வருகிறது. வடஇந்தியாவில் சித்தி, புத்தி ஆகிய இரு தேவியர்களுடன் சேர்ந்த விநாயகர் திருவடிவமாக அவர் வழிபாடு செய்யப்படுகின்றார்.
- சக்தியுடன் கூடிய வடிவங்கள் : உச்சிஷ்டகணபதி, மகாகணபதி, ஊர்த்துவகணபதி, பிங்களகணபதி, லட்சுமிகணபதி என ஐந்து திருவடிவங்கள் ஆகும்.
- வல்லபை, நீலசரஸ்வதி, சித்தி, புத்தி ஆகியவர்கள் விநாயகரின் தேவியர்கள் எனப் புராணங்கள் கூறும். இவற்றிற்கு உள்அர்த்தங்கள் உண்டு.
- விநாயகரை முழுமுதற்கடவுளாகக்கொண்டு வழிபடும் சமயம், காணா பத்தியம் என அழைக்கப்படுகிறது.
- அண்டங்கள், சராசரங்கள் அனைத்திலும் 'ஓம்' எனும் பிரணவ மந்திர ஒலி சதா ஒலித்துக்கொண்டே இருக்கிறது. விநாயகரின் திருவடிவம் ஓங்காரத்தை உணர்த்துகிறது. பிரணவ வடிவினர், ஓங்கார வடிவினர் எனவும் விநாயகர் அழைக்கப்படுகிறார்.
- உலகில் தோன்றுவன யாவும் அழிந்தாலும், பிரணவ ஒலிக்கு அழிவில்லை. விநாயகருக்கும் அழிவில்லை. என்றுமுள்ள, எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த, எல்லாம் அறிந்த பரம்பொருள், மெய்ப் பொருள் ஆக விளங்குபவர், விநாயகர்.
- விநாயகருடைய தேவியர்களாகிய சித்தியும், புத்தியும் பிரம்ம தேவரின் புதல்விகள் ஆவர்.
- வல்லபை; மரீசி என்னும் முனிவரின் புதல்வியாவார்.
- விநாயகர் திருமாலின் புதல்வியர், பன்னிருவரைத் திருமணஞ் செய்தருளினார், என்றொரு புராணச் செய்தியுள்ளது.

❖ அப்பன்னிரு தேவியர்களின் பெயர்கள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. மோதை, | 2. பிரமோதை, | 3. ஸீமநளை, | 4. சுந்தரி, |
| 5. மநோரமை, | 6. மங்கலை, | 7. கேசினி, | 8. சாந்தை, |
| 9. சாருஹாலை, | 10. ஸுமத்யமை | 11. நந்தினி | 12. சாமதை |

❖ விநாயகன் என்பதன் பொருள் தனக்குமேலே வேறொரு தலைவன் இல்லாதவன் என்பதாகும். "வி" என்றால் சிறப்பு என்ற பொருளைச் சுட்டுகின்றது. "நாயகன்" என்பதன் பொருள், தலைவன் ஆகும். "விநாயகன்" என்றசொல், தன்னிகரில்லாத் தனிப்பெருந்தலைவன், என்பதாகும்.

❖ விநாயகரின் அவதாரங்கள் பன்னிரண்டு என்று புராணங்கள் கூறு கின்றன. அவையாவன:

கஜானனர், (விநாயகர்) சிந்தாமணி, மயூரேசர், விக்னேஸ்வரர், வக்கிரதுண்டர், கணபதி, பாலச்சந்திரர், மகோற்கடர், வல்லபை, கணேசர், துண்டிவிநாயகர், தூமகேது.

❖ "**கணபதி**" என்பதில், "க" என்பது ஞானநெறியில் ஆன்மா எழுவதையும் "ண" என்பது மோட்சம் பெறுதலையும் "பதி" என்பது ஞானநெறியில் திகழ்ந்து பரம்பொருளை அடைதலையும் குறிப்ப தாகும். கணங்களின் தலைவன் என்பதால் கணபதி.

❖ **கஜானனர்** அடியார்களின் துன்பங்களை நீக்கிக் கருணை புரிபவர்; ஞானத்தை வழங்குபவர்; யானை முகத்தை உடையவர்.

❖ **ஏகதந்தர்:** ஒற்றைக்கொம்பர், விநாயகர் தம்முடைய ஒரு கொம்பை / தந்தத்தை ஒடித்து, அதனால் கயமுகாசுரனைக் கொன்றார்.

❖ **விகடர்:** வேடிக்கைகள் செய்வதில் வல்லவர். அதனால் உண்டான பெயர்.

❖ **விக்கினேஸ்வரன்/விக்கினராஜன்:** விக்கினங்களை நீக்குபவர். அதேவேளை, தம்மை வந்து அணுகாதவர்களுக்கு விக்கினங்களை / இடையூறுகளை வருவிப்பவர். விக்கினங்களை உண்டாக்கவும், போக் கவும் வல்லவர். அதனால், விக்கினேஸ்வரன் என்ற திருப்பெயர், விநாயகருக்கு வழங்கப்பட்டது.

❖ **சிந்தாமணிவிநாயகர்:** கபிலமுனிவருக்குச் சொந்தமான சிந்தா மணியை, கணராஜன் என்பவன் கவர்ந்து சென்றான். விநாயகர் அவனை வென்று சிந்தாமணியை மீட்டருளியமையினால், இப்பெயர் வழங்கப்பட்டது.

❖ **மயூரேசர்:** பிரம்மதேவரிடமிருந்து, வேதங்களைக் கவர்ந்து சென்ற கமலாசுரனையும், தேவர்களைச் சிறையிலிட்ட சிந்தாசுரனையும் போரில் வென்று வேதங்களையும் மீட்டருளியவர்.

❖ **வக்கிரதுண்டர்:** பிரளயகால இறுதியில், தோன்றி பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் முதலான மூவர்க்கும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களை ஆற்றும்படி அருளுபவர்.

❖ **பாலச்சந்திரவிநாயகர்:** அக்கினியைக் கிளப்பி, அச்சுறுத்திய அனலாசுரனை விநாயகர் குழந்தை வடிவில் சென்று விழுங்கியருளி யமையினால், இப்பெயர் அவருக்கு வந்தது.

❖ **மகோற்கடவிநாயகர்:** காசிராஜனைக் காப்பாற்றுவதற்காக, நராந்தகன், தேவாந்தவன் ஆகிய அசுரர்களை, அழித்தொழித்தமை யால், இப்பெயர் வரக்காரணமாயிற்று.

❖ **வல்லபைவிநாயகர்:** மரீசி முனிவரின் புதல்வியாகிய வல்லபை யையும், விஷ்ணுவின் புத்திரிகள் பன்னிருவரையும் திருமணம் செய்துகொண்டு விஷ்ணுவுக்கு யோகஞான தத்துவம் என்னும் கணேச கீதையை அருளிய வடிவம்.

❖ **கணேசவிநாயகர்:** விநாயகரிடத்தில் வரம்பெற்ற பெலி என்னும் அசுரன் திரிலோகங்களிலும் சஞ்சரிக்கின்ற தேவர்களுக்குத் துன்பம் செய்து, அல்லற்படுத்தியபோது தேவர்களின் வேண்டுதலுக்கிணங்க பஞ்சமுக விநாயகராக அவதரித்து அவ்வசுரனைச் சங்காரம் செய்த திருவடிவம்.

❖ **துண்டிவிநாயகர்:** துராசதன் என்னும் கொடியவனை வதம் செய்து, திவோதாசன் என்பவனுக்கு அருள்புரிந்த வடிவம்.

❖ **தூமகேதுவிநாயகர்:** மாதவராசன், அவனின் மனைவி சுமுதை ஆகியோருக்குக் கொடுமை இழைத்து வந்த தூமராசன் என்பானை அழித்து, அருள்புரிந்த வடிவம்.

❖ **அவதாரம்:** மூன்று முக்கிய நோக்கங்களைக்கொண்டு நிகழ்கின்றது. அவை:

1. நல்லவர்களைத் தீயவர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றுதல்.
2. தீயவர்களை தீமைகளை அழித்தல் - இல்லாதொழித்தல்
3. தர்மத்தை நிலைநிறுத்துதல் - அதர்மத்தை நீக்குதல் ஆகியவை ஆகும்.

❖ விநாயகர் தோற்றத்தின் நோக்கம்; தத்துவம்; நல்லனவற்றை தனக்கும், பிறருக்கும் நன்மை பயப்பனவற்றை; நற்காரியங்களை செய்பவர்களுக்கு, நன்மையும்; தீமைகள், தீங்குகள், இடர்கள் விளை விக்கும் கருமங்களை ஆரம்பிப்பவர்களுக்கு, இடையூறுகளையும், விக்கினங்களையும் ஏற்படுத்துவதாகும்.

❖ இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் நல்ல காரியங்கள் தொடங்கும்போது எத்தனை தடைகள், இடையூறுகளை எதிர்கொள்ள நேர்ந்தாலும், அவைகளை நீக்கியருளி, ஈற்றில் அவை வெற்றிபெற, அருள்புரியவும்; தீயகாரியங்கள் ஆரம்பிக்கப்பட்டபொழுது, அவை களுக்குத் தடைகள், இடர்கள், இடையூறுகள் ஏற்படுத்தி, முளையி லேயே கிள்ளியெறிந்து, அச்செயல்கள் முற்றுப்பெறாமல் செய்யவும் ஆகிய இக்காரணங்களுக்குத்தான், விநாயகர் தோற்றம் நடைபெற்றது.

- விநாயகருக்கு விக்கினேஸ்வரன், விக்கினராஜா ஆகிய திருப் பெயர்கள் வந்தமைக்குரிய காரணம், இதனால் தெளிவாகின்றது.

- விநாயகரிடம் வேண்டப்படும் வரம் தமக்கும், பிறருக்கும் நன்மை பயப்பனவாக அமைய வேண்டும். பிறருக்குத் தீமைகள், இடர்கள், இடையூறுகள் விளைவிக்கக்கூடியனவாய் இருக்கக்கூடாது. அசுரர்கள் பெற்ற வரங்கள், நல்லவர்களை அழிக்கப் பயன்படுத்தியமையினா லேயே கடவுள், அவதாரங்கள் எடுத்து, அவர்களை சங்காரம் செய்ய நேர்ந்தது.

- விநாயகர், கயமுகாசுரசங்காரம் நிகழ்த்தியதும்; முருகன், சூரசங் காரம் செய்ததும் நல்லவர்களைக் காக்கவும், தீயோரை அழிக்கவுமே யாகும்.

- துஷ்டநிக்கிரக, சிஷ்டபரிபாலனம், என, இவ்வருட்செயல் அழைக் கப்படுகிறது.

- "ஏகம் கணாதியே சூர்யாத்", என்கிறது, இந்துசமய சாத்திரம். கேட்ட வரத்தைக் கேட்டவுடனேயே வழங்குபவர், கணபதிப்பெருமான், என்பது இதன் பொருள். பெற்ற வரங்கள், துர்ப்பிரயோகஞ் செய்தல் ஆகாது. என்னும் நிபந்தனை அங்கு தொக்கி நிற்கிறது.

## வல்லபகணபதி

விக்கினங்களை வரவிடாமல் காக்கும் வல்லமை வந்தபின் அவற்றை நீக்கும் வலிமை; இடர்கள், தடைகளை ஆளும் ஆளுமை, என்பன, விநாயகருக்கே உரிய திருவருட்தன்மையாகும். அதன் காரண மாக, விக்னேஸ்வரன் என்ற திருநாமமும் அவருக்குண்டு. விநாயகப் பெருமானின் அருட்சக்திகளுள் ஒருவராக, வல்லவாம்பிகைதேவி விளங்குகிறார். வல்லபகணபதி என்றும் போற்றித் துதிக்கப்படுகிறார்.

## முத்திக்கு வித்தானவர்:

மனிதர்கள் அறியாமையால், உலகியல் சிற்றின்பங்களைத் தேடி, அலைந்து, நுகர்ந்து, ஈற்றில் துன்பக் கடலலைகளில் மூழ்கி, உழலாது, அவர்களின் அஞ்ஞான இருளை அகற்றி, அறிவொளி ஏற்றி, மெய்ஞ் ஞானத்தை உணர்த்தி; மனிதப்பிறவியெடுத்ததன் அதியுயர் நோக்க மாகிய முத்தியின்பத்தை அடையத் திருவருள் பாலிப்பவர், விநாயகப் பெருமான்.

**கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை**<br>**கணபதி என்றிடக் காலனும் கைதொழும்**<br>**கணபதி என்றிடக் கருமம் ஆதலால்**<br>**கணபதி என்றிடக் கவலை தீருமே.**

## கணபதிப்பெருமான் - அவதார நோக்கம்:

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

திருஞானசம்பந்தப்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய இத்தேவாரப்பாடல் வாயிலாக; இவ்வுலக மக்களின் இடர்களைக் களைவதன் பொருட்டே, கணபதிப்பெருமான் தோன்றினார் என்பதை அறியமுடிகிறது.

## பூரணகும்பம் / நிறைகுடம் வைத்தல்: பிள்ளையார் வழிபாட்டிற்கு முதன்மை:

பொதுவாகச், சைவசமயத்தவர் வாழுகின்ற இல்லங்களில் பூசைகள் செய்யும்போதும்; நல்லநாள் பெருநாள்களிலும்; நாள்காரியங்கள் மற்றும் சுபகருமங்கள் தொடங்கும்போதும்; பூர்வ, அபரக்கிரியைகள் இடம்பெறும் போதும்; பண்டிகைகள், விழாக்கள் நடைபெறும் காலங்களிலும், பூரண கும்பம் வைத்தல், முதற்கருமமாக இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. குத்துவிளக்கேற்றிப், பசுவின் சாணத்தில், அல்லது மஞ்சளில், பிள்ளையார் பிடித்து, அறுகம்புல்குற்றி வைத்துப் பிள்ளையாருக்கு முதல்வணக்கம் செலுத்துதல், பூரணகும்பம் வைத்தல் என்னும் நிகழ்வின் பிரதான அங்கமாகும்.

## மோதகமும் பஞ்சபூதங்களும்:

பிள்ளையாருக்கு மோதகம், கொழுக்கட்டை, நைவேத்தியம் செய்கிறோம். பிள்ளையாருக்கு விருப்பமான தின்பண்டம் என்பதால் மட்டுமல்ல, தத்துவார்த்தம் பொதிந்துமுள்ளது. வசிட்டமுனிவரின் தர்ம பத்தினி, அருந்ததியே, முதன்முதலில் பிள்ளையாருக்கு மோதகம், கொழுக்கட்டை நைவேத்தியம் செய்தவர், எனக் கூறப்படுகிறது.

மோதகம், கொழுக்கட்டை இரண்டும் வடிவத்தில் வேறுபட்டிருப் பினும் உள்ளுடன் முதலிய உற்பத்திப் பொருள்களில் ஒன்றுபட்டிருத்தல் நோக்கற்பாலது.

மோதகத்தின் மேல்பகுதி, வெள்ளைநிறமாவு; தூய்மையையும், உள்ளேயுள்ள தேங்காய்த்துருவல், சர்க்கரை என்பவற்றினால் ஆக்கப்பட்ட பூரணம்; நிறைவான வாழ்வையும் நல்கும் என்பது ஐதீகம். தூய்மையும், இன்பமும் நிறைந்த நல்வாழ்வை வேண்டித்தான் பிள்ளையாருக்கு மோதகம், கொழுக்கட்டை ஆகியவற்றை நைவேத்தியம் செய்கிறார்கள். வாழ்க்கை எந்நாளும் இன்பமேயன்றித், துன்பம் இருத்தல் ஆகாது என்பதே ஒவ்வொருவரின் விருப்பம் ஆகும். அதற்கு, நம்வீட்டு விஷயங்களை நல்லதோ, கெட்டதோ, நமக்குள்ளேயே வைத்துக்கொள்ள வேண்டும். குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை, ஆத்திரப்படாது, அவர்களே பேசித்தீர்த்துக்கொள்ள வேண்டும். இதற்குப் பொறுமை,

சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல் ஆகிய நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல் அவசியம். இப்படியாகக் குடும்பத்தவர் இருந்தாலே, வாழ்வு நலம்பெறும், வளம்பெறும், இனிமையாகிவிடும். இப்படிப்பட்ட "நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்" என்பர்.

மோதகத்தினுள், பூர்ணம் எனும் இனிப்புப் பதார்த்தம் வைக்கப்படு கிறது.

மேலும் தேங்காய், சர்க்கரை, அரிசிமா, தண்ணீர், நெருப்பு என இவை ஐந்தின் இணைப்பில்தான், மோதகம் சாத்தியமாகின்றது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களையும் அடக்கி ஆளுந்திறன் நமக்கு இருத்தல் வேண்டும். இத்தத்துவத்தையே மோதகம் நமக்குப் பூரணமாக விளக்குகிறது, என அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர்.

"பிடித்து வைத்தால் பிள்ளையார்", என்று கூறும் வழக்கம் உள்ளது. மஞ்சள், களிமண், பசுவின் சாணம், விபூதி, இவற்றில் ஒன்றை நீரில் குழைத்து, பிள்ளையார் பிடித்து, அறுகம்புல்குற்றி, வைத்து வழிபாடு செய்யும் வழக்கம் இந்துக்களிடையே நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. வழிபாடு முடிந்தபின், நீரில் கரைத்து, பூமரங்களின் அடியில் ஊற்றிவிடும் வழக்கம் சில இடங்களில் இருந்து வருகிறது.

விநாயகரின் பெரியகாதுகள், "அதிகம் கேள்" என்கிறது. பெரியதலையோ, "பிரம்மாண்டமாகயோசி" என அறிவுறுத்து கிறது. கையில் வைத்திருக்கும் கோடரியோ, "பந்த பாசங்களை அறுத்து எறி" என்கிறது. சின்னக்கண்களோ, "உற்றுப்பார்" எனச் சொல்லாமல் சொல்கிறது. சிறியவாய், "அளந்துபேசு" என்கிறது. பாசமாகிய கயிறு, "அகிலத்தையே அன்பால்கட்டு" என்று வழி காட்டுகிறது. விரிந்தகையோ, "கர்ணனைப்போல் அள்ளிவழங்கு" என அழகாய்ச் சொல்கிறது. பெரியவயிறோ, "நல்லதையும் அல்லாததையும் ஜீரணி" என்று புத்திபுகட்டுகிறது. ஒற்றைத் தந்தமோ, "நல்லதை மட்டும் வைத்துக்கொள்" என்கிறது. தும்பிக்கையோ, "சமயங்களில் வளைந்துகொடு" எனச்சூசகமாக உணர்த்துகிறது. மோதகமோ, "உள்ளே உள்ளது இன்பம்" என்ற உண்மையை உணர்த்தி நிற்கிறது.

நன்றி:
**"பெரியகடவுள்",**
**சந்திரசேகரசர்மா**

# 13 ஆன்மீகத் தகவல் களஞ்சியம்

**பிள்ளையார் துதி:**

**முன்னவனே யானை முகத்தவனே முத்தி நலம்**
**சொன்னவனே தூய்மைச் சுகத்தவனே மன்னவனே**
**சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே**
**தற்பரனே நின்தாள் சரண்.**

## கணபதி ஹோமம்:

விநாயகப்பெருமான் முதன்மையானவர், மகத்துவம் மிக்கவர்; முதல்வணக்கத்திற்குரியவர். அவ்வாறே, ஹோமங்கள் யாவற்றிலும் முதன்மையானது, மகாகணபதி ஹோமம். கணபதி ஹோமம் செய்வதால் ஆலயங்கள் மேலும் புனிதம் அடைகின்றன. அருள்வீச்சு அதிகரிக்கிறது. புதிதாக அமைக்கப்பெற்ற வீட்டில், குடிபுகுதல் செய்வதற்கு முன்னதாக அங்கு கணபதி ஹோமம் செய்வதால் வாழ்வு செழிக்கும். எந்தவிதமான இடர்கள், இடையூறுகளையும் சந்திக்க நேரிடாது. அவ்வாறே வியாபார நிலையங்களிலும் நன்மைகள், இலாபங்கள் ஏற்படும். சகல செல்வங் களையும்; எடுத்த கருமங்களில் வெற்றியையும் அடைவர். எல்லாவித தோஷங்களும், துன்பங்களும் நீங்கும். இன்பமே எந்நாளும், துன்ப மில்லை என்னும் உயர்நிலை, எய்தப்பட்டுவிடும்.

| | |
|---|---|
| ஓம் | - ஓரெழுத்து மந்திரம் - பிரணவம் |
| ராமா | - இரண்டெழுத்து மந்திரம் |
| முருகா | - மூன்றெழுத்து மந்திரம் |
| நாராயணா | - நான்கெழுத்து மந்திரம் |
| நமசிவாய | - ஐந்தெழுத்து மந்திரம் |
| சரவணபவ | - ஆறெழுத்து மந்திரம் |
| ராமச்சந்திரா | - ஏழெழுத்து மந்திரம் |
| ஸ்ரீகுருவாயூரப்பா | - எட்டெழுத்து மந்திரம் |
| ஓம் ஸ்ரீம் பராசக்தி | - ஒன்பதெழுத்து மந்திரம் |

## கணபதி ஹோமத்தில் பயன்படுத்தும் பொருள்களும் பலன்களும்:

| | |
|---|---|
| மோதகங்கள் | - நினைத்த காரியம் நிறைவு பெறும். |
| அறுகம்புல் ஹோமம் | - குபேரபலன் கிட்டும். |
| நெய், சமித்து ஹோமம் | - எல்லா நன்மைகளும் கிடைக்கும். |
| வெல்லம், பொரி | - மேதையாவான். |
| சர்க்கரை | - இலட்சுமி கடாட்சம் கிட்டும். |
| தேன், பால், நெய் | - ஸ்வர்ண லாபம் அடைவர். |

வெல்ல பாயாசம், வாழைப்பழம், தேங்காய், பால், நெய், தேன் இவற்றைக் கலந்து ஹோமம் செய்தால் சர்வகாரியசித்தி அடையப் பெறுவர்.

## தீபங்களை ஏற்ற, எண்ணெய் வகைகள்:

1. **நெய்:** விளக்கிற்கு நெய்விட்டுத் தீபம் ஏற்றுவது, மிகச் சிறந்தது. சகல சுகங்களும், செல்வங்களும் கிடைக்கப் பெறுவர். இல்லத்திற்கு நலனையும் தரும். அறிவு, ஞானம் உண்டாகும்.
2. **நல்லெண்ணெய்:** நல்லெண்ணெயில் தீபம் ஏற்றினால் எல்லாப் பீடைகளும் நீங்கிவிடும். மரணபயம் இருக்காது.
3. **இலுப்பை எண்ணெயில்** தீபம் ஏற்றி வந்தால், ஆரோக்கியம் உண்டாகும்.
4. **ஆமணக்கு எண்ணெய் / விளக்கெண்ணெயில்** தீபம் ஏற்றினால், சகல சம்பத்துக்களும் உண்டாகும்.
5. **கடலை எண்ணெய்:** தீபம் ஏற்றுவதற்கு உபயோகிக்கக் கூடாது.

**குறிப்பு:** தற்காலத்தில் தேங்காயெண்ணையே தீபம் ஏற்றுவதற்குப் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

## தெய்வங்களுக்கேற்ற எண்ணெய் வகைகள்:

1. விநாயகர் ................................ தேங்காயெண்ணெய்
2. முருகன் ................................ நெய்
3. அம்பாள் ................................ ஐந்து வகை எண்ணெய்
4. நாராயணன் ........................... நல்லெண்ணெய்
5. மகாலட்சுமி ............................ நெய்
6. சர்வதேவதைகள் ................. நல்லெண்ணெய்
7. சனீஸ்வரன் ........................... நல்லெண்ணெய்
8. குலதெய்வம் இலுப்பெண்ணெய், நெய், வேப்பெண்ணெய் மூன்றும் கலந்தது.

**குறிப்பு:** நெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காயெண்ணெய் ஆகிய ஐந்தும் கலந்து விளக்கேற்றி, ஒருமண்டலம் (48 நாட்கள்) பூசை செய்பவர்கள் தேவியின் திருவருளைப் பெறுவர்; சந்திரசக்தி உண்டாகும், என்று கூறப்படுகிறது.

## விளக்கு வகைகள் - பலன்கள்:

1. வெங்கல விளக்கு ஏற்றினால் - பாவங்கள் நீங்கும்.
2. இரும்பு விளக்கு ஏற்றினால் - அவமிருத்துக்கள் ஏற்படாமல் பாது காக்கும்.
3. மண்ணினாலான விளக்குகள் ஏற்றினால் - வீரிய விருத்தி உண்டாகும்.

**குறிப்பு:** மண்ணால் செய்யப்பெற்ற அகல்விளக்குகள் அல்லது பஞ்ச லோகத்தால் ஆன விளக்குகள் பூசை வழிபாட்டிற்கு மிகவும் உகந்த தாகும்.

**பஞ்சலோகங்கள் :**

தங்கம், வெள்ளி, பித்தளை, இரும்பு, செப்பு ஆகியன.

## தீபங்களும் திரிகளும்:

1. **பருத்திப் பஞ்சுத்திரி:** மிகவும் நல்லது. சகல சௌபாக்கியங்களையும் வழங்கும்.
2. **தாமரைத் தண்டு:** தாமரைத் தண்டுக்குள்ளிருக்கும் நூல்போன்ற வஸ்துவைத் திரித்துத் தீபம் ஏற்றினால் முன்வினை பாவத்தைப் போக்கும். செல்வம் நிலைக்கும்.
3. **வாழைத்தண்டு:** வாழைத்தண்டுக்குள்ளிருக்கும் நூல் பாகமாகப் பக்குவப்படுத்தித் திரித்து, அத்திரியில் தீபம் ஏற்றினால் குழந்தைச் செல்வம் கிடைக்கும். தெய்வக்குற்றம், குடும்ப சாபம் என்பவற்றினால் ஏற்படும் தோஷங்கள் நீங்கி, விமோசனம் கிடைக்கும். சாந்தி உண்டாகும்.
4. **புது வெள்ளைத் துணி**யைப் பன்னீர் விட்டுக் காயவைத்து, திரிதிரித்துப் பயன்படுத்த உத்தம பலனைக் காணலாம்.
5. **நீலம், மஞ்சள் சேலைத்துண்டு:** இவற்றிலிருந்து திரிசெய்து தீபம் ஏற்றினால் அம்மன் அருள் கிட்டும். வியாதிகள் குணமாகும். வாய்வுத் தொல்லை நீங்கும்.
6. **சிவப்புநிறச் சேலைத்துண்டு:** இதில் திரிதிரித்துத் தீபம் ஏற்றினால் திருமணத்தடை, குழந்தையின்மை, பேய், பிசாசு, செய்வினை, சூனியம், தோஷங்கள் யாவும் விலகிவிடும்.
7. **வெள்ளை எருக்கு:** வெள்ளை எருக்குச் செடியின் பட்டையைத் திரியாக்கித், தீபம் ஏற்றி வழிபாடு செய்யப் பெரும் செல்வம் சேரும். பேய் பிடித்தவர்களுக்கு அதன் தொல்லை நீங்கும்.

## தீப வழிபாடு:

அதிகாலையில், பிரம்ம முகூர்த்தத்தில் இல்லத்தில் தீபம் ஏற்றுவது சர்வமங்கள சுகத்தையும் தரும். மாலைவேளையில், இல்லத்தில் தீபமேற்றி வணங்கும் பெண்மணிகளுக்கு ஆசி வழங்கத் தேவர்கள் இல்லங்களுக்கு வருகின்றார்கள். ஆதலால் தீபம் ஏற்றும் நேரத்தில் வீட்டைப் பூட்டிக்கொண்டு, வேறு எங்கும் செல்லல் ஆகாது. தீபம் ஏற்றும் நேரங்களில் நித்திரை செய்தல் ஆகாது. வேலை வேண்டுவோர், குடும்ப சுகம் நாடுவோர், புத்திரர் வேண்டுவோர் பொழுதுசாயுங் காலத்தில் - மாலை நேரத்தில் தீபம் ஏற்றி மகாலட்சுமியை வழிபட நற்பயனை அடையலாம்.

## பிரார்த்தனை:

"பிரார்த்தனை" என்பது பூமியின் ஈர்ப்புநிலை போன்ற ஓர் சக்தி. பல நோயாளிகள் எல்லாவிதமான மருத்துவ முறைகளிலும் நோய் குணமாகாமல்; பிரார்த்தனை மூலம், அவர்கள், நோய் நீங்கப்பெற்று உள்ளனர் என்பது அனுபவபூர்வமாகக் கண்டறிந்த உண்மை. பிரார்த்தனை ஒன்றின் மூலமாகத்தான், முழுமையான ஒருமுகப்பட்ட முறையில் உடல், உள்ளம், உயிர் ஆகிய மூன்றும் ஒருங்கிணைப்புக் கொள்கின்றன. அதன்மூலமாக அற்புதமான சக்தியை பெறமுடிகின்றது. பொறாமை, துன்பம், துயரம் முதலிய மனஅழுக்குகள் நீங்கி, அன்புள்ளம் பெற்று, நல்வாழ்வு வாழலாம்.

### கோயில்மணி ஒலித்தல் : காரணம்:

கோயில்களில் பூசை செய்யும் நேரங்களில், மணி அடிக்கப் படுவதற்கான காரணத்தை, அறிந்து கொள்வது நன்று: இறைவன் நாதவடிவானவன், என்று சாத்திரநூல்கள் கூறுகின்றன. நாதவடிவத்தின் வெளிப்பாடே அ, உ, ம மூன்றின் கலவையான 'ஓம்' எனும் பிரணவ மந்திரம். பிரணவ வடிவினராக விளங்குபவர், விநாயப்பெருமான். அவர் ஓங்காரமூர்த்தியாவார்.

மணி ஒலிக்கும்போது, 'ஓம்' என்ற ஓங்கார ஒலியை எழுப்பி, நம்மனத்தை நிறைவுபெறச் செய்வதால், நாம் மணியை ஒலிக்கச் செய்கிறோம்.

கோயில்களில் பூசை நடைபெறும் வேளைகளில் நாம் மணியை ஓங்கி அடித்து, ஒலிக்கச் செய்யும்போது கூடவே மேளம், நாதஸ்வரம், சங்கு போன்ற இசைக்கருவிகளையும் ஒலிக்கச் செய்கிறோம்.

பல்வேறு வாத்தியங்கள் முழங்கப் பூசை செய்வது என்பது, சைவ மரபு. இறைவனுக்குத் தீபாராதனைகள், பூசைகள் செய்யும்போது நம்மனம் இறைவனோடு லயித்திருக்க வேண்டும். புலன்கள் வழிச்செல்லுதல் ஆகாது. இறைபக்தியில் ஒன்றித்து இருக்க வேண்டும்.

வெளிவிவகாரங்களில், நம்மனம் செல்லக்கூடாது. அதற்கு நாம், நமது ஐம்புலன்களில் ஒன்றான, ஒலி உணரும் செவிகளைக் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

பூசை நேரங்களில் எவரேனும் வேண்டாத வார்த்தைப் பிரயோகங் களில் ஈடுபடலாம்; கொடுஞ்சொற்களால், கோபம் வரச்செய்யலாம், அல்லது குழப்பங்களை விளைவிக்கலாம். இவ்வாறான கவனக் கலைப் பான்கள், செவிவழியாகப் புகுந்து வழிபடுபவரின், மனத்தில் குழப்பங் களை ஏற்படுத்தலாம். ஆலயத்திற்கு அமைதி தேடிவந்து, அங்கும் மனம் அமைதி பெறவில்லையென்றால், ஆலயவழிபாட்டினால் பயன் ஏதும் ஏற்படாது.

எனவேதான், சுவாமிக்குப் பூசை செய்யும்போது, இந்தவிதமான. வேண்டத்தகாத சப்தங்கள், ஒலிகளை அடக்கி ஒடுக்கும் 'ஓம்' எனும் பிரணவ ஒலியை மணியடித்தல் மூலம், ஒலிக்கச் செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. நம் மனத்திட்பத்தை அதிகரிக்கச் செய்வதற்கான வழிமுறைதான், மணி அடித்தல் ஆகும்.

### ஔவையார் பாடிய;
### விநாயகர் அகவல் பற்றிக் காஞ்சிப் பெரியவரின் கருத்து:

விநாயகரை வெள்ளிக்கிழமை மற்றும் சதுர்த்தி திதிகளில் மறக் காமல் வணங்க வேண்டும். அவ்வாறு விநாயகரை வணங்கும்போது உங்கள் நினைவிற்கு வரவேண்டிய இன்னொருவர் ஔவையார் ஆவார். அவர், விநாயகர்அகவல் பாமாலையை இயற்றியவர். இதைச் சதுர்த்தி அன்று படித்தால் நீங்கள் பிள்ளையாரிடம் ஏதாவது வேண்டினால், அவர் இரட்டிப்பாகத் தருவார். விநாயகர்அகவல் படிப்பது வீட்டுக்கும், நாட்டுக் கும் மட்டுமல்ல உலகுக்கே நல்லது.

காஞ்சிப்பெரியவர் இதுபற்றிக் கூறும்போது, நமக்கும், நாட்டுக்கும், உலகத்துக்கும் நன்மை உண்டாவதற்கு ஔவையார் மூலம் பிள்ளை யாரைப் பிடிப்பதே வழி, என்கிறார்.

விநாயகர்சதுர்த்தியன்று, விநாயகர்அகவல், விநாயகர்கவசம் மற்றும் காரியசித்திமாலைப் பாடல்களைப்பாடி, அவரை மெய்யன்போடு வழிபடலாம். கோரிக்கைகள் நிறைவேறும். அனுபவ உண்மை.

எடுத்த கருமங்கள் அனைத்தையும் வெற்றிபெறச் செய்யும் தனிச்சிறப்புடைய காரியசித்திமாலையின் விளக்கம் கீழே தரப்படுகிறது. கேட்ட வரங்களைத்தரும் தனிச்சிறப்புடைய இத்துதிப்பாடல்களை விநாயகப்பெருமான் முன் அமர்ந்து, உள்ளம் ஒன்றிப் பாராயணம் செய்பவர்களின் மனவிருப்பம் எளிதில் நிறைவேறும். இத்துதியைக் காலை, மதியம், மாலை மூன்று வேளைகளிலும் உரைப்பவர்கள் நினைத்த காரியங்கள் கைகூடும். அனைத்து வகைகளிலும் வெற்றி உண்டாகும். எட்டு நாட்கள் தொடர்ந்து ஓதிவர, மனதில் மகிழ்ச்சி உண்டாகும். வாக்கினிலே இனிமை உண்டாகும். செயலில் நல்லதே நடைபெறும். சங்கடஹரசதுர்த்தித் திதிகளில், எட்டுமுறை ஓதினால் அட்டமாசித்திகளும் கைகூடும். அனைத்து வெற்றிகளும் உண்டாகும்.

தினமும் 21 முறைகள் இப்பாடல்களைப் பாராயணம் செய்து வருபவர்களின் சந்ததியினர் கல்வியிலும், செல்வத்திலும் மேம்பட்டுப் பெருவாழ்வு வாழ்வர், என்பது அனுபவமூலம் பெற்ற உண்மை. கபில நாயனார் இவ்வருட்தகவலை வெளிப்படுத்தி எழுதியுள்ளார்.

- ❖ உயிர்களை இயல்பாகப்பற்றி இருக்கும் பந்தபாசங்களை நீக்கும் இயல்புடையவரும், அனைத்து உயிர்களையும் தம்மிடம் இருந்து தோற்றுவிப்பவரும், வேதங்களையும், ஆகமங்களையும் வெளிப் படுத்தி, அருள்செய்தவருமாகிய விநாயகப்பெருமானின் திருவடி களை அன்புடன் போற்றுகின்றோம்.
- ❖ கண்களால் காணப்படும் உலகம் முழுவதும் நீக்கமற நிறைந்திருப்ப வரும், விருப்பு வெறுப்பு இல்லாதவரும்; நாம் செய்கின்ற செயல் களின் பலனை நமக்குத் தருபவரும்; களைபவருமான, முழுமுதற் பொருளான கணபதியை உவந்து, சரணடைந்து, போற்றுகின்றோம்.
- ❖ தீயில் விழுந்த பஞ்சுபோல, இடர்களை முழுவதுமாக நீக்குபவரும் தன்னை அன்புடன் தொடரும் உயிர்கள் அனைத்தையும் நற்கதிக்கு இட்டுச் செல்பவரும், எடுத்த செயல்களை எளிதாகவும், இனிதாகவும் நிறைவுசெய்து அருள்பவரும் ஆன ஒற்றைக்கொம்பன் விநாயகரின் திருவடிகளைச் சரணமாகப் பற்றுகின்றோம்.
- ❖ திருத்தலங்கள் தோறும் கோயில் கொண்டிருப்பவரும், கங்கை முதலான தீர்த்தங்களாகத் திகழ்பவரும், கருணை நிறைந்தவருமாகிய கணபதியின் திறத்தினைப் புகழ்ந்து, பாடித் திருவடிகளைச் சரண் அடைகிறோம்.

- உயிர்கள் செய்யும் வினையின் முதலாகவும், செய்யப்படும் பொருளாகவும், செய்வினையின் பயனாகவும், அந்தப் பயன் விளைவிக்கும் விளைவைப் பயன்பெறச் செய்பவனும், திகழ்கின்ற மெய்ப்பொருளான கணபதியின் திருவடிகளைச் சரணம் என்று அடைக்கலம் புகுகின்றோம்.

- வேதங்களாலும் அறியமுடியாதவரும்; வேதத்தின் முடிவாகத் திகழ்பவரும்; எங்கும் பரந்து விளங்கும் பரமானந்த வடிவமாக வீற்றருப்பவரும்; எண்குணங்களை உடையவரும் ஆகிய கணபதியின் திருவடிகளைச் சரணம் என்று பற்றுகின்றோம்.

- நிலத்தில் ஐந்து குணங்களாகவும்; நீரில் நான்கு குணங்களாகவும்; தீயில் மூன்று குணங்களாகவும்; காற்றில் இரண்டு தன்மைகளையுடையவனாகவும்; வானில் ஒன்றாகவும் திகழும் அண்ணல் கணபதியின் அன்புத் திருவடிகளை அடைக்கலமாகப் புகுகின்றோம்.

- யாராலும் அறிந்து கொள்ளமுடியாத பரம்பொருளாகவும் எல்லாவற்றையும் அறியச் செய்யும் இறைவனாகவும்; ஞானஅருள் வழங்கும் தலைவனாகவும் திகழும் கணபதியே, உன்னைச் சரணடைந்து போற்றுகின்றோம்.

மிகப்பெரிய யானையின்முகமுள்ள விநாயகர், மிகச் சிறிய பெருச்சாளியை (எலி) வாகனமாகக் கொண்டிருப்பது; அவரே எல்லாவற்றுக்கும் ஆதாரமாகவும், ஆதேயமாகவும் (தாங்குபவராகவும், தாங்கப்படுபவராகவும்) உள்ளார், என்பதை எடுத்துக்காட்டுகிறது. பெருச்சாளி இருளை விரும்பும். கீழறுத்துச் சென்று கேடு விளைவிக்கும். ஆதலின், அது அறியாமை அல்லது ஆணவமலத்தைக் குறிக்கிறது. எனவே, பெருச்சாளியைப் பிள்ளையார் தமது கால்கீழ்க் கொண்டிருத்தல்; அவர் அறியாமையையும், செருக்கையும் அடக்கி ஆட்கொள்பவர் என்பதைப் புலப்படுத்துகிறது.

நன்றி:
**“பெரியகடவுள்”,**
**சந்திரசேகரசர்மா**

# 14 விநாயகப் பெருமான் பற்றிய; அருட்தகவல்கள்:

- ❖ கணபதியை முதன்மையாகக்கொண்ட காணாபத்தியத்திற்கு ஆதாரமாக விளங்குகின்ற நூல்கள்; கணபதி உபநிடதம், ஹேரம்ப உபநிடதம் மற்றும் கணேசபுராணம், கணேசமான்மியம், முத்தலை புராணம் என்பனவும் கணேசகீதை, கணேசதந்திரம், கணேச கல்பம், விநாயக பரத்துவம், முதலிய தனிநூல்களும் ஆகும். திருவாவடு துறை கச்சியப்ப முனிவர், தமிழில் பாடியிருக்கிறார்.
- ❖ விஷ்ணு ஆலயங்களிலும், விநாயகர் வழிபாட்டிற்கு முதன்மை வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக, இந்துமக்கள் அனைவரும் தொழும் தெய்வங்களுள் கணபதியே முதலிடம் பெறுகிறார்.
- ❖ பௌத்தம், சமணம் ஆகிய புறச்சமயங்களைச் சேர்ந்தவர்களும் கணபதியை வணங்கி வழிபாடு செய்கின்றனர்.
- ❖ இந்திய நாட்டுக்கு வெளியேயுள்ள இலங்கை, நேபாளம், திபெத், பர்மா, மலாயா, சிங்கப்பூர், சீனா, யப்பான், யாவா, தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளிலும், புராதன காலத்திலிருந்து விநாயகர் வழிபாடு நடைபெற்று வருகின்றது.
- ❖ அண்மைக்காலத்தில், உலகம் முழுவதும் விநாயகர் வழிபாடு பரவிக் காணப்படுகின்றது.
- ❖ விநாயகர் வழிபாட்டினால் எடுத்த காரியங்களில் வெற்றியும், சித்தியும் பெற்றவர்கள் அநேகர் ஆவர்.
  - விநாயகரை வழிபட்டபின்பே, அன்னை பராசக்தி, பண்டாசுரன் என்ற கொடியவனைப், போரில் வென்றார்.
  - சிவபெருமான், விநாயகரை வழிபட்டபின்பே, திரிபுரிதகனம் செய்தார்.
  - முருகன், விநாயகரை வழிபட்டு அவரின் துணையினாலேயே, வள்ளிநாயகியாரைத் திருமணம் செய்தார்.
  - வேதவியாசர், விநாயகரை வணங்கி மகாபாரதத்தை தாம் பாடப் பாட எவ்வித இடையூறுமின்றி அவரைக்கொண்டே எழுதுவித்தார்.
  - ஔவையார் விநாயகருக்கு முதலில் காப்புச்செய்யுள் பாடி, முதல் வணக்கம் அவருக்குச் செலுத்திய பின்னரே தமது நூல்களை இயற்றும் வழக்கமுடையவர். விநாயகர்மீதும் நூல்கள், பாமாலை கள் இயற்றியுள்ளார். விநாயகர்மீது அளவற்றி பக்தி கொண்டவர். ஔவையார் திருக்கயிலை செல்வதற்குத் தமது துதிக்கையினால் தூக்கி அருள்புரிந்தார். ஔவையார் அருளிச்செய்த விநாயகர் அகவல் ஓர் அற்புதமான யோகநூல் ஆகும். அதில் குண்டலினி சக்தியை எழுப்பும் விதம் எளிய முறையில் கூறப்பட்டுள்ளது.
  - இராவணனுடைய கர்வத்தை அடக்கி, அவன் தம்முடன் இலங்கை க்குக் கொண்டு செல்லவிருந்த சிவலிங்கத்தை கோகர்ணம் என்னும் பதியில் நிலைக்கச் செய்தவர், பிள்ளையார்.

- அவ்வாறே, இராவணனின் தம்பி, விபீஷணன், இராமபிரானிட மிருந்து பரிசாகப்பெற்ற அரங்கநாதரின் திருவுருவச் சிலையை ஸ்ரீரங்கத்தில் நிலைக்கச் செய்தவர், பிள்ளையார்.
- அகத்தியருடைய கமண்டலத்திலிருந்து காவிரிநதி நீரைப் பெருகச் செய்தவர், பிள்ளையார்.
- நம்பியாண்டார்நம்பிக்கு அருள்புரிந்து தில்லைச் சிதம்பரத்தி லிருந்த தேவாரத், திருமுறைகளை உலகத்தவர் உய்யும் வண்ணம், வெளியுலகிற்குக் கொண்டுவர அருள்பாலித்தவர், விநாயகப்பெருமான். அதனால் திருமுறைகண்டமூர்த்தி என அழைக்கப்படுகிறார்.
- விநாயகர்; கஜமுகாசுரன் என்பவனைச் சங்காரம்செய்து, தேவர் களின் துயர் தீர்த்தவர். கஜமுகன், பெருச்சாளியாக உருமாற்றம் பெற்றபோது அதனைப் பிடித்துத் தமது வாகனமாகக் கொண்டார். கஜமுகாசுர சங்காரமூர்த்தி எனும் நாமத்தையும் பெற்றார்.
- மகாகணபதி, சித்தகணபதி, சக்திகணபதி, மோட்சகணபதி, வித்தியாகணபதி என இவ்வைந்து முகங்களோடு கூடிய கணபதிப் பெருமானைப், "பஞ்சமுக விநாயகர்" என்று அழைக்கின்றனர்.
- விநாயகப்பெருமான் ஐந்துமுகங்களோடும், ஐந்துகரங்களோடும் காணப்படுவதால் சக்தி தெய்வமாகவே விளங்குகிறார்.
- ஐந்து என்ற எண்ணில், சில சிறப்புக்கள் உண்டு. பஞ்சாட்சரம், பஞ்சமூர்த்திகள், பஞ்சபூதங்கள், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பஞ்சப்புலன்கள், பஞ்சகோசம், பஞ்செழுத்து மந்திரம், பஞ்சகிருத் தியங்கள், பஞ்சதளம், பஞ்சப்பிரமாணங்கள். இப்படியாக ஐந்தின் மகிமையோடு விளங்குபவர், பஞ்சமுக விநாயகர். "ஸ்ரீவித்யா கணபதி" வடிவம்; ஐந்தின் மகிமையோடு விளங்குகின்றது. சக்தியின் வாகனமான சிங்கத்தின்மீது, ஐந்துமுகங்களோடு காட்சிதருபவர் அருள்புரிபவர், சக்தி விநாயகர்.
- ஐந்து எண்கொண்ட, எல்லாப்பொருள்களிலும் சக்தியின் பரிமாணம் பரவியுள்ளமை பற்றிய, விபரம் தைத்ரீயோப உபநிடதத்தில் காணப்படுகிறது.
- விநாயகப்பெருமான் ஐந்து கரங்களுடன் ஐங்கரன் ஆகவும்; ஐந்து முகங்களோடு, பஞ்சமுகன் ஆகவும் இருப்பதால் சக்தி தெய்வ மாகவே விளங்குகிறார்.
- "ஓம் வக்கிர துண்டாய ஹூம்", என்பது விநாயகருக்குரிய எட்டு அட்சரமந்திரம் ஆகும். இந்த மந்திரத்தை மகாவிஷ்ணு உபாசனை செய்துதான் மதுகைடபர்களை வதம் செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. தேவேந்திரனும் கௌதம முனிவரின் சாபத்தினால், யோனியாக மாறிவிட்ட சாரீரத்தை, இந்த மந்திர உபாசனை செய்துதான் சாபவிமோசனம் பெற்றதாகக் கூறப்படுகிறது.
- முருகப்பெருமான் சடாட்சர மந்திர உபாசனையால் கணபதிப் பெருமானின் அருளைப்பெற்று, சூரனின் தம்பியாகிய தாரகா சுரனை வதம் செய்ததாகக் கந்தபுராணம் கூறுகிறது.

- வாமனாவதாரம் எடுத்த விஷ்ணு, விநாயகருக்குரிய சடாட்சர மந்திர உபாசனையால், மகாபலியை அடக்கியதாகப் புராணச் செய்தி கூறுகிறது.
- வக்கிரதுண்டவிநாயகர், காசியில் விசுவநாதர் சந்நிதிக்கு எதிரே, "டுண்டிகணபதி", என்ற பெயரில் விளங்குகிறார்.

❖ வேதஆகமங்களில் கணபதிப் பெருமானைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. காரணாகமத்தில் பதினாறுவகைக் கணபதிகள் பற்றியும் பஞ்சபக்த விநாயகரையும், அவரது பஞ்சமுக தியானங்களும், பிரதிஷ்டையும் சொல்லப்பட்டுள்ளது. விநாயகபுராணம், விநாயக பரத்துவம் ஆகிய நூல்களில், விநாயகப்பெருமான் தம்மை வழிபடும் அடியார்களுக்குக் காட்சி கொடுத்துத், திருவருள் புரிந்தமையும்; எடுத்த மூர்த்தங்களின் வரலாறும், திருவருட்திறனும் கூறப்பட்டுள்ளன.

❖ தேவாரமுதலிகள், நக்கீரர், ஔவையார், ஆதிசங்கரர், முதலானோரும் விநாயகர் வழிபாடு செய்து அருள் பெற்றவர்கள்.

## புராண வரலாறுகள் காட்டும் விநாயகர் மகத்துவம்:

❖ சிவபெருமான் திரிபுர அசுரர்களைச் சங்காரம் செய்தமை விநாய கரின் திருவருட்திறத்தினால் என்பதை ஹேரம்ப உபநிடதம், மற்றும் கணேசபுராணம், கந்தபுராணம் ஆகிய நூல்கள் கூறுகின்றன.

❖ பார்வதி தேவியும், பண்டாசுரன் என்னும் கொடிய அசுரனுடன் போர் செய்து வென்றமை விநாயகரை வழிபாடு செய்தமையால் என வல்லபகணபதி மகாத்மியம் கூறுகிறது.

❖ அருணகிரிநாதர் பாடிய "கைத்தல நிறைகனி", எனத் தொடங்கும், விக்னேஸ்வர துதியில் சிவனின் திரிபுர சம்ஹாரம், முருகன் வள்ளி திருமணம் இரண்டிலும் விநாயகருக்குரிய பங்கினைக் குறிப்பிட்டிருக் கிறார்.

❖ சூரியனும் கணபதியை வணங்கி அருள்பெற்றுள்ளார்.

❖ தம்மை உள்ளன்புடன் வணங்கி வழிபாடு செய்பவர்கள் தேவர் களாயினும், மனிதர்களாயினும் அவர்களுக்கு நல்ல வரங்களை அருள்பவர் விநாயகப்பெருமான்.

## திருமுறைகளில் விநாயகப் பெருமானின் இடம்:

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி ஆகிய மூவரும், சிவபெருமானையே முழுமுதற்கடவுளாகக்கொண்டு, அவர்மீது தேவாரப் பாடல்களைப் பாடியவர்கள். எனினும், சிவனுடன் தொடர்புபடுத்தி, விநாயகரைப் பற்றியும் ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளனர்.

பிடியதன் உரு உமைகொள..." என்று தொடங்கும் தேவாரப் பாடலில், விநாயகப்பெருமான் எப்படித் தோன்றினார். என்ற விவரங் களைச் சம்பந்தப்பெருமான் குறிப்பிடுகின்றார். "கரியின் மாமுகம் உடைய கணபதி" என்று விநாயகரை விளிக்கிறார்., மற்றொரு பாடலில் சிவபெருமானைக் "கணபதிதாதை" என்று குறிப்பிடுகிறார்.

திருநாவுக்கரசர் தேவாரப் பாடல்களில்; விநாயகர் பற்றிய செய்தி கள் பலவற்றைக் காணலாம். "ஆனைமுகன்", "கடமா முகத்தினான்";

"வாரணன்"; "கணபதி"; "வேழமுகத்தவன்" "விநாயகன்", எனத் திருநாவுக் கரசர் தேவாரப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளமை நோக்கற்பாலது.

**"கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்**
**கயாசுரனை அவனால் கொல்வித்தார் போலும்"**

இப்பாடலில் விநாயகர் தோற்றத்திற்கான காரணத்தை, நாவுக்கரசர் சுட்டிக் காட்டுகிறார்.

விநாயகப்பெருமானின் உறைவிடம் பற்றிக் கூறவந்த நாவுக்கரசர், "பற்பல காமத்தராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே கலமலக்கிட்டுத் திரியும் கணபதி", என்று குறிப்பிட்டு, தம்மை நினைந்து வணங்குபவர் களின் மனத்தில், விநாயகர் உறைவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

"ஆனை முதற்கு அப்பன்", எனவும், "தண் கடமா முகத்தினாற்குத் தாதை காண்" எனவும், சிவபெருமானை அப்பர் பெருமான் போற்றுகின்றார்.

திருவாய்மூரில், திருநாவுக்கரசருக்குச் சிவபெருமான் காட்சியளித்த போது, "விநாயகனும் தோன்றக் கண்டேன்" என்று நாவுக்கரசர் குறிப்பிடுவதை நோக்கும்போது, விநாயகப்பெருமான் திருக்காட்சியை முதன்முதல், கண்ணாரக்கண்டு, நமக்குக் காட்டியவர், நாவுக்கரசரே என்பதை நாம் உய்த்துணரலாம்.

சுந்தரர் தேவாரங்களில் கணபதியைப் பற்றிய குறிப்பு இரண்டு பாடல்களில் இடம்பெறுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். "எண்ணிலி யுண் பெருவயிறன் கணபதி ஒன்று அறியான்"; "கணபதியேல் வயிறு உதாரி" என்ற பாடல் அடிகளே அவையாகும். எண்ணில் அடங்காத பொருள்களை உள்ளடக்கியவர், விநாயகர் என்பதை அவரின் பெரு வயிறு காட்டுகிறது.

பனினொராந் திருமுறையில், விநாயகனுக்கு, தனித்தனியாக நூல்கள் இடம்பெற்றுள்ளன. இத்திருமுறையில் கபிலதேவநாயனார் இயற்றிய மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை அதிராஅடிகள் இயற்றிய மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை; நம்பியாண்டார்நம்பி இயற்றிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை, ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நூல்கள் விநாயகப்பெருமானையே முழு முதற்பொருளாகக் கொண்டு போற்றுகின்றன. விநாயகர் முதன்மைத் துவம், பரத்துவம், மகத்துவம், இறைத்துவம் பற்றியெல்லாம் சிறப்பாக விரித்துரைக்கின்றன.

பன்னிரண்டாந் திருமுறையான, சேக்கிழார் பெரியபுராணத்தில், விநாயகர் தொடர்பான செய்திகள் அதிகம் இல்லை. பின்வரும் பாடல், பாயிரத்தில் வாழ்த்துப்பாடல்களுள் ஒன்றாக, இடம்பெற்றுள்ளது.

**எடுக்கும் மாக்கதை இன் தமிழ்ச் செய்யுளாய்**
**நடக்கும் மேன்மை நமக்கு அருள் செய்திடத்**
**தடக்கை ஐந்து உடைத்தாழ் செவிநீள் முடிக்**
**கடக் களிற்றை கருத்துள் இருத்துவாம்.**

## வைணவ சமய விநாயகர்:

வைணவ ஆலயங்களில், விநாயகர், "தும்பிக்கை ஆழ்வார்" என்னும் திருநாமத்துடன் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான திருமங்கையாழ்வார்,

"நெற்றி மேற்கண்ணானும் நிறைமொழிவாய் நான்முகனும் நீண்ட நால்வாய் ஒற்றைக்கை வெண்பகட்டின ஒருவனையும் உள்ளிட்ட அமர ரோடும்", என்று விநாயகர் பற்றிப், பெரிய திருமொழிப்பாசுரத்தில், குறிப் பிடுகிறார்.

**எந்தெந்த மரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் விநாயகப்பெருமானை வழிபடும் அடியவர்களுக்கு என்னென்ன பலன் கிட்டும் என்பவற்றைப் பற்றிய அருட்தகவல் கீழே தரப்பட்டுள்ளன:**

(1) **வன்னிமரப்பிள்ளையார்:**
அவிட்ட நட்சத்திரத் தினத்தில், வன்னி விநாயகரை நெற்பொரியினால், அர்ச்சனை செய்து வழிபட்டால், திருமணம் கைகூடும்.

(2) **புன்னைமரப்பிள்ளையார்:**
ஆயிலிய நட்சத்திரத் தினத்தில், விநாயகருக்கு இளநீர் அபிஷேகம் செய்து, வஸ்திரங்கள் அணிவித்துப் பின் ஏழைகள் மற்றும் நோயாளிகளுக்கு உணவு, உடைகள் தானம் செய்து, விநாயகரை வழிபட்டால், கணவன், மனைவி தம்பதிகளுக்கிடையே உள்ள மனக்கசப்பு நீங்கும்

(3) **மகிழமரத்தடிப் பிள்ளையார்:**
அனுஷ நட்சத்திரத்தன்று இந்தப் பிள்ளையாருக்கு, மாதுளம்பழ முத்துக்களால், அபிஷேகம் செய்தால் பணிக்காகக் குடும்பத்தை விட்டுப்பிரிந்து சென்றிருப்பவர்கள் நலமுடன் இருப்பர்.

(4) **மாமரத்தடிப் பிள்ளையார்:**
கேட்டை நட்சத்திரத்தில், இந்தப் பிள்ளையாருக்கு, விபூதிக் காப்பிட்டு, ஏழைச் சுமங்கலிப் பெண்களுக்கு உடை, உணவு அளித்து வந்தால் கோபம், பொறாமை, பகைமை நீங்கிப், பாதிக்கப்பட்ட வியாபாரம், சீர்பெறும்.

(5) **வேப்பமரத்தடி விநாயகர்:**
உத்திரட்டாதி நட்சத்திர நாளில் தீபம் ஏற்றி இவரை வழிபட்டால், கன்னிப் பெண்களுக்கு, மனம்போல மாங்கல்ய பாக்கியம் கிட்டும்.

(6) **ஆலமரத்தடிப்பிள்ளையார்/ஆலடி விநாயகர்:**
ஆலமரத்தின் கீழ், வடக்கு நோக்கி வீற்றிருக்கும், விநாயகருக்கு மகம் நட்சத்திரத் தினத்தன்று, சித்திரான்னங்களை நிவேதனம் செய்து தானம் அளித்தால் கடுமையான நோயிலிருந்து நிவாரணம் பெறலாம்.

(7) **வில்வமரத்தடிப் பிள்ளையார்:**
சித்திரை நட்சத்திரத்தினத்தன்று, இவ்விநாயகருக்கு அர்ச்சனை செய்து, வழிபட்டு, ஏழைகளுக்கு முடிந்தளவு தானம் அளித்து வில்வ மரத்தைச் சுற்றிவந்தால் பிரிந்த தம்பதியர், மீளவும் ஒன்று சேர்வர்.

(8) **அரசமரத்தடிப்பிள்ளையார்:**
பூச நட்சத்திரத்தன்று, இவ்விநாயகருக்கு அன்னாபிஷேகம் செய்து, வழிபட்டால், விளைபொருள்கள் மற்றும் பூமியால் இலாபம் கூடும்.

நன்றி: **நித்ரா தமிழ்நாட்காட்டி வழியாகப் பகிரப்பட்டது.**

## விநாயகர் வழிபாட்டு முறைகளில், தோப்புக்கர்ணம்

இந்துக்களின் கடவுள் வழிபாட்டு முறைகள்; அறிவியல் பூர்வ மானவை. உடல்நலம், மனநலம், உயிர்நலம் என்பவற்றின் விருத்திக்கு உதவுபவை. யோகாசனத்தின் அத்தனை நன்மைகளையும், பயன்களை யும், அவை நல்குகின்றன. நம் வழிபாட்டு முறைகளுடன் வாழ்வியல் தத்துவங்களும், செயல்முறைகளும் இணைக்கப்பட்டிருத்தல்தான் அவற்றின் சிறப்புக்குக் காரணம் ஆகும்.

விநாயகர் வழிபாட்டு முறைகளில், தோப்புக்கர்ணம் போடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. தோப்புக்கரணம், முறையாகப் போடுவது எப்படி என்பதை அறிந்து கொள்வது பயனுள்ளது.

## தோப்புக்கர்ணம் போடும் படிமுறை:

1. முதலில், நம்முடைய தோள்பட்டை அளவுக்கு, இருகால்களையும் விரித்து வைத்து, நிற்க வேண்டும்.
2. இடது கையால், வலது காது மடலையும்; வலது கையால், இடது காது மடலையும் பிடிக்க வேண்டும்.
3. கட்டை விரல் வெளியேயும், ஆள்காட்டி விரல் உட்பக்கமும் இருக்க வேண்டும்.
4. வலது கை, இடது கையின்மேல் இருக்க வேண்டியது கட்டாயமாகும்.
5. தலையை நேராக வைத்து, மூச்சுக் காற்றை உள்ளிழுக்க வேண்டும்.
6. நம்மால் எந்த அளவு சிரமம் இல்லாமல், தாழ்ந்து குந்தியிருக்க முடியுமோ அந்த அளவு தாழ்ந்து பின் எழுந்திருக்க வேண்டும்.
7. மூச்சுக்காற்றை வெளியிட்டவாறே, அப்படியே எழுந்து நிற்க வேண்டும்.

(தினமும் ஐந்து நிமிடங்கள்வரை தொடர்ந்து இவ்வாறு தோப்புக்கர்ணம் போட்டு வந்தால், அதுவே சிறந்த உடற்பயிற்சியாக அமைகின்றது. விநாயகப்பெருமானை மனத்தில் நினைந்த வண்ணம் வீட்டிலோ ஆலயத்தில், விநாயகர் சந்நிதியின் முன்போ, தோப்புக்கர்ணம் போடலாம்.)

## ஆன்மீக ரீதியான விளக்கம்:

முன்னொரு காலத்தில் கயமுகாசுரன் என்னும் அசுரன் ஒருவன், அசுரர்களின் அரசனாகப் பரிபாலனம் செய்து வந்தான். அவன், சிவ பெருமானை நோக்கிக், கடுந்தவம் புரிந்தான். சிவபெருமான், கயமுகன் முன்தோன்றி, அவன் கேட்ட வரங்களை வழங்கினார். அவன், தான்பெற்ற வரத்தின் வலிமையால் தேவர்களை அடிமைப்படுத்திக் கொடுங்கோலாட்சி செய்து வந்தான். அவர்களுக்குப் பலவிதமான கொடுமைகள் செய்து அவர்களை வருத்தினான். தேவர்கள், தினமும் வந்து, தன்முன் தோப்புக்கர்ணம் போடவேண்டும் என்று கட்டளை பிறப்பித்தான். அவ்வாறு செய்யாத தேவர்களைக், கடுமையாகத் தண்டித்தான்.

தேவர்கள் வேறுவழியின்றிக் கயமுகாசுரனின் கட்டளைக்குப் பணிந்து, அவன்முன் தோப்புக்கர்ணம் போட்டு வந்தனர். அவனின் கொடுமைகளைத் தாங்கிக்கொள்ள முடியாமல், விநாயகப்பெருமானிடம் சென்று முறையிட்டனர். தேவர்களின் பிரார்த்தனையில், மனம் இரங்கிய விநாயகப்பெருமான், கயமுகாசுரனைச் சங்காரம்செய்யத் திருவுளங் கொண்டு போருக்குப் புறப்பட்டார். விநாயகரையும், தனக்குமுன் தோப்புக்கர்ணம் போடும்படி ஆணையிட்டான். மிகுந்த கோபம் கொண்ட விநாயகர், தனது தந்தத்தால் அவனைச் சங்காரம் செய்தார்.

கயமுகாசுரன் இறக்கவில்லை; பெருச்சாளி எலியாக வடிவமெடுத்தான். விநாயகர் பெருச்சாளியைத் தமது வாகனம் ஆக்கிக் கொண்டார். கயமுகாசுரனைச் சங்கரித்துத் தம்மைக் காப்பாற்றியமைக்கு, நன்றி தெரிவிக்கும் வகையில், தேவர்கள் விநாயகப்பெருமானுக்குத் தோப்புக் கர்ணம் போட்டு, மரியாதை செய்தனர். அன்று தொடக்கம், விநாயகருக்குத் தோப்புக்கர்ணம் இட்டு வணங்கும் முறை ஏற்பட்டது. இற்றைவரை தொடர்கிறது.

## தோப்புக்கர்ணம் - விஞ்ஞான விளக்கம்:

தோப்புக்கர்ணம் போடும்போது, நமது காது மடல்களை இறுகப் பற்றிப்பிடித்துக் கொள்கிறோம். காது மடல்களின் அடிப்பாகத்தில், உடலின் அனைத்து உறுப்புகளின் செயல்பாடுகளுக்கும் ஒரு தூண்டுதல் கிடைக்கிறது.

இருந்து அல்லது தாழ்ந்து எழும்போது, காலில் உள்ள "சோலியஸ்" எனும் தசை, இயங்கத் தொடங்குகிறது. சோலியஸ் தசையால், உடல் முழுவதும் குருதி ஓட்டம் சீராகின்றது. இதயத்தின் தசைகளைப் போன்றே, இது தொழிற்படுகிறது. இதன்மூலம், நமது தண்டுவடத்தின் அடியிலமைந்துள்ள மூலாதாரத்தில், சக்தி உருவாகும் நிலை ஏற்படுகிறது. யோகப்பயிற்சியிலும் மூலாதாரம் முக்கியத்துவம் பெறுகிறது.

அமெரிக்கா, லொஸ் ஏஞ்செல்ஸ் நகரைச் சேர்ந்த உடற்கூற்று வைத்தியர், எரிக் றொபின்ஸ் என்பவரின் ஆய்வின்படி, தோப்புக்கர்ணப் பயிற்சியால் மூளையிலுள்ள நரம்புக்கலங்கள் சக்தி பெறுகின்றன, எனப்படுகிறது. பரீட்சையில் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற, பின் தங்கிய மாணவர்கள், தோப்புக்கர்ணப் பயிற்சியின்பின் அதிக மதிப்பெண்களைப் பெற்றதாகக் கூறுகிறார். நமது வழக்கப்படி, மாணவர்கள், பரீட்சை எழுதச் செல்வதற்கு முன்னர், விநாயகப்பெருமானைத் தரிசிக்கச் சென்று, தோப்புக்கர்ணம் போடுவதும்; அவ்வாறு செய்யுமாறு பெற்றோரும், ஆசிரியர்களும் அறிவுரை கூறுவதும், ஏன் என்பதற்கான காரணம், வெறுமனே ஒரு சம்பிரதாயம் அல்ல. அறிவுபூர்வமானதும்கூட, என்பதை அறியும்போது இந்து கலாசாரத்தின் மகிமையை, உணர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இந்துமதக் கலாசாரம், நம்பிக்கைகள், வழிபாடுகள் அனைத்தும் அர்த்தமுள்ளவை, பயனுள்ளவை, வாழ்விப்பன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

யேல் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த நரம்பியல் நிபுணர், யூஜினியஸ் அங், என்பவர், இடது கையால் தோப்புக்கரணம் போடுவதால், அக்கு பஞ்சர் புள்ளிகள் தூண்டப்படுவதுடன், மூளைக்கலங்களும் சக்திபெறுவ தாக ஆய்வுமூலம் கண்டுபிடித்துள்ளார்.

தோப்புக்கர்ணம், உலக நாடுகளில் "சூப்பர் பிரெய்ன் யோகா", என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. நம் ஆன்றோர், தினசரி விநாயகர் வழிபாட்டின், முதல் அங்கமாக இதை விதித்துள்ளனர். இற்றைவரை, அவ் வணக்கமுறை தொடர்கிறது. இதன்மூலம் நாம் விநாயகப்பெருமானின் அருளையும், அனுக்கிரகத்தையும் பெறுகிறோம். அதேவேளை உடல் நலம், மனநலம் ஆகியவற்றையும் நன்கு பேணுவதற்கு ஏதுவாகத், தோப்புக்கர்ணம் அமைவது, நமக்கு வரப்பிரசாதம் ஆகும்.

# 15 விநாயகரின் ஆறுபடை வீடுகள்:

முருகப்பெருமானுக்கு ஆறுபடை வீடுகள் இருப்பது யாவரும் அறிந்ததே. அவ்வாறே, விநாயகப்பெருமானுக்கும் ஆறுபடை வீடுகள் உள்ளன. அவையாவன:

**(1) திருவண்ணாமலை படைவீடு:**

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலய நுழைவாயிலுக்கு அருகாமையில் உள்ளே வடக்கு நோக்கிய சந்நிதியில், கோயில் கொண்டு, எழுந்தருளி, அருள்பாலிக்கிறார், வினை தீர்க்கும் விநாயகர். இவ்வாலயத்தின் பிரகாரங்களில், இராஜ கோபுர விநாயகர், சிவகங்கைத் தீர்த்த விநாயகர், வன்னிமர விநாயகர், ஆணை திறைகொண்ட விநாயகர், ஆலமர விநாயகர், விஜய விநாயகர் எனப்பல விநாயகர் சந்நிதிகள் இருப்பினும் இந்த வினை தீர்க்கும் விநாயகர் தொன்மைச் சிறப்பு வாய்ந்தவராகப் போற்றி வழிபடப்பட்டு வருகிறார். அத்துடன், விநாயகரின் ஆறுபடை வீடுகளில் முதலாவது படைவீடு ஆகக் கொள்ளப்படும் சிறப்பையும், வினைதீர்க்கும் விநாயகர் சந்நிதி பெறுகிறது.

விவேகசிந்தாமணி என்னும் நூலில் இடம்பெற்றுள்ள;

**"அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றிற் பிறந்த**
**தொல்லைபோம்; போகாத்துயரம்போம்; நல்ல**
**குணம் அதிகமாம் அருணை கோபுரத்துள் மேவும்**
**கணபதியைக் கைதொழுதக் கால்."** - எனும் பாடல் இதனை உணர்த்துகிறது.

**(2) விருத்தாசலம் படைவீடு:**

பிள்ளையாரின் ஆறுபடை வீடுகளில் இரண்டாவது ஆக அமையப் பெற்றது, விருத்தாசலம் கோயில் நுழைவுவாயில் அருகேயுள்ள ஆழத்துப் பிள்ளையார். விருத்தாசலத்தில் புகழ்பெற்ற பழமலை நாதர் திருக்கோயிலில், இவர் அமர்ந்து ஆட்சி புரிகிறார். முதல் வெளிப்பிரகாரத்தில், சுமார் பதினெட்டு அடி ஆழத்தில், அமர்ந் திருப்பவரே ஆழத்துப்பிள்ளையார். படிகளில் இறங்கி இவரை வழிபடலாம். கல்வியும், செல்வமும் அளிக்கும் இந்த விநாயகர், ஆயிரம் ஆண்டு பழமை கொண்டவர். சிவன் ஆலயத்தில் இருந் தாலும், இவருக்குத் தனிக் கொடிமரமும், தனியான விழாவும் நடத் தப்படுகிறது. எண்ணிய யாவும் அருளும், இந்த "ஆழத்துப் பிள்ளையார், இரண்டாவது படைவீட்டு நாயகர் ஆவார்.

**(3) திருக்கடவூர் படைவீடு:**

விநாயகரின் படைவீடுகளில் மூன்றாவதாக இருப்பது திருக்கடவூர் கள்ளவாரணப்பிள்ளையார். திருக்கடவூர் அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் சிவன் சந்நிதியின் நந்திக்கு வலதுபுறம், இந்தப் பிள்ளையார் சந்நிதி அமைந்துள்ளது. இது பிற்காலச் சோழர்களால் கட்டப்பட்ட சந்நிதியாகும். அபிராமியைத் தொழுது அருள்பெற்ற அபிராமிப்பட்டர், இந்த விநாயகரை வணங்கிப் பாடிய திருக்கடவூர் கள்ளவிநாயகர்பதிகம், இவரது சிறப்பினைக் கூறும். கள்ள வாரணப்பிள்ளையார் தனது துதிக்கையில் அமிர்தகலசம் ஏந்தியபடி காட்சியளிக்கிறார். அமிர்தகலசம் பெற்ற தேவர்கள், தம்மை வழிபட

மறந்ததால், அமிர்தகலசத்தை இவர் மறைத்து விளையாடினார், என்பதால்தான் கள்ளவாரணப் பிள்ளையார் எனப்படுகிறார். செல்வ வளம், கலியாணவரம், குழந்தைவரம், கல்வி கேள்விகளில் சிறந்த ஞானம் போன்றவற்றை அருளும் கருணாமூர்த்தியாக, கள்ள வாரணப்பிள்ளையார் காட்சியளிக்கிறார்.

**(4) மதுரை படைவீடு:**

நான்காவது படைவீடு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் நுழைவு மண்டபத்தில் வீற்றிருக்கும் சித்திவிநாயகர் சந்நிதி. மீனாட்சி அம்மன் சந்நிதியின் நுழைவு வாயிலின் இடதுபுறமாக இந்தக் கணபதி கம்பீரமாகக் காட்சி அளிக்கிறார். மாணிக்கவாசகப் பெருமான், பாண்டிய மன்னன் விருப்பப்படி, குதிரை வாங்கச் செல்கையில் இந்தச்சித்திவிநாயகரை வணங்கிவிட்டுச் சென்றதாகத் திருவிளையாடல் புராணம் கூறுகிறது. இதனால் இந்த விநாயகர், ஆயிரம் ஆண்டுகள் பழைமையானவர் என்று அறியலாம். சகல காரியங்களிலும் வெற்றியளிக்கும் சித்திவிநாயகராக, இவர் அருளாட்சி செய்கிறார். இவரை வணங்கினால் புகழும், பெருமையும் சேரும். அவப்பெயர் நீங்கும்.

**(5) காசிபடை வீடு (அல்லது பிள்ளையார் பட்டி படைவீடு)**

விநாயகரின் ஐந்தாவது படைவீடு, காசியில் இருக்கும் துண்டி ராஜகணபதி சந்நிதி. காசி மஹாத்மியம் என்ற நூலைப் பாடிப் பரவசப்படும் கணபதி இவர். காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு முன்பு, துண்டிகணபதியின் ஆலயம் உள்ளது. சிறிய கோயில் என்றாலும் புகழ்பெற்று உள்ளது. சிறிய தெருவில் கடைகளுக்கு இடையே கணபதி அமர்ந்த நிலையில் செந்தூர நிறத்தில் காணப்படுகிறார். இவருக்குச் செந்தூர வர்ணத்தில், குங்கும அபிஷேகம் செய்வதால், இப்படிக் காட்சியளிக்கிறார். பக்தர்கள் "துண்டி மகராஜ்" என்று பரவசத்தோடு அழைக்கிறார்கள். காசிக்கு வருபவர்கள். இந்தக் கணபதியிடம் உத்தரவு பெறாமல் சிவனை வணங்கவோ, ஊரைவிட்டுச் செல்லவோ கூடாது, என்பது மரபு. ஞானத்தின் திருஉருவான இவர், தீட்சாகணபதியாக இருந்து, ஞானத்தைப் பக்தர்களுக்கு வழங்குகிறார். காசிக்குச்சென்று, துண்டிப்பிள்ளையாரை வணங்க முடியாதவர்கள், பிள்ளையார் பட்டிகணபதியை வணங்கி, அதே அருளைப் பெறலாம் என்று ஆன்றோர்கள் சொல்கிறார்கள்.

**(6) திருநாரையூர் படைவீடு:**


விநாயகரின் ஆறாவது படைவீடாக இருப்பது, திருநாரையூர். இந்தத் தலத்தில் இருக்கும் புகழ்பெற்ற, பொள்ளாப்பிள்ளையார் சந்நிதி, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவில் அருகே உள்ள திருநாரையூரில், ஆறாவது படைவீடாகத் திகழ்கிறது. திருநாரையூர் சவுந்தர்யேஸ்வரர் ஆலயத்தின் இடப்பக்கம் உள்ள சந்நிதியில் அருளும் பிள்ளையார், உளிகொண்டு செதுக்கப்படாதவர் என்பதால் பொள்ளாப்பிள்ளையார் என்று போற்றி வணங்கப் பெறுகிறார். நம்பியாண்டார்நம்பிமூலம், இராஜராஜசோழனுக்குத் தேவாரத் திருமுறைகள் கிடைக்கச் செய்தவர், இந்தப் பிள்ளையார்தான். இவரை வணங்கிட, கல்வியும், ஞானமும் மேம்படும் என்பது ஐதீகம்.

நன்றி: **VIKATAN விகடன் இணையதளம்**

# பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்



கோபுர வாயில்



ஸ்தம்ப மண்டபம்



மூலாலய மூர்த்தி



ஸ்ரீ முருகன் சந்நிதி



தற்பாரண்ய புஷ்கரணி







மூலாலயம் பண்டிகை



ஸ்ரீ சந்தான கோபாலர் சந்நிதி



வசந்த மண்டபம்



எழுந்தருளி மூர்த்தி



ஸ்ரீ பூதவராயர்

## 16 சாவகச்சேரி, கல்வயல், பெருங்குளம் அருள்மிகு அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம் வரலாற்றுப் பின்னணி

சிவபூமி என்று அழைக்கப்படுகின்ற, இலங்கைத் திருநாட்டில் அதன் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரிவில் சாவகச்சேரி நகர எல்லைக்குள் நிலவளமும், நீர்வளமும் இயற்கை எழிலும், செழிப்பும் கொண்டுள்ளதும்; சைவப்பண்பாடு, சைவ ஒழுக்கநெறிகள் ஆகியவற்றைத் தம் வாழ்க்கையில் இறுக்கமாகக் கடைப்பிடித்து, அவற்றின் நலம் ஓம்பி; பரம்பரை, பரம்பரையாக வாழ்ந்து வருகின்ற, சான்றோர் பெருமக்கள் நிறைந்ததுமான திருமிகு ஊர் கல்வயல் ஆகும்.

இங்கு வாழும் மக்கள் விநாகப்பெருமான்மீது அளவுகடந்த பக்தி பூண்டவர்கள். வேண்டுவார், வேண்டுவன யாவற்றையும், ஈய்ந்து அருளும் சக்தியும், அருட்கடாட்சமும் மிக்க பெருந்தெய்வம் விநாயகர். மக்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் விக்கினங்களை, நீக்கியருள்பவர். எக்கருமத்தைத் தொடங்கும்போதும், பிள்ளையாருக்கு, முதல்வணக்கம் செலுத்தியே, ஆரம்பித்து நடத்துவது, இவ்வூர் மக்களின் வழமையாகும்.

கல்வயல் கிராமத்தின் நாலாபுறத்திலும், பிள்ளையார் ஆலயங்கள், உள்ளன. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"; "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" ஆகிய ஔவையார் திருவாக்குகளுக் கிணங்க முற்காலத்தில் இவ்வூரில் வாழ்ந்த ஆன்றோர்கள்; பிள்ளையார் கோயில்களை அமைத்து, வழிபாடு செய்து வந்தார்கள். நிறைந்த அருளைப் பெற்றார்கள். அவர்கள் காட்டிய ஆன்மீக வழியில், அவர்கள் பரம்பரையினரும் பிள்ளையார் கோயில்களைப் புனரமைத்து; நித்திய, நைமித்தியப் பூசை வழிபாடுகளைத் தவறாது செய்து அருள்பெற்று தம் வாழ்க்கையை இனிது நடாத்தி வருகிறார்கள்.

பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம் வேதவனப் பிள்ளையார் கோயில்; புலுட்டையன் பிள்ளையார் கோயில்; சித்தன் மாவடிப் பிள்ளையார் கோயில்; விளைவேலி மருதடி விநாயகர் ஆலயம் என்பன கல்வயல் கிராமத்தில் அமைந்துள்ள, பஞ்சஸ்தலங்கள் ஆகும். அவற்றுள், பெருங்குளம் விநாயகர் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்தது மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக்களைக் கொண்டது இவ்வாலயம். இவ்வூர் மக்களின் வாழ்க்கை நலம் இவ்வாலயங்களுடன் இணைந்திருப்பதால் அவர்கள் ஆன்மீக வளமும், ஒழுக்கத்தில் மேன்மை யும் பெற்றுத் திகழ்கின்றனர். நம்பிக்கையே பலம் என்பது தெளிவு.

பெருங்குளம் பிள்ளையார் ஆலயத்தின் ஆரம்ப காலத்தைச், சரியாக வரையறையிட்டுக் கூறுவதற்குச் சான்றாதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை. எனினும், இவ்வாலயத் தொன்மைச் சிறப்புப்பற்றிச், செவிவழிச் செய்திகள் உள்ளன. அதன்படி, ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட வாழ்ந்த கனகசிங்க முதலியார் என்னும் பெரியார் இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள விநாயகப்பெருமானை வழிபட்டு, அருள்பெற்று ஆலயபரிபாலனம் செய்தமைபற்றி அறிய முடிகிறது.

விநாயகப்பெருமான், ஓர் ஆலமர நிழலின்கீழ், எழுந்தருளி யிருந்ததாகவும்; அந்த ஆலமரம், காணியின் கிழக்குப் பக்கமாகக் காணப் பட்டதாகவும் கூறப்படுகிறது. ஆலமரம் நீண்டகாலமாக இருந்ததால் "ஆலடி வளவு" என்ற பெயர், வழங்கலாயிற்று. அதன் காரணமாக, "ஆலடி வளவு, அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்", என்றும் பிற்காலத்தில், "கல்வயல் பெருங்குளம் பிள்ளையார்" என்றும் அழைக்கப்படலாயிற்று.

கனகசிங்க முதலியாரைத் தொடர்ந்து தவத்தர்தம்பிரான் என அழைக்கப்பட்டவரும், விநாயகப்பெருமான்மீது எல்லையற்ற பக்தி பூண்டவருமான, பெரியார் ஒருவர் ஆலமரத்தடியில் நிட்டைகூடியும் அங்கு வீற்றிருந்த விநாயகப்பெருமானுக்குப் பூசை, ஆராதனை முதலிய நித்திய கருமங்களை ஆற்றியும், கோயிலைப் பராமரித்தும், திருப்பணிகள் செய்தும் வாழ்ந்து வந்தார். ஆலடி வளவின் அயலில் உள்ள ஐம்பது பரப்பளவிலான காணியை விலைக்குப் பெற்று, அங்கு ஒரு தோட்டம் அமைத்தார். அதனால், இத்தோட்டம் "தம்பிரான் தோட்டம்", என அழைக்கப்படலாயிற்று. அவற்றுடன் காணி. நிலங்களை யும் கொள்வனவு செய்து ஆலயத்திற்கு மானியமாக வழங்கி நித்திய பூசைகளுக்குத் தடங்கல் ஏற்படாமல் வழிசெய்தமை குறிப்பிடத்தக்கது.

தவத்தர்தம்பிரான் அவர்களின்பின், இற்றைக்கு ஏறத்தாழ நூற்றைம்பது வருடங்களுக்குமுன், சாவகச்சேரியைச் சேர்ந்த, கந்தர் உடையார் என்பவரின் மகன் கார்த்திகேசு உடையார் விநாயகப் பெருமானுக்குக் கற்கோயில் அமைத்து வேறு நிலபுலங்களையும் மானியமாக உதவியதாக, வரலாற்றுக் குறிப்பு உள்ளது.

பின்னர், கார்த்திகேசு உடையாரின் மகன் கணபதிப்பிள்ளை ஆலய பரிபாலனப் பொறுப்பை ஏற்றுச், செங்கல் கட்டிடத்தை அகற்றிவிட்டு, வைரக்கல் கொண்டு ஆலயத் திருப்பணிகளைச் செப்பனிட்டார். அத்தோடு மண்டபங்கள் மற்றும் உள்வீதி, புறவீதிகளையும் அமைத்து, ஆலயத்தின் தோற்றத்தை அழகுமிளிரச் செய்தார்கள். அத்துடன் கும்பாபிஷேகமும் நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, நித்திய நைமித்தியப் பூசைகட்கும் ஏற்பாடுகளாயின.

கணபதிப்பிள்ளை அவர்களுக்குப் பின்னர் அவரது பாரியார், திருமதி பகவதிப்பிள்ளை அம்மையார், இவ்வாலய பரிபாலனப் பொறுப்பை ஏற்று, கோபுரவாயில், சுற்றுமதில் திருப்பணி வேலைகள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்தார். இவருக்குப் பிற்சந்ததியில்லாமை யினாலும், வயோதிபநிலையை அடைந்து விட்டமையினாலும் மேற்குறிப்பிட்ட கனகசிங்க முதலியாரின் வம்சாவழியில் வந்த நாகமுத்து விதானையார் என்பவர் ஆலயபரிபாலனப் பொறுப்பைக் கையேற்றார்.

நாகமுத்து விதானையாருக்கு, மூன்று புதல்வர்களும் பத்தினிப் பிள்ளை என்ற புதல்வியும் இருந்தனர். அவருக்குப்பின், பத்தினிப்பிள்ளை என்பவரின் கணவர் வேதாரணியம் இராமலிங்கம் அவர்கள் கோயிலைப் பொறுப்பேற்று, 1904ம் ஆண்டிலிருந்து, பரிபாலித்து வந்தார். இவர் காலத்தில் மணிக்கூட்டுக்கோபுரம், மடப்பள்ளி, களஞ்சியம், மடம் என்பன கட்டப்பட்டன. 1943 வரை, இத்திருப்பணிகள் தொடரப்பட்டு, நிறை வேற்றப்பட்டன. ஆலயவெளி மண்டபத்தையும் நிரந்தரக் கட்டடமாகக் கட்டி, நிறைவேற்றினார். அவருக்குப்பின், வேதாரணியம் கந்தையா

ஆலயபரிபாலனத்தைப் பொறுப்பேற்றார். அவர் குறுகியகாலத்தில் காலமாகிவிட; அவரது மருமகன் சரவணமுத்து இராமலிங்கம், பரிபாலனப் பொறுப்பை ஏற்றார். அவரும் காலமாகிவிட; அவருக்குப்பின் சிலகாலம் இராமலிங்கம் அவர்களின் மகன், சின்னத்தம்பி, ஆலய பரிபாலனத்தை ஏற்று, செயற்பட்டு வந்தார்.

இக்காலப்பிரிவில், சரவணமுத்து இராமலிங்கம் அவர்களின் மருமகன் கா. இராமுப்பிள்ளை (அதிபர்) அவர்களைத், தலைவராகக் கொண்டு ஆலயபரிபாலனசபை ஒன்றை நிறுவி, அதன் நிர்வாகத்தின்கீழ் ஆலயபரிபாலனத்தைக் கொண்டுவரத், தீர்மானிக்கப்பட்டது. 1942ஆம் ஆண்டு, இச்சபை நிறுவப்பட்டது. ஆலய நிர்வாகத்தை இப்பொதுச்சபை கையேற்று நடத்தி வந்தது.

முன்பு குறிப்பிட்ட நாகமுத்து விதானையாரின் மகன் முருகர் என்பவரது மகன் தாமோதரம்பிள்ளை வியாபாரியார், சங்கத்தானையை வசிப்பிடமாகக் கொண்டு இருந்தார். அவரே, அக்காலத்தில் இக்கோயில் உரித்தாளர் ஆவார். ஆதலால், அவர் கோயில் நிர்வாகப் பொறுப்பை *1942* ஆம் ஆண்டு, திரு.கா. இராமுப்பிள்ளை தலைமையிலான, ஆலய பரிபாலன சபையிடம் கையளித்தார்.

ஆலயபரிபாலனசபை; ஆலயபரிபாலனத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டதன்பின், மூலாலயம் எனப்படும் கருவறை பிரிக்கப்பட்டு, முழுமையாக முற்றிலும் புதுப்பிக்கப்பட்டு *1945* ஆம் ஆண்டு, ஆனி மாதத்து, உத்தர நட்சத்திரம் கூடிய புண்ணிய நாளில் மகாகும்பா பிஷேகம் நடைபெற்றது. *1947* ஆம் ஆண்டு கொடிமரம் நிறுவப்பட்டு, கொடியேற்றவிழா, பத்து நாட்கள் நடாத்தப்பட்டன. திரு. நா. முருகேசு என்பவர், தேர்த்திருவிழாவைப் பொறுப்பேற்று ஒரு சித்திரத் தேரையும் செய்வித்து வழங்கினார்.

*1948* ஆம் ஆண்டு, திருக்குளம் புனரமைக்கப் பெற்றது. *1963* ஆம் ஆண்டு, புதிதாக நிறுவப்பட்ட ஆலயபரிபாலனம்; அர்த்தமண்டபம், மகாமண்டபத் திருப்பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றியது. இதனை அடுத்து, *1967*, சித்திரை மாதம், பஞ்சகுண்டயாகம் வளர்த்து, சித்திரைப் பூரணையன்று, சிறப்புற மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டது.

மேற்கொண்டு, தேவையான திருப்பணிகள் தொடர்ந்து நடத்தப் பெற்று, *1983* சித்திரையில் மகாகும்பாபிஷேகம் நிகழ்வு பெற்றது.

இவ்வாலயத்தில், பரிவாரமூர்த்திகளான, சந்தானகோபாலர் சண்டேஸ்வரர், முருகப்பெருமான், வைரவர் ஆகியோருக்குத் தனிச் சந்நிதானங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. ஆலயத்தின் வடமேற்கு உட்புற வீதியில், பூதவராயர் என்னும் திருநாமம் கொண்ட சித்தர் ஒருவரின் சமாதி இருக்கின்றது. இது ஒரு செவிவழிச்செய்தி. சித்தர் சமாதி அமைந்துள்ள கோயில்களில் அருள்வீச்சு அதிகம் என்பது, ஆன்றோர் கருத்து.

பழமை வாய்ந்த, ஆதித் தேருக்குப்பதிலாக, புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தேர்முட்டியும், புதிய மணிமண்டபமும் நிறுவப் பட்டுள்ளன. மேலும் அன்னதான மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வசந்தமண்டபம், யாகசாலை, பாகசாலை, களஞ்சிய அறை, வாகனசாலை, திருமஞ்சனக்கிணறு, மணிக்கூட்டுக்கோபுரம், தீர்த்தக் கேணி, தீர்த்த மண்டபம் என்பனவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தற்போதய ஆலயபரிபாலனசபையினர் 2017 ஆம் ஆண்டு, வைகாசி மாதம் பதினைந்தாம் திகதியன்று, (29-05-2017) விநாயகப் பெருமான், மூலாலயத்திலிருந்து எழுந்தருளி பாலாலயத்தில், மௌன தெட்சிணாமூர்த்தியாக, பரிவாரமூர்த்திகள் உடன் வீற்றிருக்கத்தக்க வகையில், பாலஸ்தாபனம் செய்து வைத்தனர்.

மூலாலயத்தின் பண்டிகை வேலைகள்; வைரவர் ஆலயம், யாகசாலை தீர்த்தக்கேணிப் புனரமைப்பு; உள்வீதிச் சுற்றுப் பிரகாரக் கொட்டகை அமைப்பு உள்ளிட்ட பல்வேறு புனருத்தாரணப் பணிகள் நடைபெற்று பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

விநாயகப்பெருமான் திருவருட்கருணையினால், அனைத்துப் புனருத்தாரணத் திருப்பணிகளும் பூர்த்தியாகி (2019-06-06) அன்று மகா கும்பாபிஷேகம் நிகழத் திருவருள் பாலித்துள்ளமை இறைவன் திருவருட் செயல்.

**நித்திய பூசை:** காலை, மாலை இரண்டு நேரங்களிலும் நடைபெறு கின்றன.

## நைமித்திய பூசை, விழாக்கள் விபரங்கள் :

- மஹோற்சவம் - 10 நாட்கள் (ஆனிப்பூரணை தீர்த்தோற்சவம்)
- பிரதிமாதச் சதுர்த்தித் திருவிழா
- ஆவணிச்சதுர்த்தி
- கந்தசஷ்டி
- திருவெம்பாவை
- விநாயகர்சட்டி விரதம் (பிள்ளையார் கதை)
- மணவாளக்கோல சங்காபிஷேகம், ஊஞ்சல் உற்சவம்
- இவற்றுடன் சித்திரைப் புதுவருடப்பிறப்பு; ஆடிப்பிறப்பு, தீபாவளி, திருக்கார்த்திகை விளக்கீடு, மார்கழி வைகுண்ட ஏகாதசி, தைப் பொங்கல், புதிர்எடுத்தல், புதிதுண்ணல், கந்தபுராணப்படிப்பு இக்காலங் களில் விசேட பூசை, ஆராதனைகள் இடம்பெறுகின்றன.

சிவபெருமானின் மூத்ததிருக்குமாரனான விநாயகன்; பிரணவ சொரூபியாக, ஓங்காரமூர்த்தியாக, ஆங்காரத்தை அடங்கச் செய்ப வராக, ஞானமுதல்வனாக விளங்குகிறார்.

அறியாமை காரணமாக, மலபந்தப்பட்டு, உலகில் அல்லலுறும் உயிர்களுக்கு அறியாமையை அகற்றி; ஞானஒளி தந்து, முத்திபெறச் செய்யும் பொருட்டுப், "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்", ஞானவிநாயகனாக விளங்குகிறான்.

விநாயகர் அறக்கருணை, மறக்கருணை இரண்டையும் புரிபவர். தம்மை உள்ளன்போடு மனம், மொழி, மெய் ஆகியவற்றினால் வழிபடு பவர்களுக்கு இடர்களை நீக்கி; வேண்டும் வரங்களை வழங்கி அறக் கருணை புரிகின்றார். எக்கருமங்களைத் தொடங்கும்போதும்; இடர்கள், தடைகள் ஏற்படாதிருக்கவும், வெற்றிகிட்டவும், பிள்ளையாருக்கு முதல் வணக்கம் செலுத்தும் வழக்கம், எமது மரபு ஆகிவிட்டது. தம்மை அவ்வாறு நினையாதவர்களுக்கு இடர்களையும், தடைகளையும் விளைவித்து மறக் கருணையும் புரிகின்றார்.

இந்துசமயக் கடவுளர்களுள், விநாயகருக்கு முதன்மையளித்து மக்கள் பெரிதும் விரும்பி வழிபாடு செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

அறிவினிலே சிறந்தோங்கி
நீங்கள் வாழ்வீர்
அணுவும் அதன் இயக்கமும் போல்
பிரிவு இன்றி
நெறியினிலே பிறழாது
நீங்கள் வாழ்வீர்
நிலவுலகம் அதன் கவர்ச்சி
ஆற்றலும் போல்
வறியோர்க்கு வாழ்வளிப்பீர்
உள்ளம் ஒன்றி
வறுமையின்றிச் சூரியனும்
ஒளியும் போன்று
சிறியவரும் பெரியவரும்
நலமே காணும்
சிறப்புடனே பல்வளமும்
பெற்று வாழ்வீர்.

- வேதாத்திரி மகரிஷி

உலகமெலாம் பருவமழை ஒத்தபடி பெய்யட்டும்
உழவரெலாம் தானியத்தை உவப்புடனே பெருக்கட்டும்
பலதொழில்கள் புரிகின்ற பாட்டாளி உயரட்டும்
பகுத்துணர்வில் தொகுத்துணர்வு பண்பாட்டை உயர்த்தட்டும்
கலகங்கள் போட்டி பகை கடந்தாட்சி நடத்தட்டும்
கல்லாமை கடன் வறுமை களங்கங்கள் மறையட்டும்
நல்வாழ்வை அளிக்கும் மெய்ஞ்ஞான ஒளி வீசட்டும்
நம் கடமை அறவாழ்வின் நாட்டத்தே சிறக்கட்டும்.

- வேதாத்திரி மகரிஷி

அருட்பேராற்றல் ஆக விளங்கும் விநாயகப்பெருமான் கருணையினால், உடல்நலம், உளநலம், உயிர்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்வோம்.

***வாழ்க வையகம்    வாழ்க வளமுடன்***

## இந் நூலாசிரியர் பற்றி...



கலாபூஷணம், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்; தென்மராட்சி, கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

கல்வயல் - பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகரைத், தமது குலதெய்வமாக ஏற்றிப் போற்றி, வாழ்பவர்.

குமாரசாமி சோமசுந்தரம், தேசிய மட்டத்தில் நன்கு அறியப்பட்ட கல்வியாளர், எழுத்தாளர், சொற்பொழிவாளர் மற்றும் வானொலி, தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாளர் ஆவார்.

சென்னை, இலண்டன் பல்கலைக்கழகங்களின் பட்டதாரியான இவர்; பேராதனைப் பல்கலைக்கழகம் வழங்கிய கல்வி டிப்புளோமா சிறப்புப் பட்டத்தையும்; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்கிய, கல்வியியல், முதுகலைமாணி (M.A.) பட்டத்தையும் பெற்றவர். கௌரவ கலாநிதிப் பட்டத்தை, இலண்டன் உலக சைவப்பேரவை, இவருக்கு வழங்கியது.

இவர் "கலாபூஷணம்"; "சித்தாந்த வித்தகர்" - தேசிய விருதுகள்; கொழும்புக் கம்பன் கழகம் வழங்கிய "மூதறிஞர்" விருது; தேசிய கல்வி நிறுவகம், சமயத்துறை (மகரகம) வழங்கிய "சைவச்சுடர்" விருது; ஆகியவற்றைப் பெற்றுள்ளார். அகில இலங்கை சமாதான நீதவான் (J.P.) ஆகவும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பட்டதாரி ஆசிரியராகத், தமது கல்விப்பணியை ஆரம்பித்து; யா/செங்குந்த இந்துக்கல்லூரி; யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகியவற்றில் கடமையாற்றியவர். பதவியுயர்வு பெற்று, இலங்கை கல்வி நிர்வாகசேவையில் (S.L.E.A.S.); வட்டாரக் கல்வியதிகாரி, மாவட்டப் பிரதம கல்வியதிகாரி, மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை; யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களில் வகித்தவர். மகரகம, தேசிய கல்வி நிறுவகத்தில் (N.I.E.); தமிழ்க் கல்விப் பணிப்பாளராகவும்; உதவிப் பணிப்பாளர் நாயகம் ஆகவும், பதவியுயர்வு பெற்று; தேசியமட்டத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அதன்பின்னர், ஜேர்மன் தொழினுட்ப ஒத்துழைப்பகம், (G.T.Z.) இலங்கை நிறுவனத்தின் கல்வி நிபுணத்துவ ஆலோசகர் (Consultant) ஆகவும் பணிபுரிந்தவர்.

"நல்லைநகர் நாவலன்" (நாடக நூல் - 1978); "சைவமரபும் தமிழர் வாழ்வும்" - (1994); "மனித விழுமியங்கள்" - (1995); "நல்வாழ்வுக்குரிய நடைமுறைச் சிந்தனைகள்" - (1996); "சைவ விழுமியங்கள்" - (1998); "சைவவாழ்வியற் சிந்தனைகள்" - (1999); "மனிதமேம்பாட்டுச் சிந்தனைகள்" - (2000); "வாழ்வு நலம் பெற நற்சிந்தனைகள்" - (2006); "மனித வாழ்க்கை விழுமியங்கள்" - (2010); "சைவநற்சிந்தனைக் களஞ்சியம்" - (2012); "நல்லை நகர் நாவலர் பெருமான் வழியில், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை" - (2015); "நலங்கள் அறுபது" - (2016); ஆகியன இவரின் ஏனைய நூல்கள்.

இவரது சைவசமயம் சார்ந்த நூல்கள்; இந்துசமய, கலாசார அலுவல்கள் அமைச்சினால்; தேசிய மட்டத்தில் வழங்கப்பட்ட, சிறந்த சைவசமய எழுத்தாளர் விருதுகளை, மூன்று தடவைகள், இவருக்குப் பெற்றுக் கொடுத்தன. மனித விழுமியங்கள் பற்றிய இரண்டு நூல்கள்; வடக்கு - கிழக்கு, மாகாண சாஹித்ய மண்டலப் பரிசில் பெற்றவை.

Printed by: Anush Printers, Col-13 - 0777 072 893